## உள்ளடக்கம்

8—2—1993


| | பக்கங்கள். |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 29—70 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 மற்றும் 2) | 71—206 |
| **2. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள் குறித்து | 206—209<br>210—211<br>212, 217, 218 |
| **3. அறிவிப்பு—** | |
| மாற்றுத் தலைவர்கள் பட்டியல் .. | 209, 212 |
| **4. கவன ஈர்ப்பு—** | |
| பேராவூரணியில் பின் தங்கியோர் மாணவர் விடுதிக் கட்டடம் இடிந்துள்ளது குறித்து. | 212—214 |
| **5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—** | |
| திரு. ச. காந்திராஜன். | 215—252 |
| திரு. குமரி அனந்தன் | 252—304 |
| **6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 304 |

164981
சென்னை-600 008

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1993, பிப்ரவரி, 8, திங்கட்கிழமை.

தை 26, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு—2024.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும். "

பிறர்க்கு துன்பம் தரும் சிறுமையிலிருந்து நீங்கிய இனிய சொற்கள் இப்போதும் சரி, பின்னர் எப்போதும் சரி, ஒருவருக்கு இன்பத்தையே தரும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள், வினா எண். 1, டாக்டர் ஜி. ஆர். மாலா, மாண்புமிகு நிதியமைச்சர்.

1—

### கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வசூலிக்கப்படும் தணிக்கைக் கட்டணம்.

*13842—டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து தணிக்கைக் கட்டணம் வசூல் செய்வதை நிறுத்த அரசு ஆவன செய்யுமா ?

[1993 பிப்ரவரி 8

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்திய நிறுவனச் சட்டத்தின் கீழ் தணிக்கைச் கட்டணம்
நிறுவனங்களிடமிருந்து வசூல் செய்யும் முறை நடைமுறையில்
உள்ளது. அதேபோல், கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் விதி
103-ன் கீழ் தணிக்கைக் கட்டணம், கூட்டுறவுச் சங்கங்கள்
தங்கள் நிதியிலிருந்து கட்ட வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின்
தணிக்கையை மேற்கொள்வதற்காக, அரசு ஏற்கும் செலவினை
ஈடுகட்டும் முறையில் இத்தணிக்கைக் கட்டணம் உள்ளது.
மேலும், ஆதி திராவிடர் மற்றும் நலிந்த பிரிவினர்களை உறுப்
பினர்களாகக் கொண்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு தணிக்கைக்
கட்டண விதிப்பிலிருந்து முழுவதும் விலக்கு அளிக்கப்பட்டுள்
ளது. ஆதலால், அரசு ஏற்கெனவே விலக்கு அளித்த சங்கங்கள்
தவிர மற்ற சங்கங்களிலிருந்து தணிக்கைக் கட்டணம் வசூல்
செய்யும் முறையில் எவ்வித மாற்றமும் தேவைப்படவில்லை.

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழ்நாடு கணக்குத் துறையில் அரசின் கீழ் தல
நிதி கணக்குத் துறை—லோக்கல் ஃபண்ட் ஆடிட், இந்து சமய
அறநிலைய கணக்குத்துறை – எச். ஆர். அண்ட் சி.இ. ஆடிட்
மற்றும் கூட்டுறவு கணக்குத்துறை– கோ-ஆப்பரேட்டிவ்
ஆடிட் என்ற மூன்று துறைகள் உள்ளன. அதில் முதல் இரண்டு
துறைகளுக்கு தணிக்கைக் கட்டண விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
அதுபோல் கூட்டுறவுத் துறை என்பது மக்களால் உருவாக்கப்
பட்டு மக்களின் நலனுக்காகச் செயல்படும் துறையாகும் எனவே
கூட்டுறவுச் சங்கங்களிடத்தில் அரசு வசூலிக்கும் தணிக்கைக்
கட்டணத்தை ரத்து செய்யவேண்டும் என்ற வகையில் மறு பரி
சீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில்
நலிந்தவர்கள், ஆதி திராவிடர்கள் ஆகியோர்களை உறுப்
பினர்களாகக் கொண்ட சங்கங்கள் அதாவது மிகவும் அத்தி
யாவசியமாக, நட்டத்திற்கு உள்ளாகிற அத்தகைய கூட்டுறவுச்
சங்கங்களுக்கு தணிக்கைக் கட்டணத்திலிருந்து விலக்கு தரப்பட்டு
இருக்கிறது. ஆனால் பெரும்பான்மையான கூட்டுறவுச் சங்
கங்களினுடைய நோக்கமே அது வியாபாரத் தன்மையில் இயங்க
வேண்டும் என்பதும், இலாபத்தை ஈட்டவேண்டும் என்பதும்
தான். ஆகவே அவைகளுக்குத் தணிக்கைக் கட்டணம் விதிப்
பதிலே எவ்வித தவறும் இல்லை ஆகவே அதை நீக்குவது
தேவையும் இல்லை பெரும்பான்மையான உறுப்பினர்கள்
ஆதி திராவிடர்கள் அல்லது மீனவர்கள் வகுப்பைச் சேர்ந்தவர்



1993 பிப்ரவரி 8]

களாக இருந்தால் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விலக்
களிக்கப்பட்டு இருக்கிறது. நட்டத்தில் இயங்கும் தொடக்க
வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விலக்களிக்கப்பட்டு
இருக்கிறது. கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்களுக்குத் தணிக்கைக்
கட்டணம் இல்லை கூட்டுறவுப் மேற்பார்வை ஒன்றியங்கள்,
எல்லா பனைப்பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்,
எல்லா மீனவர் கூட்டுறவு இணையங்கள், எல்லா கைக்குத்தல்
அரிசி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், எல்லா மாவட்ட
கூட்டுறவுப் பனைபொருள் விற்பனை இணையங்கள், எல்லா
பூமிதான, கிராமதான கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு
பனைப்பொருள் கூட்டுறவு விற்பனை இணையம் இவற்றுக்கு
மட்டுமல்லாமல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு
அவை தொடங்கிய முதல் 6 ஆண்டுகள் வரை தணிக்கை
கட்டணம் இல்லை. இயக்குநர், தொழில் வணிகத் துறை
மற்றும் கதர் கிராமத் தொழில் துறை ஆகியவற்றின் கட்டுப்
பாட்டின் கீழ் அமைந்துள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்
களுக்கும் அவை தொடங்கிய 5 ஆண்டுகளுக்குத் தணிக்கைக்
கட்டணம் இல்லை. மேலே குறிப்பிடப்பட்ட சங்கங்கள் தவிர
இதர கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவை தொடங்கிய முதல்
மூன்று ஆண்டுகளுக்குத் தணிக்கைக் கட்டணம் இல்லை. இந்தச்
சலுகைகளே இப்போது போதுமானவை என்று கருதப்படு
கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 2, திருமதி
செ. சுந்தராம்பாள், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

2 –

## மேட்டூரில் சார்புநிலை நீதிமன்றம் அமைத்தல்.

*9252 — திருமதி செ. சுந்தராம்பாள் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் சார்பு நிலை நீதிமன்றம் அமைக்க அர
சிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்பமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டூரில் சார்புநிலை நீதிமன்றம்
அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1993 பிப்ரவரி 8

திரு. செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் உள்ளது என்று கூறியுள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அந்த சார்பு நிலை நீதிமன்றம் மேட்டூரில் எப்போது செயல்படத் தொடங்கும் என்பதையும் அது எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கைக்குப் பிறகு அது விவரமாக வெளியிடப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 3, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

3—

### தமிழக குடிமக்களுக்கு புகைப்படத்துடன் ''குடியுரிமைச் சான்று'' அளிக்கும் திட்டம்.

*9544—திரு. சி. ஞானசேகரன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வாழும் குடிமக்களுக்கு புகைப் படத்துடன் கூடிய ''குடியுரிமைச்சான்று'' (Citizenship card) அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் செயல்படுத் தப்படும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

ஙற்பகல் 10—05

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலின்போது திருட்டு ஓட்டு போடுகிற தில்லு-முல்லு கும்பல்கள் இப்போது பெருகிவிட்டன. இப்போதெல்லாம் இறந்தவர்களுடைய ஓட்டுகள் எல்லாம் கூட ஓட்டுப் பெட்டிக்கு வந்து சேருகின்றன. இந்த அடையாள அட்டை



1993 பிப்ரவரி 8]

இல்லாத காரணத்தினாலே இந்த சமுதாயத்தில் எவ்வளவோ பிரச்சினைகள் வருகின்றன. நம்முடைய பணத்தை நாமே பேங்கில் போட்டால் கூட அதைத் திரும்ப எடுக்கிறபோது ஐடென்டிஃபிகேஷன் எஷ்டாப்பிளிஷ் செய்வதற்காக நாம் படாத பாடு பட வேண்டி இருக்கின்றது. டிராஃபிக் போலீசாரிடம் யாராவது மாட்டிக் கொண்டால் தவறான அட்ரஸை எல்லாம் கொடுத்துவிட்டுச் சென்றுவிடுகின்றார்கள். பிறகு அவர்களுக்கு சம்மன் எத்தனை அனுப்பினாலும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் போலீஸ் திணறுகிறது. இதையெல்லாம் தவிர்க்கும் முகத்தான் இந்த அரசு அடையாள அட்டை அதாவது சிட்டிஷன்சிப் கார்டு வழங்குவதற்கு ஆவன செய்யுமா, இதை மறுபரிசீலனை செய்யுமா என்று நான் பணிவன்போடு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்ட நிர்வாகம் என்ற பொருள் மைய அரசுக்கு ஒதுக்கப்பட்டது. மைய அரசினுடைய அனுமதி இல்லாமல் குடியுரிமை கார்டு கொடுக்க மாநில அரசுக்கு உரிமை இல்லை.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மைய அரசுக்கு உட்பட்டதாக இருந்தாலும் நீங்கள் குடியுரிமைச் சான்று என்ற ஒன்றை வழங்கத் தேவையில்லை. ஆனால், நீங்கள் அடையாள அட்டையாவது வழங்கலாம். பொதுவாக குடியுரிமைச் சான்று—சிட்டிஷன்சிப்கார்டு அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருக்கிறது. தமிழகத்திலே ஓட்டு போடப் போகிறபோது திருட்டு ஓட்டைத் தடுக்கிற வகையிலேயாவது அடையாள அட்டையை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று, நான் அமைச்சரிடம் இருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் என்பது வேறு; குடியுரிமைச் சான்று கேட்பது என்பது வேறு. (மேசையைத் தட்டும் ஒலி) மற்றொன்று. அரசியல் சட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அவர்களே ஒரு வழக்கறிஞர். அரசியல் உரிமைச் சட்டப்படி இந்தியாவில் பிறந்த யாரும் இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் போகலாம். குடி இருக்கலாம், நிலம் வாங்கலாம், நிலம் விற்கலாம், வியாபாரம் செய்யலாம்—இப்படி எல்லாம் செய்கிற உரிமை இருக்கிறபோது, குடியுரிமைச் சான்று ஒரு மாநிலத்திலே நாம் கொடுத்தால், மற்ற மாநிலங்களில் இருப்பவர்கள் இங்கே வரக் கூடாது என்றோ, அவர்கள் இங்கே குடி இருக்கக் கூடாது என்றோ, வியாபாரம் செய்யக் கூடாது என்றோ சொல்ல முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. எம். ரங்கராஜன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் ஒரு வழக்கறிஞர். இன்றைக்கு 'சிட்டிஷன்சிப் கார்டை' பற்றி ஒரு வினாவை எழுப்பி இருக்கின்றார்கள். அரசியல் சாசன பிரிவு 5-ஐ பார்த்தால், ஒரே ஒரு சிட்டிஷன்சிப் தான் நமக்கு உண்டு. அது இந்தியன் சிட்டிஷன்சிப். வேறு எந்த சிட்டிஷன்சிப்பும் நமக்கு வழங்க முடியாது. ஆனால், அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிட்டிஷன்சிப் கார்டு கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்றார்கள்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரங்கராஜன், உறுப்பினர் கேள்வி கேட்டு இருக்கின்றார். அது மைய அரசாங்கத்தின் கீழ் இருக்கிறது. அது இப்போதை என்று அமைச்சர் சொல்லி இருக்கிறார். நீங்கள் சொல்வது அந்த என்கிறமாதிரி அமைந்துவிடும். அந்த மாதிரிச் சொல்ல வேண்டாம். நீங்கள் கேள்வியாகக் கேட்கலாம்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கேள்வியைப் பற்றித்தான் நான் இப்போது சொல்லிக்கொண்டு இருக்கின்றேன்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின் போது ஒரு உறுப்பினர் எழுப்பிய ஒரு கேள்வி விவாதப் பொருளாக ஆக்கக் கூடாது என்று சட்டமன்றப் பேரவை விதி இருக்கிறது. அதனால், உறுப்பினர் கேட்ட துணைக் கேள்வி பற்றி நீங்கள் சொன்னது அவைக் குறிப்பில் வேண்டாம். நீங்கள் கேள்வியாகக் கேட்டு அமைச்சரிடம் பதில் வாங்கலாம்.

திரு. டி. எம். ரங்கராஜன் : Point of order can be raised at any time please see rule.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. Point of order cannot be raised during question hour, அதனால், நீங்கள் துணைக் கேள்வி கேட்டு அமைச்சரிடம் பதில் வாங்கலாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகள் கேட்கலாம். அதற்குரிய அமைச்சர்கள் பதில்தான் தருவார்கள். உறுப்பினர்களுக்கு உறுப்பினர்களே பதில் சொல்வது என்பது சரி வராது.

திரு. டி. எம். ரங்கராஜன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் உறுப்பினர் இங்கே கேள்வி எழுப்ப அனுமதிக்கப்பட்டு, எழுப்பிய பிரச்சினையின் மீது ** என்று கேட்பது சரியல்ல. அது முரணாக இருக்கிறது. அது அவைக் குறிப்பில் வேண்டாம்; அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

முற்பகல் 10.10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 4, திருமதி ரெ. சியாமளா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

4—

கோவில்பட்டியில் பெண்களுக்கென தனிக்கல்லூரி அமைத்தல்

*10317—திருமதி ரெ. சியாமளா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டியில் பெண்களுக்கு தனிக்கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று சுருக்கமாகக் கூறி விட்டார்கள். சிதம்பரனார் மாவட்டத்தில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

தூத்துக்குடியில் மட்டும்தான் பெண்களுக்கென்று தனியாக ஒரு கல்லூரி உள்ளது. தூத்துக்குடிக்கு அடுத்தப்படியாக ஒட்டப்பிடாரம்—அதற்கு அருகிலுள்ள மிகப்பெரிய நகரம் கோவில்பட்டிதான். ஒட்டப்பிடாரம், விளாத்திகுளம், கோவில்பட்டி ஆகிய தாலுக்காக்களில் உள்ள பல்லாயிரக் கணக்கான பெண்கள் அடுத்த மாவட்டங்களான காமராசர் மாவட்டம், நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கல்லூரிகளுக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. எனவே, தாயுள்ளம் கொண்ட எங்களுடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கருணையுடன் மறுபரிசீலனை செய்து கோவில்பட்டியில் பெண்களுக்கென்று தனியாக ஒரு கல்லூரி அமைக்க ஆவன செய்வாரா என்று அமைச்சர் அவர்களிடமிருந்து பணிவுடன் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் மட்டுமல்ல, வேறு எங்கேயும் இப்போது புதியதாக கல்லூரி தொடங்குவதில்லை என்று அரசு இருக்கிற காரணத்தால் கோவில்பட்டியில் கல்லூரி தொடங்கப்பட மாட்டாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 5, திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

5—

## மதுரை வக்ப் கல்லூரியில் பி.எட். ஆசிரியர் பட்டப்படிப்பு துவக்குதல்

*11828—திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் வக்ப் கல்லூரியில் B.Ed பட்டப் படிப்பு துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இவ்வாறான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.





திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கல்லூரிக்கு பி.எட். கேட்டதற்கு இல்லையென்று சொல்லிவிட்டார்கள். இருந்தாலும் இந்தக் கல்லூரி ..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் இல்லையென்று சொல்லவில்லை, அப்படிப்பட்ட கருத்துருவே இல்லையென்று தெரிவிக்கிறார். அப்படி கோரிக்கையே வரவில்லை, எனவே அத்தகைய கருத்துரு இல்லையென்று சொல்லியிருக்கிறார்.

திரு. எம்.எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியிருந்தாலும், எல்லாக் கல்லூரிகளிலும் பி.எட். இருப்பதால், இது மைனாரிட்டி கல்லூரியாக இருப்பதால், அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, இந்த ஆண்டிலேயே, மைனாரிட்டி வகுப்பினர் படிப்பதற்கும், மற்றவர்கள் படிப்பதற்கும் ஆவன செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை வக்ப் போர்டு கல்லூரி என்பது கலை, விஞ்ஞானப் பாடங்கள் சொல்லித் தருகிற கல்லூரியாகும். இப்படிப்பட்ட எந்தக் கல்லூரியிலும் பி.எட். வகுப்பு கிடையாது.

திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற கல்லூரிகளுக்கு உள்ளது போல இல்லாமல் இந்தக் கல்லூரிக்கு வசதி ரொம்பவும் குறைவு. காரணம் வக்ப் போர்டில் பணம் இல்லை. ஆகவே, இந்தக் கல்லூரிக்கு கிராண்ட் அதிகமாகக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். அதிலும் இந்தக் கல்லூரிக்கு பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், கிளார்க், டைப்பிஸ்ட், பியூன் என்று 11 பேர்கள் தேவை இருக்கிறது. இதை பலமுறை சர்க்காருக்கு எழுதியும் இதுவரையில் பதில் கிடைக்கவில்லை. அதற்கும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து அந்தக் கல்லூரி நிர்வாகம் விண்ணப்பித்தால் அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 6, திருமதி அ.தி. சரஸ்வதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

6—

**மேட்டுப்பாளையம் தொகுதியிலுள்ள விஸ்கோஸ் ஆலையின் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு.**

*14672—திருமதி அ.தி. சரஸ்வதி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதியிலுள்ள விஸ்கோஸ் ஆலையின் கழிவு நீர், குடிநீரோடு கலப்பதால் சத்தியமங்கலம் தொகுதி மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி காலரா, வயிற்றுப்போக்கு போன்ற வியாதிகளால் அவதிப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இதனை தடுத்து நிறுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிறுமுகையிலுள்ள சவுத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு பவானி ஆற்றில் விடப்படுகிறது. சுத்திகரிப்பு நிலையம் தொடர்ந்து நல்லமுறையில் இயக்கப்படுகிறதா என்பதை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் விழிப்புடன் கவனித்து வருகின்றது.

திருமதி அ.தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நூறாண்டு கால முதலமைச்சராக வாழும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புனித ஆட்சியில் அமைச்சர் அவர்கள் சத்தி வாழ் மக்களின் நலம் கருதி இந்த விஸ்கோஸ் ஆலையின் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். அப்படியில்லை, அது சுத்திகரிக்கப்படுவது அதிகாரிகள் செல்லும்போது மட்டும் தான் சுத்திகரிக்கப்படுகிறது. என்று அறிவித்துள்ளார்கள். நாங்கள் பலமுறை சென்று பார்த்துள்ளோம். பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் உங்கள் சார்பில் ஒரு முறை அனுப்பி ஒரு வார காலத்திற்குள் நீங்கள் பாருங்கள். ஆற்று தண்ணீர் காபி கலரில். வந்து கொண்டு இருக்கிறது விஷத் தண்ணீராக மாறிக் கொண்டிருக்கிற அந்தத் தண்ணீரை கிட்டத்தட்ட 80 ஆயிரம் சத்தி வாழ் மக்கள் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த விஷத் தண்ணீரை நாளுக்கு



நாள் குடித்துக்கொண்டு இருப்பதால் கிட்டத்தட்ட 5 ஆண்டு காலத்திற்குள் மக்கள் எல்லாம் தீராத வியாதிகளுக்கு ஆளாக நேரிடும்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திருமதி. அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே இதை மறுபரிசீலனை செய்து அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, சத்தி வாழ் மக்களின் நலன் கருதி,-அந்தத் தண்ணீரை சுத்திகரிப்பு செய்வது சரியில்லை-அதைச் சென்று பார்வையிட்டு, அதற்கு ஒரு விமோசனம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாடு வாரியம் மாதத்திற்கு ஒரு முறை அந்தச் சுத்திகரிப்பு நிலையத்திலேயிருந்து தண்ணீர் எப்படி விடப்படுகிறது என்பதற்கு, மாதிரி எடுத்து, பரிசோதனை செய்து, தரக்குறைவாக இருந்தால், அதன் மீது நடவடிக்கை எடுத்து வருகிறது. அப்படி எடுத்த காரணத்தால், அதனுடைய தரம் குறைந்திருக்கிறது என்று சொல்லி அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி 27—8—1991 அன்று, அந்தத் தொழிற்சாலையினுடைய நிர்வாக இயக்குநர் நேராக மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு அழைக்கப்பட்டு இந்தக் கருத்துக்கள் எல்லாம் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. ஒரு திட்டத்தை மாசுக்கட்டுப்பாட்டு வாரியமே அவர்களுக்குத் தயாரித்து, இப்போது கையிலே கொடுத்து இருக்கிறது. அதன்படி, ஒரு தனிப் பொறியாளரை நியமிக்கவேண்டும் என்று அவர்களுக்கு உத்திரவிடப்பட்டு இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் பல்வேறு திட்டங்களை எல்லாம் அவர்களுக்கு வகுத்துக் கொடுத்து, இதையெல்லாம் நீங்கள் செய்து முடிக்கவேண்டும் என்று ஒரு கால வரையறையே அவர்களுக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. 1993, ஆகஸ்ட் மாதத்திற்குள்ளாக இதைச் செய்து முடித்துக் கொடுப்பதாக அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அவர்களுக்கு ரெனியூவல் செய்து கொடுத்ததே கூட, 31—3—92 வரை முதலிலே கொடுக்கப்பட்டு இருந்தது-இப்போது மீண்டும் தற்காலிகமாகத் தான் ரெனியூவல் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்தச் சுத்திகரிப்பு நிலையத்தை அவர்கள் முழுமையாகச் சீரமைத்துவிட்டால் இந்தப் பிரச்சினைகள் இருக்காது அவர்களுக்குப் போட்டிருக்கின்ற உத்தரவுப்படி கூட, சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை ஆற்றிலே விடப்படுகிறபோது,

அதற்கு முன்னாலே, மீன் தொட்டி வழியாகத்தான் விடப்
பட வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டு இருக்கிறது.
எனவே இப்படி ஒரு திட்டத்தைத் தயார் செய்து கொடுத்
திருக்கிறோம். இந்தத் திட்டப்படி, அந்தத் தொழிற்சாலை அதைச்
செய்து முடித்துவிட்டால், மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற
பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று நாங்கள் முழுமையாக
நம்புகிறோம். ஒரே நாளில் இதைச் செய்து முடிக்க
வேண்டும் என்று நம்மாலே சொல்லிவிட முடியாது. அப்படிச்
சொன்னால், அந்தத் தொழிற்சாலையை மூடவேண்டிய
அவசியம் ஏற்படும். இப்போது ஏற்கனவே இருக்கின்ற
அந்தச் சுத்திகரிப்பு நிலையத்தை வைத்துக்கொண்டு, எவ்வளவு
தூரத்திற்கு இதைச் சுத்திகரிக்க முடியுமோ, அதை முழு
மையாகச் செய்வதற்கு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நேரடி
யாகப் பார்த்து, இதிலே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்
கிறது. எனவே இந்தத் திட்டம் முடியுமானால், இந்தப்
பிரச்சினைகள் முழுமையாகத் தீர்க்கப்படும்.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை
எடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, விஸ்கோஸ் நிறுவனத்திலிருந்து வருகின்ற தண்ணீர்
நேரடியாக கீழ்பவானி அணையிலேதான் கலக்கிறது. மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் நீண்டதொரு விளக்கமான
பதிலைத்தந்தார்கள். அதற்கு நன்றி. அந்தத் தண்ணீர்
கருப்பு நிறமாக இருக்கின்ற காரணத்தால், பொதுமக்களுக்கும்
மற்றவர்களுக்கும் அந்தத் தண்ணீரைப் பார்க்கும்போது
அச்சம் ஏற்படுகிறது. ஆகவே கருப்புநிறமாக வருகின்ற
அந்தத் தண்ணீரினுடைய கலரை மாற்றுவதற்கு, ஏதாவது
நடவடிக்கை எடுக்கப்படுமா ? (குறுக்கீடு). ஏன் என்றால்
தண்ணீர் முழுவதும் கருப்பு நிறமாக இருக்கின்ற காரணத்
தால் தான் எங்களுக்கு அச்சம் ஏற்படுகிறது
வேறு ஒன்றும் இல்லை. ஆகவே, கருப்பு நிறமாக வருகின்ற
அந்தத் தண்ணீரை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைச் சுத்திகரிக்க
வேண்டும் என்று ஏற்கனவே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள்
கேட்டிருக்கிறார்கள்.



திரு. வி. கே. சின்னசாமி : எனவே, இதைப் பரிசீலனை
செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தண்ணீர் அப்படி கருப்பு நிறமாக விடப்
படக்கூடாது. அது சுத்தகரிக்கப்பட்டது என்று சொன்னால்,
அந்தத் தண்ணீர் கருப்பாக இருக்கக்கூடாது, இப்போது அந்தத்
தண்ணீர் சுத்தமாக இல்லை என்பதையே, அங்கே போய்ப்
பார்த்துதான் தெரிந்து வைத்திருக்கிறோம். இங்கே கொடுத்த
அறிக்கையிலேகூட தண்ணீர் நல்ல நிறத்திலே இல்லை
என்று கொடுத்து இருக்கிறார்கள். அதன் காரணத்தால்
தான் அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, அது
செய்யப்பட்டிருக்கிறது. எனவே இதைச் செய்து
முடிக்கிறபோது, கருப்பு நீர் சுத்தமாக இருக்கும் என்பதை
நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்று, அந்தத்
தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியும் என்று
கண்டுபிடித்து இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியிலே
இருக்கின்ற விவசாயிகளிடத்திலே பேசி இதை விவசாயத்
திற்குக் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கும்,
அந்தத் தொழிற்சாலையே முயற்சிகளை மேற்கொள்ள
வேண்டும் என்றும் மாசுக் கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை
எடுத்திருக்கிறது. வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர்
சொல்கிற கருத்தை எல்லாம் அடிப்படையாக வைத்து
உடனடியாகக்கூட மேல்மட்டத்திலே இருந்து யாரையாவது
அதிகாரிகளை நேரடியாகச் சென்று பார்த்து, உரிய
நடவடிக்கையை விரைவாக மேற்கொள்வதற்கு ஏற்பாட்டைச்
செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 7
திரு. கோ. காளன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை
அமைச்சர்.

7—

## அம்பத்தூர்-ஆவடி பேருந்து வண்டி.

*9308 திரு. கோ. காளன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஆவடிக்குச்
செல்ல நேரடி பேருந்து வசதியில்லாததால் ஆவடிக்கும்
அம்பத்தூர் புதிய பேருந்து நிலையத்திற்கும் இடையே
பேருந்து வசதி செய்துதர அரசு முன்வருமா ?

[1993 பிப்ரவரி 8

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 10-20

திரு. கோ. காளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூரிலிருந்து ஆவடிக்குச் செல்லக்கூடிய நேரத்தில், ஜன நெரிசல் மிகுந்த நேரத்தில், காலை மாலை வேளைகளில் நேரடியாக அம்பத்தூரிலிருந்து ஆவடி மற்றும் சில இடங்களுக்குச் செல்ல வேண்டிய போக்குவரத்து வசதி இல்லை.. அமைச்சரவர்கள் அவ்வாறு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். பூவிருந்தவல்லியிலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டைக்குச் சில வண்டிகள் வருகின்றன. அதையாவது சில வழித்தடங்களை, பூவிருந்தவல்லி—அம்பத்தூருக்கு மாற்றி, அம்பத்தூரிலிருந்து மீண்டும் பூவிருந்தவல்லி செல்லக்கூடிய அளவிற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் பகுதியில் மூன்று பேருந்து நிலையங்கள் இருக்கின்றன. அம்பத்தூர் தொழிற்பேட்டையிலிருந்து 24 வழித்தடங்களில் 117 பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். அதேபோன்று பழைய பேருந்து நிலையத்தில் சுமாராக 27 வழித்தடங்களில் 123 பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே நீங்கள் குறிப்பிட்டிருப்பது புதிய பேருந்து நிலையத்திலே இந்த பேருந்துகள் வருகின்றனவா என்ற கேள்வி. ஆகவே புதிய பேருந்து நிலையத்தின் வழியாகத்தான் இந்த பேருந்துகள் இயக்கப்படுகின்ற காரணத்தால் நான் 'இல்லை' என்று பதில் அளித்தேன்.

திரு. கோ. காளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பேருந்து நிலையத்திற்கும் பழைய பேருந்து நிலையத்திற்கும் சுமார் ஒரு பர்லாங் தூரம் தான் இருக்கின்றது. ஆகவே புதிய பேருந்து நிலையம் என்பது அம்பத்தூர் ஊரிலேயிருந்து சென்று வரக்கூடிய வழித் தடமாகும். மெயின் பேருந்து நிலையம் என்பது அம்பத்தூருக்கு மெயின்லே இருக்கக் கூடிய பேருந்து நிலையம் ஆகும். எனவே அந்த வழியாக வரக் கூடிய, அமைச்சரவர்கள் சொல்லக்கூடிய பேருந்துகள் எல்லாம் மெயின் ரோடு வழியாகத்தான் செல்கின்றதே தவிர, ஊருக்கு உள்ளாக வந்து செல்வதில்லை. எனவே அத்தகைய வழியில் பூவிருந்த



1993 பிப்ரவரி 8]

வல்லியிலிருந்து வரக் கூடிய வழித் தடத்தை அம்பத்தூர் ஊருக்குள்ளே செல்லக்கூடிய அளவிற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 8, திரு. எஸ். ஜெயக்குமார், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

8—

கூட்டுறவு நூற்பாலைகளில் கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவர்களை நிர்வாக இயக்குநராக நியமித்தல்.

*9993 திரு. எஸ். ஜெயக்குமார் :

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு நூற்பாலைகளில் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகளை நிர்வாக இயக்குநராக நியமிப்பதற்குப் பதிலாக கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவர்களைப் பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதி 145ல் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அல்லது மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் துணை ஆட்சியர் பதவிக்கு குறையாத அந்தஸ்தில், கூட்டுறவுத் துறை, கைத்தறி மற்றும் துணிநூல் மற்றும் வருவாய்த் துறையில் உள்ள அலுவலர்களை கூட்டுறவு நூற்பாலைகளில் நிர்வாக இயக்குநராக அரசால் நியமிக்கப்படவேண்டுமென குறிப்பிடப் பட்டுள்ளது. சில கூட்டுறவு நூற்பாலைகளில் தொழில் நுட்ப அனுபவம் பெற்றவர்கள் அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்..

(ஆ) தனியாக குறிப்பேதும் இல்லை.

[1993 பிப்ரவரி 8

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கூட்டுறவு நெசவாலைகளில் நிர்வாக இயக்குநர்களாக மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகளை நியமிப்பதற்குப் பதிலாக, அதிலேயே பட்டம் பெற்று, பயிற்சி பெற்ற அத்துறையில உள்ள அதிகாரிகளை நியமித்தால், அந்த நிறுவனங்கள் லாஸ்-சிலிருந்து விடுபட்டு இம்ப்ரூவ் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். அம்மாதிரி அந்த நிறுவனங்களைச் சார்ந்த பட்டம் பெற்ற அதிகாரிகளை நிர்வாக இயக்குநர்களாக நியமிப்பதற்குஅரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற விதியின் கீழ் தற்போது இந்தத் துறையிலுள்ள துணை இயக்குநர்கள் 18 நூற்பாலைகளில் 10 பேர் இந்தத்துறையிலே உள்ள துணை இயக்குநர்களையும், வருவாய்த்துறையின் சார்பில் 10 பேரையும், மீதி உள்ள 3 பேர் மட்டும் தொழில் நுட்பம் அறிந்தவர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து ஏற்கத்தக்க ஒன்றாக இருந்தாலும், இது தற்போது இருக்கின்ற விதிமுறைக்கு ஏற்ப, இவர்கள் அரசால் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இது மறுபரிசீலனை செய்யப்படும். தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியோடும் கலந்து ஆலோசனை நடத்தப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கூட்டுறவு நூற்பாலைகள் பல வருடங்களாக நட்டத்தில் ஓடிக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அவற்றை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு வெளியிலிருந்து 'டெக்னிகல் எக்ஸ்பர்ட்ஸ்' போன்றவர்களை நிர்வாக இயக்குநர்களாக 'கான்ட்ராக்ட் பேசிஸ்'-இல் நியமித்தால் அந்த நிர்வாகம் செம்மையாக செயல்பட ஏதுவாக இருக்கும். அம்மாதிரியான முறையிலே அப்பாய்ண்ட்மெண்ட் செய்வதற்கு அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற விதியின் கீழ், இருக்கின்ற சூழ்நிலையில் இது இயலாத ஒன்றுதான். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கின்ற கருத்து ஏற்கத்தக்க ஒன்றுதான். இது உண்மையில் இந்தத்துறைக்கு லாபத்தை ஈட்டி தரக்கூடிய சிறந்த ஆலோசனை தான். இருந்தாலும் இருக்கிற சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு, இருக்கிற சட்ட சிக்கல்களை தீர்த்து, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவியினுடைய ஆலோசனையை ஏற்று, புரட்சி தலைவி அவர்கள் கூறுகிற கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, அவர்கள் இடுகிற கட்டளைக்கு இணங்க, சம்பந்தப்பட்ட பல அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பு ஆலைகளைப் பொறுத்த வரையில் நமது மாண்புமிகு உறுப்பினர் ஜெயகுமார் அவர்கள் சொன்னதைப்போல லாபத்தில் இயங்காமல் இருக்கின்றன. ஆகவே அதைத் தவிர்க்க அதை ஒரு வியாபார நோக்கமாக எடுத்துக் கொள்ளும் வகையில், நிர்வாக இயக்குநர்களாக எம்.பி.ஏ. படித்தவர்களை அங்கே அமர்த்துவதற்கு அரசு ஆலோசனை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல நமது 18 நூற்பு ஆலைகளிலும் நஷ்டம் என்பதற்கு நிர்வாக கோளாறு மட்டும் காரணம் அல்ல. உங்களுக்கே நன்றாகத் தெரியும், ஏற்கெனவே பஞ்சு உற்பத்தி குறைந்ததன் காரணமாகத் பஞ்சினுடைய விலை அதிகமாக ஆனதன் காரணமாக, நாம் பெடரேஷன்கள் வாயிலாக பஞ்சுகளை வாங்குகிறபோது, அதிலே சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. இப்படி இவை அனைத்திலும் இருக்கிற பிரச்சினையின் காரணமாகத்தான் எல்லா நூற்பு ஆலைகளும் நட்டத்தில் இயங்குகின்றன. அப்படிப்பட்ட பஞ்சு இந்த ஆண்டு உபரியாக இருக்கிற காரணத்தால் இந்த ஆண்டிலிருந்து ஓரளவு, நமது மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் புரட்சி தலைவி அவர்கள் மாடர்னைசேஷன் ஸ்கீமாக ஏறத்தாழ 7 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அத்தோடு மத்திய அரசிடம் தேவையான நிதியைப் பெற்று, கடன் உதவியைப் பெற்று, அதற்கு பின்னால் மாடர்னைசேஷன் செய்யலாமா என்று அதிகாரிகளோடு கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அதற்குப் பின்னால் மாண்புமிகு உறுப்பினர் ஜெயகுமார் அவர்கள் கூறிய கருத்தைப் போல எம்.பி.ஏ.க்கள் போன்றவர்களை இதிலே நியமிக்க வேண்டும் என்றாலும், டெக்னிக்கல் பியூப்பிளை, நியமிக்க வேண்டும் என்று அரசுக்கு கருத்து இருந்தாலும்' பரிசீலிக்கலாம். ஏற்கெனவே இவை கூட்டுறவுத் துறை நூற்பு ஆலைகளாக இருக்கிற காரணத்தினால் கூட்டுறவு துறையின் கீழ் என்ன சட்ட விதி முறைகள் இருக்குமோ. அதற்கு உட்பட்டுதான் நாம் செயலாற்ற வேண்டியிருக்கிறது. அப்போது அதை மாற்றுவதற்கு என்ன வழி, எப்படி மாற்றலாம்

என்பதை அரசு அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து, தமிழகத் தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சி தலைவியினுடைய கட்டளைகளை ஏற்றுக் கொண்டு அது செயலாக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 9, திரு. சி. இராமசாமி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

9—

கல்வராயன் மலைப்பகுதி சாலைகளை செப்பனிடல.

*11199—திரு. சி. இராமசுவாமி:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலைப்பகுதியில் சாலைகள் மிகவும் பழுதடைந்து பேருந்துகள் செல்ல இயலாத வண்ணம் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அச்சாலைகளைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சாலை செப்பனிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப் பகுதி மூலக்காடிலிருந்து சேராப்பட்டு செல்லும் பாதையில் கடந்த 5 மாதங்களாக பஸ்கள் செல்லாமல் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கின்றன. இதனால் மலைவாழ் மக்கள் 25 கிலோ மீட்டர் தூரம் சேராப் பட்டு பகுதிக்கு மூலக்காடியிலிருந்து நடந்து செல்லுகிறார்கள். ஆகவே உடனடியாக அந்தப் பாதையை செப்பனிட அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரங்கப்ப னூர் கிளாக்காடு சாலை ஏறத் தாழ 25 கிலோ மீட்டர் நீளம் ஆகும். சமீபத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாக சாலைகள் பாதிக்கப்பட்டு



இருக்கின்றன. சென்ற ஆண்டு ஏற்கெனவே 8 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இந்த ஆண்டு, அதாவது 1992–93 ஆம் ஆண்டிற்கு 9 லட் சத்து 30 ஆயிரம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதற் கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டு இருக்கின்றன. அது தவிர அங்கே இருக்கிற பக்கவாட்டு சுவர்களை கட்டுவதற்காக 7 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே கிட்டத்தட்ட 25 லட்சம் ரூபாய் அந்தப் பகுதியிலே மட்டும் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. போக்கு வரத்திற்கு இடையூறு இல்லாமல் இப்போது வேலைகள் நடை பெற்று வருகின்றன. ஆகவே போக்குவரத்துக்குப் பாதிப்பு ஏற்படாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 மாத காலமாக சேராப்பட்டு சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டு பஸ்கள் செல்லவில்லை. மலை வாழ் மக்கள் 25 கிலோ மீட்டர் நடந்து செல்லுகிறார்கள். அமைச்சர் அவர்கள் வேலை நடப்பதாகச் சொல்லுகிறார்கள். அதைத் துரிதப்படுத்தி உடனடியாக பஸ்கள் ஓட ஆவன செய் வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற சாலையைப் பற்றிதான் நான் விவரத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவர்கள் எந்த சாலையைக் குறிப்பிட்டு சொல்லுகிறார்கள் என்று தெரியவில்லை. ரங்கப் ப னூர் கிளாக்காடு சாலை, வெள்ளிமலை பரிகம் சாலை, மணியாறு குண்டம் வெள்ளிமலை சாலை ஆகிய இந்த மூன்று சாலைகளும் இந்த கல்வராயன் மலைப் பகுதியிலே இருக்கின்ற சாலைகள் ஆகும். அந்த சாலைகளின் திட்ட மதிப்பீடுகள் மற்றும் இப்போது நடைபெறுகிற வேலைகள் பற்றித்தான் சொன்னேன். வேறு சாலைகள் ஏதேனும் இருக்குமானால், அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வருவார்களேயானால் உடனடியாக செப்பனிட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே 30 கோடி ரூபாயை வருடத்திற்கு 'பேட் ஸ்டிரக்ச்சர்' என்று சொல்லப்படுகிற மிக மோசமான சாலைகளை பராமரிக்க ஒரு தனித் திட்டத்தையே தந்திருக் கிறார்கள். ஆகவே போக்குவரத்து பாதிக்கப்படும் என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். பி. பரமசிவம்.

[1993 பிப்ரவரி 8

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக் காலங்களில் மலைப் பாதையான அந்த கல்வராயன் மலையில் லேண்ட் ஸ்லைடு—நிலச்சரிவு ஏற்பட்டு இதுபோன்று ஆண்டு தோறும் போக்குவரத்து பாதிக்கப்பட்டு கிட்டத்தட்ட ஒரு வார காலத்திற்கு அந்த மலைவாழ் மக்கள் தங்களது உணவுப் பொருட்களை வாங்குவதற்கு நிலப் பகுதிக்கு வர முடியாமல் தவிப்பது அந்தப் பகுதியில் நிரந்தர சோதனையாக இருக்கிறது. எனவே அன்னை இந்திரா அவர்களுக்குப் பிறகு நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் மலைவாழ் மக்களுடைய இதயத்தில் குடி கொண்டிருக்கிறார்கள். அந்த மலைவாழ் மக்களுக்கு நம்முடைய இதய தெய்வம் ஆட்சியில் இதுபோன்ற லேண்ட் ஸ்லைடு ஏற்படுகின்ற இடத்தை தேர்வு செய்து நிரந்தரமான ஒரு ரீடெயினிங் வால் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதியிலே சாலைகளை போடுகின்றபோது மத்திய அரசினுடைய ஒப்புதலோடு அங்கே இருக்கின்ற வன வளங்களை பாதுகாக்கின்ற முறையிலே சில நிபந்தனைகளை விதிக்கின்ற காரணத்தினால் மாநில அரசால் அவைகளைச் செய்வதற்கு ஏதுவாக இல்லாமல் சில சங்கடங்கள், இடர்பாடுகள் ஏற்படுகின்றன. இவைகளைத் தவிர்ப்பதற்காகத்தான் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தென் மண்டல மாநில முதல்வர்கள் மாநாட்டிலே கூட கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். ஆகவே இது போன்ற பிரச்சினைகள் நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே தீர்க்கப்பட்டு இப்போது பெருவாரியான டெண்டர்கள் கோரப்பட்டிருக்கின்றன. மலைப் பகுதியிலே சாலைகள் போடுவதற்காக ஏறக்குறைய—சமீபத்திலே நீங்கள் பத்திரிக்கையிலே பார்த்திருக்கலாம்— $2\frac{1}{2}$ கோடி ரூபாய் அளவிற்கு நம்முடைய டெண்டர்கள் கோரப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த ஆட்சியிலேதான் மலைப் பகுதியிலே இருக்கின்ற சாலைகளை மேம்படுத்துகின்ற திட்டம் துவக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அந்த நிலச்சரிவு, இயற்கையின் சீற்றத்தால் ஏற்படுகின்ற விளைவுகளை நாம் அவ்வப்போதுதான் சரி செய்ய முடியும். அதற்கான ஒரு நிரந்தரத் திட்டத்தையும் இந்த அரசு பரிசீலனையில் வைத்திருக்கிறது. அதற்கான செலவினம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே நம்முடைய நிதி ஆதாரத்திற்கு உட்பட்டு அதை எப்படி பயன்படுத்தலாம் என்ற நிலையை ஆய்வு செய்து கொண்டு இருக்கிறோம். ஆகவே உறுப்பினருடைய கோரிக்கை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1993 பிப்ரவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 10, திரு. இராம. இராமநாதன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

10—

விவசாய பம்ப் செட்டிற்கு மின் இணைப்பு வழங்கல்.

*11395— திரு. இராம. இராமநாதன்:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய பம்ப் செட்டிற்கு மின் இணைப்பு கோரி விண்ணப்பிக்கும்போது மின் மோட்டார் காண்பித்தால்தான் முன்னுரிமையில் இணைப்பு அளிக்க முடியும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டும், மின் இணைப்பு வழங்க தாமதமாவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தற்போதுள்ள தமிழ்நாடு மின்சார வாரிய ஆணையின்படி விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கோரி விண்ணப்பிக்கும்போது மின் மோட்டார் வாங்கிய அந்த அத்தாட்சியைக் காண்பிக்கத் தேவையில்லை. தயார் நிலை நோட்டீஸ்— பிரிபரேஷன் நோட்டீஸ் பெறப்பட்டவுடன் பதிவு செய்யும்போதுதான் அந்த மின் இணைப்பு மோட்டாரை வாங்கிய சான்றிதழ் காண்பிக்க வேண்டும் என்ற விதி இருக்கிறது. ஆகவே இந்தப் பிரச்சினைக்கு இடம் இல்லை.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது அப்படி கேட்கவில்லை என்று சொல்கிறார்கள். முன்பு கேட்ட வரையில் அந்த மோட்டரை வாங்கிய பிறகு தான், நீங்கள் காண்பித்த பிறகுதான் உங்களுக்கு முன்னுரிமையிலே அது கொடுக்கப்படும் என்று சொல்லி வந்தார்கள். ஆனாலும் இன்றைய சூழ்நிலையிலேகூட பல விவசாயிகள் பம்ப் செட்டை வாங்கி வைத்துக்கொண்டு நிலவள வங்கிகள் போன்ற வங்கிகளிலே கடன்களைப் பெற்று அந்த பம்புகளை வாங்கி வைத்துக் கொண்டு, ஆனால், அதனுடைய உபயோகம் இல்லாமல் தற்

போது ஐடிலாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த பம்ப் செட்டை உபயோகிப்பதை விட, அவர்கள் அந்த வங்கிக்கு வட்டியையும் சேர்த்து கட்டுகின்ற ஒரு சூழ்நிலை இன்றைக்கு நிலவிக்கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய இந்த நல்லாட்சியிலே '' ஆடியிலே பெருக்கெடுத்து ஆடிவரும் காவேரி '' என்று சொல்வார்கள். அப்படி இன்றைக்கு தஞ்சை, நாகை, காய்தே மில்லத் போன்ற மாவட்டங்களில் எல்லாம் விவசாயம் அதிகமாகப் பெருகி ஒரு சுபீட்சமான நிலை இருக்கின்ற காரணத்தினால், தஞ்சை, நாகை, காய்தே மில்லத் போன்ற மாவட்டங்களினுடைய விவசாயிகளுக்கு உடனடியாக இந்த பம்ப் செட்டினுடைய கனெக்ஷன்களை எல்லாம் கொடுப்பதற்காக அரசாங்கத்தின் மூலமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையை ஏற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான ஆணையை வழங்குவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, விவசாயிகளுக்கு மின் இணைப்பைக் கொடுக்கின்ற பிரச்சினைகளைப் பொறுத்தமட்டில் முன்னுரிமை அடிப்படையிலே சீனியாரிட்டி பேசிஸ் என்று சொல்லப்படுகின்ற முன்னுரிமை அடிப்படையிலே மின்சார இணைப்புக்களை வழங்கிக் கொண்டு வருகிறோம். வருடத்திற்கு 40,000 மின் இணைப்புக்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அது தவிர, சிறப்புத் திட்டத்தின் கீழே ரூ 25,000 கட்டினால் உடனே கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்திரவு நல்ல பலனைத் தந்திருக்கிறது. மின்சார இணைப்புக்களைக் கொடுக்கின்ற பிரச்சினைகளைப் பொறுத்தமட்டில் நான் ஏற்கெனவே சொன்னபடி ரிஜிஸ்ட்ரேஷன் செய்கின்றபோது மின் இணைப்பு மோட்டார்களை வாங்க வேண்டிய அவசியம் கிடையாது. அவர்களுக்கு அந்த சீனியாரிட்டி வருகின்றபோது 90 நாட்களுக்கு முன்னாலே அவர்களுக்கு அந்த நோட்டீஸ் கொடுக்கின்றோம். தயார் நிலை நோட்டீஸ் என்று சொல்லப்படுகின்ற அந்த முன் அறிவிப்பு நோட்டீஸ் கொடுக்கின்றோம். அந்த நேரத்தில் அவர்கள் வாங்கினால் போதும். ஆகவே, வங்கிகளிலே கடன் வாங்கி அப்ளிகேஷனை பதிவு செய்கின்ற நேரத்திலே மோட்டார் வாங்க வேண்டிய அவசியம் கிடையாது. அது தவறான தகவல். தெளிவாக மின்சார வாரியத்தினுடைய நிர்வாகத்தின் ஆணையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது முன் அறிவிப்பு நோட்டீஸ் கொடுத்தவுடன் நீங்கள் மின்சார மோட்டாரை வாங்கிக் கொடுத்தால் உடனடியாக மின்சார இணைப்பு வழங்கப்படும். அதிலே ஏதாவது பிரச்சினை இருக்குமானால் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக அது தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் இணைப்பைப் பொறுத்த வரையில் இராதாபுரம் தொகுதியில் நிறைய வறட்சி நிலவிய அந்தக் காலங்களில் பயன்படுத்தாதக் காரணத்தால், அவர்களுக்கு வருவாய் இல்லாத காரணத்தால், மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிற நிலையில் இருக்கிறார்கள். இன்றைக்கு தண்ணீர் இருந்தும் அவர்கள் பயன்படுத்தாத நிலையில் இருக்கிறார்கள். பாக்கித் தொகை கட்டிய உடன் அவர்கள் மீண்டும் இணைப் பைப் பெறுகின்ற வகையில் உதவ அரசு முன் வருமா என்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி புதிதாக முதன் முதலாக இணைப்பை வாங்குவது பற்றியது. ஏற்கெனவே துண்டிக்கப்பட்டதற்கு நீங்கள் கேட்கிறீர்கள். தனிக் கேள்வி போடவும்.

திருமதி. ரமணி நல்லதம்பி : இருந்தாலும் அமைச்சர் அவர்கள்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: '' இருந்தாலும் அமைச்சர் '' என்பது சரியல்ல. தனிக் கேள்வி போட்டு பிறகு நீங்கள் கேளுங்கள். தனிக் கேள்வி போடவும். திரு. என். பன்னீர் செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் இணைப்பு கொடுப்பதில் on the line service scheme, NABARD scheme, Two poll scheme, one poll scheme, போன்ற இணைப்புகளின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. மின் இணைப்புக்கு விண்ணப்பம் செய்து எத்தனை நாட்களில் அல்லது எத்தனை மாதங்களில் அல்லது எத்தனை வருடங்களில் கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னது போல் மின் இணைப்புக்களைக் கொடுக்கின்றபோது '' சீனியாரிட்டி பேசிஸ் '' என்ற அடிப்படையில் யார் முதலில் பதிவு செய்கிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்துக்கொண்டு வருகிறோம். வருடத்திற்கு இத்தனை ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு என்று இலக்கு நிர்ணயித்து வைத்து இருக்கிறோம். அது போதவில்லை என்றுதான் சிறப்புத் திட்டத்தின் கீழ் நம்முடைய

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்குப் பிறகு மின்
இணைப்பைக் கொடுக்கிறோம். இன்றைக்கு இருக்கின்ற மின்
நிலையைப் பொறுத்த வரையில் உடனடியாக எல்லா மின்
இணைப்பையும் கொடுத்து விடலாம். ஆனால், மின்சார சாத
னங்களை வாங்குவதற்கு நிதி ஆதாரங்களைப் பொறுத்து வருடா
வருடம் இலக்கின் நிலையை நிர்ணயித்துக் கொண்டு வருகிறோம்.
ஆகவே, சீனியாரிட்டி அடிப்படையில் எந்தவிதமான முறைகேடும்
இல்லாமல் முறையாக மின் இணைப்பு வழங்கப்படுகிறது. அவர்
கேட்கின்ற கேள்விக்கு, சீனியாரிட்டி அவருக்கு எப்போது வரு
கின்றதோ அந்த அளவுக்கு மின்சாரம் அவருடைய பகுதிக்கு
வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா.சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த சிறப்பு முன்னுரிமைத் திட்டத்திலே ரூபாய் 25
ஆயிரம் செலுத்தினால் மின் இணைப்பு கொடுக்கப்படும் என்
பதிலே அந்த 25 ஆயிரம் ரூபாயோடு மட்டும் நின்று விடுவது
இல்லை. அதற்கு மேலும் அதிகமாக தொகை தேவைப்படுகிறது.
ஆனால், அந்த விவசாயிகளுடைய மின் இணைப்புக்கு வேண்
டிய கம்பி, கம்பங்கள் போன்றவைகளுக்கு எவ்வளவு தொகை
ஆகிறதோ அதை மட்டும் கட்டினால் அவர்களுக்கு மின் இணைப்பு
கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்
களா என்றும் கூடுதல் மின் திறன் இல்லாமல் பல கிணறுகள்
ஆழப்படுத்தப்பட்டு அவர்கள் அந்தத் தண்ணீரை மேலே கொண்டு
வர முடியாமல், வேறு அதிக '' ஆர்ஸ் பவர் '' மோட்டாரை
வைத்து ஓட்டுகின்றபோது மின்சாரத் திருட்டு என்று பிடித்து
விடுகிறார்கள். எனவே, கூடுதல் மின் திறனை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி அதற்கு
தனிக் கேள்வி போடவும். முதல் பகுதிக்கு மட்டும் அமைச்சர்
பதில் சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, சிறப்புத் திட்டத்தின் கீழ் 25 ஆயிரம்
ரூபாய் கட்டினால் கொடுக்க வேண்டுமென்று பல்வேறு கோரிக்கை
கள் எழுப்பிய காரணத்தால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்
சர் அவர்கள் அதனை ஏற்று கொடுத்து இருக்கின்ற காரணத்தால்
நல்ல பலன் தந்திருக்கிறது. ஏறத்தாழ 6 கோடி ரூபாய் மின்சார
வாரியத்திற்கு வருமானம் வந்திருக்கிறது. பல பேர் தயார்
நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டம் வெற்றி
கரமாக செயலாற்றிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் சொல்வது போல் இப்போது இருக்கின்ற
நிலைமை அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அரசு இலவச மின்
சாரம் வழங்கிக்கொண்டிருக்கிறது. மின்சார வாரியத்தை



எவ்வளவு நெருக்கடியான சூழ்நிலையில் நடத்திக் கொண்டிருக்கி
றோம் என்பது உழவர் உழைப்பாளர் கட்சியைச் சேர்ந்த மாண்பு
மிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே,
அதிகச்செலவினங்களைத்தற்போது மின்சார வாரியம் ஏற்க இய
லாது. ஏற்கெனவே இருக்கின்ற திட்டம் மக்களுக்கு நல்ல முறை
யில் பயன்படுகின்ற திட்டம். அதையே பயன்படுத்திக்கொள்ள
லாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 11, திரு. கி.
இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, மாண்புமிகு உள்ளாட்சித்
துறை அமைச்சர்.

## திருத்தணி நகரில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல்.

*9968—திரு. கி. இராஜன்பாபு (என்கிற) தணிகைபாபு
மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா —

திருத்தணி நகரில் தற்போது உள்ள பேருந்து நிலையம்
போதிய இடவசதியில்லாததால், மாற்று இடத்தில் பேருந்து
நிலையம் கட்டுவதற்கான பணிகள் எப்போது செயல்படுத்தப்
படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை
அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தணி நகரியத்தில் தற்பொழுது இயங்கிவரும் பேருந்து
நிலையம் இடவசதி இல்லாததால், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி
திருக்கோவிலுக்குச் சொந்தமான நிலத்தை பரிமாற்றம் செய்து
மத்திய ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர அபிவிருத்தித்
திட்டத்தின் கீழ் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட நட
வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மத்திய அரசினுடைய
நிதி கிடைக்கப்பெற்றிருக்கிறது. திருக்கோவிலுக்குச் சொந்த
மான அந்த இடத்திற்கு கைமாறாகக் திருத்தணி நகரியத்திற்குச்
சொந்தமான 2 இடங்களைத் தருவதாக நகரியம் ஒப்புக்கொண்
டும் திருக்கோவிலுடைய ஆணையருக்கு கோப்பு அனுப்பப்பட்
டிருக்கிறது. அதிலே கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. எனவே,
உடனடியாக இந்த கால தாமதத்தை நிவர்த்தி செய்து இன்றைய
தினம் எனது தொகுதியில் பல கோடி ரூபாய் திட்டங்களை
எல்லாம் அள்ளித் தந்திருக்கிற தமிழகத்தினுடைய நிரந்தர
முதலமைச்சர் புனிதத் தாய், டாக்டர் புரட்சித் தலைவி

அவர்களுடைய ஆட்சியில் இந்தக் கட்டத்திலேயும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றித் தருவார் கள் என்ற நல்ல உணர்வோடு எனது தொகுதி மக்கள் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10–40

திருத்தணி ஒரு மிகப் பெரிய ஐந்தாவது படை வீடு. அங்கே, அந்தப் பேருந்து நிலையம் அமைவதால் அந்தத் திருக்கோயிலுக் குத்தான் பயனும் ஏற்படவுள்ளது. எனவே, இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு திருக்கோயிலுக்குச் சொந்தமான அந்த இடத் தினை அரசு உடனடியாக மேற்கொண்டு அந்தப் பேருந்து நிலை யம் அமைவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வழிவகை செய்ய வேண்டுமாய் கேட்டு, மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் உடன் இந்தத் திட்டத்தை நிறைவேற் றித்தரவேண்டுமாய் உங்களின் சார்பாக எனது வேண்டுகோளை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : உடனடியாக நிறைவேற்றித் தரப்படுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, புதிய பேருந்து நிலையம் அமைப்ப தற்கு இடம் தேர்வு செய்யப்பட்டபோது அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 4.40 ஏக்கர் நிலமும் அருகிலுள்ள 1.50 ஏக்கர் புறம்போக்கு நிலமும் பேருந்து நிலையம் அமைப்பதற்கு சிறந்த இடமாகக் கருதப்பட்டது. கோயில் நிலத் திற்கு ஈடாக திருத்தணி நகரிய பராமரிப்பில் உள்ள இடிகுளம் என்ற குளப் பகுதியினை, சுமார் 1.5 ஏக்கர் நிலத்தை திருக் கோயில் நிர்வாகத்திற்கு ஒப்படைக்கிற நில பரிமாற்ற நடவடிக்கை முடிவடையும் தருவாயில் உள்ளது. இந்தப் பரிமாற்றம் விரைவுபடுத்தப்பட்டு மத்திய ஒருங்கிணைந்த சிறு மற்றும் நடுத் தர நகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சுமார் 1.2 கோடி மதிப் பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட இருக்கிறது என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 12, திரு. செ. கு. தமிழரசன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.



12—

மாநகராட்சி துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.

*14673—திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு உள்ளாட் சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மாநகராட்சிகளிலுள்ள துப்புரவுத் தொழிலாளர் களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?

(இ) நகராட்சிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மாநகராட்சிகளில் உள்ள துப்புரவுப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் ஒரு நல்ல திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்று தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டுள்ளார் கள். இதற்கான கருத்துருக்களை உருவாக்கி அரசுக்கு அனுப்பும் படி சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. அந்தக் கருத்துருக்கள் பரி சீலிக்கப்பட்டுத் தேவையான உத்திரவுகள் விரைவில் வழங்கப் படும்.

(இ) இந்தத் திட்டம் படிப்படியாக நகராட்சிகளுக்கும் விரி வாக்கப்படுவது குறித்தும் அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துப்புரவுத் தொழிலாளர்கள் இருந்துகொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக, நூற்றுக்கு நூறு சதவீதம் ஒரே சமுதாயத்தைச் சார்ந் தவர்கள்தான் அந்தத் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார் கள். ஊரையே தூய்மைப்படுத்துகிற அவர்களுக்குத் தங்கு வதற்கு இடம் இல்லாமல் ஒதுக்குப்புறங்களிலே தங்குகிற நிலைமை, அவல நிலைமை இருந்துகொண்டு இருக்கிறது. துப்புரவுத் தொழிலாளர்கள் நகர்ப்புறங்களிலே வீடு கேட்டால் அவர்களுக்கு வாடகைக்குக்கூட வீடு கிடைப்பதில்லை. எனவே இந்த அவல நிலைமையைப் போக்கிட அரசு முன் வந்திருப்பது பாராட்டிற்குரியது. ' ஏழையின் சிரிப்பிலே இறைவனைக்

காண்போம்' என்றார் பேரறிஞர் அண்ணா. 'நலிந்த மக்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்' என்றார் அண்ணல் அம்பேத்கார். 'உழைப்பவரே உயர்ந்தவர்' என்று சொன்னார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஏழைகளின் உயர்வே எனது உயிர் மூச்சு' என்கிற வகையிலே இன்றைக்கு உழைத்துக்கொண்டிருக்கிற தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சிறப்பான திட்டத்தை அறிமுகப்படுத்தியிருப்பதை வரவேற்கிறேன். எவ்வளவுவிரைவிலே இதைத் தொடங்க முடியும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்படி, இன்று இந்தியாவில், ஏனைய மாநிலங்களுக்கு முன் உதாரணமாக, ஏழையெளிய மக்களின் முன்னேற்றத்திற்காக புதிய புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. அந்தத் திட்டங்களில் துப்புரவுப் பணியாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமும் ஒன்று. தெருக்களைச் சுத்தமாகப் பராமரிக்கும் துப்புரவுப் பணியாளர்களின் பணி மிகவும் முக்கியமான ஒன்று. இவர்கள் தற்போது பல்வேறு இடங்களிலிருந்து அதிகாலையில் பணிக்கு வருவது சிரமமாக இருக்கிறது. எனவே அவர்களுக்கு ஒரு நல்ல இடத்தைத் தேர்வு செய்து அங்கே அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். மிக விரைவிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களிலே இன்னமும் கூட மனிதன் மலத்தை மனிதனே தலையில் தூக்குகிற கொடுமை இந்த இருபதாம் நூற்றாண்டிலும் நடைபெற்று வருவதை நாம் அறிவோம். எனவே, முழுக்க முழுக்க ஃபிளஷ்-அவுட் லெட்ரின் என்று சொல்லப்படுகிற உலர் கழிவறைகளைக் கட்டித் தருவதற்கும் ஈரமான அந்தக் கழிவறைகளை அகற்றுவதற்கும் சட்டத் திருத்தம் செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழக அரசின் சார்பில் பல்வேறு நகராட்சிகளுக்கு இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். மிக விரைவில், இவை கிராமப்புறங்களிலும் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளில் பணியாற்றுகிற துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடுக் கட்டிக் கொடுக்கும் அந்தத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படாவிட்டாலும், அந்த நகராட்சிகளுக்குச் சொந்தமான இடங்களில், அவர்களுக்கு இடமாவது கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு தமிழக அரசின் சார்பிலே திட்டங்கள் தயாரிக்கப் பட்டு, நிறைவேற்ற இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி தனியாக இடங்களை ஒதுக்கிக் கொடுத் தால், அதன் செலவை ஏற்று கட்டிக் கொள்வதற்கு அவர்களிடத் திலே பொருளாதார நிலைமை இல்லாத காரணத்தினால், அரசே முன்வந்து அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத் தைத்தயாரித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்கம் வீடு கட்டவே தயாராக இருக்கிறது என்கிறபோது, உறுப்பினர், இடமாவது கொடுங்கள் என்பதாகக் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து வினா எண் 13 டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

13—

## கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு உணவு அட்டை மூலம் மண்ணெண்ணெய் வழங்கல்.

*9141—டாக்டர் மு. அம்மமுத்துப்பிள்ளை : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1700 மீனவர்கள் மண்ணெண்ணெயினால் இயங்கும் கட்டுமர வெளிப்பொருத்து இயந்திரம் (Out Board Motor) பொருத்துவதால் உரிய நேரத்தில் மண்ணெண்ணெய் கிடைக்காமல் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதால் இவர்களுக்கு உணவு அட்டை மூலம் ரேஷன் கடையில் மண்ணெண்ணெய் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

[1993 பிப்ரவரி 8

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைசசர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மீனவர்களின் கட்டுமரங்களில் பொருத்தப்பட்டுள்ள வெளிப்பொருத்து இயந் ரங்களுக்குப் (Out Board Motors) பயன்படுத்த மண்ணெண்ணெய் வேண்டும் என விண்ணப்பித்தவர்களுக்கு மீன்வளத்துறை உதவி இயக்குநர் பரிந்துரையின் அடிப்படையில், பொது விநியோகத் திட்ட விலையில் மண்ணெண்ணெய் வழங்கப் பட்டு வருகிறது. இவர்களுக்கு உணவு அட்டைகள் மூலம் மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் முக்கடலும் சூழ்ந்துள்ள ஒரு பகுதி. அங்கு மீனவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். விவசாயத்திற்கு அடுத்தபடியாக மீன்பிடித் தொழில்தான் அங்கு முக்கியத் தொழிலாக இருக்கிறது. தற்போது மீனவர்கள் கட்டுமரத்திலிருந்து படிப்படியாக மாறி, அவுட்-போர்ட் என்ஜின் வைத்து தொழில் செய்கிறார்கள். அதற்கு வேண்டிய மண் ணெண்ணெய் கிடைக்கவில்லை. மற்றும் அது அதிகமாகத் தேவைப்படுவதால், வெளிச்சந்தையிலிருந்து வாங்க வேண்டி யிருக்கிறது. எனவே, அந்தத் தொழிலைச் சீரமைக்க அரசு கருணைகூர்ந்து, உணவு அட்டை மூலம் மண்ணெண்ணெய் வழங்க மறு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, தற்போது அந்த மாவட்டத்தில் 94 பேர் மட்டுமே விண்ணப்பித்து அவர்களுக்கு மண்ணெண்ணெயை நாம் வழங்கி வருகிறோம். இதற்குமுன் செய்யாத சாதனையை — இதற்கு முன்பெல்லாம் மீனவர்களுக்கு 'இண்டஸ்ட்ரியல் ரேட்'டிலேதான் மண்ணெண்ணெய் வழங்கப் பட்டது. ஆனால், நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அதை மாற்றி செப்டம்பர் 1992-லேயிருந்து, 'இண்டஸ்ட்டிரியல் ரேட்'-ஆக இருக்கிற ரூ. 6.15-லிருந்து மாற்றி, ரூ. 2.75-க்கு அவர்களுக்கு வழங்கிக்கொண்டிருக் கிறோம் இன்னும் யார் யாருக்குத் தேவையோ அவர்கள் முறையாக விண்ணப்பிப்பார்களேயானால், அவர்களுக்கும் அவ் வாறு எண்ணெய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.



1993 பிப்ரவரி 8]

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே நம்முடைய மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் கேட்டக் கேள்விக்கிணங்க, அதாவது மீன்துறை இலாகாவிலிருந்து அவர்களுக்கு மண்ணெண்ணெய் கிடைப்ப தில்லை. ஆகையால்தான் 'ரேஷன் கார்டு' மூலமாக இல்லையென்றாலும், அவர்களுக்கு எத்தனை 'போட்' இருக் கிறது என்பதைப் பார்த்து, அமைச்சர் சொல்லும்போது 94 'போட்'களுக்கு என்று சொன்னார் ; உண்மையிலேயே 1,700 அல்ல ; 2,000-க்கும் மேற்பட்ட 'போட்'டுகள் அங்கே இருக்கின்றன. எல்லா போட்டுகளுக்கும் இந்த அளவுக்கு குறிப்பாக இவ்வளவு மண்ணெண்ணெய் கொடுப்போம் என்று சொல்கிறபடி, தனி அட்டை — 'ரேஷன் கார்டு' மூலமாக இல்லாவிட்டாலும்கூட — தனி அட்டை மூலமாகக் கொடுப்ப தற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அவர்களுக்கு என்று தனியாக 'பெர்மிட்' மூலம் வழங்கிக் கொண்டு வருகிறோம். பலபேர் அங்கே இருக்கிறார்கள். ஆயிரக் கணக்கில் என்றாலும், அவர்கள் இதுவரை விண்ணப்பிக்கவில்லை. மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள், முயற்சி எடுத்து விண்ணப்பம் போடுவார் களேயானால், நிச்சயமாக அனைவருக்கும் வழங்கப்படும் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 14, திரு ஜி. பழனிசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

14— தனியார் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு மையங்களில் வேலை வாய்ப்பு அளித்தல்.

*13313—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தனியார் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு மையங்களில் வேலைவாய்ப்பு அளிக்கப் படுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

[1993 பிப்ரவரி 8

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அங்கீகாரம் பெற்ற தனியார் தொழிற் கல்வி நிலையங்களில் பயின்ற மாணவர்கள், அரசு வேலை வாய்ப்பு மையங்களில் பதிவு செய்திருந்தால், அவர்களுடைய கல்வித் தகுதி, வயது, பதிவு மூப்பு ஆகியவற்றின் அடிப்படை யில் தகுதியான காலியிடங்கள் பெறப்படும்பொழுது, வேல யளிப்போருக்குப் பரிந்துரை செய்யப்பட்டு வருகின்றனர்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் பயில்கின்ற மாணவர்களுக்கு, வேலைவாய்ப்பு இடங்களில் காலியிடம் இருந்தால், அவர்களுக்கும் அளிக்கப்படும் என்று கூறுகிறார்கள். ஆனால், பொதுவாக அரசு அங்கீகாரம் பெற்ற அல்லது அரசு மூலமாக நடத்தப்படுகிற அந்தக் கல்விக்கூடங் களில் பயின்றவர்களுக்குத்தான் முன்னுரிமை அளிக்கப்படு கிறது. தமிழகத்திலே, இதுபோன்ற தனியார் தொழிற் பயிற்சிக் கல்லூரிகள் தெருக்கள்தோறும் இன்றைய தினத்திலே நடத்தப்படுகின்றன. ஏழை எளிய மாணவர்கள் இன்றைய தினத்திலே அதிலே பெருவாரியான ரூபாய்களைச் செலுத்தி, பயின்று கொண்டிருக்கிற இந்த நேரத்தில், அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா? ஏனென்று சொன்னால், அரசு வேலை தேடுகின்ற அலுவலகத்திலிருந்து அவர்களுக்கு 'இண்டர்வியூ' அனுப்புகிறபோது, இதுபோன்ற வர்களுக்கு 'இண்டர்வயூ' அனுப்புவதில்லை. ஆக, இந்தக் குறைகளைப் போக்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா, உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.50

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தொழிற்பயிற்சிக் கல்வி நிலை யங்கள், தனியார் தொழிற்பயிற்சிக் கல்வி நிலையங்கள் என்று வேறுபாடு பாராது அங்கீகாரம் பெற்ற தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்கள் என்பதால் எந்த உரிமையும் மறுக்கப்படமாட்டாது. சீனியாரிட்டி அடிப் படையில் வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 15, திரு. சி. தாமோதரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர். உறுப்பினர் இருக்கையில் இல்லை.



1993 பிப்ரவரி 8]

வினா எண்.16, திருமதி கவிநிலவு தர்மராஜ். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

16

மொடக்குறிச்சி தொகுதியில் வீட்டுவசதி வாரியம் மூலம் அடுக்குமாடிக் கட்டிடங்கள் கட்டுதல்.

*11759—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதியில், வீட்டுவசதி வாரியத்தின் மூலம் அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டப்படுமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மொடக்குறிச்சி தொகுதி கிராமப்பகுதி என்பதால் அங்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அடுக்குமாடி வீடுகள் கட்ட இயலாது.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி கிராமப் பகுதியாக இருக்கிற காரணத்தினாலும், ஈரோடு தாலூக்காவுக்கு உட்பட்ட காரணத்தினாலும், இதுவரை அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டப்படுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்தது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல உண்மைதான். இருந்தாலும்கூட, 5 இலட்சம் வாக்காளப் பெருமக்களைக் கொண்ட மொடக்குறிச்சி தொகுதி ஈரோடு தாலூக்காவுக்கு உட்பட்டிருந்தாலும் கூட, விவசாய நிலங்கள் அங்கு நிறைய இருக்கிற காரணத்தினாலும், இதய தெய்வம் பொலிவுடைத் தலைவி, புரட்சித் தலைவியின் ஆட்சியிலே 1 இலட்சம் பேருக்கு நடப்பு ஆண்டில் வீடுகட்டிக் கொடுக்கிற உன்னதத் திட்டம் இருக்கிற காரணத்தினாலும், வீடு இல்லாத வர்களை அதிகபட்சமாகக் கொண்டிருக்கிற கிராமப் பகுதி யாகிய மொடக்குறிச்சி பகுதியிலே, அது தனித் தாலூக்காவாக இல்லாத காரணத்தினால், வீடு இல்லாதவர்கள் இலட்சக் கணக்கிலே இருக்கிற காரணத்தினால், நம்முடைய புண்ணியத் தலைவியினுடைய அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்து நாங்கள் அரசுக்குரிய நிலங்களைத் தேர்வு செய்து கொடுப் போமேயானால் அந்த இடங்களிலாவது அடுக்கு மாடிக் கட்டிங்கள் கட்டித்தர ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சித் தொகுதியிலே எனக்குத் தெரிந்தவரை 5 இலட்சம் மக்கள் தொகை இருப்பதாக நான் அறியவில்லை. இருந்தபோதிலும், வீட்டு வசதி வாரியத்திலே கிராமப் பகுதியிலே வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்திற்கு எந்தவிதமான செயற்குறிப்பும் இல்லை. அதைச் செயல்படுத்தவும் இல்லை. தற்போது வாரியத்தின் வாயிலாகத் தமிழகத்தில் சுமார் 84 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களிலே இப்படிப்பட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தேவைக்கேற்ப தேவையை நிர்ணயிக்கின்ற வகையில், சமீப காலத்திலே வாரியம் ஒரு விளம்பரத்தை ஏற்படுத்தியது. இரண்டாம் கட்டமாக அந்தப் பணி தொடரப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை வேண்டுமென்றால் 3-வது கட்டத்திலே வீட்டு வசதி வாரியம் அந்தப் பகுதியினுடைய தேவையைக் கணக்கிலே எடுத்து அதைச் செயல்படுத்தப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி பகுதியிலே 5 இலட்சம் மக்கள் இருப்பதாகத் தனக்குத் தெரியவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 3 இலட்சம் வாக்காளப் பெருமக்களைக் கொண்டிருக்கிற பெரிய தொகுதி மொடக்குறிச்சி என்பதை இந்த நேரத்திலே நான் தெரியப்படுத்தி வருகிற மூன்று ஆண்டுகளுக்குப் பிறகாவது எங்களுடைய மொடக்குறிச்சி தொகுதியில் மாடி வீடுகளைக் கட்டித்தரக்கூடிய பணிகளைச் செய்து தந்து நீண்டகாலமாக இருக்கும் குறையை நிவர்த்தி செய்யும் வகையிலே அந்த இடத்திலே அடுக்கு மாடிக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க, நடப்பு ஆண்டிலே முயற்சிகளை மேற்கொண்டு, 3 ஆண்டுகளுக்குப் பிறகு செய்யக்கூடிய பணியை நடப்பு ஆண்டிலே செய்து தருவதற்கு மறுபரிசீலனை செய்யுமாறு அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிப்பார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு என்று சொல்லவில்லை. 3வது கட்டம் என்றால் Third Phase. அது இந்த ஆண்டிலே கூடக் கிடைத்தாலும் கிடைக்கும்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் குறிப்பிட்டது போல 3-ஆம் கட்டத்திலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கனிவோடு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 17, திருமதி கே. பஞ்சவர்ணம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

17—

**சத்துணவு மையங்களுக்கான உணவுப் பொருட்களை நியாயவிலைக் கடைகளில் பாதுகாப்பாக வைத்தல்.**

*9621—திருமதி கே. பஞ்சவர்ணம் :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சத்துணவு மையக் கட்டிடம் பல இடங்களில் பாதுகாப் பற்றவையாக உள்ளதால், அம்மையத்திற்கு வழங்கும் உணவுப் பொருட்கள் பாதுகாப்பாகவும், களவு போகாமலும் இருக்க அந்தந்தப் பகுதியில் உள்ள நியாய விலைக் கடைகளில் உணவுப் பொருட்களை வைத்து எடுத்துக்கொள்ள அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : சமூகநலத் துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10.55

திருமதி கே. பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தினுடைய முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களுடைய சத்துணவுத் திட்டத்தை நம் முடைய தங்கத் தலைவி இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் மிகச் சீரும் சிறப்புமாக செயல்படுத்தி வரக்கூடிய இந்த நல்ல நேரத்தில் அந்தச் சத்துணவு மையத்தில் இன்றைக்கு பல பகுதிகளில் பாதுகாப்பான கட்டிட வசதிகளை இன்னும் முழுமையாக நாம் செய்து கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலும் அந்தச் சத்துணவுக் கூடங்களுக்கு வரக்கூடிய பொருள்கள் களவு போகிறது என்ற நிலை இருக்கிற காரணத்தாலும், மேலும் சத்துணவு அமைப்பாளர்கள் காலத்தில் சத்துணவுக் கூடத்திற்கு வருவது இல்லையென்று சொல்லி பல இடங்களில் அவர்கள் மீது நடவடிக்கைகளை எடுக்கிற சூழ்நிலை இருப்பதாலும், சத்துணவு அமைப்பாளர்கள் வழங்கக்கூடிய பொருள்களை களவு செய்கிறார்கள் என்ற பரவலான கருத்து இருக்கிற சூழ்நிலையில், இதையெல்லாம் தகர்க்கக்கூடிய

[1993 பிப்ரவரி 8

வகையில் ஆங்காங்கே இருக்கக்கூடிய சத்துணவு மையம் இருக்கக்கூடிய பகுதிகளில் கூட்டுறவு சொசைட்டி இருக்கிறது என்ற காரணத்தால் இந்தச் சத்துணவுப் பொருள்களை கூட்டுறவு சொசைட்டிகளில் வைத்து ஒவ்வொரு அந்த அமைப்பாளர்கள் அந்த சொசைட்டிக்குப் நாளும் கையெழுத்துப் போட்டு அந்தச் சொசைட்டியிலேயிருந்து போய் பொருட்களை வாங்கி மையத்திற்கு வழங்குவார்களேயானால் அப்படி திருடிக் கொண்டு போகிறார்கள் என்ற பெயரும் அழியும், அப்படி மையத்திற்கு அமைப்பாளர்கள் வரவில்லை யென்ற பெயரும் அழியும், முறையாக அந்தச் சத்துணவு மையம் இயங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தால் அதைப் பரிசீலித்து அந்தச்சத்துணவுக் கூடங்களுக்கு வரக்கூடிய பொருட்களை கூட்டுறவு சொசைட்டியில் வைத்து எடுத்துச் செல்வதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி :</u> மாணபுமிகு பேரவைத் தலைவர் அவர்கள், தமிழ்நாட்டில் மொத்தம் 22 ஆயிரம் நியாயவிலைக்கடைகள் தான் இருக்கின்றன. ஆனால் 68 ஆயிரம் சத்துணவு மையங்கள் இருந்து கொண் டிருக்கின்றன. நியாயவிலைக் கடைக்கும் சத்துணவு மையத் திற்கும் சுமார் 5 கிலோ மீட்டருக்கும் அதிகமான தூரம் உள்ளது. எனவே, தினந்தோறும், நியாயவிலைக் கடைகளுக் குப் போய் உணவுப் பொருட்களைப் பெறுவது என்பது சிரமமான காரியமாகும். 12-3/4 மணிக்கு எல்லாம் உணவை குழந்தைகளுக்கு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டு இருக்கின்ற காரணத் தால் நியாயவிலைக் கடைகளுக்கு தினந்தோறும் போய் பொருட்களை பெற்று வருவது என்பது மிகவும் சிரமமான ஒன்றாகும். அதைத்தவிர சத்துணவு மையங்கள் ஆண்டு முழுவதும் செயல்படுகின்றன. ஆனால் நியாயவிலைக் கடைகளுக்கு வாரந்தோறும் ஒரு நாள் அரசு விடுமுறை கொடுத்திருக்கிறது. இதைத்தவிர அரசு விடுமுறை நாட் களிலும் விடுமுறை இருக்கிறது. எனவே விடுமுறை நாட்களில் உணவை எடுப்பதில் சிரமம் ஏற்படும். மேலும் நியாயவிலைக் கடைகளில் உள்ள உணவுப்பண்டங்களும், சத்துணவு மையத் திற்கான உணவுப் பண்டங்களும் கலந்து போகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதனால் நியாயவிலைக் கடை பணி யாளர்களுக்கு வீண் தொந்திரவு ஏற்படும். ஒரு நியாயவிலைக் கடையில் 2, 3 சத்துணவு மையத்திற்கான பொருட்களை வைத்துப் பாதுகாப்பது என்பது நடைமுறையில் இயலாத காரியம். நியாயவிலைக் கடைகளில் பொது மக்களுக்குத் தரப்படும் உணவுப் பொருட்களுக்கும், சத்துணவு மையத்திற்குத் தரப்படும் அரிசிக்கும் வேறுபாடு உள்ளது. இரண்டும் கலந்துவிட்டால் பிரச்சினை ஏற்படும் என்கிற காரணத்தால்



1993 பிப்ரவரி 8]

நியாயவிலைக் கடைகளில் இந்தப் பொருட்களை வைப்பது என்பது இயலாத காரியம். ஆனால் அரசு பாதுகாப்பு நடவடிக்கைகளை கடுமையாக எடுத்திருக்கிறது. எல்லா மாவட்ட எஸ்.பீ.-க்களுக்கும் தக்க அறிவுரைகளை வழங்கி யிருக்கிறது. இரவு நேரங்களில் ரோந்துப் பணியின் போது சத்துணவு மையங்களை குறிப்பாகக் கண்காணிக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. திருட்டு வழக்குகள் பதிவு செய்யப் பட்டு விசாரணை துரிதப்படுத்தப்பட்டு கண்டுபிடிக்கப்பட வேண்டுமென்றும் அந்த விவரங்களை உடனடியாகக் கவனித்து அரசுக்குத் தரும்படியும் டி.ஜி.பி. அவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள். மாவட்ட அளவிலான ஆய்விலும் இந்த ஆய்வு நடைபெறுகிறது.

நம்முடைய சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகின்றன. இந்தப் பத்து ஆண்டுக் காலத்தில் எந்த முதலமைச்சரும் சத்துணவுக் கூடங்களை சீர்படுத்த வேண்டுமென்று நடவடிக்கையை எடுத்ததில்லை. ஆனால் முதன் முதலாக நம்முடைய தமிழகத்தின் முதல் அமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

1991–92 ஆம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 3.50 கோடி செலவில் 500 கட்டிடங்கள் புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்றன. 1992–93 ல் 1,400 கட்டிடங்கள் கட்டப்படவிருக்கின்றன. 1991–92 ல் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கை மூலமாக நன் கொடையாளர்கள் 1.50 கோடி ரூபாய் கொடுத்து 7,500 மையங்கள் பழுதுபார்க்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் ஆண்டுதோறும் தமிழகத்தின் முதல்வர் அவர்கள், இந்தச் சத்துணவுக் கூடங்களை சீர்படுத்துவதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இது வரலாற்றிலேயே முதன் முறையாக புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கையாகும் (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால் மாண்புமிகு உறுப்பினர் தஞ்சை மாவட்டத்திலே யிருந்து வந்திருப்பதால் அவர்களுக்கு நான் இன்னொன்றையும் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-00

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவையின் முன் அனுமதி யோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

<u>மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தஞ்சை மாவட் டத்தில் மொத்தக் கட்டடங்கள் 2,797 இருக்கின்றன. அவற்

றில் சொந்தக் கட்டடம் 2,636. 'ரெண்ட் ஃப்ரீ பில்டிங், 30 தான் இருக்கின்றன. ஆனால் தஞ்சை மாவட்டத்திற்கு இந்த ஆண்டு 131 கட்டடங்கள் கட்டித்தர புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்கிற தகவலையும் தெரிவித்துக் கொள்கிறேன். 1989–90 ஆம் ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த போது 25 திருட்டுக் குற்றங்கள் தஞ்சை மாவட்டத்தில் இருந்தன. ஆனால் நமது மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு பொறுப்பேற்றுக் கொண்ட உடனே 6 குற்றங்கள்தான் அங்கே கண்டுபிடிக்கப் பட்டு இருக்கின்றன என்பதையும் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 18, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்.

18—

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பாதை அமைத்தல்.

*11077—திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் பாதை அமைக்க அரசு அனுமதி அளித்த பிறகும் ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஆண்டுத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பின்பு, அதற்காக விரிவாக மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்படுகிறது. அதன் பின்பு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு வேலைகள் ஒப்படைக்கப்படுகின்றன. இதற்கு சுமார் ஆறு மாத காலம் ஆகிறது. வேலை ஒப்படைக்கப்பட்ட பின்பு வனப் பகுதிகள் இல்லாத இடங்களில் வேலைகள் விரைவாக மேற் கொள்ளப்பட்டு முடிக்கப்படுகின்றன. பாதுகாக்கப்பட்ட வனப்



பகுதிகளில் அரசு அனுமதி பெற்ற பின்புதான் வேலையைத் துவக்க முடியுமாதலால் அரசுக்குப் பிரேரணை அனுப்பி அரசின் அனுமதி பெற்ற பின்பு வேலைகள் துவங்கப்படுகின்றன. இதற்குத் தேவைப்படும் கால அவகாசம தவிர்க்க முடியாததாகிறது.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலைகள் அமைக்க அரசு அனுமதி அளித்து 4 அல்லது 5 ஆண்டுகள் ஆனபிறகும் கூட வேலைகள் துவக்கப் படாமல் உள்ளதைக் கருத்தில் கொண்டு அனுமதி அளித்தவுடன் சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் அனுமதி கிடைத்தவுடன் வேலை கள் மிக வேகமாகத் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 19, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

19—

தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் இறால் வளர்ப்பு தொழிற்பேட்டை தொடங்குதல்.

*13827—திரு. மா. சுந்தரதாஸ்:

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் இறால் வளர்ப்பு தொழிற்பேட்டை அரசால் தொடங்கப்படுகிறதா?

(ஆ) அவ்வாறாயின் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு.டி.ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

[1993 பிப்ரவரி 8

(ஆ) வ.உ. சிதம்பரனார் மாவட்டத்தில் தருவை குளத்தில் சுமார் 100 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்து 7.2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயார் செய்யப்பட்டு இறால் வளர்ப்பு தொழிற்பேட்டையினை அமைத்திட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி எப்போது தொடங்க இருக்கிறது, எப்போது வேலை முடியும் என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்போல பல 'வெரைட்டி ஆப் இறால்' வளர்க்கின்ற திட்டத்தை அரசு வைத்து இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தை ஒரு தொழிலில் சிறந்த முதல் மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற இலட்சிய முனைப்பில், கடந்த காலங்களில் எந்த ஒரு அரசாலும் அளிக்கப்படாத பல சலுகைகளை அளித்து அதன் மூலம் தமிழகத்தில் தொழில்கள் வளர்வதற்கு அரும்பாடுபட்டு வருகிறார்கள். அந்த வகையில் இந்த இறால் வளர்ப்பைப் பொறுத்த வரையிலும் நமது தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கை காரணமாக சுமார் 228 கோடி ரூபாய் அளவுக்கு இது அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. அந்த ரீதியில் இந்தத் தொழிலை உருவாக்க வேண்டும். அதன் மூலம் பல இளைஞர்கள் கடலோர மாவட்டங்களில் வேலை வாய்ப்பு பெற வேண்டும் என்பதற்காக நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தியாவிலேயே ஒரு சிறந்த 'இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்' ஆக 'அக்குவாகல்சர் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்'-ஐ அமைப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த ரீதியில் வேலைகள் மைக்ரோ லெவல் சர்வே செய்யப்பட்டு வருகின்றன. புதர்களை வெட்டுவதற்காக டெண்டர்கள் வரவேற்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் அந்தக் கிராம மக்கள் அந்தப் புதர்களை வெட்டக் கூடாது என்பதற்காக தடையாணை பெற்றுள்ளனர். தடையாணையைப் பொறுத்த வரையிலே நீதிமன்றத்திற்கு வெளியே கிராம மக்களிடம் பேசி தீர்வு காணப்பட்டிருக்கிறது. பணிகள் விரைவாகத் தொடங்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.



1993 பிப்ரவரி 8]

20—

## இராசிபுரம் தொகுதியில் க்ளூகோஸ் தொழிற்சாலை அமைத்தல்.

*9655—திருமதி க. பழனியம்மாள்:
மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராசிபுரம் தொகுதியில் க்ளூகோஸ் பாக்டரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராசிபுரம் தொகுதியில் குளுகோஸ் பேக்டரி அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்தியாவிலேயே தொழில் துறையில் முதல் மாநிலமாகக் கொண்டு வருவதற்காக அரும்பாடு பட்டு அல்லும் பகலும் உழைத்து வருகிற நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இராசிபுரம் தொகுதியில் ஒரு குளுகோஸ் பேக்டரி அமைத்துத் தந்தால் அது நன்றாக இருக்கும். ஏனென்றால் ராசிபுரம் வட்டத்தில் மட்டும் சுமார் 200 சேகோ பேக்டரிஸ் இருக்கின்றன. மிகவும் அதிக அளவில் சேலம் வட்டத்திலும் ஆத்தூர் வட்டத்திலும் 200-க்கும் மேற்பட்ட சேகோ பேக்டரீஸ் இருக்கின்றன. எனவே குளுகோஸ் பேக்டரிக்குத் தேவையான மூலப் பொருளான, ஸ்டார்ச் என்ற பொருள் மிக 'சீப்' ஆன, குறைந்த விலையிலே கிடைக்கும் என்ற காரணத்தினாலேயும், ராசிபுரம் வட்டமானது தொழில் துறையிலே பின்தங்கி இருப்பதாலும், அங்கே ஒரு பேக்டரி அமைத்துத் தர புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அதை ஏற்படுத்தித் தர முயற்சி எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் தொழிற்சாலைகள் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன என்ற அளவிலே தொழில்கள் அதிகமாக தொடங்கப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படை

யிலே தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய மேலான துறையின் மூலம் கடலூரில் சிப்காட் தொழிற்பேட்டை உட்ஸ்டாஸ் பயோ-டெக் பேக்டரி என்ற நிறுவனத்துடன் சிப் காட் இணைந்து குளுகோஸ் உற்பத்தியை விரைவில் தொடங்க இருக்கிறது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மரவள்ளிக் கிழங்கு ஆண்டுக்கு ஒன்றுக்கு 7 லட்சம் டன்கள் உற்பத்தி ஆகிறது. அது ஜவுளித் தொழிலுக்கு அதிகமாக பயன் படுத்தப்படுவதால் அந்த ஜவ்வரிசி போன்ற முக்கியமான பொருள்கள் தயாரிக்கப்படுவதற்கு போதுமான அளவுக்கு கிழங்கு இல்லை. எனவே ராசிபுரம் தொகுதியில் குளுகோஸ் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்குவதற்குப் பரிசீலிக்க இயல வில்லை.

15—

<u>நெல்லிக்குப்பம் தொகுதி கிராமங்களில் தென்பெண்ணை பெருவெள்ளத்தால் விளைநிலங்கள் பாதிப்பு.</u>

<u>*9696— திரு. சி. தாமோதரன்:</u>
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, பண்ருட்டி வட்டம், புலவனூர்–தட்டாம்பாளையம், மேல் குமாரமங்கலம், பகண்டை ஆகிய கிராமங்களில் கடந்த 17–11–1991 அன்று தென் பெண்ணை ஆற்றில் பெருகி வந்த பெரு வெள்ளத்தால் விவசாய விளைநிலங்கள் மணல் மேடிட்டு இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை நிவர்த்தி செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

<u>மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம் புலவனூர் பகுதியில் 17–11–1991 அன்றுப தென் பெண்ணை ஆற்றில் பெருகி வந்த பெரு வெள்ளத்தால் 40 ஹெக்டேர் நிலம் மணல் மேடிட்டு இருப்பதை தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அரசுக்குத் தெரி வித்துள்ளார்.

தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), தென்பெண்ணை ஆற்றில் பெருகிவந்த வெள்ளத்தினால் மணல் மேடிட்ட நிலங்களை சமன் செய்ய ரூ. 150 இலட்சம் ஒப்பளிப்பு வழங்குமாறு அரசிற்கு செயற்குறிப்பை அனுப்பியுள்ளார். அவரது செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உடுக்குறியிட்ட வினாக்கள் முடிவுற்றன.





## <u>(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள்</u>

### <u>பட்டியல் 1.</u>

1—

<u>பரிசுச் சீட்டு விற்பனையைப் பெருக்கத் திட்டம்.</u>

வினா எண் 11873—<u>டாக்டர் எஸ். சுந்தரராஜ்:</u> மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பரிசுச்சீட்டு விற்பனையை பெருக்குவதற் கான திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், விபரம் என்ன?

விடை—

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:</u>

(அ) ஆம்.

(ஆ) பரிசுச் சீட்டு விற்பனையை அதிகரிப்பதற்கான வழி வகைகளை ஆராய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி அரசு அதிகாரிகள் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

2—

<u>அரசு வழக்கறிஞர்கள் மற்றும் நீதிபதிகளுக்கு பயிற்சி அளிக்கும் நிலையம் ஏற்படுத்துதல்.</u>

வினா எண் 3441—<u>திரு. ஆ. சுப்புரத்தினம்:</u> மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் அரசு வழக்கறிஞர்கள் மற்றும் நீதிபதிகளுக்குப் பயிற்சி அளிக்கும் நிலையம் (Judicial Academy) ஒன்று இம்மாநிலத்தில் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீதித்துறையில் நீதிபதிகளுக்கும் அரசு வழக்கறிஞர்களுக்கும் (Assistant Public Prosecutor, Grade II) புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் சுமார் ஆறுமாத காலங்கட்கு பயிற்சி அளிக்க வகை ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலம் வழக்குரைஞராக வழக்கு மன்றத்தில் அனுபவம் பெற்ற நபர்களை காலவரைக்குட்பட்டு மூன்று வருடங்கட்கு அரசு வழக்கு நடத்துனர்களாகப் (Government Pleader and Public Prosecutor) பணியமர்த்தப்படுவதால் அவர்களுக்கு தனியாகப் பயிற்சி அளிக்கப் பெறுவதில்லை. எனினும், புதிதாக அமர்த்தப் பெறும் நீதிபதிகளுக்கு பயிற்சி அளிக்கும் நிலையம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து உயர்நீதி மன்றத்துடன் கலந்தாலோசிக்கப்படுகிறது.

3—

முன்சீப் கோர்ட்டிற்கு கட்டிடம்.

வினா எண் 6817—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) போளூரில் முன்சீப் கோர்ட்டிற்கு கட்டிடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூரில் உள்ள முன்சீப் கோர்ட்டிற்கு, கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு உயர்நீதிமன்றத்தில் பரிசீலனையில் உள்ளது.



4—

வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை.

வினா எண் 3328—திரு. ஆர். டி. அரங்கநாதன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் நகரில் பல ஆண்டுகளாக வழங்கப்படாமலிருக்கும் வீட்டுமனைப் பட்டாக்களை உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

நத்தம் சர்வே நில அளவைப் பணி நடைபெறுகிறது. அவை முடிவுற்று நத்தம் வட்டாட்சியரிடம் பணியிடம் ஏற்படுத்தப்பட்டபின் நத்தம் தனி வட்டாட்சியர் மூலம் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5—

மாடு அடைக்கும் பவுண்டு அமைத்தல்.

வினா எண் 7366—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி நடுமனைக்காடு ஆதி திராவிடர்களுக்கு மாடு அடைக்கும் பவுண்டு ஒன்று கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

இல்லை. நடுமனைக்காடு கிராமத்திற்கு மிக அருகில் உள்ள ஒட்டங்காடு கிராமத்தில் ஏற்கெனவே பழுதடைந்துள்ள நிலையில் ஒரு கால்நடைப் பட்டி உள்ளது. இந்த கால்நடைப் பட்டி உள்ளிட்ட பழுதடைந்த பல்வேறு கால்நடைப் பட்டிகளையும் பழுது பார்க்க விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன அவ்வாறு பழுது பார்த்த பின்னர் நடுமனைக்காடு ஆதி திராவிடர்களும் இக்கால்நடைப் பட்டியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

[1993 பிப்ரவரி 8

6—

**உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.**

வினா எண் 3751— திரு. எஸ் ஆறுமுகம்: மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதியில், வானூர் வட்டத்தில் புதுக்குப்பம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இப்பள்ளியை 1991–92 ஆம் கல்வியாண்டில் மேனிலைப் பள்ளியாக உயர்த்தக் கோரி விண்ணப்பங்கள் எதுவும் பெறப்படவில்லை.

7—

**பணியிலிருக்கும்போது மறைந்த கல்லூரி முதல்வரின் வைப்பு நிதிக் கணக்கு.**

வினா எண் 3935— திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பணியிலிருக்கும்போது 1984 ஆம் ஆண்டு மறைந்த சென்னை பச்சையப்பன் கல்லூரி முதல்வர் ஒருவரது ஆசிரியர் வைப்பு நிதி கணக்கு முடிக்கப்படவில்லை என்பது பற்றிய புகார் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு இது குறித்து என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஆம். 3–8–1984 அன்று பணியிலிருக்கும்போது மறைந்த பச்சையப்பன் கல்லூரி முதல்வரின், ஆசிரியர் வைப்புநிதி கணக்கு முடிக்க 13–3–1991 அன்றுதான் கருத்துரு பச்சையப்பன் கல்லூரியிலிருந்து மண்டலக் கல்லூரி கல்வி துணை இயக்குநரால் பெறப்பட்டது. மேலும் விவரங்கள் 6–12–1991-ல் பெறப்பட்டு, 25–2–1992-ல் அவரது ஆசிரியர் வைப்பு நிதி கணக்கினை முடித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது



1993 பிப்ரவரி 8]

8—

**விளையாட்டுத் துறையின் வரவு செலவினங்களை தணிக்கை செய்தல்.**

வினா எண் 7971— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளையாட்டுத் துறையின் வரவு-செலவினங்களை வருடந்தோறும் தனியார் தணிக்கை செய்வதற்குப் பதிலாக உள்ளாட்சி நிதி தணிக்கைக் குழு (Local Fund Audit) மூலம் செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

விளையாட்டுத் துறை அரசுத் துறையைச் சார்ந்ததால் இத்துறையின் வரவு-செலவு கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் மாநில கணக்காயரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

9—

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.**

வினா எண் 9114—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதி எமனேஸ்வரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஊரகப்பகுதிகளில் மட்டுமே ஆரம்பிக்கப்படுகின்றன. எமனேஸ்வரம், பரமக்குடி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட இடத்தில் உள்ளதால் அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை

[1993 பிப்ரவரி 8

10—

திருமருகல் ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 9988—டாக்டர் சு. கோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நன்னிலம் தொகுதி, திருமருகல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்நோயாளிகள் தங்கும் வசதியை அதிகப்படுத்தி மருத்துவர்களின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி , மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

11—

புதிய நகர வழித்தடம் அமைத்தல்.

வினா எண். 2875—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சியில் அடங்கிய முனுமாக்காடு, குண்டாமறைக்காடு, சி. கள்ளங்காடு, பெ. கள்ளங்காடு கிராம மக்கள் பயன்பெறும் வகையில் பேராவூரணியை இணைக்க சோழன் போக்குவரத்துக் கழகம் மூலம் புதிய நகர வழித்தடம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பேராவூரணி சேதுபாவாச்சத்திரம் (வழி) பூக்கொல்லை சி. கள்ளங்காடு, பெ. கள்ளங்காடு; குண்டாமரைக்காடு தடத்தில் பேராவூரணி தடம் எண். 3-இல் தற்பொழுது 16—1—1992 முதல் நான்கு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.



1993 பிப்ரவரி 8]

12—

வினா எண். 3170—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம், பேராவூரணியில் இருந்து முடச்சிக்காடு வெளிமடம் வழியாக பட்டுக்கோட்டைக்கு ஒரு புதிய சோழன் நகரப் பேருந்து விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பேராவூரணி — பட்டுக்கோட்டை தடத்தில் முடச்சிக்காட்டில் இருந்து மருங்கப்பள்ளம் வரை சாலை பழுதடைந்து பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே வினாவில் கோரப்பட்டுள்ள தடத்தில் பேருந்து இயக்குவது தற்போது இயலாது.

13—

பேருந்து விடும் திட்டம்.

வினா எண். 5740—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மயிலாடுதுறை ஒன்றியம் குறிச்சி பஞ்சாயத்திற்கும் சீர்காழிக்கும் இடையே பேருந்து விடும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : மயிலாடுதுறை ஒன்றியம் குறிச்சி பஞ்சாயத்திற்கும் சீர்காழிக்கும் இடையே பேருந்து விடும் செயற் குறிப்பு தற்போது அரசிடம் இல்லை. கோரியுள்ள தடத்தின் நீளம் 17 கி.மீ. ஆகும். இச்சாலையில் பனங்காட்டான்குலிருந்து குறிச்சி வரை 3 கி.மீ. தூரம் அளவு குறுகலாகவும் பழுதடைந்தும் பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளவும்

எனினும் மயிலாடுதுறை தடம் எண். 1ஏ மயிலாடுதுறை — சித்தமல்லி குறிச்சி வழியாக தினசரி 16 நடைகள் இயக்கப்படுகிறது. எனவே குறிச்சிக்கு தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது.

14—

போக்குவரத்து அலுவலகங்களில் கம்ப்யூட்டர் பயன்படுத்துதல்.

வினா எண். 5830—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

போக்குவரத்து அலுவலகங்களில் காலதாமதத்தை குறைப்பதற்காகவும் ஆவணங்களையும் பதிவுகளையும் பாதுகாப்பதற்காகவும் நவீன கம்ப்யூட்டர்களை அரசு பயன்படுத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

தமிழகத்தில் உள்ள அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் கம்ப்யூட்டர் நிறுவ 3 ஆண்டு கால நடவடிக்கையாக (Phased Programme) போக்குவரத்து ஆணையர் ஒரு செயலாக்க ஆய்வு தயாரித்து ரூ. 68 லட்சத்திற்கு திட்ட மதிப்பீடு அனுப்பினார். அதன் அடிப்படையில் முதல் கட்டமாக 1991–92 ஆம் நிதி ஆண்டில் சென்னை மாநகரில் உள்ள நான்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் ரூ. 13.50 லட்சம் செலவில் கம்ப்யூட்டர்கள் நிறுவப்பட உள்ளன.

இதனைத் தொடர்ந்து 1992–93 ஆம் ஆண்டில் 10 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் அதற்கடுத்த 1993–94 ஆம் ஆண்டுகளில் மீதமுள்ள அலுவலகங்களிலும் கம்ப்யூட்டர்கள் நிறுவப்பட உள்ளன.

15—

அரசினர் உயிரியல் பூங்காவை மேம்படுத்துதல்.

வினா எண். 8814—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் அருகே சேர்வராயன் மலை அடிவாரத்தில் அரசினர் உயிரியல் பூங்காவை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?





விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

ஆம்.

16—

கைத்தறி நெசவாளர்களுக்குக் கடனுதவி.

வினா எண். 5983—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கு கடனுதவி அளிக்க அரசு வரையறுத்துள்ள நெறிமுறைகளின் விவரம் என்ன ?

(ஆ) கடந்த 3 ஆண்டுகளில் அரசு வரையறுத்துள்ள நெறிமுறைகளின்படி நத்தம் தொகுதியில் கடனுதவி பெற்ற நெசவாளர் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) அவர்களுக்கு அளிக்கப்பட்ட கடனுதவி மொத்த தொகை எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் :

(அ) நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக அங்கம் வகிக்கும் நெசவாளர்களுக்கு அரசு பல்வேறு திட்டங்களின் கீழ் கடனுதவி செய்து வருகிறது. அதன் விவரம் கீழ் வருமாறு :—

பங்குத் தொகை கடன் : உறுப்பினர் பங்குத் தொகை கடன் திட்டத்தின் கீழ் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ள நெசவாளர்களின் பங்குத் தொகைகளை அதிகரிக்கவும், சங்கங்களின் அதிக பட்சமான கடன் வாங்கும் தகுதியினை உயர்த்திக் கொள்ளவும், நெசவாளர்களுக்கு ''உறுப்பினர் பங்குத் தொகைக் கடன்'' அரசினால் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி பருத்தி மற்றும் கலப்பு ரகங்கள் நெசவு செய்யும் நெசவாளர்களுக்கு ரூ. 18-ம் பட்டு ரகங்களுக்கு ரூ. 315-ம், பாலியஸ்டர் நெசவு செய்யும் நெசவாளர்களுக்கு ரூ. 900-மும் வழங்கப்பட்டு வருகிறது.

<u>தறிகள் நவீனமாக்கும் திட்டம்</u> : இத்திட்டத்தின் கீழ் நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு அவர்களது தறிகளின் ரகத்தினை மேம்படுத்துவதற்காக கடன் மற்றும் மான்யம் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி தறிகளில் உள்ள சில உதிரி பாகங்களை மாற்றவும் புதிய தறிகளை வாங்குவதற்கும் செலவாகும் மொத்தத் தொகையில், மூன்றில் இரண்டு பாகம் கடனாகவும், 1 பாகம் மான்யமாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

<u>நெசவாளர் வீடு கட்டும் திட்டம்</u> : 1. நெசவாளர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ், நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு நெசவாளர் காலனிகள் கட்டுவதற்கும் கடன் மற்றும் மான்யம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி தற்போது வீடு ஒன்றுக்கு ரூ. 14,000 கடனும், ரூ. 10,000 மான்யமாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

2. நெசவாளர்களுக்கென தனித்தனி வீடுகள் கட்டும் புதிய திட்டத்தின் கீழ் சொந்தமாக வீட்டு மனை உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு கடன் மற்றும் மான்யம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டுள்ள திட்டங்கள் தவிர அரசு பங்கு முதலீடு, சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் மூலமாகவும் நெசவாளர்களுக்கு பயன்படும் வகையில் கடன் மற்றும் மான்யம் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) நத்தம் பஞ்சாயத்து ஒன்றியத்தில் உள்ள வேலம்பட்டி கிராமத்தில் ஆறு தறிகளும், அதனை அடுத்துள்ள சானர்பட்டி வட்டாரத்தில் உள்ள வேம்பார்பட்டி கிராமத்தில் 4 தறிகளும், அஞ்சுக்களிப்பட்டி கிராமத்தில் 2 தறிகளும் ஆக மொத்தம் 12 கைத்தறிகள் உள்ளன. இப்பன்னிரண்டு தறிகளுமே கதர் துணிகள் நெய்வதில் ஈடுபட்டுள்ளன. எனவே கடந்த மூன்று ஆண்டுகளில் கைத்தறி நெசவாளர்களுக்கென அரசு வரையறுத்துள்ள நெறிமுறைகளின்படி எந்த ஒரு நெசவாளரும் இத்துறையின் வாயிலாக கடன் உதவி பெறுவதற்கு தகுதி பெறவில்லை.

(இ) எழவில்லை.



17 —

<u>லுங்கி தயாரிப்பினை கைத்தறிக்கு மட்டும் ஒதுக்குதல்.</u>

வினா எண். 6240—<u>திரு. எம். ஆண்டி அம்பலம்</u> : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லுங்கிகள் தயாரிப்பினை கைத்தறிக்கு மட்டுமே ஒதுக்க வேண்டுமென, மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை.—

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்</u> :

(அ) மற்றும் (ஆ) : மத்திய துணி நூல் துறை, கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்தின் கீழ், சில மாற்றங்கள் சம்பந்தமாக இவ்வரசின் கருத்துக்களைக் கோரியிருந்தது. அதனடிப்படையில், கைத்தறிக்கென 22 ரகங்கள் ஒதுக்கீடு சட்டத்தின்படி வரையறுக்கப்பட்டது.

லுங்கிகளை, கைத்தறியில் நெய்வதற்கு சில நிபந்தனைகளை வலியுறுத்தியது. ஆனால் இந்த ரக ஒதுக்கீடு சட்டத்தினை அமுல்படுத்த ஒரு ஆலோசனைக் குழுவினை மத்திய அரசு நியமித்தது.

இந்த ரக ஒதுக்கீட்டினை எதிர்த்து, அனைத்து விசைத்தறி சம்மேளனங்களும் / சங்கங்களும் நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்தன. பிறகு அனைத்து வழக்குகளும் உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டன. இதற்கிடையில், மத்திய அரசானது ஒரு குழுவை 5—1—1992-ல் நியமித்து, அறிக்கையினை ஒரு மாத கால அவகாசத்தில், வெளியிடக் கோரியது. இறுதியாக, மத்திய அரசின் கைத்தறி இணை வளர்ச்சி ஆணையர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட கடிதத்தில், கைத்தறி ரக ஒதுக்கீடு திட்டத்தில், பல சட்டப் பிரச்சினைகள் உள்ளதாக தெரிவித்துள்ளார்கள். இதில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

18—

கருப்பட்டிக்காடு பெரிய ஏரிக்குத் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை

வினா எண். 3153—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி, முடியனார் காட்டாற்றில் பம்பிங் ஸ்கீம் மூலமாக தண்ணீர் கொண்டு வந்து கருப்பட்டிக்காடு பெரிய ஏரிக்குத் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

19—

சாலை சீர்செய்தல்.

வினா எண். 5310—திரு. த. ரத்தினவேல் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் ஒன்றியம், சர்க்கார் பாளையத்திலிருந்து காவிரி கரை ஓரத்தில் கல்லணை வரை சாலை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை சீர் செய்து, அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : காவிரி தென்கரை சாலை (கிமீ. 0/0-8/4)-யில் இடதுபுறத்தில் காவிரி ஆறும், வலதுபுறத்தில் பட்டா நிலங்களும் இருப்பதால், சாலையை அகலப்படுத்த முடியாத நிலை உள்ளது. இருப்பினும், வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளில் தார்கள் போடப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப் பட்டு வருகிறது.



20—

வினா எண் 5464—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மங்களூர் தொகுதி, புதுக்குளம் கிராமத்திலிருந்து செல்லும் சாலை பழுதடைந்து காணப்படுவதால் அந்தச் சாலையை சீர் செய்து தார்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

புதுக்குளத்திலிருந்து நாவலூர் செல்லும் சாலை மங்களூர் ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இச்சாலையை 1.4 கி.மீ. நீளத்திற்கு மேம்பாடு செய்வதற்கு 1992-93 ஆம் ஆண்டு பேருந்து தடச்சீர் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

21—

கடையம்பாவூர் சத்திரம் சாலை.

வினா எண் 5493—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கடையம்பாவூர் சத்திரம் 2/0 கி.மீ. 3'0 கி.மீ. 4/0 கி.மீ. 6/2 தார் சாலை ஊரக சாலை இனத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா அல்லது நகர்ப்புற சாலை இனத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலையின் பெயர் கடையம்பாவூர் சத்திரம் சாலை கி.மீ. 0/0-13/4 ஆகும். இச்சாலை அம்பாசமுத்திரம்—தென்காசி சாலை (MDR)-யில் கி.மீ. 19/2-ல் பிரிந்து தூத்துக்குடி—திருநெல்வேலி செங்கோட்டை, கொல்லம் சாலை (மாநில நெடுஞ்சாலை) கி.மீ. 97/0-ல் சேர்கின்றது. இச்சாலை முழுவதும் தார் சாலையாக உள்ளது. இது அரசு இதர மாவட்ட சாலையாக நெடுஞ்சாலை

மற்றும் ஊரகப் பணித்துறையால் பராமரிக்கப்படுகின்றது. இச்சாலை கி. மீ. 0/0—6/2 இத்துறையில் அம்பாசமுத்திரம் (நெடுஞ்சாலை ஊரகப்பணி) உட்கோட்டத்திலும், மீதமுள்ள பகுதி கி.மீ. 6/2—13/4 தென்காசி (நெடுஞ்சாலை ஊரகப்பணி) உட்கோட்டத்திலும் பராமரிக்கப்படுகிறது. இந்த சாலை ஊரக சாலை (Rural Roads) அல்லது நகர்ப்புற சாலை (Urban Roads) என பிரிக்கப்படவில்லை. இதர மாவட்ட சாலை என்று தரம் பிரித்து நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறையினால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

22—

சாலை சீரமைத்தல்.

வினா எண் 5637—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிக மோசமான நிலையிலுள்ள ஆற்காடு ஆரணி சாலையை அகலப்படுத்தி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆற்காடு ஆரணி சாலை என்பது ஆற்காடு விழுப்புரம் (வழி) ஆரணி, செஞ்சி சாலையில் கி.மீ. 0/0 முதல் 27/0 வரையுள்ள பகுதியாகும். இச்சாலைப்பகுதியில் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் இருந்த சாலைப் பகுதிகளில் தனிசீர் பணிகள் மேற்கொள்ளுதல் என்ற சிறப்பு பராமரிப்பு பணியின் கீழ் 1991-92 மற்றும் 1992-93 ஆம் ஆண்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

23—

தொழிற்பேட்டைகளில் சிறு மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்தல்.

வினா எண் 6259—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்பேட்டைகளில் சிறு மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசின் முடிவு என்ன ?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

24—

வெள்ளிப்பட்டுவாரி அணைக்கட்டு பழுதுபார்த்தல்.

வினா எண் 6391—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, வெள்ளிப்பட்டுவாரி அணைக்கட்டு கதவுகள் முழுமையாக பழுதுபட்டு மழைநீர் ஏரிகளுக்கு வராமல் வீணாக காட்டாற்றில் செல்வது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், காட்டாற்றிற்கு செல்லும் மழைநீரை வெள்ளிப்பட்டுவாரி அணைக்கட்டில் நிரப்புவதற்கு அதன் கதவுகளை உடனடியாக பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) வெள்ளிப்பட்டுவாரி அணைக்கட்டு கதவுகள் பழுது பார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து வேலைகளும் வெகு விரைவில் முடிவடைந்துவிடும்.

[1993 பிப்ரவரி 8

25—

**கிழக்கு கடற்கரை ஓரச்சாலை அபிவிருத்தித் திட்டம்.**

வினா எண் 5651 —திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்கு கடற்கரை ஓரச்சாலை அபிவிருந்தித் திட்டத்தின் மூலம் 1989-க்கு முன்பு என்ன பணிகள் எங்கு எங்கு நடைபெற்றுள்ளது ?

(ஆ) கன்னியாகுமரியிலிருந்து இச்சாலை அகலப்படுத்தும் பணி நடைபெற்றதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1969-74) ரூ. 401.20 இலட்ச மதிப்புள்ள 38 பால வேலைகளும், ஐந்தாம் திட்ட காலத்தில் (1974-79) ரூ. 60 இலட்ச மதிப்புக்கு இரு பணிகளும், மணப்பாறை துறையூர் சாலையில் குளித்தலை-முசிறியை இணைத்து காவேரி ஆற்றில் ரூ. 139 இலட்ச செலவில் பாலமும் கட்டப்பட்டது. ஆறாம் திட்ட காலத்தில் (1979–84), 68.40 கி.மீ. நீளத்திற்கு 5 சாலை மேம்பாட்டுப் பணிகளும்; 17 பால வேலைகளும் நாகப்பட்டினம் - கன்னியாகுமரி சாலையில் ரூ.300.82 இலட்ச செலவில் நிறைவேற்றப்பட்டது. ஏழாவது திட்ட காலத்தில் (1984–89) நிதி பற்றாக்குறை காரணமாக இந்த திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு மத்திய அரசால் செய்யப்படவில்லை. எனவே, புதிய பணி ஒன்றும் இத்திட்ட காலத்தில் எடுத்து செயல்படுத்த இயலவில்லை.

26—

**சோழத்திபுழா மின் திட்டம்.**

வினா எண் 7710—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலகிரிக்கு அருகில் சோழத்திபுழா மின் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

(ஆ) அதனை செயல்படுத்த தடை ஏற்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?



1993 பிப்ரவரி 8]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) சோழத்திபுழா புனல் மின் திட்டமானது பாண்டியாறு புன்னபுழா புனல் மின்திட்ட அமுலாக்கத்தில் சம்பந்தப்பட்டிருப்பதால் பாண்டியாறு புன்னபுழா நதி நீரை விவசாயத்திற்காக கோவை மாவட்டத்திலுள்ள பவானி வட்டத்திற்கு கிழக்கு நோக்கி திருப்பி விடுவதற்கான ஒரு முடிவை மாநில அரசு எடுத்த பின் மட்டுமே சோழத்திபுழா புனல்மின் திட்டத்தை அமுலாக்க இயலும்.

(ஆ) ஆமாம்.

(இ) திருவனந்தபுரத்தில் 14–10–1965 அன்று நடந்த மாநிலங்களுக்கிடையேயான பேச்சுவார்த்தையின் போது இத்திட்டத்திற்கான செலவையும் அதனால் கிடைக்கும் பயனையும் இரு மாநிலங்களும் சரி பாதியாக பகிர்ந்து கொள்வது என்றும், இத்திட்டத்திற்கான புலனாய்வையும், அமுலாக்கத்தையும் தமிழ்நாடே எடுத்துக் கொள்வதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன்படி சோழத்திபுழா புனல் மின் திட்டத்திற்கான விரிவு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அப்போதைய மத்திய நீர் மற்றும் விசைக் குழுவிடம் அனுப்பப்பட்டது. மத்திய நீர் மற்றும் விசைக்குழு பொறியியல் ஆய்வை 1970-ல் முடித்த போதிலும், ஆகஸ்டு 1976–ல் மத்திய மின் ஆணைக்குழு, கேரள தமிழ்நாடு மாநிலங்களுக்கிடையேயான அக்டோபர் 1965 ஒப்பந்தத்தின்படி கேரள அரசின் ஒப்புதலை பெறக் கூடியது. அதன்படி கேரள மின் வாரியத்திடம் இத்திட்டத்திற்கான அவர்களது ஒப்புதல் கோரப்பட்டது. கேரளா மற்றும் தமிழ்நாடு மாநிலங்களுக்கிடையேயான 1965 ஒப்பந்தம் பாண்டியாறு புன்னபுழா மற்றும் சோழத்திபுழா அனல் மின் திட்டங்கள் அமுலாக்கம் சம்பந்தமான விசயங்களைக் கொண்டுள்ளது.

1969 ஆம் ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்டு பாண்டியாறு புன்னபுழா புனல் மின் திட்டங்களுக்கான பணிகள், பாண்டியாறு புன்னபுழா நதி நீரை மின் உற்பத்திக்கு மட்டுமல்லாமல், கோவை மாவட்டத்திலுள்ள பவானி மற்றும் அவினாசி வட்ட விவசாயிகளின் நலனுக்காக விவசாயத்திற்காக கிழக்கு நோக்கி திருப்பி விடுவதற்கான சாத்தியக்கூறுகளை கண்டறிவதற்கான தமிழ்நாடு அரசின் மாற்று எண்ணத்தால் 1970-ல் நிறுத்தப்பட்டது.

கிழக்கு நோக்கி திருப்பிவிடும் நீரை ஈடு செய்வதற்கு சோழத்திபுழா புனல் மின் திட்டத்தில் தமிழ்நாட்டிற்கான உரிமையை விட்டுக்கொடுப்பது உட்பட பல மாறுபட்ட செயற் குறிப்புகள் உண்டாக்கப்பட்டு, கேரள அரசுடன் திருத்திய ஒப்பந்தம் கொண்டுவர விவாதிக்கப்பட்டது.

பலமுறை பேச்சு வார்த்தைகள் இரு மாநில அமைச்சர் களுக்கிடையே நடந்த போதிலும் கேரள அரசிடமிருந்து திருத்திய ஒப்பந்தத்தைப் பெற முடியவில்லை.

கடைசியாக 7-11-1982 அன்று அமைச்சர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தையின்போது, பவானி நீர்ப்படுகை யிலிருந்து கேரளாவுக்கு நீரைத் திருப்பிவிட வேண்டும் என்ற கோரிக்கையுடன் சேர்த்து இதை விவாதிக்க வேண்டும் என்று கேரள அரசு தெரிவித்தது. பவானி படுகையிலிருந்து நீரை திருப்பிவிடும் விசயத்தில் தமிழ்நாடும், கேரளாவும் மட்டுமில்லா மல் கர்நாடக மாநிலமும் சம்பந்தப்பட்டிருப்பதால், இவ்விசயம் காவிரி நீர் பங்கீடு பிரச்சினையுடன் இணைந்துள்ளது.

இதனால் பாண்டியாறு புன்னபுழா நதிநீரை கோவை மாவட்டத்திலுள்ள பவானி மற்றும் அவினாசி வட்ட விவசாயி களுக்காக விவசாயத்துக்காக கிழக்கு நோக்கி திருப்புவது குறித்து தமிழ்நாடு அரசு ஒரு இறுதி முடிவு எடுத்த பின்னரே சோழத்தி புழா புனல் மின் திட்டத்தை அமுலாக்க இயலும்.

27—

தனியார் சாலை என்ற பெயர் பலகையை அகற்ற நடவடிக்கை.

வினா எண் 8422—திரு. இரா. அப்புநடேசன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதி வழியாக செல்லும் ஆரல்வாய்மொழி நெடுமங்காடு மாநிலச் சாலையில் பெருவழிக்கடவு பாலத்தின் பக்கத்தில் தனியார் சாலை என்று பெயர்ப்பலகை வைக்கப்பட்டிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு இப்பெயர்ப் பலகையை அகற்ற நடவடிக்கை எடுக்குமா ?





விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) அறியும்.

(ஆ) இது குறித்து வழக்கு ஒன்று பத்மநாபபுரம் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. தீர்ப்பு வழங்கப்பட்டது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

28—

பாலம் கட்டுதல்.

வினா எண் 8729—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விளவங்கோடு தொகுதி களியல் கிராமத்தில் தெற் பக் கடலில் பாலம் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் , பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் பாலம் கட்டப்பட கோரிய இடமானது, தடையால் பேரூராட் சிக்குட்பட்ட தடையால் தெற்பக்கடவு சாலை கி.மீ. 0.4 மற்றும் திற்பரப்பு ஊராட்சிக்குட்பட்ட திற்பரப்பு தெற்பக் கடவு சாலை கி.மீ. 1.2 ஆகிய இரண்டு சாலைகளும் கோதை யாற்றின் எதிர்எதிர்கரைகளில் முடிவடைகிறது. அந்த சாலைகள் பேரூராட்சி சாலைகள் ஆகும். இந்த இடத்தில் கோதை யாற்றில் அகலம் 60.00 மீட்டர் ஆகும். இவ்விடத்தில் பாலம் கட்ட சுமார் ரூ. 5.00 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணி, அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ள எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை. நடப்பு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மற்றும் பேரூராட்சி பராமரிப் பிலுள்ள சாலை மற்றும் பாலப்பணியினை நெடுஞ்சாலைத் துறையில் பகுதி—2 திட்டத்தில் எடுத்துச் செய்ய வகை செய்யப் படவில்லை. எனவே இந்தப்பால பணியினை நெடுஞ்சாலைத் துறையின் பகுதி—2 திட்டத்தின் மூலம் எடுத்துச் செய்ய வாய்ப் பில்லை.

29—

## பாலத்தை செப்பனிடல்.

வினா எண் 8732—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்பு மிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டணம்—குழித்துறை நெடுஞ்சாலையில் பழுதடைந்துள்ள சென்னித் தோட்டம் பாலத்தை செப்பனிட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இப்பாலம் புதியதாக கட்டுவதற்கு பணித் தொகுப்பு பட்டியலில் ரூ. 10.00 லட்சத்திற்கு இடம் பெற்றுள்ளது. ஆயினும், பகுதி-2 திட்டத்திற்கு குறைந்த அளவில் நிதி ஒதுக்கீடு செய்வதால் இப்பணியினை பகுதி-2 திட்டத்தில் தற்போது எடுத்துச் செய்ய இயலாது. இனிவரும் ஆண்டுகளில் நிதிநிலையையும் பணியின் முக்கியத்துவத்தையும் அவசரத்தையும் பொறுத்து, இப்பாலப்பணியை மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

30—

## கூரை வீடுகளுக்கு மின் இணைப்பு

வினா எண் 9251—திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்பு மிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம் கிராமப்புறங்களில் கூரை வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதி கொளத்தூர் ஒன்றிய கிராமப்புற பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டு, ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் தகுதி பெறும் குடிசை வீடுகளுக்கு அப்பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்கு ஏற்ப விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் இலவச மின் இணைப்பு வழங்கி தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அவ்வகையில் மேற்படி பகுதியில் 1991–92 ஆம் ஆண்டு 85 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாண்டு 1992–93–ல் 50 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப் படவுள்ளது.

31—

## சாலை செப்பனிடுதல்

வினா எண். 9394—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்பு மிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியத்திலுள்ள பாலாமடை—பாப்பையாபுரம் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

விடை —

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை, உடையார்பட்டி சீவலப்பேரி சாலை (அரசு பெரிய மாவட்ட சாலை) கி.மீ. 10/1–ல் பிரிந்து செல்லும் பாப்பையாபுரம் சாலை எனும் 0.60 கி.மீ. (கி.மீ. 0/0–0/6) நீளமுடைய தார் மேற்பரப்புடைய ஓர் அரசு இதர மாவட்ட சாலையாகும். தற்போது இச்சாலை போக்குவரத்துக்கு இடையூறின்றி தார் நொடிகள் போடப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையை வரும் நிதியாண்டில் நிதி வசதிக்கேற்ப புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1993 பிப்ரவரி 8

32 —

## தார் சாலை அமைத்தல்.

வினா எண். 9614 — திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சகர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள கீழப்பாவூர் (வடபகுதி) — குறும்பலாப்பேரி சாலையை தார் சாலையாகப்போட அரசு ஆவன செய்யுமா ?

விடை —

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை கீழப்பாவூர் — குறும்பலாப்பேரி சாலை எனும் 0.40 கி.மீ. (கி.மீ. 0/0—0/4) நீளமுடைய (அரசு, இதர மாவட்டச் சாலை) தார் சாலையாகும். தற்போது இச்சாலை மழை நீரால் முழுவதும் சேதமடைந்த நிலையிலுள்ள இச்சாலையை வரும் நிதியாண்டில் புதுப்பிக் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

33 —

## பட்டா இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கல்.

வினா எண் 261 — திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதியில் மேட்டூர் நகரியத்தில் பட்டா இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்குவதை நிறுத்தியுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் இணைப்பு எப்போது வழங்கப்படும் ?



1993 பிப்ரவரி 8

விடை

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மேட்டூர் நகரியக்குழு பகுதியில் பொது மக்களால் அரசு மற்றும் நகரியக் குழு ஆகியவற்றிற்குச்சொந்தமான நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் சுத்தமான பட்டா இல்லாத ஆக்கிரமிப்பு கட்டிடங்களாக கருதப்பட்டு, பட்டா இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்குவது 1988 ஆம் ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) மத்திய ஆராய்ச்சி நிலையத்திற்கு அரசு நிலத்தை குத்தகைக்கு தரும் பொருட்டு சம்பந்தப்பட்ட நிலத்தின் மீது ஆக்கிரமிப்பு செய்துள்ள ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொண்ட ஓர் இனத்தில் ஆக்கிரமிப்பாளர்கள் மேட்டூர் நகரியக்குழு அவர்களுக்கு வழங்கியுள்ள வீட்டு வரி ரசீதுகள் மற்றும் நோட்டீசுகளை வழக்கு மன்றத்தில் தாக்கல் செய்து தடை ஆணை பெற்றுள்ளனர். ஆகவே, அரசு மற்றும் நகரியத்துக்குச் சொந்தமான நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு மீண்டும் குடிநீர் இணைப்பு வழங்க இயலாது.

34 —

## கசிவு நீர்க் குட்டைகளை மேம்படுத்த நடவடிக்கை.

வினா எண் 382 — திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, வீரகவுண்டனூர், கோபாலபுரம் பெத்தநாயக்கன்பாளையம், வடக்குக்காடு ஊர்களிலுள்ள கசிவு நீர்க் குட்டைகளை மேம்படுத்த இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) எவ்வளவு தொகை ?

(இ) எப்பொழுது வேலை தொடங்கும் ?

விடை-

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) வீரக்கவுண்டனூர் கசிவு நீர்க் குட்டை அமைத்தல் 1991-92 ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறையினர் மூலம் பழுது சீர் செய்யப்பட்டுள்ளது. கோபாலபுரம், பெத்தநாயக்கன் பாளையம், வடக்குக்காடு ஆகிய ஊர்களிலுள்ள கசிவு நீர்க்குட்டைகளை மேம்படுத்த பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது நிதி வசதி இல்லை. வரும் ஆண்டுகளில் நிதி வசதியைப்பொறுத்து அவை சீர் செய்யப்படும்.

(ஆ) மற்றும் (இ) இவ் வினாக்கள் எழ இடமில்லை.

35—

மின்சார மயானங்களின் எண்ணிக்கை.

வினா எண் 474—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள மின்சார மயானங்கள் எத்தனை ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தமிழ் நாட்டில் ஊராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் மின்சார மயானங்கள் எதுவுமில்லை. சென்னை, மாநகராட்சியில் 1979-ம் ஆண்டில் மின்சார மயானம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு 1981-ம் ஆண்டு பெரும் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு செயலிழந்து மூடப்பட்டு விட்டது. எனினும் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் புதிய மின்சார மயானங்கள் விரைவில் செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

36—

குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க நடவடிக்கை.

வினா எண். 480—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் ஒன்றியம், கருவந்தா கிராமத்தில் மக்கள் குடிநீர் இல்லாமல் துன்பப்படுவது அரசுக்கு தெரியுமா ?



(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : 1850 மக்கள் தொகை கொண்ட கருவந்தா கிராமம் வறட்சி மிகுந்த கிராமம் ஆகும். அங்குள்ள மக்கள் நான்கு கையிறைப்பான்கள் மூலம் குடிநீர் பெற்று வருகின்றனர். இது பகுதியளவு குடிநீர் வசதி பெற்றது. அங்கு அமைக்கப்பட்ட ஆழ்குழாய்க் கிணற்றில் போதுமான நீராதாரம் இல்லை. எனவே, இக் கிராமத்திற்கு குடிநீர் வசதி அளிக்க, உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின் கீழ் செயல்படும், சங்கரன் கோவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

37—

கப்பிச் சாலை அமைத்தல்.

வினா எண் 657—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம் கோமனூர் ஊராட்சியில் உள்ள மண்சாலையை, கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், கோவனூர் ஊராட்சியில் எல்லா சாலைகளும் கப்பிச் சாலையாக உள்ளன.

38—

குடிநீர் வழங்க நடவடிக்கை.

வினா எண் 1114—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கடலாடி ஒன்றியம், தி. பாலம் என்ற இடத்தில் போடப்பட்ட கிணற்றிலிருந்து டி. வேப்பங்குளம், கட்டாழங்குளம் கிராமங்களுக்கு குடி தண்ணீர் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டும் குடிநீர் வழங்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவாகக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) கடலாடி—சாயல்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் நீர் உந்தும் பணிகள் ( pumping works ) மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. குடிநீர் கோவிலாங்குளம் நீர் சேகரிக்கும் நிலையம் அடைந்ததும் நீர் சேகரிக்கும் நிலையத்திலிருந்து நீர் உந்தப்பட்டு (சாயல்குடி மேல்நிலைத் தொட்டி கட்டும் பணிகள் முடிவுற்றவுடன்) சாயல்குடி மேல்நிலைத் தொட்டிக்கு நீரேற்றப்படும். நீர் கொடுதிறன் அதிகம் கிடைக்குமானால் அங்கிருந்து மேலும் 2 கி.மீ. தொலைவிற்கு பகிர்மானக் குழாய் கள் அமைத்து டி. வேப்பங்குப்பம், கட்டாழங்குளம் ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்படும்.

39—

இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு வைகை அணையிலிருந்து குடிதண்ணீர்.

வினா எண். 1208—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) குடிநீர் கிடைக்காமல் இருக்கும் இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு வைகை அணையிலிருந்து குடிதண்ணீர் பெற அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தற்போது வாய்ப்புகள் இல்லை.





40—

சாலை பராமரிக்க நடவடிக்கை.

வினா எண் 1573—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்கு விடை யளிப்பாரா —

பட்டுக்கோட்டை ஒன்றியம், ராசியன்காடு அதிராம் பட்டினம் முக்கிய சாலை வரை போடப்பட்ட இணைப்புச் சாலையில் பாக்கியுள்ள சுமார் ஒரு கிலோ மீட்டரையும் பரா மரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன் றியம், ராசியங்காடு—அதிராம்பட்டினம் முக்கிய சாலை வரை போடப்பட்டுள்ள இணைப்புச் சாலையில் பாக்கியுள்ள 1 கி.மீ. தூரத்தையும் பராமரிக்க நிதிப் பற்றாக்குறை காரணமாக செயற் குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

41—

கப்பிச்சாலை அமைத்தல்.

வினா எண் 1968—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங் கோட்டை (தெ) அனந்தகோபாலபுரத்தில் இருந்து ஆண்டாங் கொல்லை வழியாக அதம்பை செல்லும் சாலையை பராமரித்து கப்பிச் சாலையாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

நிதிப் பற்றாக்குறையின் காரணமாக தஞ்சாவூர் மாவட் டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், பாதரங்கோட்டை (தெற்கு) அனந்தகோபாலபுரத்திலிருந்து ஆண்டாங்கொல்லை வழியாக அதம்பை செல்லும் சாலையினைப் பராமரித்து கப்பிச் சாலையாக்க தற்போது செயற்குறிப்பேதும் இல்லை.

42 —

வினா எண் 2006 —திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் காட்டாதியிலிருந்து கா. உஞ்சிய விடுதி ஆதி திராவிடர் தெருவிற்கு செல்லும் கிராம குறுக்குச் சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காட்டாதியிலிருந்து கா. உஞ்சிய விடுதி ஆதி திராவிடர் தெருவிற்கு செல்லும் கிராம குறுக்குச் சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக்க நிதி நிலைப் பற்றாக்குறை காரணமாக தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

43 —

சாலை செப்பனிடல்.

வினா எண் 2221 —திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி ஊராட்சி வேலாம்பட்டி மேற்கு வரை செல்லும் ஊராட்சி சாலையை செப்பனிட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், இடையாத்தி ஊராட்சி வேலாம்பட்டி மேற்கு வரை செல்லும் ஊராட்சி சாலையை செப்பனிட நிதிநிலை பற்றாக்குறை காரணமாக இப்பணியினைச் செய்ய தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.



44 —

இணைப்புச் சாலை பராமரித்தல்.

வினா எண் 2327—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சியிலிருந்து பாலத்தளி செல்லும் இணைப்புச் சாலையை பராமரித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், குறிச்சியிலிருந்து பாலத்தளி செல்லும் இணைப்புச் சாலை ஒரு கிலோ மீட்டர் நீளமுடைய ஊராட்சி சாலையாகும். இது மண்சாலையாக உள்ளது. இதைச் செப்பனிட ரூ. 1,50,000 செலவாகும். இச்சாலையை மேம்பாடு செய்திட செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்சமயம் இல்லை.

45 —

தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 2756 —திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாக்குடி ஊருக்குள் செல்லும் சாலையை செப்பனிட்டு தார்ச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கோட்டாக்குடி ஊருக்குள் செல்லும் சாலையைச் செப்பனிட்டு தார்ச் சாலையாக்க நிதிப் பற்றாக்குறையால் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

46—

## மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 2771—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காடு ஊராட்சியைச் சேர்ந்த நடுவிக் காட்டில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

நடுவிக் காட்டில் 1981-ல் அடிபம்பு திட்டம் அமைத்துத் தரப்பட்டுள்ளது. ஒரு மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

47—

## சாலை பராமரித்தல்.

வினா எண் 2961—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சம்பைப்பட்டினம் அண்ணாநகர் செல்லும் சாலையை பராமரிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், சம்பைப் பட்டினம், அண்ணா நகர் செல்லும் சாலையைப் பராமரிக்க நிதி நிலைப் பற்றாக்குறை காரணமாக தற்போது செயற் குறிப்பு ஏதுமில்லை.



16981

48—

## போர்வெல் அமைத்தல்.

வினா எண் 3141—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாச்சத்திரம் ஒன்றியப், திருவத்தேவன் மேல்பகுதி கள்ளர் தெருவில் ஒரு போர்வெல் போட்டுத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் கிராமத்தில் தற்போது கடலோர கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள தரை மட்டத் தொட்டியின் மூலம் நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படியூர் மேல் பகுதி கள்ளர் தெருவில் ஒரு போர்வெல் போட்டுத்தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

49—

## மதுரை நகரை அழகுபடுத்துதல்.

வினா எண் 3251—திரு. ஓ.எஸ். அமர்நாத் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை நகரை அழகுபடுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

D
V21;31N53 N93.31.2

(அ) இல்லை.

(ஆ) இதற்கு நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

50 —

சாலை சீர் செய்தல்.

வினா எண் 3256 —திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

ஆத்தூர் (சேலம் மாவட்டம்) நகராட்சிக்குட்பட்ட சாலைகள் மிகவும் (கடை வீதி, விதைப் பண்ணை வழியாக கல்ராயன்மலை சாலை) பழுதடைந்து இருப்பதால் இவைகளை சீர்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

நகராட்சி மண் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றும் பணி செயல்பட்டு வருகிறது: கடை வீதி, விதைப் பண்ணை வழியாக, கல்ராயன்மலையை அடையும் சாலை ஏற்கனவே தார்ச் சாலையாக போடப்பட்டுள்ளது. பழுதடைந்துள்ள சாலையை சீர்செய்ய 1992-93 ஆம் நிதியாண்டில் போதுமான நிதி ஒதுக்கீடு செய்து இப்பணியைச் செய்ய நடவடிக்கை எடுக்கப் படும்.

51 —

நகராட்சி ஊழியர்களை அரசு ஊழியர்களாக்குதல்.

வினா எண். 3291 —திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அனைத்து நகராட்சி ஊழியர்களும் அரசு ஊழியர்கள் என அரசாணை எண். 600-ல் அறிவிக்கப்பட்டுள்ளதை உடன் நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

அரசாணை எண். 600, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 14—9—1989-ல் அறிவிக்கப்பட்டுள்ளதை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்ட திருத்தங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது.



52—

சாக்கடைக் குழாய்களை நவீனப்படுத்துதல்.

வினா எண். 3493—திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை, மயிலைத் தொகுதியில் உள்ள கைலாசபுரத்தில் சாக்கடை தரைமட்டத்தில் உள்ளதால் அடிக்கடி சாக்கடை நீர் தெருவில் பெருக்கெடுத்து ஓடுவதை தடுக்கவும், சென்னை நகரில் பல ஆண்டுகளுக்கு முன் போடப்பட்ட சாக்கடைக் குழாய்களை நவீனப்படுத்தவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) சென்னை மயிலை தொகுதியில் உள்ள கைலாசபுரம் தாழ்வான பகுதியாகும். அங்குள்ள மக்கள் பெரும்பாலானவர்கள் பொருளாதாரத்தில் நலிவுற்றவர்கள். அங்கு சுற்றியுள்ள தெருக்கள் தவிர மற்ற தெருக்கள் குறுகலானவை. எனவே அங்கு எல்லாத் தெருக்களிலும் சாக்கடை குழாய் பதிக்க இயலாது. அங்கு குறைந்த செலவில் அடிப்படை சுகாதார வசதி அல்லது பாதாள சாக்கடை வசதி செய்ய இயலுமா என அறிய ஆய்வு ஒன்று நடத்தப்படவுள்ளது.—

மேலும் சென்னை நகரில் கழிவு நீர் அகற்றும் அமைப்பினை ஆய்வு செய்து கிருஷ்ணா நீர் வழங்கும் போது அதிகரிக்கும் கழிவு நீரை அகற்றுவதற்கு வகை செய்யும் வண்ணம் கழிவு நீர்க் குழாய்களை தேவையான இடங்களில் மாற்றச் செய்யவும், வலுப்படுத்தவும் கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

53—

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை.

வினா எண். 352—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவில் நகராட்சிப் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்போது தொடங்கப்படும்?

**விடை—**

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில் நகராட்சி பகுதியில் குடிநீர் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க தேவையான நீராதாரம் முடிவு செய்வதற்கான நடவடிக்கைகள் பொதுப்பணித் துறையுடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது முடிவு செய்யப்பட்டவுடன் திட்டம் நிறைவேற்றுவதற்காக தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**54—**

## குடிநீர் வழங்க நடவடிக்கை.

வினா எண். 3623—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் தொகுதி, குட்டம் பஞ்சாயத்திலுள்ள பெரியதாழை பகுதிக்கு குட்டம் பஞ்சாயத்திலுள்ள மேல்நிலை தொட்டியிலிருந்து பைப் மூலம் குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**விடை—**

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பெரியதாழை கிராமத்திற்கு குட்டம் பஞ்சாயத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்க தற்சமயம் உத்தேசம் இல்லை. பெரியதாழை குடிநீர் அபிவிருத்தி திட்டம் ரூ. 1.33 இலட்சங்கள் மதிப்பீட்டில் செயலாக்கப்பட்டு சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியத்திடம் பராமரிப்பிற்காக 6/91-இல் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான நீராதாரம் திறந்த வெளிக்கிணறு ஆகும். இதிலிருந்து மிகக் குறைந்த அளவே குடிநீர் விநியோகிக்க இயலும். மேலும் கடலோர கிராமங்கள் அனைத்திற்கும் குடிநீர் வசதி நிரந்தரமாக செயல்படுத்த தற்போது ஆய்வில் உள்ள ''ராதாபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில்'' குட்டம் ஊராட்சியில் உள்ள கிராமங்களும் பயன்பெறும் வகையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



**55—**

## ஆழ்குழாய் கிணறு வசதி செய்தல்.

வினா எண். 3650—திருமதி. ரமணி நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

ராதாபுரம் தொகுதி, திசையன்விளை பஞ்சாயத்து, கீரைகாரன்தட்டு பகுதியில் ஒரு ஆழ்குழாய் கிணறு வசதி செய்து தரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கீரைக்காரன்தட்டு கிராமம், திசையன்விளை பேரு ராட்சியைச் சார்ந்த குடியிருப்பாகும். இக்குடியிருப்பு பகுதி யளவு குடிநீர் வசதி பெற்றதாகும். திசையன்விளை பேரு ராட்சிக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் கீரைக்காரன்தட்டு கிராமமும் பயன்பெற்று வருகிறது. இங்கு நிலவும் குடிநீர் தட்டுப் பாட்டைப் போக்க ஆய்விலுள்ள தாமிரபரணி ஆற்றை நீரா தாரமாகக் கொண்ட கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் திசையன் விளை பேரூராட்சியும் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே இப்பகுதியில் ஒரு ஆழ்குழாய் கிணறு வசதி செய்து தரும் செயற் குறிப்பு அரசிடம் எதுவுமில்லை.

**56—**

## ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் முறைகேடுகளைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண். 3909 — திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்சிறை ஊராட்சி ஒன்றியத்தில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் முறைகேடுகள் நடப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) சம்பந்தப்பட்ட வேலைகளை நிறுத்தி வைத்து, காரணமானவர்கள் மீது நடவடிக்கை ஏற்கனவே அரசு எடுத்துள்ளது.

57—

பாலாற்றிலிருந்து குடிநீர்.

வினா எண். 4344—திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பாலாற்றிலிருந்து அச்சிறுப்பாக்கம் வரை உள்ள ஊர்களுக்கு பாலாற்றிலிருந்து குடிநீர் வழங்க திட்டமிட்டுள்ளதை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பாலாற்றிலிருந்து அச்சிறுப்பாக்கம் வரை உள்ள ஊர்களுக்கு பாலாற்றிலிருந்து குடிநீர் வழங்கும் பூதூர்-அச்சரப்பாக்கம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் ஆய்வில் உள்ளன. விரைவில் முடிந்து திட்டம் மக்களின் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

58—

குப்பைகளை அகற்ற கோட்டத்திற்கு ஐந்து லாரிகள்.

வினா எண். 4563—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை மாநகராட்சி பகுதிகளில் சேரும் குப்பைகளை அகற்ற ஒரு கோட்டத்திற்கு 5 லாரிகள் ஒதுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : துப்புரவு வாகனங்கள் ஒரு கோட்டத்திற்கு சராசரியாக 2 அல்லது 3 வாகனங்கள் மட்டுமே துப்புரவு பணிக்காக ஈடுபடுத்தப்படுகின்றன. தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் ஒரு கோட்டத்திற்கு 5 லாரிகள் ஒதுக்க முடியாத சூழ்நிலையுள்ளது.

மேலும், லாரிகளின் பற்றாக்குறைக்கேற்ப சரகங்களில் தமிழ்நாடு வேளாண்மை கூட்டுறவு பொறியியல் துறையிடமிருந்து டில்லர்கள் துப்புரவு பணிக்காக வாடகைக்கு அமர்த்தப்படுகின்றன.

59—

ஆழ்துளைக் கிணறு அமைத்தல்.

வினா எண். 4607—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டம், சின்னசேலம் தொகுதி, ஆற்காடு ஸ்ப்பின்னிங் மில் பகுதி, திம்மையா நகரில் கடுமையான குடிநீர் பஞ்சம் நிலவுவதால் மக்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், 500 அடி ஆழத்திற்கு மேல் இருக்குமாறு 6 அங்குல ஆழ்த்துளைக் கிணறு அமைத்து அப்பகுதி மக்களின் துயர்துடைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தென்னாற்காடு மாவட்டம், சின்னசேலம் ஒன்றியத்தைச் சேர்ந்த திம்மையா நகர் கிராமத்திற்கு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் 6'' விட்டமுள்ள ஆழ்துளைக் கிணறு ஒன்று 12/91-ல் அமைக்கப்பட்டு கையினறப்பான் பொருத்தப்பட்டு தற்போது மக்கள் பயனில் உள்ளது.

[1993 பிப்ரவரி 8

60—

மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைத்தல்.

வினா எண் 4899—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம் வடக்கு பரங்குன்றபுரத்தில் (மருதபுரம்) குடிநீருக்காக மக்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வடக்கு பரங்குன்றபுரம் (மருதபுரம்) குடியிருப்பின் மக்கள் தொகை 320 ஆகும். இங்கு 1981-82-ல் வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் அமைக்கப்பட்ட இரண்டு கையிறைப்பான்கள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. 1992-ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணியின்கீழ் மேலும் ஒரு கையிறைப்பான் அமைக்க மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் அவர்களுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இக்குடியிருப்பில் மக்கள் தொகை குறைவாக உள்ளதால் மேல்நிலைத் தொட்டி அமைத்து விசை பம்பு திட்டம் வழங்க தற்போது வாய்ப்பில்லை.

61—

குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க நடவடிக்கை.

வினா எண் 5408—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மங்களூர் தொகுதி, நாவலூர் கிராமத்தில் குடி தண்ணீர் பிரச்சினையைப் போக்க அரசு ஆவன செய்யுமா?



1993 பிப்ரவரி 8]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். கழுதூர் மற்றும் 10 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தும்போது பிரதான குழாயிலிருந்து கிளைக் குழாய் மூலம் நாவலூர் கிராமத்திற்குக் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

62—

தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை.

வினா எண் 5651—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மங்களூர் தொகுதி, மலையனூர் கிராமத்தில் தண்ணீர் பற்றாக்குறையை நிரந்தரமாக போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். மலையனூர் கிராமம், மங்களூர் மற்றும் 24 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஆய்வில் உள்ளது.

63—

நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 5684—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், ஏ.பி. நாடானூர் ஊராட்சி சொக்கலிங்கபுரத்தில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சொக்கலிங்கபுரம் குடியிருப்பில் இரண்டு கையிறைப்பான்கள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. இக் குடியிருப்பு முழு அளவு குடிநீர் வசதி பெற்றதாகும். எனவே, இக்குடியிருப்பிற்கு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

64—

ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைத்தல்.

வினா எண் 6101—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதி, வறட்சியாக உள்ளதால், காளிசெட்டியூர், அம்மன்பாளையம், விநாயகபுரம், தென்னம்பிள்ளையூர் ஒட்டப்பட்டி, அருந்ததியர் தெரு, புத்ரகவுண்டன் பாளையம் ஆகிய ஊர்களில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(1) ஆத்தூர் தொகுதியிலுள்ள காளிசெட்டியூர் உலக வங்கித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாலும் அத்திட்டம் முடிவுற்ற பின்னர் இக்குடியிருப்பிற்கு குடிநீர்ப் பிரச்சினை முழுமையாக தீர்க்கப்படும் என்பதாலும்,

(2) அம்மன்பாளையத்திற்கு 1989–90-ல் மின்விசை குடிநீர்த்திட்டம் செயல்படுத்தப்பட்டு தற்போது 1 இலட்சம் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு நல்ல முறையில் இத்திட்டம் இயங்கி வருகிறது என்பதாலும்,

(3) விநாயகபுரத்திற்கு தற்போது கையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது என்பதாலும்,



(4) தென்னம்பிள்ளையூர் : தென்னம்பிள்ளையூருக்கு மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு ஒரு மின் விசைத் திட்டம் 1991–92 மேற்கொள்ளப்பட்டு இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிவுற்று தற்போது சோதனை ஓட்டம் நடைபெறுகிறது. மேலும் விரைவில் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும் என்பதாலும்,

(5) ஒட்டப்பட்டி அருந்ததியர் தெரு (முதல் வார்டுக்கு மேல்நிலைத் தொட்டியுடன் ஆழ்துளைக் கிணற்றை ஆதாரமாகக் கொண்டு, ஒரு மின்விசைத் திட்டம் 1991–92 ல் மேற்கொள்ளப்பட்டு மக்கள் பயனுக்கு வெகு விரைவில் கொண்டு வர ஆவன செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

(6) புத்ரகவுண்டம்பாளையத்திற்கு மேல்நிலைத் தொட்டியுடன், வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 12-91-ல் ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு கையிறைப்பான் பொருத்தப்பட்டுள்ளது என்பதாலும் மேலும் ஆழ்துளைக் கிணறுகள் மேற்படி ஊர்களுக்கு அமைக்கும் திட்டம் ஏதும் செயற் குறிப்பில் இல்லை.

65—

வானொலி நிலையம் பழுது பார்த்தல்.

வினா எண். 6395—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, முள்ளூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட அய்யம்பட்டி வலியம்பட்டி போன்ற இடங்களில் வானொலி நிலையம் பழுதடைந்து இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது அந்த வானொலி நிலையங்கள் பழுது பார்க்கப்படும்.

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) வானொலி இல்லங்களைப் பேணிக் காக்கும் பணி தொடர்புள்ள ஊராட்சியைச் சார்ந்ததாகும், ஊராட்சியின் நிதி நிலையில் வசதியேற்றப்பட்டவுடன் இப்பணிக்கு முன்னுரிமை அளித்துக் கட்டிடங்கள் செப்பனிட்டுச் சீராக்கப்படும்.

66—

சாலை பழுது பார்க்க வழங்கிய மான்ய தொகை

வினா எண் 6506— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1989-ல் ஏற்பட்ட பெரு மழையால் சென்னை நகரில் பாதிக்கப்பட்ட சாலைகளை பழுது பார்க்க சென்னை மாநகராட்சிக்கு அரசு தந்த மான்யத் தொகை எவ்வளவு?

(ஆ) அதில் நிறைவேற்றப்பட்டப் பணிகள் யாவை ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) அரசு மான்யத் தொகை ஏதும் வழங்கவில்லை.

(ஆ) இவ்வினா எழாது.

67—

நிலத்தடி நீரைப் பயன்படுத்தும் வீடுகளுக்கு தண்ணீர் கட்டணம் விதிப்பதைத் தடை செய்தல்.

வினா எண். 6660—திரு. உ. பலராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிநீர் குழாய்களில் தண்ணீர் வராமையால் நிலத்தடி நீரைப் பயன்படுத்தும் வீடுகளுக்கும் குடிநீர் வாரியம் தண்ணீர் கட்டணம் விதிப்பதை அரசு தடை செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியத்தில் குடிநீர் கட்டண ஒழுங்கு முறை விதி பிரிவு (3)—ன் படி குடிநீர் குழாய் இணைப்புடைய வீடுகளில் மீட்டர் அளவைகள் பொருத்தப்பட்டிருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் வாரியத்தால் இணைக்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்பு இருக்குமேயானால் அவர்களிடம் மட்டும் குடிநீர் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. வீட்டின் உபயோகத்திற்காக நுகர்வோர்கள் சொந்த செலவில் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி வந்தாலும் வாரியத்தின் குடிநீர் இணைப்பு குழாய் இல்லாத வீடுகளிடமிருந்து குடிநீர் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவது இல்லை. பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளைப் பொறுத்தமட்டில் குடிநீர் வீட்டு இணைப்புகளுக்கு விநியோகம் செய்வதற்கு மட்டும் தண்ணீர் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. கிணறுகள், அடி பம்புகள் மூலம் பொது மக்கள் பெற்று வரும் குடிநீர் விநியோகம் வகைக்கு எவ்வித கட்டணமும் வசூல் செய்யப்படுவதில்லை.



68—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 7038—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சிவன் குறிச்சியில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : பேராவூரணி ஒன்றியம், சிவன்குறிச்சியில் ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

69—

குளத்தை தூர் எடுத்தல்.

வினா எண். 7062—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி சங்கரன்கொல்லை வெள்ளப் பிள்ளையார் கோவில் குளத்தை ஆழப்படுத்தி அகலப்படுத்தி தூர் அள்ள அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1993 பிப்ரவரி 8

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சங்கரன்கொல்லை வெள்ளப் பிள்ளையார் கோவில் குளம், மருங்கம்பள்ளம் ஊராட்சிக்குச் சொந்தமானது. அவ்வூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் மேற்குறிப்பிட்ட குளத்தை ஆழப்படுத்தி அகலப்படுத்தி தூர் எடுக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

70—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 7090—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி சங்கரன்கொல்லையில் ஒரு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குரு விக்கரம்பை ஊராட்சி, சங்கரன்கொல்லையில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

71—

ஆதிதிராவிடர்களுக்குக் காலனி வீடுகள்.

வினா எண். 7111—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செருவாவிடுதி, வடக்கு வெட்டிக் காடு ஆதிதிராவிடர் தெருவில் காலனி வீடு கிடைக்காத ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



1993 பிப்ரவரி 8]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியத்தில், செருவாவிடுதி வடக்கு வெட்டிக்காடு கிராமத்தில் 1991-92 ஆம் ஆண்டில் 21 ஆதி திராவிடர் குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

72—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 7157—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பஞ்சநதிபுரத்தில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பஞ்சநதிபுரத்தில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

73—

வினா எண். 7592—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வடக்குப் பிச்சாவர கிராமத்திற்கு குடிநீர் மேல் நிலை தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வடக்கு பிச்சாவர கிராமத்தில் எம். என். பி. மூலம் கையிறைப்பான் ஒன்று போடப்பட்டுள்ளது. மேலும் இந்த நிதியாண்டில் தாரா கையிறைப்பான்கள் அமைக்கப்படும். மேல்நிலை தேக்கத் தொட்டி அமைத்துத் தர திட்டம் இல்லை.

74—

சேலம் பேருந்து நிலையம்.

வினா எண். 7879—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலத்தில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையக் கட்டுமானப் பணிகள் எப்போது முடிவடையும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேலத்தில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள் அனைத்தும் 30—9—1992-க்குள் முடிக்கப் பட்டு விடும்.

75—

ஆத்தூரில் இலவச தையல் மற்றும் தட்டச்சுப் பயிற்சி நிலையம்.

வினா எண். 7908—திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆத்தூரில் தையல் பயிற்சி மற்றும் தட்டச்சுப் பயிற்சி இலவசமாகக் கற்றுத் தரும் பயிற்சி நிலையம் அரசு அமைக்க இயலுமா?





விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆத்தூரில் தையல் பயிற்சி மற்றும் தட்டச்சுப் பயிற்சி இலவசமாகக் கற்றுத் தரும் பயிற்சி நிலையம் அமைக்க செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

76—

சாலை வசதி செய்தல்.

வினா எண். 8003—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதியில் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வசப்புத்தூர் ஊராட்சிக்கு சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதியில் பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வசப்புத்தூர் ஊராட்சிக்கு 1991—92-ம் ஆண்டில் ரூ. 20,673-ல் கீழ்க்கண்டவாறு சாலை மேம்பாடு செய்யப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1. | வசப்புத்தூர்-சித்தலப்பாடி சாலை மேம்பாடு 0/0-0/4. | ரூ. 11,485 |
| 2. | வசப்புத்தூர்-சித்தலப்பாடி சாலை மேம்பாடு 0/0-0/8. | ரூ. 9,188 |
| | மொத்தம் .. | ரூ. 20,673 |

77—

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை.

வினா எண். 8364—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, குமுடிமூலை கிராம மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குமுடிமூலை குடியிருப்பு முழுமையாக குடிநீர் வசதி பெற்றது. எனவே, மேலும் ஒரு குடிநீர்த் திட்டம் அமைக்க திட்டம் இல்லை.

78—

சாலை பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்ட நிதி.

வினா எண். 8376—திருமதி பி. நிர்மலா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டுக்கல் நகராட்சிக்கு திட்டப் பணிக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) கடந்த 1989-90 ஆம் ஆண்டுகளில் சாலை பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

(இ) சாலைகள் செப்பனிடும் பணிக்கு கூடுதல் நிதி கொடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) 1990-91 ஆம் ஆண்டிற்கு ரூ. 3,12,216-ம் மற்றும் 1991-92-ம் ஆண்டிற்கு ரூ, 1,81,510-ம் நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் உதவித். தொகையாக வழங்கப்பட்டுள்ளது.



மேலும் 1991-92-ம் ஆண்டு விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 1.43 லட்சம் அரசு மான்யம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கடந்த 1989, 1990-ம் ஆண்டுகளில் சாலை பராமரிப்பிற்காக நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை.

(இ) சாலைகள் செப்பனிடும் பணிக்கு 1991-92-ம் ஆண்டில் ரூ. 2.20 லட்சம் பாதி கடன்-பாதி மானியத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

79—

பெரியகுளம் நகராட்சிக்குப் புதிய கட்டிடம்.

வினா எண். 8842—திரு. எம். பெரியவீரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் நகராட்சிக்குப் புதிய கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) தற்போது பெரியகுளம் நகராட்சிக்குப் புதிய கட்டிடம் கட்டுவதற்கு அதன் நிதி நிலை இடமளிக்காது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

80—

தண்ணீர் பஞ்சத்தைப் போக்க கிணறு அமைத்தல்.

வினா எண். 8977—திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்திவேலூர் தாலுகா பொத்தனூர், பரமத்தி இரு பேரூராட்சிக்கும் குடிதண்ணீர் வழங்கும் கிணறு ஒன்றாக உள்ள

தால் கடுமையான தண்ணீர் பஞ்சத்தை தவிர்க்க அவற்றுக்கு தனித்தனியாக கிணறு அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) பரமத்தி, பொத்தனூர், பேரூராட்சிகளின் குடிநீர்த் திட்ட மேம்பாட்டிற்கு பேரூராட்சிகளிடமிருந்து தீர்மானம் ஏதும் வராததால் தற்பொழுது மேற்கூறிய திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

81—

மூன்றாவது பாதாள சாக்கடைத் திட்டம்.

வினா எண். 8991—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரில் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்) மூன்றாவது பாதாள சாக்கடைத் திட்டத்தை துவங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(ஆ) கோவை மாநகரில் மூன்றாவது பாதாள சாக்கடைத் திட்டம் துவங்குவது தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





82—

குடிநீரை ஏற்றும் மோட்டாரை பழுதுபார்த்தல்.

வினா எண். 10314—திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டிக்கு சீவலப்பேரிலிருந்து வரும் குடிநீர் ஏற்றும் மோட்டார்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் குடிநீர் சரிவர வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தற்பொழுது உள்ள மக்கட் தொகையின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யத் தேவையான நீரேற்று இயந்திரங் களை மாற்றி அமைத்தால்தான் நீரின் அளவை அதிகரிக்க இயலும். புதிய நீரேற்று இயந்திரங்கள் பொருத்துவதற்கு கூடுதலாக 500 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று கட்டுவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ. 132.20 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தொழில்நுட்பக் குழுவினால் அங்கீகரிக் கப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பயனடையும் உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து உரிய தீர்மானம் பெறப்பட் டதும் வாரியக் குழுவின் ஒப்புதலுடன் செயற் குறிப்பினை அரசுக்கு அனுப்பி வைப்பதாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

83—

கோவில் வாழ்க்கை கிராமத்தில் மீண்டும் கூட்டுறவு அங்காடி அமைத்தல்.

வினா எண். 4243—திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதியில், கோவில் வாழ்க்கை கிராமத்திலிருந்து மாற்றப்பட்ட கூட்டுறவு அங்காடி மீண்டும் அங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

ஆண்டிமடம் தொகுதியில், கோவில் வாழ்க்கை கிராமத்தில் 410 அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், கோவில் வாழ்க்கை கிராமத்திற்கும் திருக்களப்பூர் நியாயவிலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 3 கிலோ மீட்டர் தூரமே உள்ளதாலும் அக்கிராமத்திற்கு தனியே நியாயவிலைக்கடை திறக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

84—

உணவுப் பங்கீட்டுப் பொருட்கள் ஏழைகளுக்கு கிடைக்க நடவடிக்கை.

வினா எண். 5862—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவுப் பங்கீட்டு அட்டைகள் மூலம் கொடுக்கப்படும் அத்தியாவசியமான பொருள்கள் ஏழைகளுக்கே சென்றடையும் வகையில் நடவடிக்கை எடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) உணவுப் பங்கீடு அட்டைகள் மூலம் கொடுக்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் ஏழைகளுக்கு மட்டுமின்றி எல்லா மக்களுக்கும் சென்று அடையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு பொது விநியோக திட்டம் நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழைகளுக்கு மட்டுமே அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.



85—

அமுத அங்காடியை முறையாக இயக்க நடவடிக்கை.

வினா எண். 6593—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், செந்தலை வயலில் உள்ள அமுத அங்காடியை முறையாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், செந்தலை வயலில் இயங்கிவரும் பகுதிநேர நியாயவிலைக் கடை நல்ல முறையில் இயங்கி வருகிறது.

86—

பகுதிநேர அமுத அங்காடியை நிரந்தரக் கடையாக்குதல்.

வினா எண் 7307—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் நாடங்காட்டில் இயங்கிவரும் பகுதிநேர அமுத அங்காடியை நிரந்தரமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் நாடங்காட்டில் இயங்கிவரும் பகுதி நேர நியாயவிலைக் கடையில் 135 குடும்ப அட்டைகளே உள்ளன. இதனை முழு நேரக் கடையாக மாற்ற சாத்தியக் கூறுகள் இல்லை.

87 —

**இருப்பு விவரம் மற்றும் விலைப்பட்டியல் ஆகியவற்றை போர்டு களில் எழுதி வைத்தல்.**

வினா எண். 8955—திரு. செ. து. வரதராசன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கடைகளிலும், கிடங்குகளிலும் உள்ள பொருட்களின் இருப்பு விவரம் மற்றும் விலைப்பட்டியல் ஆகியவற்றை வியாபாரிகள் போர்டுகளில் எழுதி வைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அரசு ஆணை பிறப்பிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

தமிழ்நாடு அத்தியாவசியப் பொருட்கள் (இருப்பு, கணக்குகள், பராமரித்தல், மற்றும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்துதல்) ஆணை 1977-ன்படி அனைத்து வணிகர்களும் அத்தியாவசியப் பண்டங்களுக்கான இருப்பு, அடக்க விலை மற்றும் விற்பனை விலை விவரங்கள் அடங்கிய பட்டியல் கொண்ட போர்டு ஒன்றினை ஒவ்வொரு வியாபார ஸ்தலத்தின் நுழை வாயிலில் நுகர்வோர் பார்வையில் தெரியும் வகையில் அன்றாடம் வைக்கப்பட வேண்டும். உரிமதாரர்கள் அத்தியாவசியப் பண்டங்களை இருப்புவைக்க தனியாக குடோன் (godown) வைத்திருக்கும் பட்சத்தில், கிடங்குகளில் தனியாக விலைப் பட்டியல் வைக்கத் தேவையில்லை.

88—

**முடிதிருத்தும் தொழிலில் பட்டயப் படிப்பு.**

வினா எண். 10735—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒவ்வொரு தொழிற்பயிற்சி மையத்திலும் முறையாக முடி திருத்தும் தொழிலில் ஒரு பட்டயப் படிப்பு தொடங்க அரசு முன்வருமா?



விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் முடி திருத்துபவர் (ஆண்கள்) தொழிற்பிரிவு துவங்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை. மேலும் மேற்படி தொழிற் பிரிவை அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பிரிவு பட்டியலில் இருந்து என்.சி.வி.டி. நீக்கி விட்டபடியால் எந்த அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திலும் 'முடி திருத்துபவர்' தொழிற்பிரிவு துவங்க இயலாது.

89—

**சென்னை நகரில் நிருபர்கள் மற்றும் பத்திரிகையாளர் களுக்கு வழங்கப்பட்ட வீட்டு வசதி வாரிய வீடுகள்.**

வினா எண். 6540—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகரில் வீட்டு வசதி வாரியம் மற்றும் குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் நிருபர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு என வாடகை குடியிருப்புகள் எத்தனை பேர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன?

(ஆ) வாடகை குடியிருப்புக்கோரி மனுச்செய்த நிருபர்கள் மற்றும் பத்திரிகையாளர்களில் இன்னும் வாடகைக் குடியிருப்பு ஒதுக்கப்படாதோர் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) சென்னை நகரில் வீட்டு வசதி வாரியம் நிருபர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கீடு செய்த வாடகை குடியிருப்புக்களின் எண்ணிக்கை : 53.

32 பீட்டர்ஸ் காலனி

15 பட்டினப்பாக்கம்

6 மற்ற பகுதிகளில்.

[1993 பிப்ரவரி 8

சென்னை குடிசை மாற்று வாரியக் குடியிருப்புக்களில் நிருபர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வாடகை குடியிருப்பு எண்ணிக்கை : 12.

(ஆ) வாடகை குடியிருப்பு கோரி மனு செய்த நிருபர்கள் மற்றும் பத்திரிகையாளர்களில் இன்னும் குடியிருப்பு ஒதுக்கப் படாதோர் எண்ணிக்கை—

வீட்டு வசதி வாரியம்—22.

குடிசைப்பகுதி மாற்று வாரியம் —ஒன்றும் இல்லை.

90—

ஈரோடு வீடு கட்டும் கூட்டுறவு சங்கம்.

**வினா எண். 8928,**—திரு மதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஈரோடு வீடுகட்டும் கூட்டுறவு சங்கம் நகர எல்லையில் இருந்து 8 கி. மீ. சுற்றளவு உள்ள ஊர்களுக்கு மட்டும் கடன் வழங்கும் நிலையை மாற்றி எல்லையை 30 கி·மீ. சுற்றளவு வரை விரிவாக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

ஈரோடு நகர எல்லையிலிருந்து 30 கி.மீ. சுற்றளவில் 34 கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் உள்ளதால் இப்பகுதி மக்கள் அந்தந்த கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் தங்களது வீட்டு வசதியினைப் பெருக்க நிதியுதவி பெற்றுக் கொள்ளலாம். எனவே ஈரோடு கூட்டுறவு வீடுகட்டும் சங்க எல்லையை விரிவு படுத்த தேவை இல்லை.

91—

குழந்தைகள் காப்பகம் அமைத்தல்.

வினா எண். 613—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், புதுக் கோட்டை உளூர் கிராமத்தில் குழந்தைகள் காப்பகம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1993 பிப்ரவரி 8]

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர்:

ஆம்.

92—

5-ஆம் வகுப்பு படித்த ஆதி திராவிடப் பெண்களுக்கு திருமணக் கடன் வழங்கல்.

**வினா எண். 814**—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

எட்டாம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு திருமணம் செய்ய ரூபாய் ஐயாயிரம் இலவசமாக வழங்கப் படுவதைப் போல, மலைவாழ் மக்கள், ஆதி திராவிடர்களின் பெண்கள் 5-ஆம் வகுப்பு வரை பயின்றிருந்தாலும், திருமணக் கடன் வழங்க அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

மலைவாழ் மக்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் கல்வித் தகுதி தளர்த்தப்பட்டு 5ஆம் வகுப்பு வரை படித்த மலைவாழ் மக்களின் குடும்பங்களைச் சார்ந்த பெண் களுக்கு திருமண உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேற்படி திட்டத்தின் கீழ் உதவி பெற ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்த பெண்களின் கல்வித் தகுதியைத் தளர்த்தும் கருத்துரு ஏதும் தற்போது இல்லை.

93—

பால்வாடி கட்டிடம் அமைத்தல்

**வினா எண். 8180**—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, கிள்ளை பேரூராட்சியிலுள்ள சி. மானம்பாடி கிராமத்திற்கு பால்வாடி கட்டிடம் ஒன்று அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திற்கு 1992–93-ம் ஆண்டிற்கு ஏற்கனவே மூன்று சத்துணவு கூடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, நடப்பு ஆண்டில் சி. மானம்பாடி கிராமத்திற்கு கூடுதலாக ஒரு சத்துணவுக் கூடம் 1992–93-ல் கட்ட வாய்ப்பு இல்லை.

94—

## அரசினர் உறைவிடப்பள்ளி திறக்க நடவடிக்கை.

வினா எண் 842—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கொங்காடை என்ற ஊரில் அரசினர் உறைவிடப் பள்ளி திறக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

(ஆ) ஆம் எனில், 1991-92-ல் திறக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கொங்காடை என்ற ஊரில் அரசினர் உறைவிடப் பள்ளி தொடங்கத் தற்போது வாய்ப்பில்லை.

95—

## ஊராட்சிப் பள்ளியை ஆதிதிராவிடர் நலப்பள்ளியாக மாற்றுதல்.

வினா எண் 5095— திரு. வே பெரியசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதியில் உள்ள தாமரைக்கரை, ஒசூர் போன்ற இடங்களில் நடைபெற்றுவரும் ஊராட்சிப் பள்ளியில் ஆதிவாசிகள் அதிகமாய்ப் பயில்வதை அரசு அறியுமா ?





(ஆ) இப்பள்ளியை ஆதிதிராவிடர் நலத்துறையில் எடுத்து அரசினர் உறைவிடப் பள்ளியாக மாற்ற அரசு முயலுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே நடைபெற்று வரும் ஊராட்சிப் பள்ளிகளை ஆதிதிராவிட நலப்பள்ளிகளாக மாற்றுவது அவசியமற்றது.

96—

## சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் கடன் பெற்ற ஆதிதிராவிடர்கள்.

வினா எண் 8342—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1990-91-ல் நாகை காயிதேமில்லத் மாவட்டத்தில் எத்தனை பேர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் கடன் பெற்றுள்ளனர் ?

(ஆ) இதில் ஆதிதிராவிடர் எத்தனை பேர் ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிடர் நலத் துறையைப் பொறுத்தமட்டில் 1990–91-ல் நாகை காயிதேமில்லத் மாவட்டத்தில் மொத்தம் 90 இந்து ஆதிதிராவிடர் நபர்கள் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடன் உதவி பெற்றுள்ளனர்.

97—

## ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா.

வினா எண் 9666—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதியில் உள்ள திருமழப்பாடி, காந்தி நகரில் உள்ள சுமார் 200 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டு மனை வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிராவிடர் நல துறை அமைச்சர் :

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் வட்டம், திருமழப்பாடி கிராமம், காந்தி நகர் ஆதிதிராவிடர் களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக மேற்படி கிராம புல எண் 194, 200, 201 முதலியனவற்றில் மொத்தம் 2.88 ஏக்கர் நிலம் கையகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதில், அதற்கு புல எண் 194-ன் நிலச் சொந்தக்காரர் திரு. சிதம்பரசாமி என்ற மடாதிபதி, சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு எண் 1574/81-ல் தாக்கல் செய்து, நீதிப் பேராணை பல்வகை எண் 2204/81-ல் இடைக்கால தடை பெற்றுள்ளார். பின்பு தமிழ்நாடு அரிசன நல ஆர்ஜித சட்டம் 31/78-ன்படி நிலம் கையகம் செய்தது செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் மேல், அரசு தரப்பில் தில்லி உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. எனவே, தில்லி உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பாணை வரப்பெற்ற பின்னர், அத்தீர்ப்பின் அடிப்படையில் இந்நேர்வில் ஆதி திராவிடர் குடும்பங் களுக்கு வீட்டு மனைகள் வழங்க தொடர் நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

98—

பதவி உயர்வில் ஆதிதிராவிடர்களுக்கு முன்னுரிமை.

வினா எண் 10523—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பணிகளில் பதவி உயர்வில் ஆதி திராவிடர் இனத்தவர்களுக்கு முன்னுரிமை அல்லது இட ஒதுக்கீடு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அரசுப் பணிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கு பதவி உயர்வின் போது கீழ்க்கண்ட 8 வகை பணியிடங்களைத் தவிர மற்ற பணியிடங்களுக்கு இட ஒதுக்கீடு விதிகள் பின்பற்றப்படுவதில்லை. மேலும், அனைத்து துறைகளிலும் அனைத்துப் பணி



யிடங்களுக்கு பதவி உயர்வின் போது இட ஒதுக்கீடு பின்பற்றுவது குறித்து செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது :—

| பணியிடத்தின் பெயர். (1) | துறையின் பெயர். (2) |
|---|---|
| 1. துணை ஆட்சியர் | வருவாய்த் துறை |
| 2. துணை வட்டாட்சியர் | |
| 3. வணிகவரி அலுவலர் | வணிகவரித் துறை. |
| 4. உதவி வணிகவரி அலுவலர் | |
| 5. உதவி இயக்குநர், நில அளவை செட்டில்மெண்ட். | நில அளவைத்துறை. |
| 6. துணைப்பதிவாளர் (நிலை.2) | பத்திரப் பதிவுத் துறை. |
| 7. இளம் பொறியாளர் | நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை. |
| 8. உதவி கோட்டப் பொறியாளர் | |

99—

பரமக்குடியில் சீர்மரபினர் விடுதி.

வினா எண் 2271—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் சீர் மரபினர் விடுதி ஒன்று ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், பிற்பட்டோர் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் :

((அ) மற்றும் (ஆ) : இல்லை.

100—

**தோல் பொருளை அடிப்படையாகக் கொண்டு சென்னையில் அரசு தொழில் பயிற்சி மையம்.**

வினா எண் 5600—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோல் பொருளை அடிப்படையாகக் கொண்ட தொழில் பயிற்சி தருவதற்கான அரசு தொழில் பயிற்சி மையம் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த நெறிமுறைகளின் அடிப்படையில் இந்த மையம் இயங்குகிறது?

(இ) அந்த மையம் இயங்குவதற்காக அரசின் உதவிகள் எந்தெந்த வகையில் அளிக்கப்படுகிறது ?

(ஈ) இத்தகு மையம் தோல் தொழில் ஏகமாக நடக்கும் திண்டுக்கல்—அண்ணா மாவட்டம் தலைநகரான திண்டுக்கல் நகரிலும் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) ஆம். சென்னையில் தற்போது கிண்டியிலும் (இரண்டு) அடையாரிலும் (ஒன்று) தரமணியிலும் (ஒன்று) மொத்தம் நான்கு தோல் பொருள் தொழில் பயிற்சி நிலையங்கள் உள்ளன.

(ஆ) (1) அடையாரில் உள்ள தோல் பொருள் பயிற்சி நிலையம் ( C.L.R.I. ) அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி குழுவின்கீழ் இயங்குகிறது.

(2) மத்தியக் காலணிகள் பயிற்சி மையம் கிண்டி (Central Footwear Training Centre) மத்திய அரசின்கீழ் இயங்குகிறது.

(3) அடிப்படை மாதிரி வளர்ச்சி பயிற்சி (Proto Type Development Training Centre) மையம் மத்திய அரசின் மானிய உதவி பெற்று இயங்குகிறது.



(4) இந்திய தோல் பொருள் நிறுவனம் (India Institute of leather products) அகில இந்திய தோல் பொருள் வணிகக் கழகம் (Council for leather Export) மற்றும் இந்தியன் வங்கியின் கூட்டு முயற்சியால் நடத்தப்பட்டு வருகிறது.

(5) தரமணியிலுள்ள தோல் பொருள் பயிற்சி மையம் Institute of leather technology தமிழக அரசின் தொழில் நுட்பக்கல்வி துறையால் நடத்தப்படுகிறது.

(இ) (1) அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி குழுவின் கீழ் இயங்கும் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் மைய அரசின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

(2) மத்திய காலணிப் பயிற்சி மையம், சிறு தொழில் சேவை நிறுவனம் மூலம் மத்திய அரசின் உதவியால் நடைபெறுகிறது.

(3) அடிப்படை மாதிரி வளர்ச்சி பயிற்சி மையம் தேசிய சிறு தொழில் நிறுவனம் மூலம் மத்திய அரசின் நிதி உதவியைப் பெறுகிறது.

(4) தரமணியிலுள்ள தோல் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனம் தமிழக அரசின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது.

(5) இந்தியத் தோல் பொருள் நிறுவனம் அகில இந்திய தோல் வணிகக் கழகம் மற்றும் இந்திய வங்கியின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

(ஈ) திண்டுக்கல்லில் இத்தகு பயிற்சி மையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசிடம் நிலுவையில் இல்லை.

## பட்டியல் 2.

## 1991-92 ஆம் ஆண்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் சிறு சேமிப்பு மூலம் பெற்றதொகை.

வினா எண் 10651—திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்தில் 1991-92ஆம் ஆண்டு சிறு சேமிப்பின் மூலம் எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

தென்னாற்காடு மாவட்டத்தில் 1991-92-ஆம் ஆண்டு, சிறு சேமிப்பின் மூலம் மொத்த வசூலாக ரூ. 74.10 கோடியும் நிகர வசூலாக ரூ. 21.75 கோடியும் திரட்டப்பட்டுள்ளது.

2—

## செங்கல்பட்டு கூடுதல் சார்பு நீதிபதி பணியிடத்தை நிரப்புதல்.

வினா எண் 4472.—திரு. செ. து. வரதராசன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரில் மாவட்ட நீதிமன்றக் கட்டிடத்திற்குள் இயங்கி வந்த சப்-கோர்ட்டுக்கு நீதிபதி நியமிக்காததால் 2 ஆண்டுகளுக்கு மேல் வழக்குகள் தேங்கிகிடப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நீதிபதி விரைவில் நியமிக்கப்படுவாரா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு கூடுதல் சார்பு நீதிபதி பணியிடம் 3—6—1992 முதல் உயர்நீதிமன்றத்தால் நிரப்பப்பட்டு இயங்கி வருகிறது.



3—

## மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டுகள் மற்றும் முன்சீப்புகளின் ஊதிய விகிதத்தை மாற்றுதல்.

வினா எண். 5453 :—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டுகள் முன்சீப்புகள் ஆகியோரின் ஊதிய விகிதம் உயர்த்தவேண்டுமென அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசின் நிலை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) 1989-90-ஆம் ஆண்டில் கோரிக்கை வரப்பெற்று அதன்மீது உயர்நீதி மன்றத்தின் கருத்து அறியப்பட்டது. மேலும் கோரிக்கையினை ஊதிய விகித மாற்றத்திலுள்ள குறைகளைக் களைய அமைக்கப்பட்ட அலுவல் குழுவில் வைக்கப்பட்டது. கோரிக்கையினை அலுவல் குழு பரிந்துரைக்கவில்லை.

4—

## கால்நடைப் பட்டிகளை பழுதுபார்த்தல்.

வினா எண். 2612—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கும்பகோணம் தாலுகா, திருப்பறம்பியம் ஊராட்சி மன்றத்தில் அமைந்துள்ள கால் நடைப் பட்டி (Bound) பழுதடைந்து உபயோகத்தில் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனை செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) இந்த கால்நடைப் பட்டி உள்ளிட்ட தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால்நடைப்பட்டிகளையும் பழுதுபார்க்க ஒட்டுமொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதி நிலையை அனுசரித்து கால்நடைப் பட்டிகளை பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5—

## மணிமுத்தாறு மற்றும் தாமிரபரணி மூலம் வாட்டர் ரேட் சாகுபடி.

வினா எண். 8096—திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி நதி மணிமுத்தாறு நதி ஆகிய நதிகளின் மூலம் வாட்டர்ரேட் நிலங்கள் சாகுபடி செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் மொத்த பரப்பளவு என்ன?

(இ) 25 வருடங்களுக்கு மேலாகவும வாட்டர் தண்டத் தீர்வை விதிக்கும் நிலத்தின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தாமிரபரணி நதி மூலம் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் சாகுபடி பரப்பளவு 1,319.17.5 ஹெக்டேர். மணிமுத்தாறு நதி மூலம் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் சாகுபடி பரப்பளவு 1,870,22.0 ஹெக்டேர்.





(இ) 25 வருடங்களுக்கும் மேலாக வாட்டர்ரேட் விதிக்கப்படும் நிலத்தின் விவரம் :—

1 தாமிரபரணி நதி :

| | | |
|---|---|---|
| 1. ஒருபோக நஞ்சை | .. | 600.05.0 ஹெக்டேர் |
| 2. புஞ்சை | .. | 599.76.0 ஹெக்டேர் |
| 3 புறம்போக்கு | .. | 119.36.5 ஹெக்டேர் |
| மொத்தம் | .. | 1 319.17.5 ஹெக்டேர் |

2. மணிமுத்தாறு நதி :

| | | |
|---|---|---|
| 1. ஒரு போக நஞ்சை | .. | 638.00.0 ஹெக்டேர் |
| 2. புஞ்சை | .. | 1 190.88.0 ஹெக்டேர் |
| 3. புறம்போக்கு | .. | 41.34.0 ஹெக்டேர் |
| மொத்தம் | .. | 1.870.22.0 ஹெக்டேர் |

6—

## ஆர். சி. புத்தகம் வழங்கல்.

வினா எண். 8167—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

" தமிழக விவசாயிகளின் அசையா சொத்துக்களை பராமரிக்க ஆர். சி புத்தகம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா? "

**விடை—**

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

விவசாயிகளின் அசையா சொத்துக்களை பராமரிக்க ஆர். சி புத்தகம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆனால், நிலங்களின் உரிமைதாரர்களுக்கு பட்டா பாஸ் புத்தகம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தக சட்டம் 1986 ஆம் வருடம் ஜனவரி மாதத்தில் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி, ஒவ்வொரு நில உரிமைதாரருக்கும் பட்டா பாஸ்த்தகம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. நிலங்களின்பயிர் செய்யும் நபர்களின் பெயர்கள், கூட்டுப் பட்டாதாரர்களின் பெயர்கள், அவர்கள் ஒவ்வொருவருக்கும் உரிமையுள்ள பங்கு, பட்டதாரர் செலுத்த வேண்டிய நிலவரி, செலுத்திய வரி விவரங்கள், நிலங்களின் மீதுள்ள வில்லங்கம் ஆகிய விவரங்களும் பட்டா பாஸ் புத்தகத்தில் காண்பிக்கப்படும். நிதி நிறுவனங்கள் நிலங்களின் மீது கடன் வழங்கும்போது, சம்பந்தப்பட்ட நிலத்தின் பட்டா பாஸ் புத்தகம் தாக்கல் செய்யப்பட வேண்டும். இந்த பட்டா பாஸ் புத்தகம் நில உடமைக்கு சட்டபூர்வமான ஆதார ஆவணமாகும். முதல் படியாக, இந்தச் சட்டத்தின் சில பிரிவுகள் 1—10—1987 முதல் பரிட்சார்த்த முறையில், செங்கல்பட்டு-எம். ஜி. ஆர். மாவட்டத்தில், திருத்தணி வட்டத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை வட்டத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இச்சட்டத்தின் எல்லாப் பிரிவுகளையும் மேலும் சில மாவட்டங்களில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

7—

## 2. சி. பட்டா மரங்களுக்கான ஆண்டு கட்டணத்தை உயர்த்துதல்.

வினா எண். 10753—திரு. கே. ஆர். முருகானந்தம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநிலம் முழுவதும் பல்வேறு வகையான பலன் தரும் அரசு மரங்களுக்காக 2-சி பட்டா வழங்கப்பட்ட மரங்களுக்கான ஆண்டுக் கட்டணத்தை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?



**விடை—**

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) 2-சி பட்டாவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அரசு மரங்களுக்கு மரவரி உயர்த்துவது குறித்து கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது. விரைவில் ஆணை வெளியிடப்படும்.

8—

## புதுக்கோட்டை நகரில் விளையாட்டு அரங்கம் அமைத்தல்.

வினா எண். 2102—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை நகரில் விளையாட்டு அரங்கம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும்?

**விடை—**

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) விரைவில் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

9—

## சுயநிதி கல்வி நிறுவனங்களின் மாணவர் தரம்

வினா எண் 2494—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சுயநிதி கல்வி நிறுவனங்கள் பெரும்பாலானவற்றில் மாணவர்களின் தரம் குறைந்ததாக காணப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்

(அ) மற்றும் (ஆ) : பொதுவாக சுயநிதி பொறியியற் கல்லூரிகளில் மாணவர்களின் தரம் தற்போது உயர்ந்துள்ளது. எனினும், ஒரு சில பாலிடெக்னிக்குகள் சரிவர ஆசிரியர் அமர்த்தி பாடம் போதிப்பதில்லை என்ற புகார்கள் வந்து சம்பந்தப்பட்ட சுயநிதி நிறுவனங்கட்கு அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன.

சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைப் பொறுத்த வரை புகார் ஏதும் கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் பெறப்பட வில்லை இருப்பினும் குறைபாடு பற்றி குறிப்பான புகார் ஏதும் பெறப்பட்டால் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

10—

இரப்பர் தொழிலை அடிப்படையாகக் கொண்ட பட்டயக் கல்வி

வினா எண். 8130—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் இரப்பர் தொழிலை அடிப்படையாகக்கொண்ட பட்டயக் கல்வி பாடப்பிரிவு தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

தற்போது அரசு நிதிநிலைமை கருதியும், மாணவர் வேலை வாய்ப்பு கருதியும், புதிய பாலிடெக்னிக்குகளோ புதிய பிரிவுகளோ அரசால் ஏற்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

11—

பெரம்பலூரில் அரசு கலைக் கல்லூரி

வினா எண் 8894—திரு. தா. செழியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரம்பலூரில் அரசு கலைக் கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்விஅமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

12—

கோயமுத்தூர் நகராட்சி வார்டுகளில் ஆரம்ப சுகாதார மருத்துவமனை.

வினா எண். 9083—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயமுத்தூர் மாநகராட்சியில் உள்ள எல்லா வார்டுகளுக்கும் ஆரம்ப சுகாதார மருத்துவமனை துவக்கப் படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஊரகப் பகுதிகளில் தான் ஆரம்பிக்கப்படுகின்றன. எனவே, கோயமுத்தூர் மாநகராட்சிப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்குச் சாத்தியமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

13—

கிராமங்களை இணைக்க மினிபஸ் வசதி.

வினா எண். 4037—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமப்புற மக்களின் வசதி கருதி கிராமங்களை இணைக்கும் வகையில் மினி பஸ் போக்குவரத்து அனுமதி வழங்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

14—

### உயிரின சரணாலயங்களைச் சுற்றி மின் வேலி அமைக்கும் திட்டம்.

வினா எண். 8277—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பேராணாம்பட்டு தொகுதியில் காட்டு யானைத் தொல்லைகளில் இருந்து விவசாயிகளையும், பயிர்களையும் காப்பாற்ற மின்வேலி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தேவையான நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுவாக வட ஆற்காடு மாவட்டம், தர்மபுரி மாவட்டம் மற்றும் கிருஷ்ணகிரி பகுதிகளில் காட்டு யானைகள் அடிக்கடி பயிர் விளைந்த பகுதிகளில் வந்து பயிர்களுக்குச் சேதம் விளைவிப்பதாக அந்தப் பகுதி விவசாயிகளிடமிருந்து புகார்கள் வந்ததின்பேரில் வன உயிரின சரணாலாயங்களைச் சுற்றி மின் வேலி அமைக்கும் திட்டம், யானைகள் பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி மின்வேலி அமைக்



கும் பணியினைச் செயல்படுத்தப்போகும் இடங்களில் பேரணாம்பட்டு பகுதியும் ஒன்றாகும். எனவே இத்திட்டத்தை செயல்படுத்துவதில் அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

15—

### பரமநந்தல் முதல் பலாமருதூர் வரை தார்ச்சாலை அமைத்தல்.

வினா எண். 9597—டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கம் தொகுதியிலுள்ள ஜவ்வாது மலைக்கு பரமநந்தல் முதல் பலாமருதூர் வரை தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் முடிக்க ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) செங்கம் தொகுதி, ஜவ்வாது மலை பரமநந்தல் முதல் பலாமருதூர் வரை தார்ச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு தற்சமயம் இடமில்லை.

16—

### கூட்டுறவுச் சங்கங்களின் தேவைக்கேற்ப நூல் வழங்குதல்.

வினா எண். 8698—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நூல் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றத்தினைத் தடுக்க கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூலினை அந்தந்த பகுதிகளில் இயங்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைக்கேற்றபடி விநியோகித்த பிறகே மீத

மிருக்கும் நூலினை இதர பகுதிகளில் விற்பனைக்கு விடு விக்க வேண்டும் என அரசு நெறிமுறை நிர்ணயம் செய் துள்ளதா?

(ஆ) ஆமெனில் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

17—

கூட்டுறவுக் கடன் தள்ளுபடி மானியத்தை உடன் வழங்குதல்.

வினா எண். 8924—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கிய கடன் தொகை அளவுக்கோ அல்லது அதற்கும் மேலான தொகைக்கோ தள்ளுபடி மானியம் அரசிடம் நிலுவையாக உள்ளதால் இந்த தள்ளுபடி மானியத்தை உடனுக்குடன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் :

மாநில அரசு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவை தள்ளுபடி அளித்த வகையில் நிலுவையிலுள்ள தொகைகளை எவ்வளவு விரைவில் வழங்க இயலுமோ அவ்வளவு விரைவில் வழங்கி வருகிறது. சங்கங்களின் நிலுவை கோரிக்கைகளை ஆய்வு செய்து ஒப்பளிப்பு அளிக்க துறை அலுவலர்களுக்கு குறைந்தது 90 நாட்களுக்கு மேல் கால அவகாசம் தேவைப்படுகிறது. வருடா வருடம் தள்ளுபடி



மானியத் தொகை கணக்கிடப்பட்டு, நிதி ஒதுக்கீட்டில் வழி வகை செய்யப்பட்டு, நெசவாளர் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ்-க்கு வழங்கப்பட்டு வருகிறது.

18—

அழகனேரி ஏரிபாசன நிலங்களை வளப்படுத்துதல்.

வினா எண். 3292—டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:—

அரியலூர் வட்டம், விளாங்குடி கைகாட்டி அருகில் உள்ள அழகனேரி ஏரியை தூர் எடுத்து பாசன நிலங்களை வளப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப்பணித் துறை அமைச்சர்:

இந்த ஏரிக்கு மராமத்து பணிக்காக விரைவுபடுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டத்தின் கீழ் ரூ. 98,000-க்கு மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டு இந்த ஆண்டு பணி செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

19—

மோகனூர் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்.

வினா எண். 3445—திருமதி ப. சரஸ்வதி மற்றும் திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மோகனூர் காவிரி ஆற்றில் பாலம் கட்டினால் கரூரிலிருந்து நாமக்கல் செல்லும் தொலைவு 14 கி.மீ. தூரம் குறையும் என்பதால் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

20—

பாலாற்றில் சிறு சிறு அணைகள் கட்டி மீன் வளர்த்தல்.

வினா எண். 4425—திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மழைக் காலங்களில் வெள்ள நீர் பாலாறு மூலமாகக் கடலில் சேர்வதைத் தவிர்க்க பாலாற்றில் ஆங்காங்கே சிறு சிறு அணைகள் கட்டி நீர்த்தேக்கி மீன் வளத்தையும் பெருக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

21—

காவிரி நீரை பாலாற்றில் விடும் திட்டம்.

வினா எண். 5920—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நிலத்தடி நீரைப் பெரிதும் பாசனத்திற்குப் பயன் படுத்தும் தர்மபுரி, வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், செங்கை—எம்.ஜி.ஆர். மாவட்டம் ஆகியவற்றின் பாசன வசதி அளிக்க ஒகேனக்கல் பகுதியில் ஓடும் காவிரி நதி நீரை பாலாற்றில் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்; பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





22—

நெய்வேலி நிலக்கரிச் சுரங்க நீரை பாசனத்திற்கு பயன்படுத்துதல்.

வினா எண் 6117—திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குறிஞ்சிப்பாடி தொகுதி, விவசாயிகளுக்குப் பயன்தரும் வகையில் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து வெளியேற்றப் படும் நீரை குழாய் மூலம் கொண்டுவந்து அய்யனார் ஏரி, பெருமாள் ஏரியில் விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர்:

நெய்வேலி நிலக்கரிச் சுரங்க உபரி நீரை பெருமாள் ஏரியின் ஆயக்கட்டுகளுக்குப் பயன்படுத்தும் திட்டம் உள்ளது. அய்யனார் ஏரிக்குத் தற்போது சுரங்கத்தில் வேலை நடக்குமிடத்திலிருந்து வெளியேற்றப்படும் நீர் வருவதற்கு வாய்ப்பில்லை.

23—

கள்ளம்பட்டி-சொக்கநாதபுரம் சாலையை அகலப்படுத்துதல்.

வினா எண் 6412—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பேராவூரணியிலிருந்து ஒட்டங்காடு, கள்ளம்பட்டி, சொக்கநாதபுரம் வழியாக பட்டுக்கோட்டை மெயின் சாலை நெடுஞ்சாலையை அகலப்படுத்தி பராமரிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப் பணித்துறை அமைச்சர்:

இல்லை.

24—

பள்ளத்தூர் ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகளுக்கு ஒற்றை விளக்கு பொருத்துதல்.

வினா எண் 6781—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் ஆதி திராவிடர் தொகுப்பு வீடுகளுக்கு ஒற்றை விளக்குகள் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் ஆதி திராவிடர் தொகுப்பு வீடுகளுக்கு ஒற்றை விளக்குகள் வேண்டி 20 குடிசை விண்ணப்பங்கள் வரப் பெற்றுள்ளன. மேற்குறிப்பிட்ட 20 வீடுகளுக்கும் மின் வாரியப் பிரிவு அலுவலகத்தின் விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் இலக்கீட்டிற்கு ஏற்ப மின் வசதி வழங்க ஆவன செய்யப்படும்.

25—

சோலைக்காடு ஆதி திராவிடர் காலனிக்கு ஒற்றை விளக்குகள் பொருத்துதல்.

வினா எண் 7080—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சோலைக்காடு ஆதி திராவிடர் காலனிகளுக்கு ஒற்றை விளக்குகள் அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சோலைக்காட்டிலுள்ள ஆதி திராவிடர் காலனிகளுக்கு ஒற்றை விளக்குகள் பொருத்தக்கோரி



25 குடிசை விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட பகுதிக்கு மின்வசதி அளிக்க நடைமுறையில் உள்ள முறைப்படி ஆவன செய்யப்படும்.

26—

ஒரு கம்பம் நட்டு மோட்டாருக்கு மின் இணைப்பு வழங்குதல்.

வினா எண் 7496—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக மின் துறையில் ஒரு கம்பம் நட்டு மோட்டாருக்கு மின் இணைப்பு எந்த ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

ஒரு கம்பம் நட்டு மோட்டாருக்கு சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு தருவதில் ஆண்டுவாரியான வரையறுப்பு மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த ஆண்டு வரை பெறப்பட்ட மனுக்கள் ஒரு கம்பம் திட்டத்தின் கீழ் 31—3—1992 நிலவரப்படி தரப்பட்டுள்ளது என்ற விவரம் கீழே வைக்கப்பட்டுள்ளது.

| மாவட்டம். | விண்ணப்பங்கள் எடுத்துக் கொடுக்கப்பட்ட கடைசி தேதி. |
|---|---|
| (1) | (2) |
| 1. செங்கை-எம்.ஜி.ஆர். .. | 3—6—1987 |
| 2. மதுரை .. .. | 31—10—1987 |
| 3. நெல்லை-கட்டபொம்மன் .. | 31—1—1989 |
| 4. வடஆற்காடு-அம்பேத்கார் .. | 31—3—1987 |
| 5. திருவண்ணாமலை-சம்புவராயர் | 5—10—198[illegible] |

| | | |
|---|---|---|
| 6. | புதுக்கோட்டை .. .. | 31—12—1987 |
| 7. | சேலம் .. .. | 31—8—1985 |
| 8. | தென்னாற்காடு .. | 30—9—1984 |
| 9. | நாகப்பட்டினம்-காயிதே மில்லத் | 1—8—1988 |
| 10. | தஞ்சை .. .. .. | 29—2—1988 |
| 11. | திருச்சி .. .. | 31—3—1988 |
| 12. | கோவை .. .. .. | 20—2—1986 |
| 13. | தருமபுரி .. .. | 30—6—1987 |
| 14. | திண்டுக்கல்— அண்ணா .. | 31—3—1987 |
| 15. | சிதம்பரனார் .. .. | 31—3—1988 |
| 16. | காமராசர் .. .. | 31—12—1988 |
| 17. | இராமநாதபுரம் .. | 22—8—1989 |
| 18. | பசும்பொன் முத்துராமலிங்க தேவர் | 22—8—1989 |
| 19 | பெரியார் .. .. | 31—5—1987 |
| 20. | கன்னியாகுமரி .. .. | 31—3—1985 |
| 21. | நீலகிரி .. .. .. | 21—11—1988 |

27—

## ஆழ்குழாய் கிணற்றுக்கு மின் மோட்டார் பொருத்துதல்.

வினா எண் 8026—திரு. ஆர் சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆழ்குழாய் கிணற்றில் மின் மோட்டார் பொருத்தி மின்சார இணைப்புக்கு காத்திருக்கும் விவசாயிகளுக்கு மின் இணைப்பு எப்போது கிடைக்கும்?





(ஆ) விவசாயிகளுக்கு சீனியாரிட்டி பார்க்காமல் மின் இணைப்பு வழங்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆழ்குழாய் கிணற்றிற்கு மின் இணைப்பு கோரி காத்திருக்கும் விவசாயிகளுக்கு விண்ணப்ப பதிவு வரிசைப்படி தொடர்ந்து மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) விவசாயிகளுக்கு சீனியாரிட்டி பார்க்காமல் தர அரசு ஒரு சுயநிதி திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் துரித மின் இணைப்பு பெற விரும்பும் விவசாயிகள் ரூ. 25,000 அல்லது மின் விஸ்தரிப்புக்கு ஆகும் மதிப்பீட்டுச் செலவு இதில் எது அதிகமோ அதைச் செலுத்தினால் இவ்விண்ணப்பதாரருக்கு சிறப்பு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்படும்.

28—

## காடம்பாறை மின் நிலைய தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரம் செய்தல்.

வினா எண். 8085.— டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காடம்பாறை நீரேற்று மின் நிலையத்தில் வேலை செய்யும் தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தொடர்ச்சியான பணி இடங்களுக்கு தற்காலிக பணியாளர்கள் யாரும் காடம்பாறை நீரேற்று மின் நிலையத்தில் பணியில் அமர்த்தப்படவில்லை. தொடர்ச்சியாக இல்லாத சில பணிகளை ஒப்பந்த தொழிலாளர்கள் மூலம் மின்

வாரியம் நிறைவேற்றி வருகிறது. காடம்பாறை நீரேற்று மின் நிலையத்தில் இத்தகைய ஒப்பந்த தொழிலாளர்கள் 71 பேர் உள்ளனர். ஒப்பந்த தொழிலாளர்கள் சார்பாக, வாரியப் பணிகளில் அவர்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றம் ஒய்வு பெற்ற நீதிபதி கலீத் அவர்களை இது சம்பந்தமாக பரிசீலித்து பரிந்துரை கூற அமர்த்தியது. அவரது பரிந்துரையின்படி காடம்பாறை நீரேற்று மின் நிலையத்தில் வேலை செய்யும் 71 ஒப்பந்த தொழிலாளர்களும் கால கெடுவின்படி பணியில் அமர்த்தப்பட உள்ளனர். ஏற்கெனவே காடம்பாறை நீரேற்று மின் நிலையத்தில் பணிபுரிந்த ஒரு ஒப்பந்தத் தொழிலாளர் நிரந்தரப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

29—

<u>வெட்டன் விடுதி கிராம மின் மோட்டாருக்கு மின் இணைப்பு.</u>

வினா எண். 8381—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதி கிராமத்தில் மின்மோட்டாருக்கு கூடுதல் மின் இணைப்பு பெற பொதுமக்கள் 1988-ல் விண்ணப்பித்து 3 ஆண்டுகள் ஆகியும் இன்னும் கூடுதல் மின் இணைப்பு பெறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கூடுதல் மின் இணைப்பு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆலங்குடி தொகுதியிலுள்ள வெட்டன்விடுதி கிராமத்தில் மின்மோட்டாருக்கு கூடுதல் மின் இணைப்பு கோரி 23—2—1989-க்குப் பின்னர் பெறப்பட்ட மனுக்களே நிலுவையிலுள்ளன.

(ஆ) நிதிநிலை மற்றும் தொழில் நுட்ப சாத்தியக்கூறுகள் (Technical Feasibility) ஆகியவற்றிற்கு ஏற்ப இம்மாவட்டத்தில் நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் படிப்படியாக எடுத்துக்கொள்ளப்பட்டு இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.



30—

<u>நாகப்பட்டினம் துறைமுகப்பகுதி கடல் அரிப்பைத் தடுக்க நடவடிக்கை.</u>

வினா எண். 8477—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

நாகப்பட்டினம் துறைமுகப் பகுதியில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் கடல் அரிப்பைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைசசர் :

நாகப்பட்டினம் துறைமுகப் பகுதியில் கடல் அரிப்புத் தடுப்புச் சம்பந்தமான கோரிக்கைகள் எதுவும் இதுவரை அரசுக்கு வரவில்லை. எனினும் கடல் அரிப்பு ஏதும் உள்ளதா என ஆய்வு செய்து அவ்வாறு இருப்பின் கடல் அரிப்பு தடுப்புப் பணிகளுக்கான மதிப்பீடு தயாரித்து அனுப்புமாறு தல அலுவலர்கள் டணிக்கப்பட்டுள்ளனர் என தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

31—

<u>கரும்பு பிழிய இளநிலைப் பொறியாளர் நிலையில் அனுமதி வழங்குதல்.</u>

வினா எண். 8992—திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கரும்பு ஆலையில் அறைப்பதற்கு தற்போது உதவி கோட்ட மின் பொறியாளரிடம் அனுமதி பெற வேண்டி உள்ளதால் காலதாமதத்தை தவிர்க்க முன்பு இருந்தது போன்று இளநிலை மின்பொறியாளரே அனுமதி கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித்துறை அமைச்சர் :

தற்போது மின்சார வாரியத்தின் விதிகளின்படி விவசாய மின்நுகர்வோர் தங்களது மின் இணைப்பைப் பயன்படுத்தி, கரும்பு

பிழிவதற்கு அந்தப் பகுதி உதவி செயற்பொறியாளரிடம் முன் அனுமதி பெற வேண்டும். இந்த வழிமுறை வெகுகாலமாக நல்ல முறையில் அமுலில் இருந்து வருகிறது. மேற்படி அதிகாரத்தை இளநிலைப் பொறியாளருக்கு வழங்குவது அவசியமில்லை.

32—

பண்ணையூர் பாலம் பழுதுபார்த்தல்.

வினா எண் 8998— திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளச்சல் தொகுதி இராஜா மங்கலம்—ஈத்தாமொழி சாலையில் அமைந்துள்ள பண்ணையூர் பாலம் பழுதடைந்த நிலையிலிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைச் சரிசெய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலப்பணியைச் செய்ய அரசு முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் நிதிநிலையைப் பொறுத்து இத்திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

33—

மாநகராட்சி தேர்தல்கள்,

வினா எண் 1010—திரு டி. சுதர்சனம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாநகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்தும் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைபெறும் ?





விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) காவிரி நீர் பங்கீடு பற்றிய நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பினை கர்நாடக மாநில அரசு நிறைவேற்றத் தவறியதால் தமிழ்நாடு மக்களிடையே எழுந்துள்ள கொதிப்புணர்ச்சியின் காரணமாகவும் இது குறித்து ஒருமித்த கருத்துடன் உணர்வினை வெளிப்படுத்த வேண்டும் என்று அரசு கருதியதாலும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்குத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

34—

ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டம்.

வினா எண் 1059—டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில் ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம். இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இத்திட்டம் இறுதி பரிசீலனைக்கு பிறகே திட்ட மதிப்பீடு உறுதி செய்யப்படும்.

(இ) அரசால் இத்திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டவுடன் திட்டம் துவங்கப்பட்ட மூன்று ஆண்டுகளில் முடிக்கப்படும்.

[1993 பிப்ரவரி 8

35—

**கோவில்பட்டி குடிநீர் வசதி திட்டம்.**

வினா எண் 1133—திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவில்பட்டி நகராட்சிக்கு நிரந்தர குடிநீர் வசதி திட்டம் கொண்டுவரப்பட்ட பின்பும் நகரின் மையப்பகுதி, கடலைக்காரத் தெரு, செக்கடித் தெரு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வசதி செய்து தரப்படாததை அரசு அறியுமா ?

(ஆ) இப்பகுதிகளுக்கும் நகர்ப்புறப் பகுதிகளுக்கும் லாரிகள் மூலம் குடிநீர் வழங்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி நகருக்கென பாதுகாக்கப்பட்ட குடிநீர் 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சீவலப்பேரி என்னும் கிராமத்தில் தாமிரபரணி ஆற்றுப்படுகையிலிருந்து கொண்டுவரப்படுகிறது. பாதுகாக்கப்பட்ட நிரந்தர குடிநீர் திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு ஆரம்பத்தில் 55 லட்சம் லிட்டர் கோவில்பட்டிக்கு ஒதுக்கீடு செய்வதாய் திட்டமிட்டு அறிவிப்பு செய்யப்பட்டு தற்போது சுமார் 30 லட்சம் லிட்டர் மட்டுமே சப்ளை செய்யப்பட்டு வருகிறது. மக்கள் தொகை அடிப்படையில் நகருக்கு மேற்படி தண்ணீர் சப்ளை போதுமானதல்ல. எனவே தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு நகர்ப்புறப்பகுதிகளுக்கும், கடலைக்காரத் தெரு, செக்கடித் தெரு ஆகிய பகுதிகளுக்கும் தற்போது குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

36—

**அச்சங்குட்டை—கரையாளனூர் சாலையை பழுதுபார்த்தல்.**

வினா எண் 1150—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் தொகுதியிலுள்ள அச்சங்குட்டத்திலிருந்து கரையாளனூர் செல்லும் சாலை பழுதடைந்த நிலையிலுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அச்சாலை பராமரிக்கப்படுமா ?



1993 பிப்ரவரி 8]

விடை

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் தொகுதியிலுள்ள அச்சங்குட்டத்திலிருந்து கரையாளனூர் செல்லும் பழுதடைந்த சாலை நடப்பு நிதியாண்டில் ரூ. 30,000 மதிப்பீட்டில் செப்பனிடப்படவுள்ளது.

37—

**அச்சங்குட்டை—வீராணம் சாலையை பழுதுபார்த்தல்.**

வினா எண் 1151—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குளம் தொகுதியிலுள்ள அச்சங்குட்டத்திலிருந்து வீராணம் செல்லும் சாலை பழுதடைந்த நிலையிலுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அச்சாலை பராமரிக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் தொகுதியில் அச்சங்குட்டத்திலிருந்து, வீராணம் செல்லும் சாலையின் நீளம் 3.2 கி.மீ. மெட்டல் சாலையாகவுள்ள இச்சாலை, தற்போது நல்ல நிலையில் உள்ளது.

38—

**எழுத்தூர், தச்சூர், புலிகரம்பலூர் கிராமங்களுக்கு சாலை வசதி.**

வினா எண் 1271—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னார்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில், எழுத்தூர், தச்சூர், புலிகரம்பலூர் ஆகிய கிராமங்களுக்கு சாலைகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மங்களூர் தொகுதியில் எழுத்தூரிலிருந்து தச்சூர் வழியாக புலிகரம்பலூர் வரை உள்ள 3 கி. மீ. தூர சாலையினை 1990–91-ம் ஆண்டில் கற்சாலையாக மேம்பாடு செய்யப்பட்டு பேருந்துகள் இயக்க தகுதியான சாலையாக உள்ளது. மேலும் நான்கு இடங்களில் சிறு பாலங்கள் கட்டி இச்சாலையை மேம்பாடு செய்ய ரூ. 30 இலட்சம் தேவைப்படுகிறது. அந்த அளவு நிதி செலவு செய்ய மங்களூர் ஊராட்சி ஒன்றியத்தில் நிதி வசதியில்லை. இது பற்றிய செயற்குறிப்பு அரசிடம் தற்போது ஏதுமில்லை.

39—

## கச்சிமைலூர் கிராமத்திற்கு சாலை வசதி

வினா எண் 1275—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம் மங்களூர் தொகுதியில் கச்சிமைலூர் என்ற கிராமத்திற்கு சாலை அமைக்கும், திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மங்களூர் தொகுதியில் கச்சிமைலூர் என்ற கிராமத்திற்கு 1992–93 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.





40—

## தண்ணீர் பந்தல் குடிதண்ணீர் வசதி

வினா எண் 1302—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி வட்டம், தண்ணீர் பந்தலில் வசிக்கும் மக்கள் குடிதண்ணீர் இன்றி சிரமப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், வைத்திங்கொட்டை சாலையிலுள்ள ஆழ்குழாய்க் கிணற்றில் மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) தண்ணீர்ப் பந்தல் குடியிருப்பில் இரண்டு கையிறைப்பான்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த இரு ஆழ்துளைக்கிணறுகளிலும் மின்விசை நீரேற்றி பொருத்து மளவிற்கு போதுமான நீர் ஆதாரம் இல்லாததினால் இக்கிணறுகளிலிருந்து மேல்நிலைத்தொட்டி கட்டி குடிநீர் வழங்க இயலாது. இருப்பினும் வரும் நிதி ஆண்டுகளில் வாரிய விதிமுறைகளின்படி, முன்னுரிமை அடிப்படையில் ஒரு மின்விசைத் திட்டம் செயல்படுத்த ஆவன செய்யப்படும்.

41—

## வைகையாற்றில் சாக்கடை கலப்பதை தடுக்க நடவடிக்கை

வினா எண். 1392—திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகராட்சியின் கழிவுநீர்ச் சாக்கடைகள் வைகையாற்றில் விடப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

மதுரை மாநகராட்சியின் கழிவுநீர்ச் சாக்கடைகள் வைகையாற்றில் கலப்பதை தடுக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

42—

**நாமக்கல் பகுதியில் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்தல்**

வினா எண். 1737—திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாமக்கல் வட்டத்திலுள்ள பஞ்சாயத்துக்களில் புதியதாக ஆழ்த்துளைக் கிணறுகள் அமைத்து குடிநீர் பிரச்சினையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

ஆம், நாமக்கல் வட்டத்திலுள்ள சில பஞ்சாயத்துகளில் இவ்வாண்டு வறட்சி நிவாரண திட்டத்தில் இடம் பெற்றுள்ள 9 குடியிருப்புகளுக்கு ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மற்றும் குடிநீர் வசதி இல்லாத குடியிருப்புகளுக்கு முழுமையான பாதுகாக்கப்பட்ட குடிநீரும், ஓரளவு குடிநீர் வசதி உள்ள குடியிருப்புகளுக்கு முழுமையான குடிநீரும் அளிக்கப் பட்டுள்ளது.

43—

**பரமக்குடி ஒன்றிய ஆழ்குழாய் கிணறுகள்.**

வினா எண். 2128—டாக்டர் சு. சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, பரமக்குடி ஒன்றியத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறுகள் எத்தனை ?

(ஆ) அவற்றில் இயங்காத ஆழ்குழாய் கிணறுகள் எத்தனை ?





| (1) | (2) | (3) | |
|---|---|---|---|
| 6 கமுதிக்குடி | கமுதிக்குடி .. | 2 | 5 |
| | பீயனேந்தல் .. | 1 | |
| | இலந்தைக்குளம் .. | 1 | |
| | சுந்தனேந்தல் .. | 1 | |
| 7 கஞ்சியேந்தல் .. | கஞ்சியேந்தல் .. | 2 | 6 |
| | புளியங்குளம் .. | 2 | |
| | பெத்தனேந்தல் .. | 1 | |
| | சேகனேந்தல் .. | 1 | |
| 8 கே. கருங்குளம் | கே. கருங்குளம் .. | 2 | 3 |
| | நிலையாம்படி .. | 1 | |
| 9 கீழப்பரத்தியூர் .. | கீழப்பரத்தியூர் .. | 1 | 4 |
| | புலவர்வேலாங்குடி .. | 1 | |
| | கணக்கனேந்தல் .. | 1 | |
| | பிள்ளையாரேந்தல் | 1 | |
| 10 கீழப்பார்த்திபனூர் | கீழப்பார்த்திபனூர் .. | 2 | 6 |
| | நெடும்புலி .. | 1 | |
| | இடையா குடியிருப்பு | 2 | |
| | கீழச்சவன்குளம் .. | 1 | |
| 11 குழந்தாபுரி .. | குழந்தாபுரி | 2 | 3 |
| | அருங்குளம் .. | 1 | |
| 12 மடந்தை .. | மடந்தை .. | 2 | 3 |
| | கௌரிபட்டி .. | 1 | |
| 13 மேலக்காவனூர் | .. | .. | |
| 14 மேலப் பார்த்திபனூர் | பார்த்திபனூர் | 3 | 6 |
| | மரிச்சுக்கட்டி | 1 | |
| | பரளை .. | 1 | |
| | அழகன்பச்சேரி .. | 1 | |
| 15 மேலாய்க்குடி .. | மேலாய்க்குடி .. | 2 | 4 |
| | அய்யனாபுரம் .. | 1 | |
| | சண்முகநாதபுரம் | 1 | |
| 16 மோசுகுடி .. | மோசுகுடி .. | 1 | 7 |
| | பி.பி.ஏந்தல் .. | 3 | |
| | வாகையேந்தல் .. | 3 | |

1993 பிப்ரவரி 8]

**விடை—**

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு,</u> உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 140 ஆழ்குழாய்க் கிணறுகள் உள்ளன. அவற்றில் 6 (ஆறு) ஆழ்குழாய் கிணறுகள் மட்டும் நீர் ஆதாரம் வற்றியதில் இயங்காத நிலையில் உள்ளன.

(மேற்படி ஆழ்குழாய் கிணறுகள் பற்றிய விவரங்கள் கீழ்க் காணும் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளது.)

பரமக்குடி ஊராட்சி ஒன்றியம் ஆழ்குழாய் கிணறு அமைந்துள்ள கிராமங்கள்.

| வரிசை எண் மற்றும் ஊராட்சியின் பெயர். | ஆழ்குழாய் கிணறு அமைந்துள்ள இடம். | எண்ணிக்கை. | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | |
| 1 எஸ். அண்டக்குடி | எஸ். அண்டக்குடி | 3 | 5 |
| | குளவிப்பட்டி .. | 1 | |
| | பாம்புவிழுந்தான் .. | 1 | |
| 2 அறியவேந்தல் .. | அறியவேந்தல் | 1 | 2 |
| | வாகைக்குளம் | 1 | |
| 3 ஏனாதிக்கோட்டை | ஏனாதிக்கோட்டை .. | 1 | 1 |
| 4 கலையூர் .. | கலையூர் .. | 2 | 5 |
| | கண்டுகொண்டான் மாணிக்கம் | 1 | |
| | என்பெத்த நேந்தல் .. | 1 | |
| | புத்தநேந்தல் .. | 1 | |
| 5 கள்ளிக்குடி .. | கோரைக்குளம் .. | 1 | 1 |



1993 பிப்ரவரி 8]

| (1) | (2) | (3) | |
|---|---|---|---|
| 17 நெல்மடூர் .. | நெல்மடூர் .. | 1 | 3 |
| | சூரிக்கனேந்தல் .. | 1 | |
| | கருவாட்டுனேந்தல் | 1 | |
| 18 பீர்க்கன்குறிச்சி | பீர்க்கன்குறிச்சி .. | 2 | 5 |
| | வேட்டன்குளம் .. | 1 | |
| | உண்டுத்தி .. | 1 | |
| | பிரிசை .. | 1 | |
| 19 நெம்மேனி .. | ஆவரேந்தல் .. | 2 | 4 |
| | லெட்சுமணன் குடியிருப்பு. | 1 | 3 |
| 20 பாம்பூர் .. | பாம்பூர் .. | 4 | 4 |
| 21 பெருங்கரை .. | கீழப்பெருங்கரை | 8 | |
| | மேலப்பெருங்கரை | | |
| | ராஜாக்கள்பட்டி .. | 1 | 8 |
| | பாலபச்சேரி .. | 1 | |
| | பாப்பனேந்தல் .. | 1 | |
| | திருவரங்கி .. | 1 | |
| 22 பொதுவக்குடி | பொதுவக்குடி .. | 1 | 1 |
| 23 புதுக்குடி .. | புதுக்குடி .. | 2 | 3 |
| | வினோபாநகர் .. | 1 | |
| 24 பி. புத்தூர் | பிடாரிசேரி | 1 | 1 |
| 25 எஸ். காவனூர் .. | .. | | |
| 26 குடியூர் .. | சூசையப்பர்பட்டி | 1 | 1 |
| 27 தடுத்தலான் கோட்டை. | தடுத்தலான்கோட்டை | 1 | 7 |
| | குறிஞ்சாக்குளம் — | 1 | |
| | செம்பலான்குடி — | 1 | |
| | இடையன்குளம் — | 3 | |
| | டி. நெடுங்குளம் — | 1 | |
| 28 தெளிச்சாத்த நல்லூர். | தெளிச்சாத்தநல்லூர் | 2 | 2 |
| 29 தென்பொதுவக்குடி | தென்பொதுவக்குடி | 1 | 1 |
| 30 திணைக்குளம் .. | திணைக்குளம் — | 3 | 3 |

| (1) | | (2) | | (3) | |
|---|---|---|---|---|---|
| 31 தோலூர் | .. | தோலூர் | .. | 2 | 4 |
| | | மணிக்கம்பட்டி | .. | 1 | |
| | | தலக்கால் | .. | 1 | |
| 32 ஊரகக்குடி | .. | ஊரகக்குடி | .. | 3 | 3 |
| 33 உரப்புளி | .. | உரப்புளி | .. | 1 | 2 |
| | | முனியாண்டிபுரம் | .. | 1 | |
| 34 வழிமறிச்சான் | | வழிமறிச்சான் | .. | 2 | 3 |
| | | மாங்குடி | .. | 1 | |
| 35 வாலாங்குடி | .. | வாலாங்குடி | .. | 2 | 9 |
| | | கண்டாக்குளம் | .. | 2 | |
| | | புளிக்குளம் | .. | 2 | |
| | | புதுப்பட்டி | .. | 1 | |
| | | பிரண்டைக்குளம் | .. | 2 | |
| 36 விளத்தூர் | .. | விளத்தூர் | .. | 4 | 4 |
| 37 வெங்காலூர் | | கணபதியேந்தல் | | 2 | 6 |
| | | சங்கன்கோட்டை | | 1 | |
| | | லெட்சுமிபுரம் | | 1 | |
| | | வெங்காலூர் | .. | 2 | |
| 38 வெங்கிட்டன் குறிச்சி. | | சுப்புராயபுரம் | .. | 1 | 1 |
| 39 வேந்தோணி | .. | உலகநாதபுரம் | .. | 1 | |
| | | மரைக்காயர் பட்டிணம். | .. | 1 | 5 |
| | | முத்துச்செல்லபுரம் | .. | 2 | |
| | | வேந்தோணி | .. | 1 | |
| | | மொத்தம் | .. | 140 | 140 |



1993 பிப்ரவரி 8]

ஒன்றியத்திலுள்ள இயங்காத ஆழ்குழாய் கிணறுகளின் விபரம்.

| வரிசை எண் மற்றும் ஊராட்சியின் பெயர். (1) | கைப்பம்பு அமைந்துள்ள (2) | இடம். |
|---|---|---|
| 1 அரியநேந்தல் | வாகைக்குளம் | நீர் ஆதாரம் வற்றிய தால் இயங்க வில்லை. |
| 2 வாலாங்குடி | பிரண்டைக்குளம் | |
| 3 வாலாங்குடி | புளிக்குளம் | |
| 4 தோலூர் | தலக்கால் | |
| 5 குழந்தாபுரி | குழந்தாபுரி | |
| 6 கஞ்சியேந்தல் | கஞ்சியேந்தல் | |

44—

## காயாவூர் மயானச்சாலை மற்றும் தகரக் கொட்டகை அமைத்தல்.

வினா எண் 2345—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் மயானத்திற்கு சாலையும் தகரக் கொட்டகையும் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம், ஊராட்சி ஒன்றியம், காயாவூர் மயானத்திற்கு சாலையும் தகரக் கொட்டகையும் அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

45—

## கே. கருங்குளம் பஞ்சாயத்திற்கு சாலை வசதி.

வினா எண் 2407—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்தில் கே. கருங்குளம் கிராமத்திற்கு பஞ்சாயத்து சாலை இல்லாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு சாலை அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றியம் கே. கருங்குளம் கிராமத்திற்கு சாலை வசதி உள்ளது. மென்னத்தி ஊராட்சியிலிருந்து கே. கருங்குளம் கிராமத்திற்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு செல்லும் மண் சாலை ஊராட்சி சாலையாகும். இதை செஞ்சரள் சாலையாக மாற்ற ரூ. 40,000 செலவாகும். நிதி பற்றாக் குறை காரணமாக இப்பணியை செய்ய தற்சமயம் திட்டம் ஏதும் இல்லை.

46—

இன்னிசேரி கிராமத்திற்கு சாலை வசதி.

வினா எண் 2417—திரு. டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம் இன்னிசேரி கிராமத்திற்கு ரோடு வசதியின்றி இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு முடிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம் போகலூர் ஒன்றியம் இன்னிசேரி கிராமத்திற்கு ரோடு வசதியில்லை. கண்மாய் கரையில்தான் மக்கள் சென்று வருகின்றனர். இணைப்புச் சாலை புதிதாக அமைக்க தனியார் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய ரூபாய் ஒரு இலட்சம் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் சாலை அமைக்க ரூ. 90,000 தேவைப்படுகிறது. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திலோ அல்லது சிறப்புத் தன்னிறைவுத் திட்டத் திலோ இப்பணியை மேற்கொள்ள வழிவகையில்லை மேலும் ஊராட்சி ஒன்றியத்திலும் போதிய நிதி வசதி இல்லை. எனவே சாலை அமைக்கும் பணி பற்றிய செயற்குறிப்பு தற்போது ஏதும் அரசிடம் இல்லை.



47—

சேலம் பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 2432—திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் பாதாள சாக்கடைத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படுமா?

(ஆ) இத்திட்டம் நிறைவேற்றப்படாததால் சேலத்தில் ஏற்பட்டுள்ள கொசு தொல்லையைத் தடுக்க அரசு என்ன மாற்று ஏற்பாடு செய்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) சேலம் பாதாள சாக்கடைத் திட்டம் 1994-ம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

(ஆ) இத்திட்டம் நிறைவேற்றப்படாததால் சேலத்தில் ஏற்பட்டுள்ள கொசுத் தொல்லையைத் தடுக்க காலையிலும், மாலையிலும் ஆங்காங்கே சாக்கடைகளில் தேங்கி இருக்கும் அசுத்த தண்ணீர் தவறாமல் வெளியேற்றப்படுகிறது. இதனால் கொசு முட்டையிடுதல், கொசுப்புழு ஏற்படுதல் போன்றவற்றை தடுத்து, தக்கபடியான கொசுப்புழு ஒழிக் கும் மருந்து அனைத்து பகுதிகளிலும் தவறாமல் தெளிக்கப்பட்டு வருகிறது.

48—

நெடுங்குளம்—இராசிபுரம் குடிநீர்த் திட்டம்

வினா எண். 2588—திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெடுங்குளம்—இராசிபுரம் குடிநீர்த் திட்டம் 1991-92-ஆம் ஆண்டு நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக் குமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

நெடுங்குளம்—இராசிபுரம் குடிநீர்த் திட்டத்தை 1994-ம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

49—

செட்டிமண்டபம் குளம் சாலையை செப்பனிடுதல்

வினா எண். 2642—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உள்ளூர் செட்டிமண்டபம் குளத்திற்குச் செல்லும் சாலையை மராமத்துச் செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் புதுக்கோட்டை உள்ளூர் செட்டிமண்டபம் குளத்திற்குச் செல்லும் சாலையை மராமத்து செய்து கொடுக்க நிதி வசதி பற்றாக்குறையின் காரணமாக செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

50—

முதுக்குளம் சாலையை மேம்படுத்துதல்.

வினா எண். 2948—திரு. ஆர். தங்கராசு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம் இடையக் குறிச்சி-முதுகுளம் சாலையை மெட்டல் போட்டு, தார்போட்டு தருவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம் இடையக் குறிச்சி, முதுகுளம் சாலையை மெட்டல் போட்டு தார் போட்டு தரும் செயற் குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.



51—

சேதுச் சாலை—அத்தாணி சாலையை பழுதுபார்த்தல்,

வினா எண். 3102—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி கடற்கரை சேதுச்சாலையிலிருந்து கருப்பட்டிக்காடு மேட்டுக்கொல்லை வழியாக இரட்டவயல் அத்தாணிச் சாலையை இணைக்கும் சாலையை மராமத்து செய்து தார்ச்சாலையாக மாற்ற அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் திருவத்தேவன் ஊராட்சிக் கடற்கரைச் சேதுச்சாலையிலிருந்து கருப்பட்டிக்காடு, மேட்டுக்கொல்லை வழியாக இரட்டவயல் அத்தாணிச் சாலையை இணைக்கும் சாலையில் பேருந்து போக்குவரத்து நடைபெறவில்லை. மேலும், நிதிநிலை வசதியின்மையால் அச்சாலையை தார்ச்சாலையாக மாற்ற செயற் குறிப்பு ஏதும் தற்சமயம் இல்லை.

52—

ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம்.

வினா எண். 3945—திரு. கே. சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒகேனக்கல் காவிரி நதியின் நீரை தர்மபுரி மாவட்டத்தின் பெரும்பகுதிக்கு குடிநீர் வழங்க ஆய்வு செய்யப்பட்ட திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம். திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) காவிரி ஆறு நிரந்தர நீராதாரமாகக் கருதப்பட்டு, இம்மாவட்டத்தின் அனைத்து நகராட்சிகள், 14 பேரூராட்சிகள் மற்றும் 13 ஊராட்சி ஒன்றியங்களும் பயனடையும் வகையில் 1985–86ஆம் ஆண்டில் ரூ. 100 கோடிக்கு குடிநீர்த் திட்ட தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. மேலும், இத்திட்டத்திற்குத் தேவையான குடிநீர் ஒகேனக்கல் அருகில் காவிரி ஆற்றிலிருந்து எடுக்கப்படும். பின்னர் 1,200 மி.மீ. விட்டமுள்ள இரும்புக் குழாய்கள் மூலமாக நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டவுடன் அங்கிருந்து, குழாய் மூலமாக அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து பர்கிமானக் குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படும்.

தற்போதைய விலைப்பட்டியலின்படி இத்திட்ட மதிப்பீட்டுத் தொகை சுமார் ரூ. 400 கோடியிலிருந்து ரூ. 450 கோடி ஆகலாம் எனக் கருதப் படுகிறது. மேலும், இக்குடிநீர்த் திட்டத்தினை இரண்டு பகுதிகளாக செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள திட்டமிடப்பட்டு உள்ளது.

53—

புதுச்சத்திரம் ஒன்றிய குடிநீர்ப் பிரச்சினை,

வினா எண். 4185—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியம் புதுச்சத்திரம் ஒன்றியங்களில் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்க மோகனூரிலிருந்து நாமக்கல் வழியாக சேந்தமங்கலம் வரை குடிநீர் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

54—

புரசைவாக்கம் திரு.வி.க. நகர பேருந்து நிலையம்.

வினா எண். 4555— திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புரசைவாக்கம் தொகுதியில் திரு.வி.க. நகரில் பேருந்து நிலையம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) புரசைவாக்கம் தொகுதியில் திரு.வி.க. நகரில் பேருந்து நிலையம் கட்டும் திட்டம் எதுவும் தற்பொழுது இல்லை.

(ஆ) எழாது.

55—

கடலாடி ஒன்றியக் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள்.

வினா எண் 4729— திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஒன்றியம், பெருமாள் தலைவனேந்தல், தந்தங்குடி வெள்ளைப்பட்டி, கன்னிகாபுரி, தேரங்குளம், காந்தி நகர் ஆகிய கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க கட்டாய நிலம் கையகப்படுத்த வேண்டியதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், நிலம் கையகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : கடலாடி ஒன்றியம் பெருமாள் தலைவனேந்தல், தந்தங்குடி வெள்ளைப்பட்டி, கன்னிகாபுரி தேரங்குளம், காந்தி நகர் ஆகிய கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் 6.2. கி.மீ. தூரத்திற்கு அமைக்க 74.4 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் கையகப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு தோராயமாக ரூ. 3.30 லெட்சம் செலவாகும். இது குறித்த செயற் குறிப்பு ஏதும் அரசிடம் தற்சமயம் இல்லை,

56 —

## மன்னிவாக்க ஊராட்சியில் குடிநீர்த் தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண். 4837— திரு. எம். தனபால் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மன்னிவாக்கம் ஊராட்சியில் குடிநீர்த் தேக்கத் தொட்டிகள் கட்ட ஒரு இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டிலாவது இப்பணியை மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மன்னிவாக்கம் ஊராட்சியில் குடிநீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் திட்டம் ஏதும் தற்போது ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

57—

## நத்தம் ஒன்றிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண். 5127— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் ஒன்றியத்தைச் சார்ந்த பெரிய மலையூர் வலசை, சின்னமலையூர் ஆகிய ஊர்களுக்கு அருகிலுள்ள அருவியை நீர் ஆதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைப்பதற்காக செய்யப்பட்ட ஆய்வுப் பணி முடிந்துவிட்டதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இந்திட்டப்பணி துவங்கும் ?

(இ) இதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?



விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆய்வுப்பணி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) : இவ்வினாக்களுக்கு இடமில்லை.

58—

## சக்கயநாயக்கனூர், கமலாபுரம், அழகன்பட்டி கிராமங்களுக்கு குடிநீர் வசதி.

வினா எண். 5324— திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலக்கோட்டை தொகுதி, ஐம்புதுரைக்கோட்டைக் கிராமம் சக்கயநாயக்கனூர், கமலாபுரம், அழகன்பட்டி ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்க ஓணான் ஊத்திலிருந்து பைப் லைன்போட்டு நீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் , எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) நிலக்கோட்டைத் தொகுதி, சக்கையநாயக்கனூர், அழகன்பட்டி கிராமங்களுக்கு முழு அளவு குடிநீர் வழங்கும் பொருட்டு, இக்கிராமங்கள் நடப்பு நிதியாண்டில் (1992–93) திட்டப் பட்டியலில் சேர்க்கப்பட்டு நீராதாரமாக ஓணான் ஊத்தை கருத்திற்கொண்டு, ஆய்வு நடத்தப்படும். கமலாபுரத்திற்கு நடப்பு நிதியாண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தொட்டியுடன் கூடிய ஒரு மின்னிறைப்பான் திட்டம் அமைக்க திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) நடப்பு நிதியாண்டிலேயே (1992–93)-ல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

59—

**வேதாரண்யம் மற்றும் தலைஞாயிறு பேரூராட்சி துப்புரவு பணியாளர் எண்ணிக்கையை உயர்த்துதல்.**

வினா எண். 5445—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேதாரண்யம் தொகுதி, வேதாரண்யம் மற்றும் தலைஞாயிறு பேரூராட்சிகளில் துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

வேதாரண்யம் பேரூராட்சியில் 44.12 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் உள்ளன. தற்போது மேற்படி பேரூராட்சியில் 15 துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். மேற்படி பேரூராட்சியின் ஆண்டு வருமானம் ரூ. 9,03,600. இதில் துப்புரவுப் பணியாளர்களுக்காக ரூ. 2,67,200 செலவழிக்கப்படுகிறது. மற்ற பணியாளர்களுக்காக ரூ. 2,63,100 செலவழிக்கப்படுகிறது. ஆக மொத்தம் பணியாளர்களுக்காக மட்டும் ரூ. 5,30,300 செலவிடப்படுகிறது. இப்பேரூராட்சியின் மொத்த வருமானத்தில் பணியாளர்கள் ஊதியம் செலவினம் போக பாக்கி ரூ 3,73,300 மட்டுமே உள்ளது. இந்தத் தொகையில் பேரூராட்சி சாலை மேம்பாடு, குடிநீர் பராமரிப்பு, வடிகால்கள் பராமரிப்பு, தெருவிளக்குகள், மின்கட்டணம் போன்ற அடிப்படை வசதிகளைக் கவனிக்க வேண்டியுள்ளது. ஆகவே, மேற்படி பேரூராட்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்ய இப்பேரூராட்சியின் நிதிவசதி திருப்திகரமாக இல்லை.

தலைஞாயிறு பேரூராட்சியின் ஆண்டு வருமானம் ரூ 4,21,900. இப்பேரூராட்சியில் மொத்தம் 28.21 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்படுகின்றன. இங்கு 7 துப்புரவுப் பணியாளர்கள் வேலை செய்கின்றார்கள். இவர்களுக்காக ஆண்டுதோறும் ரூ. 75,000 செலவிடப்படுகிறது. மற்ற பணியாளர்களுக்கு ரூ. 1,79,300 செலவிடப்படுகிறது. இப்பேரூராட்சியின் மொத்த வருமானத்தில் பணியாளர்கள் ஊதியத்திற்காக ரூ. 2,54,300 செலவு செய்தது போக பாக்கித் தொகை ரூ 1,67,600 மட்டுமே உள்ளது. இந்தத் தொகையில் இப்பேரூராட்சியின் சாலை வசதி, குடிநீர் பராமரிப்பு, வடிகால்கள் பராமரிப்பு, தெரு விளக்குகள் பராமரிப்பு போன்ற



அத்தியாவசிய அடிப்படை வசதிகளையும் கவனிக்க வேண்டியுள்ளது. இப்பேரூராட்சியின் நிதிநிலைமை அத்தியாவசிய அடிப்படை வசதிகளை கவனிக்க போதுமானதாக இல்லை.

இந்நிலையில் வேதாரண்யம் மற்றும் தலைஞாயிறு பேரூராட்சிகளின் துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

60—

**வையங்குடி கிராம காமராஜர் காலனிக்கு தார்ச்சாலை.**

வினா எண் 5475—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மங்களூர் தொகுதி, வையங்குடி கிராமம் காமராஜர் காலனிக்கு தார்ச்சாலை போட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை :—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

மங்களூர் தொகுதி, வையங்குடி கிராமம், காமராஜர் காலனிக்கு தார்ச்சாலை அமைக்க செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

61—

**மலையாண்டி பட்டினத்தில் மேல்நிலைத் தொட்டி அமைத்தல்.**

வினா எண் 5818—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோட்டூர் மலையாண்டி பட்டினத்தில் மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

[1993 பிப்ரவரி 8

விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மலையாண்டிப்பட்டினம் மற்றும் கோட்டூர் 8 மற்றும் 9 பகுதிகளுக்கு தனியாக மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்யும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) திட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டபின் பணிகள் துவங்கப்படும்.

62—

சாணார்பட்டி ஒன்றிய பகுதியில் கழிவுநீர் குட்டைகள் அமைத்தல்.

வினா எண் 5966—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியப் பகுதியில் 1989–90, 1990–91 ஆகிய ஆண்டுகளில் எங்கெங்கு கசிவு நீர் குட்டைகள் புதிதாக அமைக்க வேண்டும், எந்தெந்த கசிவுநீர் குட்டைகளை தூர் எடுத்து ஆழப்படுத்த வேண்டுமென்று மேற்படி ஒன்றியத்தினால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது ?

(ஆ) மேற்படி கோரிக்கைமீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) 1989–90 மற்றும் 1990–91 ஆகிய ஆண்டுகளில் புதிதாக கசிவு நீர்க் குட்டைகள் கட்டவும், தூர் எடுத்து ஆழப்படுத்தவும் சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தால் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கோரிக்கை ஏதும் விடுவிக்கப்படவில்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.



1993 பிப்ரவரி 8]

63—

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள்.

வினா எண் 6271—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் சரியாக கூட்டப்படுவதில்லை எனும் புகார்கள் அரசுக்கு வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும் என்று அரசு சட்டம் இயற்ற முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டிலுள்ள மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் கூட்டங்கள் ஒரு சில மாவட்டங்களில் மட்டும் விதிமுறைகளின்படி நடைபெற்றன. மற்ற மாவட்டங்களில் கூட்டங்கள் விதிமுறைகளின்படி நடத்த திட்டமிடப்பட்டு நிர்வாக அடிப்படையின் காரணமாகவும், குறைநிறைவெண் (Quorum) இல்லாமையாலும் தள்ளிவைக்கப்பட்டு பின்னர் நடைபெற்றன.

1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டப்பிரிவு 6 (1)-ன்படி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் மூன்று மாத இடைவெளிக்கு மிகாமல் தேவைக்கேற்ப அடிக்கடி கூட்டப்பட வேண்டும் என்ற விதிமுறை சட்டத்தில் முன்பே உள்ளது. மேலும் 16–3–1990 ஆம் நாளிட்ட அரசின் ஊரக வளர்ச்சித் துறையின் 16688/தி. 1/90–1, எண்ணிட்ட நேர்முகக் கடிதத்தில் மாவட்ட வளர்ச்சி மன்றக்கூட்டங்கள் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது நடத்தப்பட வேண்டும் என்று எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. இதனை தவறாது கடைபிடிக்குமாறு 10–6–1992 ஆம் நாளிட்ட எண் 7976/தி1/92 பொருந்திய அரசு நேர்முகக் கடிதத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மீண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

[1993 பிப்ரவரி 8

64—

<u>மரவப்பட்டி கிராம ஊரணி நிலம் ஆக்கிரமிப்பு.</u>

வினா எண் 6380—<u>திரு. சி. சுவாமிநாதன் :</u> மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில், மரவப்பட்டி கிராமத்திற்குட்பட்ட ஊரணிக்குச் சொந்தமான இடத்தை தனியார் ஆக்கிரமித்துக் கொண்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் ?

விடை—

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :</u>

**(அ) தனி நபர் ஆக்கிரமிப்பு இல்லை.**

(ஆ) வினா எழாது.

65—

<u>செந்தலைவயல் குடிநீர் பைப்பை பழுதுபார்த்தல்.</u>

வினா எண். 6628—<u>திரு. ஆர். சிங்காரம் :</u> மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், செந்தலைவயலுக்கு வரும் குடிதண்ணீர் பைப் லைனை பழுது பார்த்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :</u>

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், செந்தலைவயல் ஊராட்சி, செந்தலைவயல் குடியிருப்பின் மக்கள் தொகை 1,300 ஆகும். தற்போது குடிநீர் வழங்க குடிநீர்வடிகால் வாரியம் மூலமாக பைப்லைனில் ஏற்பட்ட பழுதுகள் சரிபார்க்கப்பட்டு 1,000 லிட்டர் கொள்ளளவு உள்ள தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



1993 பிப்ரவரி 8]

66—

<u>பெருமகளூர் காந்திநகர் தெருவிளக்கு விஸ்தரிப்பு.</u>

வினா எண். 6917—<u>திரு. ஆர். சிங்காரம் :</u> மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் காந்தி நகர் தெருவிலுள்ள தெருவிளக்கு 2 போஸ்ட்டு விஸ்தரிப்பு கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு,</u> உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆம். தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் பேரூராட்சி காந்திநகர் ஆதி திராவிடர் பகுதியில் தற்போது இரண்டு தெருவிளக்குகள் உள்ளன. மேலும் இரண்டு தெருவிளக்குகள் அமைத்திட பேரூராட்சிகளுக்கான தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

67—

<u>சோமநாதபட்டின கடற்கரையில் புதிய கடற்கரை விளக்கு.</u>

வினா எண். 6948—<u>திரு. ஆர். சிங்காரம் :</u> மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன் ஊராட்சி, சோமநாதபட்டின கடற்கரையில் புதிய கடற்கரை விளக்கு போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

<u>மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு,</u> உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம், திருவத்தேவன் ஊராட்சி, சோமநாதபட்டின கடற்கரையில் புதிய கடற்கரை விளக்கு மீன்வளத் துறையினரால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

[1993 பிப்ரவரி 8

68—

**கீழப்புனவாசல் வடக்குப் பகுதியில் மேல்நிலை நீர்த் தொட்டி அமைத்தல்.**

வினா எண். 7008—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், கீழப்புனவாசல் வடக்குப் பகுதியில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், கீழப்புனவாசல் வடக்குப் பகுதியில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

69—

**மதன்பட்டவூர் ஆதிதிராவிடர் காலனியில் போர்வெல் அமைத்தல்.**

வினா எண். 7010—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி, மதன்பட்டவூர் ஆதிதிராவிடர் தெருவிற்கு போர்வெல் அமைத்து ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி, மதன்பட்டவூர் ஆதிதிராவிடர் தெருவிற்கு போர்வெல் அமைத்து ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.



1993 பிப்ரவரி 8]

70—

**கீழக்காட்டில் மேல்நிலைத் தொட்டி அமைத்தல்.**

வினா எண். 7361—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மாவடுகுறிச்சி ஊராட்சி, கீழக்காட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், மாவடுகுறிச்சி ஊராட்சி கீழக்காட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

71—

**சாலிகிராமம் பாலாஜி நகர சாலைகளை பழுதுபார்த்தல**

வினா எண். 7462—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை நகரிலுள்ள சாலிகிராமம், பாலாஜி நகரிலுள்ள சாலைகள் பழுதடைந்து நடக்கக்கூட முடியாத நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) சாலைகளில் ஏற்படும் சிறு பழுதுகள் அவ்வப்போது சரளைக் கற்கள் போட்டு பராமரிப்புப் பணி செய்து பொது மக்கள் பயன்படுத்தும் நிலையில் உள்ளது.

(ஆ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் பாலாஜி நகரிலுள்ள சாலைகளில் பாதாள சாக்கடை அமைக்கும் பணி நிறைவேற்றப்பட்ட பின், சாலைகளை சீரமைக்கும் பணி சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும்.

[1993 பிப்ரவரி 8

72—

சாமியார்பேட்டை ஊராட்சியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 7503—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய சாமியார்பேட்டை ஊராட்சியில் குடிநீர் மேல்தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) சாமியார்பேட்டை ஊராட்சியில் மேலநிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

73—

சோழகன்பேட்டை மீனவர் காலனியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைத்தல்.

வினா எண். 7562—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை, ஊராட்சி ஒன்றியம், தாண்டவராயன் சோழகன்பேட்டை மீனவர் காலனி குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) தாண்டவராயன் சோழகன்பேட்டை மீனவர் காலனிக்கு மேல்நிலைத் தொட்டி அமைக்கும் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1993 பிப்ரவரி 8]

74—

வேளங்குராயன் பேட்டை கிராமத்திற்கு குடிநீர் வசதி

வினா எண் 7580—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதி, வேளங்குராயன்பேட்டை கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) புவனகிரி தொகுதி, வேளங்குராயன் பேட்டை கிராமத்திற்கு குடிநீர்த் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

75—

சம்பந்தம் காலனியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைத்தல்.

வினா எண் 7642—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், சம்பந்தம் காலனியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) சம்பந்தம் காலனிக்கு மேல்நிலைத் தொட்டி கட்டும் திட்டம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1993 பிப்ரவரி 8

76—

## சம்பந்தம் பி.சி.க்கு குடிநீர் வசதி

வினா எண் 7647—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், சம்பந்தம் பி.சி.க்கு குடி தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம்

(ஆ) இந்நிதியாண்டில் டானிடா திட்டத்தின் கீழ் தாரா கைப்பம்பு ஒன்று போடப்படும்

77—

## உத்தம சோழமங்கலத்திற்கு குடிநீர் வசதி

வினா எண் 7670—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) புவனகிரி தொகுதி, உத்தமசோழமங்கலம் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) 1993–94 ஆம் வருடத்தில் டானிடா திட்டத்தின் கீழ் தாரா கைப்பம்புகள் பொருத்தப்படும்.



1993 பிப்ரவரி 8]

78—

## 1991 ஆம் வருடம் பெய்த மழையால் சென்னை; மாநகராட்சிக்கு இழப்பு

வினா எண் 8406—திரு டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1991 நவம்பர் மாதம் பெய்த மழையினால் சென்னை நகராட்சிக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு ?

விடை—

மண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெய்த மழையினால் சென்னை மாநகராட்சிக்கு ஏற்பட்ட இழப்பு பின்வருமாறு :—

| | ரூபாய் கோடிகளில் |
|---|---|
| 1. சாலைகள் பழுது பார்த்தல் .. | 40.00 |
| 2. தெரு விளக்குகள் பழுது பார்க்கவும் புதுப்பிக்கவும் | 3.00 |
| 3. மழை நீர், வடிகால், கால்வாய்கள் பழுது பார்க்கவும் தேங்கிய நீரை அகற்றவும் .. .. | 5.00 |
| 4. மோட்டார் வாகனங்கள் மற்றும் இதர கருவிகள் பழுது பார்ப்பதற்காக .. .. .. | 3.00 |
| 5 மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு பொட்டலங்கள் வழங்கவும் மற்றும் மீட்பு பணிக்காகவும் .. .. .. .. | 0.25 |
| மொத்தம் .. | 51.25 |

79 —

## பவானி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா எண். 8566 —செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டுப்பாளையம் தொகுதி, மூடுதுறை, சின்னக் கள்ளிப்பட்டி, இரும்பறை, இலுப்பநத்தம் ஆகிய பஞ்சாயத்துக்களில் உள்ள கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் பவானி ஆற்றிலிருந்து குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

திருப்பூர் குடிநீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டத்தை ஆதாரமாகக் கொண்டு 412 வழியோர குடியிருப்புகட்கு குடிநீர் வசதி அமைத்துத் தர ஓர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேட்டுப்பாளையம், மூடுதுறை, சின்னக்கள்ளிப்பட்டி, இரும்பாறை, இலுப்பநத்தம் ஆகிய பஞ்சாயத்துக்கள் பயன்பெறும். இத்திட்டத்திற்கான விவர மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த பின் களப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

80 —

## கருக்கை காலனிக்கு பாதை வசதி.

வினா எண். 9887 —திரு. ஆர். தங்கராசு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

ஆண்டிமடம் தொகுதியில் கருக்கை காலனிக்கு புதியதாக பாதை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?





விடை —

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆண்டிமடம் தொகுதியில் கருக்கை காலனிக்கு ஏற்கெனவே கிராவல் சாலை அமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. எனவே புதியதாக பாதை அமைக்கும் செயற்குறிப்பு எழவில்லை.

81 —

## வேர்கிளம்பி பேரூராட்சி குடிநீர்த் திட்டங்கள்.

வினா எண் 9999—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், வேர்கிளம்பி பேரூராட்சியில் உள்ள குடிநீர்த் திட்டங்களில் தற்போது செயற்படும் திட்டங்கள் எத்தனை ?

(ஆ) செயல்படாமல் இருக்கும் திட்டங்கள் எத்தனை ?

(இ) செயல்படாமல் இருக்கும் குடிநீர்த் திட்டங்கள் மீண்டும் செயல்பட அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) வேர்கிளம்பி பேரூராட்சியில் கல்லங்கு குடிநீர்த் திட்டம், முண்டவிளை குடிநீர்த் திட்டம், பூவங்கோடு குடிநீர்த் திட்டம், மணக்காவிளை குடிநீர்த் திட்டம் ஆகிய நான்கு குடிநீர்த் திட்டங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன.

(ஆ) வேர்கிளம்பி பேரூராட்சியில் சித்திரங்கோடு குடிநீர்த் திட்டம் பழுதுபட்டு செயல்படாமல் உள்ளது.

(இ) இது 1975–76-ல் ஊராட்சி மூலம் நிறைவேற்றப் பட்ட திட்டம். கோடைக் காலங்களில் கிணற்றில் நீராதாரம் வற்றி விடுவதால் இத்திட்டம் பழுதடைந்து விட்டது.

82—

எல்லா கிராமங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்

வினா எண் 10453—திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பஞ்சாயத்தில் அடங்கியுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் தொலைக்காட்சிப் பெட்டி அளிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இல்லை

(ஆ) இருப்பினும் நிதி நிலை வசதியுள்ள ஊராட்சிகள் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலைப் பெற்று தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கிக் கொள்ளலாம்.

நிதி நிலைக்கேற்ப ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு தொலைக் காட்சிப் பெட்டியை அளிக்கவேண்டுமென்பது அரசின் கொள்கையாக உள்ளது.

ஊராட்சியில் அடங்கிய ஒவ்வொரு கிராமத்திற்கும் தொலைக்காட்சிப் பெட்டி அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

83—

மதன்பட்டவூரில் பகுதி நேர அங்காடி.

வினா எண். 7370—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மதன் பட்டவூரில் ஒரு பகுதி நேர அங்காடி தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

ஒட்டக்காடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் 3 கூட்டுறவு கிராம அங்காடிகள் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த அங்காடிகளில் 1628 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டதில் ஒட்டங்காடு அங்காடியில் மட்டும் 902 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளது. மதன்பட்டவூர் குடும்ப அட்டைதாரர்கள் ஒட்டங்காடு அங்காடியில் அத்தியாவசியப் பண்டங்கள் வாங்குகின்றார்கள். நல்லமான் புஞ்சை மற்றும் ஊமச்சி புஞ்சை ஆகிய 3 பகுதி கார்டுதாரர்களையும் சேர்த்தால் 182 குடும்ப அட்டைதாரர்கள் பயன் பெறுவார்கள். மேலும் மதன்பட்டவூர்க்கும் ஒட்டங்காடு கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் 2 கிலோ மீட்டர் தான். எனவே, மதன் பட்டவூரில் பகுதிநேரக் கடை திறக்க வாய்ப்பில்லை

84—

நுகர்வோர் நீதிமன்றத்தின் பழைய உறுப்பினர்களை நீக்கி புதிய உறுப்பினர்களை நியமித்தல்.

வினா எண். 11394—திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நுகர்வோர் நீதிமன்றத்தின் தற்போதுள்ள உறுப்பினர்களை நீக்கம் செய்து புதிய உறுப்பினர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

மைய அரசின் 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 10 (2)-இன்படி மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புகளின் ( District consumer Disputes Redressal Forum ) உறுப்பினர்கள் ஐந்து வருட காலமோ அல்லது 65 வயது முடிவடையும் வரையிலோ பதவி வகிக்கத் தகுதி உள்ளவர்கள். 1988 ஆம் ஆண்டு தமிழ் நாடு நுகர்வோர் பாதுகாப்பு விதிகளின் விதி 7 (4)- இன்படி, மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையத்தின் ( State Consumer Dispute Redressal Commission ) உறுப்

பினர்கள் ஐந்து வருட காலமோ அல்லது 75 வயது முடிவடையும் வரையிலோ பதவி வகிக்கத்தகுதி உள்ளவர்கள். தகுந்த காரணங்கள் இல்லாமல் இந்த நுகர்வோர் நீதிமன்றங்களின் உறுப்பினர்களை நீக்கம் செய்து விட்டு புதிய உறுப்பினர்களை நியமனம் செய்வது சட்டப்படி இயலாது.

85—

**தென்னாற்காடு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தோர் விவரம்.**

வினா எண் 10650—திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) 1991–92 ஆம் நிதியாண்டில் எவ்வளவு பேர் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் வேலை பெற்றுள்ளார்கள் ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) 1. 1991–92 ஆம் நிதி ஆண்டில், 56,673 பதிவு செய்துள்ளோம்.

2. 31–3–1992 அன்று வேலை வாய்ப்பு அலுவலக செல்லுபடிப் பதிவேட்டில் காத்திருப்போர் எண்ணிக்கை 2,47,165.

(ஆ) தென்னாற்காடு மாவட்டத்தில் 1991–92 ஆம் நிதியாண்டில் வேலை வாய்ப்பகம் மூலம் வேலை பெற்றவர்களின் எண்ணிக்கை 3,686.

86—

**தேயிலைத் தோட்டப் பெண் பணியாளர்களின் பணி நேரத்தை குறிப்பிட்ட சில நாட்களில் குறைத்தல்.**

வினா எண். 11576—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தேயிலைத் தோட்டத்தில் பணி புரியும் பெண்களுக்கு சில குறிப்பிட்ட நாட்களில் ( Mensturation Period ) 8 மணி நேரம் வேலை பளுவை 6 மணி நேரமாகக் குறைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?





விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

தேயிலைத் தோட்டத்தில் பணி புரியும் பெண்களுக்கு சில குறிப்பிட்ட நாட்களில் ( Mens rotion Period ) 8 மணி நேரம் வேலை பளுவை 6 மணி நேரமாக குறைக்க அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

87—

**இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு விவசாயப்பொருட்கள் அளித்தல்.**

வினா எண். 8111—திரு. மா. சா. மா. இராமச்சந்திரன் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு விதை, பூச்சி மருந்து 1991–92 ஆம் ஆண்டுகளுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) விவசாயிகளுக்கு எத்தனை ஸ்பிரேயர் இனாமாகக் கொடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை கீழே வைக்கப்பட்டு உள்ளது.

[1993 பிப்ரவரி 8

## விவர அறிக்கை.

| திட்டம் / பயிர். | விதை வழங்கிய விவரம் 1991–92. | | | |
|---|---|---|---|---|
| | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்மாவட்டம். | | இராமநாதபுரம் மாவட்டம். | |
| | விதை அளவு (மெ.டன்) | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | விதை அளவு (மெ.டன்) | தொகை (ரூபாய் இலட்சத்தில்). |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. நெல் விதை : | | | | |
| ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டம் | 535.0 | 5.35 | 451.3 | 4.51 |
| ஆதிதிராவிடர் சிறப்புத் திட்டம் | 23.0 | 0.58 | 5.8 | 0.14 |
| 2. பயிறு விதை : | | | | |
| சிறப்பு மற்றும் பிற திட்டங்கள் .. | 29.590 | 1.84 | 6.6 | 0.53 |
| 3. பருத்தி விதை .. | .. | .. | 0.236 | 0.012 |
| 4. சிறு தானியங்கள் | .. | .. | 7.3 | 0.212 |
| 5. எண்ணெய் வித்து சிறப்புத் திட்டம் .. | .. | .. | 13.9 | 0.932 |



1993 பிப்ரவரி 8]

## பூச்சி மருந்து வழங்கிய விவரம் 1991–92.

### இராமநாதபுரம் மாவட்டம்.

| திட்டம் | மானியத் தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) | (2) |
| 1. ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டம் .. | 0.84 |
| 2. தேசிய பயிறு உற்பத்தித் திட்டம் .. .. | 0.12 |
| 3 சிறப்பு பகுதி திட்டம் (அனைத்துப் பயிர்) .. | 0.28 |
| 4. எண்ணெய் வித்து சிறப்புத் திட்டம் .. .. | 0.05 |
| 5. வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டம் (சிறு தானியம், பயிறு, சூரியகாந்தி) .. .. | 0.52 |
| 6. எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டம் (நிலக் கடலை, சூரியகாந்தி) .. .. .. | 0.70 |

## பூச்சி மருந்து வழங்கிய விவரம் 1991–92.

### பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்.

| திட்டம். | மானியத் தொகை (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| (1) | (2) |
| 1. ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டம் .. | 1.72 |
| 2. தேசிய பயிறு அபிவிருத்தித் திட்டம் .. .. | 0.13 |
| 3. எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டம் .. .. | 0.93 |
| 4. ஆதி திராவிடர் நலத் திட்டம் .. .. .. | 1,26 |

5. விவசாயிகளுக்கு எத்தனை ஸ்பிரேயர்கள் இனாமாகக் கொடுக்கப்பட்டது ?

[1993 பிப்ரவரி 8

1991–92 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு இனாமாக ஸ்பிரேயர்கள் கொடுக்கப்படவில்லை. ஆனால், மானிய விலையில் அளிக்கப்பட்டுள்ளது. அது பற்றிய விவரங்கள் :

| | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம். | இராமநாதபுரம் மாவட்டம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **கைத்தெளிப்பான் :** | | |
| 1. ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டம் .. .. .. | 1,612 | 1,622 |
| 2. தேசிய பயிறு அபிவிருத்தித் திட்டம் .. | 188 | 78 |
| 3. எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டம் ... | 243 | 606 |

88—

திருதுப்பத்ர் நகராட்சிப் பகுதியில் வீட்டு வசதி வாரியம் மூலம் அடுக்குமாடி வீடுகள்.

வினா எண் 5896— திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் நகரப் பகுதியில் வீட்டு வசதி வாரியம் மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரில் அடுக்குமாடி வீடுகள் கட்டும் திட்டம் ஏதும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இல்லை.



1993 பிப்ரவரி 8]

89—

கோவையிலுள்ள இந்திய உணவுக் கழகத்திற்கு சொந்தமான நிலத்திற்கு குடிசைமாற்று வீடுகள்.

வினா எண் 8911—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை கிழக்குத் தொகுதியில் இந்திய உணவுக் கழகத்திற்குச் சொந்தமான 4.18 ஏக்கர் நிலத்தை 'ஹோசிமின் நகர்' என்ற பெயரில் வீடற்ற மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) அதற்கு பதிலாக எப். சி. ஐ.-க்கு புதுக்கோட்டையிலோ அல்லது திருச்சியிலோ 4.18 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை அளிக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) கோவை கிழக்குத் தொகுதியில் உள்ள இந்திய உணவுக் கழகத்திற்குச் சொந்தமான நிலத்தில் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

90—

கள்ளூரிக் காட்டில் பாலர் பள்ளி.

வினா எண் 7230—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காளகம் ஊராட்சி அஞ்சூரணிக் காட்டில் கள்ளூரிக் காட்டில் ஒரு பாலர் பள்ளி தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

[1993 பிப்ரவரி 8

விடை—

மாண்புமிகு திருமதி ஆர். இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

ஒரு கிராமத்தில் குழந்தைகள் சத்துணவு மையம் துவக்க வேண்டுமெனில் அங்கு குறைந்தபட்சம் 60 குழந்தைகள் இருக்க வேண்டும். ஆனால் மேற்கண்ட கிராமத்தில் 2 முதல் 4 வயது உள்ள குழந்தைகள் 15 பேரே இருப்பதால் அங்கு பாலர் பள்ளி அமைக்கும் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

91—

மாவட்ட ஆட்சித் தலைவரே சத்துணவு மையங்களில் ஏற்படும் காலியிடங்களை நிரப்புதல்.

வினா எண் 10663—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்துணவு மையங்களில் ஏற்படும் காலியிடங்களை நிரப்பும் அதிகாரம் மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திருமதி ஆர். இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) சத்துணவு மையங்களில் ஏற்படும் காலியிடங்களை நிரப்பும் அதிகாரத்தை மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு தற்சமயம் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

92—

பள்ளத்தூர் ஆதி திராவிடர் நலத்துறை விடுதிக்குச் சொந்தக் கட்டிடம்.

வினா எண் 1483—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :



1993 பிப்ரவரி 8]

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் ஆதி திராவிடர் நலத்துறை விடுதிக்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் ஆதி திராவிடர் நலத்துறை விடுதிக்கு சொந்தக் கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. இடம் தேர்வு செய்யப்பட்ட பின்னர் வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிதிநிலைக்கேற்ப விடுதிக்குக் கட்டிடம் கட்ட வரும் ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்படும்.

93—

தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிட நலக் கல்லூரி விடுதிகள்.

வினா எண் 2230—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் நலக்கல்லூரி விடுதிகள் எத்தனை உள்ளன ?

(ஆ) ஒவ்வொன்றிலும் மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் கல்லூரி மாணவ, மாணவியர்கட்கு 63 விடுதிகள் உள்ளன.

(ஆ) ஒவ்வொரு விடுதியிலும் மாணவ-மாணவியர் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது—

| வரிசை எண். | விடுதியின் பெயர். | மாணவ/மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | **பெரியார் மாவட்டம் :** | |
| 1. | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, ஈரோடு | 111 |
| | **செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் :** | |
| 2. | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, பொன்னேரி | 61 |
| 3. | கல்லூரிக் கல்வி மாணவர் விடுதி, செங்கல்பட்டு .. .. | 50 |
| 4. | அரசுக் கல்லூரி மகளிர் விடுதி, காஞ்சிபுரம் .. | 30 |
| 5. | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, திருத்தணி... | 53 |
| | **புதுக்கோட்டை மாவட்டம் :** | |
| 6. | அரசுக் கல்லூரி மாணவியர் விடுதி, புதுக்கோட்டை .. .. .. | 103 |
| 7. | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, புதுக்கோட்டை .. .. .. | 200 |
| | **திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் :** | |
| 8. | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, பழனி .. | 66 |
| | **இராமநாதபுரம் மாவட்டம் :** | |
| 9. | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, இராமநாதபுரம் .. .. .. | 78 |
| | **காமராசர் மாவட்டம் :** | |
| 10. | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, அருப்புக்கோட்டை–திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் .. .. | 66 |
| 11. | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, பாளயங்கோட்டை ... ... ... | 68 |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| | **திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம்—தொடர்ச்சி.** | |
| 12. | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, நாகர்கோவில் .. .. .. | 107 |
| 13. | அரசு மகளிர் விடுதி, நாகர்கோவில் .. | 39 |
| | **சேலம் மாவட்டம் :** | |
| 14 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, சேலம் .. | 212 |
| 15. | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, நாமக்கல்.. | 161 |
| 16 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, வடசென்னிமலை .. .. .. | 51 |
| 17. | அரசுக் கல்லூரி மகளிர் விடுதி, சேலம் .. | 48 |
| 18 | அரசுக் கல்லூரி மகளிர் விடுதி, நாமக்கல் .. | 47 |
| 19 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, ராசிபுரம் | 51 |
| | **தர்மபுரி மாவட்டம் :** | |
| 20 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, தர்மபுரி .. | 318 |
| 21 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி .. .. .. | 213 |
| | **கோவை மாவட்டம் :** | |
| 22 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, கோவை .. | 175 |
| 23. | அரசுக் கல்லூரி மகளிர் விடுதி, கோவை .. | 48 |
| 24 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, திருப்பூர் | 60 |
| | **நீலகிரி மாவட்டம் :** | |
| 25 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, உதகமண்டலம் .. .. .. | 55 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | **வ. உ. சிதம்பரனார் மாவட்டம் :** | |
| 26 | அரசுக்கல்லூரி மாணவர் விடுதி, தூத்துக்குடி | 45 |
| 27 | அரசுக்கல்லூரி மகளிர் விடுதி, தூத்துக்குடி.. | 50 |
| | **திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் :** | |
| 28 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, செய்யார்.. | 49 |
| | **வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் :** | |
| 29 | அரசுக்கல்லூரி மாணவர் விடுதி, வேலூர் .. | 64 |
| 30 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, வாணியம்பாடி .. .. .. | 64 |
| 31 | அரசுக் கல்லூரி மகளிர் விடுதி, வாலாஜா . | 62 |
| | **சென்னை மாவட்டம் :** | |
| 32 | எம். சி. ராஜா மாணவர் விடுதி, சென்னை | 400 |
| 33 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, கோடம்பாக்கம் . . . | 337 |
| 34 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, பெரம்பூர். | 300 |
| 35 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, நந்தனம் .. | 83 |
| 36 | அரசு எம். சி. இராஜா மாணவர் விடுதி, (இணைப்பு), சென்னை . .. | 50 |
| 37 | அரசுக் கல்லூரி மகளிர் விடுதி, இராயபுரம். } இரண்டும் ஒன்றாகச் செயல்படுகிறது | |
| 38 | அரசுக் கல்லூரி மகளிர் விடுதி, திருவல்லிக்கேணி } | 58 |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| | **மதுரை மாவட்டம் :** | |
| 39 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, மதுரை . | 70 |
| 40 | அரசுக் கல்லூரி மகளிர் விடுதி, சொக்கிக்குளம் . . . | 46 |
| | **திருச்சி மாவட்டம் :** | |
| 41 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, திருச்சி . | 209 |
| 42 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, அரியலூர் . | 145 |
| 43 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, கரூர் . | 95 |
| 44 | அரசுக்கல்லூரி மகளிர் விடுதி, திருச்சி .. | 29 |
| | **தென்னாற்காடு மாவட்டம் :** | |
| 45 | அரசுக் கல்லூரி மகளிர் விடுதி, கடலூர் .. | 28 |
| 46 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, திண்டிவனம் | 60 |
| 47 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, கடலூர் .. | 100 |
| 48 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, விருத்தாசலம் .. .. .. | 50 |
| 49 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, விழுப்புரம்.. | 115 |
| 50 | அரசுக் கல்லூரி மகளிர் விடுதி, சிதம்பரம் .. | 34 |
| | **தஞ்சாவூர் மாவட்டம் :** | |
| 51 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர்.. | 165 |
| 52 | அரசுக் கல்லூரி மாணவியர் விடுதி, தஞ்சாவூர் | 120 |
| 53 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, கும்பகோணம் | 75 |
| 54 | அரசுக் கல்லூரி மாணவியர் விடுதி, கும்பகோணம் .. .. .. | 120 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| **நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் :** | | |
| 55 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, திருவாரூர் | 160 |
| 56 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, மயிலாடுதுறை .. .. .. | 120 |
| 57 | அரசுக் கல்லூரி மகளிர் விடுதி, மயிலாடுதுறை .. .. .. | 120 |
| 58 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, மன்னார்குடி | 80 |

1992-93 ஆம் ஆண்டில் திறக்க ஆணையிடப்பட்டுள்ள ஐந்து கல்லூரி விடுதிகள் குறித்த விவரம் :

| | | |
|---|---|---|
| **சென்னை மாவட்டம் :** | | |
| 59 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, தென் சென்னை .. .. .. | 50 |
| **தென்னாற்காடு மாவட்டம் :** | | |
| 60 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, சி. முட்லூர் .. | 50 |
| **திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் :** | | |
| 61 | அரசுக் கல்லூரி மாணவர் விடுதி, திருவண்ணாமலை .. .. .. | 50 |
| **திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் :** | | |
| 62 | அரசுக் கல்லூரி மாணவியர் விடுதி, பாளையங்கோட்டை .. .. .. | 50 |
| **காமராசர் மாவட்டம் :** | | |
| 63 | அரசுக் கல்லூரி மாணவியர் விடுதி, இராஜாபாளையம் .. .. .. | 50 |





94—

## நடுவிக்குறிச்சிக்கு ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் தங்கும் விடுதி

வினா எண் 7133—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நடுவிக்குறிச்சியில் ஒரு ஆதிதிராவிடர்கள் மாணவ, மாணவிகளின் தங்கும் விடுதி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நடுவிக்குறிச்சியில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி ஒன்று அமைக்க 1992-93 ஆம் ஆண்டில் இரண்டாம் பாகம் திட்டத்தின் கீழ் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

95—

## கல்லூர்ணிக்காட்டில் ஆதிதிராவிடர் நலத் துறை மாணவர் விடுதி

வினா எண் 7211—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் கல்லூர்ணிகாட்டில் ஆதி திராவிடர் நலத்துறை மாணவர்கள் தங்கு விடுதி ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்ம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், கல்லூர்ணிக்காட்டில் ஆதி திராவிடர் நலத்துறை மாணவர் விடுதி அமைக்க தற்சமயம் அரசிடம் செயற்குறிப்பு இல்லை .

[1993 பிப்ரவரி 8

96—

பிற்பட்டோர் நல மாணவர் விடுதி திறக்க நடவடிக்கை,

வினா எண் 4057—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் தொகுதியில் ஆலாம்பாளையம் சென்னம்பட்டி, மூங்கில்பட்டி, அத்தாணி, சிங்கம்பேட்டை, நெருஞ்சிப்பேட்டை போன்ற இடங்களில் பிற்பட்டோர் நல மாணவர் மற்றும் மாணவியர் இல்லங்கள் திறக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அந்தியூர் தொகுதி, அத்தாணியில் ஏற்கனவே ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி இயங்கி வருகிறது இதர இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ மாணவியர் விடுதிகள் தொடங்க வாய்ப்புகள் இல்லை.

97 —

இனுங்கூரில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இலவச விடுதி.

வினா எண் 6138—திரு. அ. பாப்பாசுந்தரம் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குளித்தலை தொகுதி இனுங்கூரில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இலவச மாணவர் விடுதி அமைக்கும் செயற்குறி பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கும் ?

—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் இல்லை.



1993 பிப்ரவரி 8]

98—

கணியம்பாடியில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதி.

வினா எண் 6153—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கணியம்பாடியில் பிற்படுத்தப்பட்டோர் , மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ மாணவியர் விடுதிகள் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு டி ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

99—

சங்கரன்கொல்லையில் பின்தங்கிய மக்களுக்கு குடிமனைப் பட்டா

வினா எண் 7410—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குருவிக்கரம்பை ஊராட்சி சங்கரன் கொல்லையில் நாடியம் மடத்துக்கு சொந்தமான இடத்தில் குடியிருக்கும் மிகவும் பின் தங்கிய மக்களுக்கு குடிமனை பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், சாந்தாம்பேட்டை கிராமம், சங்கரன்கொல்லையில் உள்ள மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு பு.எண் 2·1—ன்

உள்ள குளம் புறம்போக்கை நத்தமாக வகை மாற்றம் செய்து குடிமனைப் பட்டா வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார். அந்த இடம் நாடியம் மடத்திற்கு தொடர்புடையதல்ல.

100—

## மருதிகள் சீரமைப்பு பணிக்கு நிதி ஒதுக்கீடு.

**வினா எண். 9931—திருமதி ஜீனத் ஷர்புதீன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மருதிகள் சீரமைப்புப் பணிக்கென்று அதிகபட்சம் மற்றும் குறைந்த பட்சம் எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :**

1990–91 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள மருதிகளின் புனரமைப்புப் பணிக்கென்று அதிகபட்சமாக ரூ 15,000மும் குறைந்த பட்சமாக ரூ 10,000–ம் வழங்கப்படுகிறது. இச் செலவினங்களுக்கு ஆண்டுதோறும் அரசு மொத்தம் ரூ. 3 இலட்சம் மானியமாக ஒதுக்கீடு செய்கிறது.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் (குறுக்கீடு) அறிவிப்பு.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னுடைய அறையில் நீங்கள் கேட்டது பற்றிக் குறிப்பிட இப்போது எழுந்திருப்பது முறையல்ல உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.



அறையில் நீங்கள் வந்து கேட்டபோது எழுப்பாதீர்கள் என்றேன். இப்போது எழுப்பினால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) உட்கார வேண்டும் நான் உங்களுக்கு இன்றைக்கு அறையிலேயே இவ்வளவு தெரிவிப்பதற்கு அவசியமேயில்லை பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று இந்த நேரத்திலே ஏதாவது புரோசீடிங்ஸ்லே நீங்கள் கிளப்புவதாக இருந்தால் கிளப்பலாம். நீங்கள் என்னிடத்திலே வந்து சொல்லியிருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பதில் சொல்லி இருக்கிறேன். நீங்கள் எதுவுமே எழுதித் தராமல் (குறுக்கீடு) இந்த நேரத்திலே எழுந்திருப்பது முறையில்லை. முறையில்லாமல் நடக்க வேண்டாம் (குறுக்கீடு) உட்கார வேண்டும் விதிகளை மிகச் சரியாக பின்பற்ற வேண்டும் என்று உங்களுக்கு அறிவுறுத்திக் கொள்கிறேன். உட்காருங்கள்.

பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாற்றுத் தலைவர்கள் பட்டியல். (குறுக்கீடுகள்) நான் நின்று கொண்டிருக்கிறேன். சட்டமன்றப் பேரவை விதி 9 உள் விதி 1–ன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை (குறுக்கீடுகள்) தண்டாயுதபாணி. உட்காருங்கள். உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன் கவன ஈர்ப்புத் தீர்மானம் 55–ன் கீழ் கொடுத்திருக்கிறீர்கள் அது பற்றிய அறிவிப்பு உங்களுக்குத் தரப்படும். உட்காருங்கள் (குறுக்கீடு) கேளுங்கள். விதி 55–ல் கொடுத்திருக்கிறீர்கள், விதி 55–லே கொடுத்திருக்கிற கவன ஈர்ப்புக்கு 'ஜீரோ அவர்' ல் என்னிடத்தில் வந்து பதில் கேட்டால் என்ன அர்த்தம் உங்களுக்கு எழுத்து மூலம் தருகிறேன் உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். கேள்வி நேரம் முடிந்தவுடன் குறிப்பிட்ட சில பிரச்சினைகளை எழுப்புவதற்கு சில வரைமுறைகள் வைத்திருக்கிறோம். அந்த வரைமுறைகளுக்குட்பட்டு நீங்கள் எழுப்ப வேண்டும். (குறுக்கீடுகள்) கேளுங்கள். அதுதான் உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் அறையிலே கேட்டீர்கள். அறையிலே உங்களுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) ஒரு பிரச்சினையை நீங்கள் எழுப்ப வேண்டுமென்று சொன்னால் என்னுடைய இசைவை அறையிலே பெற்றதற்குப் பிறகு இங்கே வந்து எழுப்பலாம். அறையிலே நான் இசைவு அளிக்காத நிலையில் நீங்கள் எழுந்திருப்பது சரியில்லை. (குறுக்கீடுகள்) தயவு செய்து உட்காருங்கள். இந்த முறை சரியல்ல. (குறுக்கீடுகள்) இல்லை, குமாரதாஸ் அவர்களுக்குச் சொன்னதுதான் உங்களுக்கும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் நிற்கிறேன். நீங்கள் உட்காருங்கள். குமாரதாஸுக்கு ஒரு முடிவு உங்களுக்கு ஒரு முடிவல்ல. குமாரதாஸுக்குச் சொன்னதுதான் உங்களுக்கும் பொருந்தும். (குறுக்கீடுகள்) சரியல்ல. அவையினுடைய நடவடிக்கைகளுக்கு இப்படிக் குந்தகம் ஏற்படுத்தக் கூடாது. (குறுக்கீடு).

முற்பகல் 11–10

நான் நின்றால் நீங்கள் உட்கார வேண்டும் என்பது விதி. (குறுக்கீடு) கேளுங்கள். அந்த விதியைப் பின்பற்றவில்லையென்றால் நல்லது அல்ல. (குறுக்கீடு) தயவு செய்து உட்காருங்கள். தண்டாயுதபாணி உட்கார வேண்டும். (குறுக்கீடு) தயவு செய்து உட்கார வேண்டும். (குறுக்கீடு) கேளுங்கள். அப்படி என்றால் நான் அறையிலே உங்களிடத்திலே தெரிவித்திருக்க வேண்டிய தேவையில்லையே. (குறுக்கீடு) அறையிலே நீங்கள் சொன்னதற்கும் அவையிலே நடக்கிறதற்கும் வித்தியாசமே இல்லாமல் போகிறதே. (குறுக்கீடு) தயவுசெய்து கேளுங்கள். குமாரதாஸ் நான் இப்போது சொன்ன உடன் எப்படி அமர்ந்தாரோ அதுபோல் நீங்களும் அமர்வதுதான் முறை (மேசையைத் தட்டும் ஒலி) தயவுசெய்து உட்காருங்கள் நான் நிற்கிறேன். நான் நிற்கிறபோது நீங்கள் நின்றுகொண்டே இருப்பது சரியல்ல. (குறுக்கீடு) இப்பொழுது நான் பதிலும் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். 55–ன கீழ் அறிவிப்புக் கொடுத்த எந்த அறிவிப்பையும் இந்த அவை முடிகிற நாள் வரையிலேயும் எடுத்துக் கொள்ளலாம் (குறுக்கீடு) கேளுங்கள். அவ்வப்போது 55–லே கொடுப்பதை எல்லாம் எழுப்புவதாக இருந்தால் திரு.சிங்காரமே என்னிடத்தில் 35 கவன ஈர்ப்புத் தீர்மானம் 55–ன் கீழ் கொடுத்திருக்கிறார். அவர் 35 தடவை எழுந்து நிற்க வேண்டி வரும் (குறுக்கீடு) 55–ன் கீழ் கொடுத்தது பற்றி இப்போது கேட்பது முறையல்ல உட்காருங்கள் (குறுக்கீடு) அவைக்கு இடையூறு செய்யாதீர்கள் (குறுக்கீடு) விதி 87 கேளுங்கள் உள்விதி 6 "பேரவையில் பேரவைத் தலைவர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது எழுந்து நிற்கக் கூடாது" இது விதி. இந்த விதியை நீங்கள் பின்பற்ற வேண்டுமென்றால் பின்பற்றுங்கள் இந்த விதி நாமாக வைத்திருக்கிற விதி. (குறுக்கீடு) அமைச்சர் தயவு செய்து உட்காருங்கள் நான் பேரவைக்கு ஓர் அறிவிப்பை வெளியிட எழுந்து நிற்கிறேன் (குறுக்கீடு) அந்த விதியை நீங்கள் பின்பற்ற வேண்டும். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். விதியை நீங்கள் பின்பற்ற முடியாது என்று சொல்லிவிட்டால் நானும் வேறு விதியைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். சுவாமிநாதன் உட்காருங்கள். தண்டாயுதபாணி உட்காருங்கள். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்!

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு உறுப்பினர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நீங்கள் 9.30 மணி என்று இருந்ததை 10 மணி ஆக ஆக்கியிருக்கிறீர்கள் 1.30 மணி என்று இருந்ததை 2.00 மணி ஆக ஆக்கியிருக்கிறீர்கள் எனவே, இப்படிக் காலதாமதம் ஏற்பட்டால், 3 மணிக்கு, 4 மணிக்குப் போய்,



அப்புறம் மருத்துவமனைக்கு வருவார்கள் என்கிற பிரச்சினை எல்லாம் ஏற்படும் (மேசையைத் தட்டும் ஒலி) தயவு செய்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானம் விதி 55–ன் கீழ் கொடுத்திருக்கிறீர்கள். விதி 55(3)வது விதியைப் பாருங்கள்.

> "Such notice shall be taken up within 7 days from the date of admission of such notice."

கேளுங்கள். அதை அவையில் எடுத்துக் கொள்வதற்கே admission கொடுத்ததற்குப் பிறகு 7 நாட்களுக்குள் எடுக்கலாம் என்று இருக்கிறது. (குறுக்கீடு) பேரவைத் தலைவர், நான் நிற்கிறபோது நீங்கள் நிற்கக் கூடாது என்று இன்னொரு விதி இருக்கிறது. (குறுக்கீடு) இது முறையல்ல. நான் வேறு விதமாக நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். தயவு செய்து உட்காருங்கள்.

## 3. அறிவிப்பு.

## மாற்றுத்தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாற்றுத் தலைவர்கள் பட்டியல். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9. உள்விதி 1—ன்கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் 5-வது. கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

திரு. ம. சின்னசாமி.

திரு. க. அர்ச்சுனன்

திரு. கி. தருமலிங்கம்.

திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஜி. பழனிசாமி.

திரு. செ. கு தமிழ்அரசன்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள் குறித்து —தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : (குறுக்கீடு) அடுத்து தண்டாயுதபாணி தயவு செய்து உட்காருங்கள். நீங்கள் 55—வது விதியின் கீழ் கொடுத்திருக்கிறீர்கள். 55—ன் கீழ் இருக்கிற விதியைப் பாருங்கள். அதற்கு மேல் நீங்கள் வற்புறுத்திக் கொண்டிருப்பது சரியல்ல. (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) அதை என் அறையிலே வந்து கேட்க வேண்டும். 7 நாட்களுக்குள் ஒரு நாளில் எடுக்கப்படும். (குறுக்கீடு) 7 நாட்களுக்குள் ஒரு நாளிலே எடுக்கப்படும். இன்றைக்கே எடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிற ஒரு பிரச்சினை எப்படி 55—ன் கீழ் வரும் ? (குறுக்கீடு) என்னிடத்திலே கொண்டுவந்து கொடுத்தீர்கள். அந்த விதியை எல்லாம் பார்த்து அந்த விதிமுறைப்படி நடப்பதற்குப் பாருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். உட்கார வேண்டும். திரு. தண்டாயுதபாணி உட்கார வேண்டும். உட்கார வேண்டும். நடவடிக்கை எடுக்கவேண்டி வரும்.

முற்பகல் 11—15

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிச் சில உறுப்பினர்கள் எழுந்து, அவையின் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து இடையூறு செய்து கொண்டிருப்பது எந்த விதத்திலும் முறையல்ல. ஒன்று, அவர்களுடைய சட்டப் பேரவை கட்சித் தலைவராகிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய கட்சி உறுப்பினர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் அல்லது அவர்கள் பேரவைத் தலைவருக்காவது கட்டுப்பட வேண்டும், எல்லா விதிகளையும் மீறி அவர்கள் இப்படித் தொடர்ந்து இடையூறு விளைவிப்பவர்களேயானால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நிற்கும்போது உறுப்பினர்கள் எழுந்து பேசக்கூடாது என்கிற விதியை நானும் ஏற்றுக் கொள்கிறேன். அவர் எந்தப் பிரச்சினையை எழுப்ப வந்தார் என்பது எனக்கு முன்னால் தெரியாவிட்டாலும், இப்போது அவர்கள் பேசியதிலிருந்து மகாத்மா காந்தி அவர்களுடைய சிலை தகர்க்கப்பட்டது தொடர்பான பிரச்சினையை எழுப்ப முன் வந்திருக்கிறார்கள் என்று அறிகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் விதி 55-ன் கீழ் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : I am not disputing you நீங்கள் நடந்து கொண்ட முறை தவறு என்று நான் விமர்சிக்கக் கூட இல்லை. ஆனால் அவர்கள் அந்தப் பிரச்சினையைத் தான் எழுப்ப வருகிறார்கள். அதை இப்போது எழுப்ப அனுமதி தராவிட்டாலும்கூட, நீங்கள் அதை எழுப்ப எந்தத் தருணத்தில் அனுமதி தர முடியும் என்று தெரிவித்து விட்டால் சபை சுமூகமாக நடப்பதற்கு வசதியாக இருக்குமென்று நினைக்கிறேன். இது மிக முக்கியமான பிரச்சினை. நீங்கள் 55-வது விதியை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருப்பதைக் காட்டிலும் தேசப் பிதா மகாத்மா காந்தி அவர்களுடைய சிலை தகர்க்கப்பட்டிருக்கிறது, அது வெடி குண்டு வைத்துதகர்க்கப்பட்டிருக்கிறது. அதுதொடர்பாக ஒரு பிரச்சினை சபையிலே வருகின்ற நேரத்தில், எந்தக் கட்டத்திலே அந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ள இயலும் என்பதைத் தாங்கள் தெரிவிப்பது நல்ல முறை, அதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு தகவல். அவர்கள் வந்து கொடுக்கிறபோதே, நான் சொன்னேன், பொது விவாதம் இன்றைக்குத் தொடங்க இருக்கிறது. நீங்கள் மட்டுமல்ல, விவாதத்திலே கலந்து கொள்கிற எல்லா உறுப்பினர்களுக்கும் இந்தப் பிரச்சினையிலே பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் அளிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும். இது கவன ஈர்ப்புத் தீர்மானம் என்று ஓர் உறுப்பினர் எழுப்பிய பிரச்சினை என்று இருப்பதைவிட, இதையேகூட இன்றைக்கு நான் அனுமதித்து விட்டால் பொது விவாதத்தில் ஏனைய உறுப்பினர்கள் பேசுகிறபோது, இது ஏற்கனவே முடிந்து போன பிரச்சினை என்று அவர்களுக்கு நான் அனுமதி மறுக்க வேண்டி வரும். அவர்களிடத்திலே என்னுடைய அறையிலே இதைத் தெரிவித்திருக்கிறேன் என்பதைத்தான் நான் சொன்னேன். எனவே இதிலே மேற்கொண்டு விவாதத்தை வளர்க்க வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நான் இதை அவர்களுக்கு என்னுடைய அறையிலே தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடுகள்)

(திரு. வி. தண்டாயுதபாணி மற்றும் சில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்.)

## 3. அறிவிப்பு—தொடர்ச்சி.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்—தொடர்ச்சி.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : இது வேறு. நீங்கள் மாற்றுத் தலைவர் பட்டியல் என்று ஒரு பட்டியலைப் படித்தீர்கள். அதிலே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் யாரேனும் இருக்கிறார்களா? அதிலே யாருடைய பெயரும் இடம் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. சிங்காரம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : திரு. கே. சிங்காரம் என்று சொன்னீர்கள். திரு. ஆர். சிங்காரம் என்று சொல்லவில்லை. திரு. கே. சிங்காரம் என்றுதான் படித்தீர்கள் திரு. ஆர். சிங்காரம் என்று படிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்னிக்க வேண்டும் அது திரு. ஆர். சிங்காரம் தான். மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் திருத்திக் கொள்ளலாம்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து—தொடர்ச்சி.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விதி 56-லே கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது விவாதம் தொடங்க இருக்கிற காரணத்தால் அது நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கு எழுத்து மூலமாகக் கொடுக்கப்படும்.

## 4. கவன ஈர்ப்பு.

### பேராவூரணி பின்தங்கியோர் மாணவர் விடுதிக் கட்டிடம் இடிந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.



திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' பேராவூரணியில் உள்ள பின்தங்கியோர் மாணவர் விடுதி கட்டடம் இடிந்துள்ளது குறித்து '' மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை அவையின் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை.

தஞ்சை மாவட்டம், பேராவூரணியில் பிற்படுத்தப்பட்டோர் அரசு மாணவர் விடுதி அரசு கட்டிடத்தில் இயங்கி வந்தது. இவ்விடுதிக்கு கட்டிடம் ரூ. 1.90 இலட்சம் செலவில் கட்ட 1976-ல் அனுமதியளிக்கப்பட்டு தாட்கோவினால் (தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி கழகம்) கட்டப்பட்டு 1977-ல் ஒப்படைக்கப்பட்டது. இவ்விடுதிக் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்ததாலும் மாணவர்கள் தங்குவதற்கு ஏற்றதல்ல என பொதுப் பணித்துறை கருத்து தெரிவித்ததாலும், இவ்விடுதி ஏற்கனவே தனியார் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டிடத்தை செப்பனிடவும் மற்றும் மராமத்து பணிகளுக்காகவும் ரூ. 1 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பொதுப்பணித் துறையினால் இப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே மாணவர்களின் பாதுகாப்பு கருதி, இவ்விடுதியை தனியார் கட்டிடத்திற்கு மாற்ற ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையை நான் படித்தேன். அந்த அறிக்கையின்படி உடனடியாக தமிழகத்தினுடைய முதல் அமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நடவடிக்கை எடுத்து, அந்த விடுதியைக் கட்டுவதற்காக ஒரு லட்ச ரூபாய்க்கு எஸ்டிமேட் மதிப்பீடு தயார் செய்து இருப்பதாக அறிக்கையில் பார்த்தேன் மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் 1979-ல் கட்டப்பட்ட அந்தக் கட்டிடம் 1980-ல் ஒப்படைக்கப்பட்டது

[திரு. ஆர். சிங்காரம்] [1993 பிப்ரவரி 8

முற்பகல் 11.

சுமார் 12 ஆண்டுக்காலம்தான் ஆகியிருக்கிறது. 15 வருடத்திற்குள்ளேயே இந்தக் கட்டிடம் இடிந்து விட்டதால், தமிழகத்தில் அந்தக் காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்கள் எல்லாம் எப்படி இருக்குமோ என்ற அச்சமும் பயமும் எனக்கு ஏற்படுகிறது. ஆகவே இனிமேல் அந்தக் காலத்தில் அந்தக் கட்டிடத்தை யார் கட்டியது, எந்தக் காண்ட்ராக்டர் கட்டியது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யார் என்பதை நீங்கள் பரிசீலனை செய்து அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதுடன் இனிமேல் இதுபோன்ற நிகழ்ச்சிகள் ஏற்படாத அளவுக்கும், இப்படிப்பட்ட கட்டிடங்கள் கட்டாத அளவுக்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக்கொண்டு, இந்தக் கட்டிடத்தினை கட்டுவதற்கான கால அவகாசம் என்ன என்பதையும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே விரைந்து இந்தக் கட்டிடத்தை கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விரைவாக 3 மாதத்திற்குள் கட்ட முடியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் ரூ. 1.90 லட்சம் செலவில் கடந்த 15 வருடத்திற்கு முன்பு அந்தக் கட்டிடம் கட்டப் பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருவதற்கு முன்பாகவே அந்தக் கட்டிடத்தை கட்டியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள உத்திரவிடப்பட்டு இருக்கிறது. இந்த மராமத்துப் பணி மற்றும் அந்தக் கட்டிடத்தை செப்பனிடும் பணி 3 மாதத்திற்குள்ளாகவே முடிக்கப்பட்டு விடும் என்பதை இங்கே அறிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இனிமேல் இதுபோன்ற கட்டிடங்கள் இப்படிப்பட்ட நிலையில் இல்லாமல் இருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் சம்பந்தப்பட்ட கான்ட்ராக்டர்கள் மீதும் உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்பட ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுதியான நடவடிக்கை நிச்சயமாக மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1993 பிப்ரவரி 8]

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம் திரு. ச. காந்திராஜன் முன்மொழிவார்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்

''1993-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 4-ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு **ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்கள்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழிமொழிதல், திரு. கு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. காந்திராஜன் அவர்களின் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. காந்திராஜன்.

* திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன் மொழிந்து இந்த மாமன்றத்திலே பேசுகின்ற வாய்ப்பை எனக்களித்த நம்முடைய இதய தெய்வம் அன்னையாக நான் வைத்துப் பூஜிக்கின்ற தெய்வம், நம்முடைய தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களில் என்னுடைய நன்றி மலர்களைக் காணிக்கையாக வைத்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

'' கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி''

என்ற குறளை நான் இங்கே இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டுவது சிறப்புடையதாக இருக்கும் என்ற அளவில் என்னுடைய உரையைத் துவக்குகின்றேன். அன்புடை அளித்தல், அதே போன்று அருள் செய்தல், செங்கோல் ஓச்சுதல், தளர்ந்த குடிமக்களை பேணிக் காத்தல் என்கின்ற

* 276——312 ஆம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப்பெற்றுள்ளன.

இந்த நான்கு செயல்களும் செய்கின்ற அரசு மற்ற அரசுகளுக்கெல்லாம் ஒளி விளக்காகத் திகழ்கின்ற அரசாக இருக்கும் என்று கூறும் வள்ளுவர் வழியிலே இன்றையதினம் நம்முடைய ஒப்பற்ற புரட்சித்தலைவி அவர்கள் தன்னிடம் வருவோர்க்கெல்லாம் வாரி வழங்குகின்ற கொடைத் தன்மையும் ஆன்மீக அருளாட்சி செய்கின்ற தன்மையும், இங்கே திங்கள் தோறும் பொதுமக்களிடத்திலே மனுக்களைப் பெற்று அந்த ஏழை எளிய மக்களுக்கெல்லாம் நல்ல பல செயல்களைச் செய்கின்ற ஒரு சிறப்புமிக்க அரசாட்சியை செய்கின்ற நம்முடைய ஒப்புயர்வற்ற தானைத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சி மற்ற மாநிலங்களுக்கெல்லாம் ஒரு ஒளிவிளக்காகத் திகழ்கின்ற இந்த ஆட்சியில் இங்கே கொண்டு வந்திருக்கின்ற கவர்னருடைய உரையில் நான் பேசுவதற்கு முன்பு, அந்த உரையின் முன்னுரையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற சில காரண காரியங்களைச் சொல்வது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

1992 ஆம் ஆண்டின் கடைசி மாதங்களில் இந்த இந்தியத் திருநாட்டின் அத்தியாயங்களில் எப்படிப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் தலை தூக்கின, இந்தியாவைப் பொறுத்த வரையில் எவ்வளவு சோதனைமிக்க கட்டங்களை இந்த நாடு சந்திக்க நேர்ந்தது என்பது எல்லாம் கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருந்தாலும், தமிழகத்தைப் பொறுத்த வரையிலும், அத்தகைய சோதனைக் கட்டங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு, அவைகளிலிருந்தெல்லாம் விலகி நிற்கிற ஒரு மாநிலமாக தமிழகம் சிறந்து விளங்கியது. அப்படிப்பட்ட சிறப்புமிக்க ஆட்சியைத் தந்த ஒப்புயர்வற்ற தலைவராக விளங்குகின்ற நமது புரட்சித்தலைவியின் சீரிய முயற்சியின் காரணமாக ஏழை எளிய மக்களுடைய வாழ்விலே சீரான முன்னேற்றத்திட்டங்கள் எல்லாம் செய்யப்பட்டன என்பதை இந்த உரையிலே தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். இது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள அரிய சாதனை.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் வெளிப்புறலாபியில் சத்தம் இல்லாமல் உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வெளிப்புற லாபியில் சத்தமாகப் பேசிக் கொண்டு இருப்பதும் கூட அவையின் நடவடிக்கைகளுக்கு குந்தகம் உண்டாக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. ச. காந்திராஜன்: அந்த வகையிலே இன்றைய தினம் இங்கே தமிழகத்தில் சீரிய ஆட்சியை நடத்தி வருகின்ற சூழ்நிலையில் தனிச் சிறப்புமிக்க தமிழகமாக, இந்தியாவில் இருக்கின்ற பிரச்சினைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு விளங்குகிற தமிழகமாக இருக்கின்ற சூழ்நிலையை உருவாக்கி காப்பாற்றிக் கொண்டு வருவதற்கு முக்கிய காரணம் இங்கே நம்முடைய தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்ற சூழ்நிலையில்தான் என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டுவது என்னுடைய கடமையாகும். நான் இதைச் சொல்வதற்கு முன்பாக ஒன்றைக் குறிப்பிட்டேயாக வேண்டும். தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை நம்முடைய ஒப்பற்ற புரட்சித்தலைவி அவர்கள் ஏற்பதற்கு முன்னால், தமிழகத்திலே விடுதலைப் போராட்டக் குழுக்களுடைய, தீவிரவாத இயக்கங்கள் எப்படி இருந்தன? தமிழகம் முழுக்க அந்த இயக்கங்களினுடைய நடவடிக்கைகள் எப்படி எல்லாம் நாட்டு மக்களை அச்சுறுத்தி வந்தது என்பதையெல்லாம் நாட்டு மக்கள் நன்கு உணர்வார்கள் இன்றையதினம் நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு 100 நாட்கள் சாதனையாக குறைந்த பட்சம் 3 மாத காலத்திற்குள்ளாக ஒரு தனிப் பெரும் சாதனையாக, தமிழகத்தைப் பொறுத்த வரையில் விடுதலைப் புலிகளினுடைய ஆதிக்கத்தை அடக்கி ஒடுக்கி இருக்கிறார்கள் என்று சொல்கின்றபோது உண்மையிலேயே தமிழக மக்கள் அது கண்டு பெருமைப்படுகின்றார்கள் அந்த அளவிற்கு தனக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் சரி, தன்னுடைய உயிருக்கே குந்தகம் விளைவிக்கின்ற சூழ்நிலை இருந்தாலும் கூட அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் இன்றைய தினம் இங்கிலாந்தின் தாட்சராக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் விளங்கிக்கொண்டு இருக்கின்றார்கள்.

## 2 தகவல் கோரல்—தொடர்ச்சி

### உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள் குறித்து—தொடர்ச்சி.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மகாத்மா காந்தியடிகளுடைய சிலை வெடிகுண்டு வைத்து தகர்க்கப்பட்டது தொடர்பாக, கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்று பேரவை விதி 55-ன் கீழ் கொண்டு வரப்பட்டது பேரவை விதி 55-மட்டும் நீங்கள் சுட்டிக் காட்டுவதோடு விட்டுவிடாமல் அருள்கூர்ந்து

அந்தப் பிரச்சினையுடைய முக்கியத்துவம் கருதி, தேசப் பிதாவினுடைய சிலை வெடிகுண்டு வைத்து தகர்க்கப்படுகிறது; எனவே விதி 55-ன் கீழ் எழுப்பப்பட வேண்டும் என்பது அல்லாமல் அதை ஒரு ஸ்பெஷல் மென்ஷனாக இந்தப் பேரவையிலே எழுப்புவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நான் ஏற்கனவே இந்தப் பிரச்சினையை எழுப்பிய நேரத்திலே சொன்னதுதான் விதி 55-ன் கீழ் அதை நான் அரசுக்கு அனுப்பி அவர்களிடம் பதில் பெற்று அதன் பின்னர்தான் நான் அதை இங்கே வைக்க முடியும் என்கிற நிலைமை இருந்தாலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக் கொண்டதைப் பரிசீலித்து இதை அரசுக்கு அனுப்பி நாளைய தினம் எடுப்பதற்குரிய முயற்சி மேற் கொள்ளப் படும்

5 ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி;

<u>திரு. ச. காந்திராஜன்:</u> இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 100 நாட்களுக்குள்ளாக இங்கே இருக்கின்ற விடுதலைப் புலிகளினுடைய இயக்கங்களாக இருந்தாலும் சரி, அதோடு தொடர்புடைய மற்ற எந்த தீவிரவாத இயக்கமாக இருந்தாலும் சரி, அவற்றையெல்லாம் அடக்கி ஒடுக்கிய பெருமை, அந்த சாதனையை செய்துள்ள பெருமை ஒப்பு உயர்வற்ற புரட்சித் தலைவி அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட குழுக்கள் ஒடுக்கப்படுகிற நேரத்தில், புரட்சித் தலைவி அவர்களின் உயிர்க்கு எப்படியெல்லாம் தீவிரவாத இயக்கங்களால் உலை வைக்கின்ற முயற்சிகள் எல்லாம் நடந்தன என நம்முடைய தலைவி அவர்கள் அறிந்து அவர்கள் இருந்தாலும் கூட அதற்கு முன்னாலேயே பல்வேறு உதாரணங்களை நான் உங்களுக்கு சுட்டிக்காட்டுகின்ற அளவிற்கு, பத்மநாபா போன்ற தலைவர்களை தமிழகத்தினுடைய ஒரு பிரிவின் தலைவராக இருந்தத் தலைவர்களையெல்லாம் கொலை செய்தார்கள் என்ற முன் உதாரணம் இருந்த போதும் கூட, அதற்குப் பின்னாலும் நம் முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் சென்னைக்கு வந்தபோது, சென்னைக்கு அருகிலே அந்த இயக்கத்தின் தூண்டுதலால், அவர்களுடைய முயற்சிகளால் அந்த இயக்கத்தை சார்ந்தவர்களால் அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்று சொல்கிறபோது — இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளெல்லாம் முன்னுதாரணங்களாக இருந்தும் கூட, தன்னுடைய உயிரை துச்சமென மதித்து இன்றைய தினம் அந்த இயக்கத்தை அடக்கி ஒடுக்கி இருக்கிறார்கள் என்று சொல்லுகிறபோது உண்மை



யிலேயே நாம் அவர்களுக்கு மிக்க நன்றிக் கடன் பட்டவர்களாக இருக்கின்றோம். காரணம், தமிழகம் என்றுமே அமைதிப் பூங்காவாக விளங்கிய மாநிலம். இந்த மாநிலம் பஞ்சாபை போல, காஷ்மீரைப் போல, அஸ்ஸாமைப்போல தீவிரவாதிகளினுடைய கட்டுப்பாட்டின்கீழ், அவர்களுடைய ஆதிக்கத்தின் கீழ் இருக்கக் கூடாது என்கிற வகையிலே, தன்னுடைய உயிரே போனாலும் பரவாயில்லை என்கிற சூழ்நிலையில் இந்த தீவிரவாதத்தை இந்த இயக்கத்தை அடக்கி ஒடுக்கி இருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் தமிழகத்திலிருந்துதான் கடந்த காலங்களில் ஆயுதங்கள் எல்லாம் கடத்தப்பட்டுள்ளன. அதைப் போல போதைப்பொருள்கள் எல்லாம் இங்கேயிருந்துதான் கடத்தப்பட்டன என்கிற சூழ்நிலையை எல்லாம் நாம் கடந்த காலத்தில் பார்த்து இருக்கிறோம். நம்முடைய ஆட்சி வருவதற்கு முன்னால் நடந்த இந்த காரியங்களை எல்லாம் தடுத்து நிறுத்தி இன்றையதினம் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் இங்கே ஒரு நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிற ஒப்பற்ற நமது முதல்வர் அவர்களுக்கு ஒரு தலைவிக்கு உண்மையிலே நாம் பாராட்டு தெரிவிக்க கடமைப்பட்டவர்கள். இருந்தாலும் கூட இன்றைய தினம் காழ்ப்புணர்ச்சியால் சிலர் சொல்கிறார்கள். சில காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தலைவர்கள் கூட சொல்கிறார்கள். நான் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். விடுதலைப் புலிகள் நடமாட்டம் இன்று தமிழகத்தில் இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்களே அந்த விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தமிழகத்தில் இருக்கிறது என்று சொல்கிறபோது சமீபத்தில் நடந்த சில நிகழ்ச்சிகளை நான் கோடிட்டுக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

முற்பகல் 11-30

சந்திரன் என்ற, விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய அந்த இயக்கத்தைச் சார்ந்தவன் இங்கே கைது செய்யப்படுகிறான். கைது செய்யப்பட்ட பிறகு, அதற்குப் பின்னாலே நடந்த நிகழ்ச்சிகள் — அவன் தற்கொலை செய்து கொண்ட நிகழ்ச்சிகளை இங்கேயிருக்கிற மன்றத்திலிருக்கிற அனைவரும் அறிவோம். எனவே காவல் துறை விழிப்போடு உள்ளதால்தான் கைது செய்யப்பட்டுள்ளான். அதுமட்டுமல்ல, இங்கே விடுதலைப்புலிகள் ஏதோ ஆயுதங்களை கடத்திக் கொண்டு வருவதாகவும், இந்த விடுதலைப்புலிகளுடைய இயக்கமானது தமிழ்நாட்டை மையமாகக் கொண்டு செயல்படுவதாகவும் இன்றைய தினம் குற்றச் சாட்டுகளைச் சொல்கிறார்கள். அவர்களை நோக்கி நான் கேட்கிறேன். விடுதலைப் புலிகள் இயக்கத்தினுடைய ஒரு தளபதியாக இருந்த கிட்டு என்பவர் ஆயுதங்களையும், வெடிமருந்துப் பொருள்களையும் இங்கே தமிழகத்திற்கு

கடத்தி வந்தார் என்ற குற்றச்சாட்டை நான் வன்மையாக மறுக்கிறேன். உண்மையில் அவர்கள் ஆயுதங்களை சிங்கப்பூரிலிருந்து இலங்கையில் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு சென்றார்களே தவிர, தமிழ்நாட்டிற்கு அவர்கள் வரவில்லை. தமிழக கடற்கரையிலோ, கடற் பகுதியிலோ, அல்லது தமிழகத்தினுடைய எல்லைப்பகுதியிலோ அவர்களுடைய நடமாட்டம் இருக்கவில்லை. அதற்கு முன்னால் இந்திய கடற்படையின் எல்லைக்குள்ளேயே அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு, அவர்களுடைய பொருள்களை கைப்பற்றுவதற்கு முயன்றபோது வெடி மருந்துகள் வெடித்து சிதறியது என்பதை எல்லாம் நாம் செய்தியாக கேள்விப்படுகிறோம். அந்தச் செய்தியை இங்கேயிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களும் அறிவார்கள். அப்படியிருந்தாலும் கூட இந்த குற்றச்சாட்டுகள் எல்லாம் அரசாங்கத்தை குறை கூற வேண்டுமென்ற ஒரு குறுகிய நோக்கத்தோடு சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகளே தவிர, உண்மையில் விடுதலைப்புலிகள் நடமாட்டம் முற்றிலும் ஒடுக்கப்பட்டு விட்டது என்பதைத்தான் தெளிவாகச் சொல்லிக்கொள்ள முடியும்.

இங்கேயிருக்கிற காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களை கேட்கிறேன். விடுதலைப் புலிகளுடைய நடமாட்டம் இருக்கிறது என்று சொல்கிறீர்களே, அப்படி எங்கேயாவது இருந்தால், காண்பியுங்கள். நிச்சயம் காண்பிப்பீர்களேயானால், அதைக் கோடிட்டு காட்டினால் கூட இந்த அரசாங்கம் அவர்கள் மீது நடவடிக்கையெடுக்க எப்போதும் தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் தயவு செய்து சொல்லவேண்டும். குறிப்பாக வேதாரண்யம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. இராஜேந்திரன் அவர்கள் இங்கே இல்லை. இருந்தாலும் கூட வேதாரண்யம் பகுதியில் அதிகளவில் விடுதலைப் புலிகளுடைய நடமாட்டம் இருக்கிறது என்று பல்வேறு கோணங்களில் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிற காரணத்தால், அப்படி ஏதாவது தகவல் தெரிந்தாலும் அல்லது அவர்கள் அறிந்திருந்தாலும் கூட எங்களுடைய அரசாங்கம் இரும்புக்கரம் கொண்டு அந்த விடுதலைப் புலிகளை அடக்கும், ஒடுக்கும் என்பதில் நாங்கள் எள்ளளவும் குறையவில்லை என்பதை கோடிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன். எனவே, எங்கேயாவது விடுதலைப் புலிகள் இருக்கிறார்கள் என்ற செய்தியை சொல்வீர்களானால், உடனடியாக, எப்படி கடந்தகாலத்தில் இந்த அரசாங்கம் கடுமையான சட்டங்களை இங்கே செய்து அதன் மூலமாக அடக்கி ஒடுக்கியதோ, அதைப்போல இப்போதும் நாங்கள் செய்வதற்கு தயாராக இருக்கிறோம்.





திரு. ச. அழகிரி : நாங்கள் சொல்லத் தயாராக இருக்கிறோம்.

** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகிரி அது வேண்டாம். ** ** சொல்லத் தயராக இருக்கிறோம் என்பதோடு நிறுத்தலாம். ** ** என்று சொல்வது இன்னொரு உறுப்பினரைப் பற்றிக் குறிப்பிடுவதாகும். (குறுக்கீடு) அழகிரி உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, சொல்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதோடு நீங்கள் தயவுசெய்து நிறுத்திக் கொள்ளலாம். (குறுக்கீடு) மேற்கொண்டு எதுவும் வேண்டாம்.** இன்னொரு உறுப்பினரைப் பற்றி சொல்வது சரியல்ல. அழகிரி உட்காருங்கள். காந்திராஜன் தொடருங்கள். ** பற்றி வந்தது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : அந்தப் பிரச்சினை வேறு; இது வேறு . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அழகிரி உங்கள் இடத்திலிருந்து பேசுங்கள். (குறுக்கீடு) உங்கள் இடத்திலிருந்து பேசுங்கள் . . . . . . . .

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளூரில் பிரச்சினையெல்லாம் ஏதாவது வந்துவிடும். அதற்கெல்லாம் அரசாங்கம் பொறுப்பு ஏற்க முடியாது. எனவே, நாம் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறபோது, சில பிரச்சினைகளைச்சுட்டிக்காட்டுகிறபோது, அதிலே யாராவது பாதிக்கப்பட்டால், உள்ளூரில் வருகிற பிரச்சினைகளை கொண்டுவந்து எங்கள் மீது அதைத் திணிக்கக்கூடாது. இப்போது நாங்கள் கேட்பது விடுதலைப்புலிகளை— உறுப்பினர் அவர்கள் சொன்னது விடுதலைப் புலிகளை இந்த அரசு முழுமையாக அடக்கி இருக்கிறது என்று. ஏற்கெனவே நீங்கள் பலமுறை சட்டமன்றத்தில் பேசியிருக்கிறீர்கள். பொதுக்கூட்டத்தில் பேசி இருக்கிறீர்கள். இங்கே வந்த மத்திய அமைச்சர்களும் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு பேரும் ஒப்புக்கொண்ட ஒன்று.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இன்றைக்கு வேறு ஏதோ சூழ்நிலையில் ஆங்காங்கே நீங்கள் ஒவ்வொருவராக பேட்டி கொடுப்பது இந்த அரசாங்கத்தையோ பொது மக்களையோ திசை திருப்புகிற நோக்கமாக இருக்குமோ என்று ஒரு சந்தேகம் ஏற்பட்டு மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அப்படி யாராவது உங்களுடைய கண்ணுக்குப் பட்டால் நீங்கள் சொல்லுங்கள். உடனே அவர்களை அடக்கி வைப்போம் பிடித்து வைப்போம் என்று சொல்கிறார். அதைத் தான் உங்களிடத்தில் கேட்கிறோம். **அது உங்களுக்குள்ளே எங்கேயாவது ஊரில் இருக்கிற பிரச்சினையில் சண்டை வந்து விட்டால் அதற்கு நாங்கள் பொறுப்பு இல்லை. (குறுக்கீடு)

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இதிலே வேண்டாம். (குறுக்கீடு).

திரு. ச. அழகிரி : அவர்கள் சொன்னதற்கு நான் பதில் சொல்ல வேண்டும் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** பற்றிச் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன் : விடுதலைப் புலிகளுக்கும், இதற்கும் என்ன சம்பந்தம். ** என்று சொல்வது சரியில்லை. விடுதலைப் புலிகள் பிரச்சினையை பற்றிப் பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடுதலைப் புலிகளைப் பற்றிப் பேசுகிறபோது, எங்கே இருக்கிறார்கள் என்பதை நாங்கள் தெரிவிக்கிறோம் என்று சொல்கிறீர்களே அதை வேண்டாம் என்று சொல்லவில்லை. தெரிவியுங்கள். ** என்பது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு). நீங்கள் சொன்னதற்கு நான் பதில் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு வேண்டுமானால் நீங்கள் பதில் சொல்லுங்கள்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மொத்தமாக பேட்டிக் கொடுக்கிறபோது, இதை எல்லாம் நீங்கள் யோசிப்பது இல்லை. நாங்கள், குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்று சொல்கிறபோது,** என்று எல்லாம் சொல்கிறீர்கள். நீங்கள் மொத்தமாகப் பேட்டி கொடுக்கிறீர்களே, எல்லா பிரஸ் நண்பர்களையும் அழைத்து வைத்து. பேட்டியே கொடுக்கிறார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : அவர்கள் பிரச்சினை வேறு இவர்கள் சொல்கிற பிரச்சினை வேறு.

மாண்புமிகு திரு. எஸ். முத்துசாமி : மொத்தமாகச் சொல்லாதீர்கள். குறிப்பிட்டுச் சொன்னால், எங்களுக்கும் கொஞ்சம் வசதியாக இருக்கும். நீங்கள் எங்களுக்கு உதவி செய்ததாக இருக்கும். (குறுக்கீடு). அப்படி நீங்கள் சொல்வதற்கு ஏன் தயாராக இல்லை என்பதைத்தான் நாங்கள் கேட்கிறோம்.

திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மொத்தமாகப் பேட்டி கொடுக்கிறீர்களே, எனவேதான் நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று குறிப்பிட்டார்கள். இந்த விடுதலைப் புலிகள் பிரச்சினையிலே, முதலிலேயிருந்து நான் கொடுத்த பேட்டியிலேயிருந்து, எந்தப் பேட்டியாக இருந்தாலும், ஆதார பூர்வமாகக் கொடுத்து வந்திருக்கிறேன். அதே போல், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டவர்கள் என்று கூறி தடா சட்டத்தின் கீழே கைது செய்யப்பட்டவர்கள், போலீஸ் காவலிலேயிருந்து தப்பிச் சென்றிருக்கிறார்கள். தப்பிச் சென்றதற்குப் பின்னாலே, அவர்கள் எந்தப் பகுதியிலே நடமாடிக் கொண்டிருக்கிறார்கள், எந்தப் பகுதியிலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், யார், யார் அவர்களுக்குத் துணையாக இருக்கிறார்கள் என்பதை எல்லாம், ஆதாரபூர்வமாக பேட்டியின் வாயிலாக மட்டுமல்லாமல், காவல் துறையினருக்கும் நான் கொடுத்திருக்கிறேன். ஆனால், இன்று வரை அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதற்கு அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தனியாக இப்படி பேட்டி கொடுத்தார்கள் என்று நான் சொல்லவில்லை. சில பேர்கள் அப்படி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொன்னால், அரசாங்கத்திற்கு அது வசதியாக இருக்கும் என்றுதான் சொல்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், எவ்வளவு பெரிய அளவிற்கு இந்தத் தமிழகத்திலே விடுதலைப் புலிகளினுடைய நடமாட்டம் இருந்தது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, தெரிந்து வைத்து இருக்கிறார்கள். அவர்களே பலமுறை அதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். புரட்சித் தலைவி, முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னாலே எந்த அளவிற்கு அது ஒடுக்கப்பட்டு இருக்கிறது, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, பல இடத்திலே பேசியிருக்கிறார்கள். சட்டமன்றத்திலே கூட பத்திய அமைச்சரிடத்திலே கூட சொல்லி பேசியிருக்கிறார்கள்.

யிருக்கிறார்கள. அப்படியிருக்கும்போது, நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னதில், ஒன்றிரண்டின் மீது, எதாவது நடவடிக்கை எடுக்க முடியாமல் இருந்திருந்தாலோ, அல்லது அவர்கள் கிடைக்காமல் இருந்திருந்தாலோ, அதையே ஒரு அளவுகோலாக நீங்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது. ஒட்டுமொத்தமாக இந்த அரசாங்கம் எப்படிச் செயல்பட்டு இருக்கிறது. எங்கேயோ ஒருவர் இருக்கிறார் என்று தெரிந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அவர்களைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம். கட்டுக்குள்ளே கொண்டு வந்திருக்கிறோம். பிடித்தும் இருக்கிறார்கள். அப்படி மீறி ஏதாவது இருந்தால், உங்களுக்குத் தெரிந்தால், இந்த இடத்திலே இருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரிந்தால், அதைப் பற்றி உடனே சொன்னால், அதன்மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்குமே என்பதற்காகத்தான் நாங்கள் தெரிவிக்கிறோமே ஒழிய, மொத்தமாக குறிப்பிட்டு நீங்கள் சொன்னீர்கள் என்று சொல்லவில்லை. ஆனால், இப்போது பல உறுப்பினர்கள், வெளியிலே அப்படி ஷறிக்கை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடுத்த நடவடிக்கையை நிச்சயமாக நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், அதே நேரத்தில், நட வடிக்கைகளிலே தொய்வு ஏற்பட்டுவிடக்கூடாது. அண்மை யிலே பல செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. சிலைகளுக்கு வெடிகுண்டு வைப்பது, காங்கிரஸ் அலுவலகங்களுக்கு வெடி குண்டு வைப்பது அதேபோல் கடத்திலிலே ஈடுபட்டு இருக் கிறார்கள் என்பது போன்ற செய்திகள் வந்து கொண்டிருக் கின்றன. அண்மையிலே சில நாட்களுக்கு முன்னாலே தூத்துக் குடி அருகாமையிலே கூட பல பொருட்கள் கடத்தப்பட்டன. டீசல், பெட்ரோல் உட்பட பல பொருட்கள் விடுதலைப் புலி களாலே கடத்தப்பட்ட நேரத்திலே அவர்கள் கைது செய் யப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு கடற்கரை அருகிலேதான் கிட்டுவினுடைய கப்பல் கூட கைப்பற்றப்பட்ட நிலைமை எல் லாம் நாம் அறிவோம். எனவே, தொய்வு ஏற்பட்டு விடக் கூடாது. நடவடிக்கைகள் கடுமையாக எடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் பேசுகிறோம். (குறுக்கீடு) இதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர முயற்சிக்கிறோமே தவிர, வெறும் குற்றச்சாட்டு என்கிற அளவிலே அல்ல என் பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைக் குற்றச்சாட்டு என்று சொல்லவில்லை. அரசுக்குக் கொஞ்சம் வசதியாகச் சொல்லுங்



களேன் என்று தான் சொல்லுகிறேன். ஒன்றிரண்டு மாதத்திற்கு முன்னாலே எப்படிச் சொன்னீர்களோ, அதேமாதிரி சொல்லவேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அவ்வளவுதான் வேறு ஒன்றும் இல்லை.

அது மட்டுமல்லாமல் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். கொஞ்சம் தொய்வு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நிச்சயமாக தொய்வு இல்லை. (குறுக்கீடு) கூடாது என்று நினைக்கிறார்கள். நாங்களும் அதையேதான் மத்திய அரசாங்கத்திற்கு வேண்டுகோளாக வைக்கிறோம். இங்கே இந்தப் பிரச்சினையைத் தடுக்க வேண்டும் என்று சொன்னால், எந்த அளவிற்கு தமிழக அரசு இதிலே முனைப்பு காட்டுகிறதோ, அதைவிட கடுமையான முனைப்பை மத்திய அரசாங்கம் காட்டியாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி). இங்கே இருக்கின்ற விடுதலைப் புலிகளை நாங்கள் கைது செய்து விடுகிறோம். அடக்கி விடுகிறோம். நீங்கள் ஏற்கெனவே அதைச் சொல்லியிருக்கிறீர்கள். கைது செய்தாகிவிட்டது, அடக்கியாகிவிட்டது என்று ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். மீண்டும் விடுதலைப் புலிகள் வருகிறார்கள் என்றால் எப்படி இங்கே வருகிறார்கள் ? அது எங்களுடைய கட்டுப்பாட்டிலே மட்டுமல்ல. எனவே மத்திய அரசாங்கம் சேர்ந்து எடுக்க வேண்டிய ஒரு நடவடிக்கை. அப்படி ஒரு தொய்வு ஏற்படாமல் இருப்பதற்கு நிச்சயமாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன். மத்திய அரசாங்கத்திற்கு உடனடியாக நீங்கள் கொஞ்சம் வலியுறுத்துங்கள் என்று நான் கேட்டுக் கொள்வேன்.

முற்பகல் 11.40

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கேயிருந்து டீசலும் பெட்ரோலும் கடத்தப்பட்டபோது பிடிபட்டார்கள் என்று சொன்னேன். அவர்களை பிடித்தது மத்திய கப்பற்படை என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த விடுதலைப் புலிகள் பற்றிய தெளிவான பிரச்சினையைப் பொறுத்தவரையில், யார் யார் கடலோரப் பாதுகாப்பு மேற்கொண்டிருக்கிறார்கள் ? நம்முடைய போலீசார், மத்திய கப்பற்படை மற்றும் சி.ஆர்.பி. எப். போன்றவர்கள் எல்லாம் ஒன்றாக இணைந்து மத்திய அரசும், மாநில அரசும் ஒன்றாக இணைந்து காவல் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை புரட்சித் தலைவி அவர்கள் தெளிவாக தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இங்கே விடு

தலைப் புலிகள் பிரச்சினை என்று வருகின்றபோது அதற்கு கூட்டுப் பொறுப்பு மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இருக்கிறது என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டும். ஆகவே இரண்டு அரசுகளும் விழிப்போடு இருக்கின்ற காரணத்தாலே இப்படிப்பட்ட வன்முறைகள் எல்லாம் இன்றைக்கு தடுக்கப்பட்டு, கடலிலே இன்றைக்கு அவைகள் எல்லாம் அழிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இதைக் குற்றம் சொல்வது என் பதில், மத்திய அரசுக்கும் அந்தப் பொறுப்பு இருக்கிறது, மாநில அரசுக்கும் அந்தப் பொறுப்பு இருக்கிறது. ஆகவே இரண்டு அரசுகளும் இன்றைக்கு ஒன்றாகக் கூட்டுப் பொறுப்பாக தமிழக மக்களைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே நடவடிக்கை தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. தொய்வு ஏற்படாது என்பந் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சிலை உடைப்பு, காங்கிரஸ் கட்சி அலுவலகங்கள் தாக்கப்பட்டது என்பது தொடர்பாக காலையில் எழுந்த பிரச்சினைக்கு நாளைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிப்பதாக அறிவித்திருக்கிறார்கள். எனவே அது பற்றிய பிரச்சினையை இப்போது யாரும் பேச வேண்டாம். இந்த விவாதத்திற்கு வரலாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் தெரிவித்த கருத்துக்கும், இங்கே முன்னர் அமைச்சர் தெரிவித்த கருத்துக்கும் வேறுபாடு இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த வேறுபாடும் இல்லை. நாங்கள் எல்லாம் ஒரே கருத்தோடுதான் இருக்கிறோம். (சிரிப்பு) எங்களுக்குள்ளே நான் சொல்லிய கருத்திலே எந்த கருத்து மாறுபாடும் இல்லை. எங்களுக்கு மட்டும் அந்தப் பொறுப்பு இல்லை. மத்திய அரசுக்கும் இருக்கிறது என்று நான் கொஞ்சம் சத்தமாகச் சொன்னேன். அவர் கொஞ்சம் சத்தம் குறைவாகச் சொல்லியிருக்கிறார். அவ்வளவு தான். இதில் கருத்து மாறுபாடு ஒன்றும் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினையை விவாதத்தின் போது வைத்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) இதில் உங்களுக்கு சம்பந்தமில்லை. நீங்கள் பேசும்போது



பேசலாம். இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை உட்காருங்கள். எனக்குத் தெரியும். என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்? சொல்லுங்கள். எந்த விதி?

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறுகின்ற நிகழ்ச்சியையொட்டி, ஒரு ஒழுங்குப் பிரச்சினை. பாயின்ட் ஆப் ஆர்டர். அருமை நண்பர் காந்திராஜன், சட்டமன்ற உறுப்பினர் பேசுகின்றபோது, கிட்டு கப்பல் தமிழ்நாட்டிற்கு வரவில்லை என்று சொன்னார். எதிர்க்கட்சித் தலைவர் தமிழ்நாட்டிற்கு வந்தது என்று சொல்கிறார். தமிழகத்திலே இது குழப்பமாக இருக்கிறது. எனவே அரசின் சார்பில் இந்த கப்பல் எங்கே பிடிபட்டது? சர்வதேச எல்லையிலா? தமிழகத்தினுடைய எல்லையிலா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல பதில். சொல்லும்போது சொல்லலாம் திரு. ச. காந்திராஜன்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அழகிரி அவர்கள் இங்கே எங்களுக்கு பாதுகாப்பு வேண்டுமென்று சொன்னார்கள். (குறுக்கீடு) நான் விட்டு விடுகிறேன். மத்திய அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் உள்ள சி.பி.ஐ. யால் கைது செய்யப்பட்ட சண்முகத்திற்கு கொடுக்கப்பட்டது போன்ற பாதுகாப்புகள் எல்லாம் தமிழ்நாட்டில் நிச்சயமாக நீங்கள் எதிர்பார்க்கின்ற அளவிற்கு தமிழகத்தினுடைய காவல்துறை தரும். எனவே உங்களுக்கு அந்தச் சந்தேகம் வர வேண்டிய அவசியமில்லை. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் நீங்கள் பேசுகின்ற போது சொல்லுங்கள். அழகிரி, வார்த்தைக்கு வார்த்தை பதில் வேண்டாம். நீங்கள் பேசுகின்ற போது சொல்லலாம். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : ஒரு அரசாங்கத்தின் மீது, குறிப்பாக மத்திய அரசாங்கத்தின்மீது குற்றச்சாட்டாக அவர் சொல்கின்ற நேரத்திலே கூட, அதற்கு எதிராக ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பக்கூடாது என்று சொல்வது முறையல்ல. அவர் ஒரு குற்றச்சாட்டாகச் சொல்கிறார். அந்த குற்றச்சாட்டிற்கு பதில், இவர், ஐ. ஜி. ஆபீசில் ஒருவர் கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டாரே, அதற்கு யார் பொறுப்பு என்று கேட்கிறார். இது நியாயமான கேள்வி.

[1993 பிப்ரவரி, 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. காந்திராஜன்

முற்பகல் 11.45.

திரு. ச. காந்திராஜன்: எனவே விடுதலைப் புலிகளுடைய இயக்கத்தைப் பொறுத்த அளவிலே இன்றைய தினம் அது முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு விட்டது—தமிழகத்திலிருந்து என்பதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சாதனை. குறிப்பாக நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய சாதனை என்பதை இங்கே தெள்ளத் தெளிவாக சொல்லுகிற சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே அதனை கவர்னர் உரையிலே சொல்லியிருப்பது உண்மையிலேயே வரவேற்கத் தக்க ஒன்று என்ற வகையிலே நாங்கள் எல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேபோல இன்று தமிழகத்தைப் பொறுத்த அளவிலே சட்டம் ஒழுங்கு பிரச்சினை என்று சொல்லுகிற போது சட்டம் ஒழுங்கு மிகவும் சிறப்பான முறையிலே, சீரிய முறையிலே பராமரிக்கப்பட்டு வந்த சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் தான் இன்றைய தினம் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் எல்லாம் பிரச்சினைகள் ஏற்பட்டு தீப்பிழம்பாக மாறியுள்ள சூழ்நிலையிலும் தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, எந்த இடத்திலும் ஒரு சிறிய பிரச்சினை கூட இல்லாத அளவுக்கு சிறப்பு மிக்க நிர்வாகத்தை நடத்திக் காட்டியவர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

எனவே சில ஒப்பீடுகளையும் நான் கோடிட்டு காட்ட ஆசைப் படுகிறேன். நமக்கு அருகாமையில் உள்ள ஆந்திராவில் என்ன நடக்கிறது? தயவு செய்து சிந்தித்து பார்க்க வேண்டுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவராக இங்கே இருக்கிறார்கள். சரி எதிர்க்கட்சியினுடைய மற்ற சட்ட மன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அனைவரையும் நான் கேட்டுக் கொள்வது, இன்றையதினம் ஆந்திராவிலே கிட்டத்தட்ட 8 மாவட்டங்களிலே நக்ஸலைட்டுகளின் ஆதிக்கத்திலே சிக்கி சீரழிந்து வருகிறது, என்பதை யாரும் மறுக்க முடியாது. அதேபோல நீங்கள் ஆளுகின்ற மகாராஷ்டிர மாநிலத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே அயோத்தி பிரச்சினை எழுந்த போது என்ன நடந்தது? ஒரு நாள் இரு நாள் அல்ல பல நாட்கள் சட்டம் ஒழுங்கு கெட்டு அமைதியும் கெட்டுள்ளது. நேற்றையதினம் கூட என்ன நடந்தது என்பதை நீங்கள் எல்லாம் பத்திரிகையிலே பார்த்திருப்பீர்கள். எந்த அளவிற்கு இன்றையதினம் அங்கே ஒரு மோசமான பயங்கரமான சூழ்நிலை நிலவுகிறது என்பதும் உங்களுக்குத் தெரியும். பொதுமக்களுடைய உடைமைகளுக்கும், அவர்களுடைய உயிர்களுக்கும், ஆபத்து ஏற்பட்டு அவர்கள் எல்லாம்



1993 பிப்ரவரி 8] [திரு. ச. காந்திராஜன்]

தத்தளிக்கின்ற ஒரு சூழ்நிலை அந்த மகாராஷ்டிர மாநிலத்திலே ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம் இருக்கிற அந்த மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழ் நாட்டில் எந்த இடத்திலே சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களான எங்களைப் பொறுத்த அளவிலே, இந்த சம்பவங்களைப் பற்றி குறிப்பிடுகிறபோது இன்று இந்தியாவைப் பொறுத்த அளவிலே அஸ்ஸாம் ஆக இருந்தாலும் சரி, மேகாலயாவாக இருந்தாலும் சரி, மிஜோரமாக இருந்தாலும் சரி, இந்தியாவில் இன்றைய தினம் பல்வேறு இடங்களில் ராணுவத்தை வைத்துத்தான் ஆட்சி நடத்தக் கூடிய சூழ்நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்த அளவிலே எங்கேயாவது இப்படி ராணுவத்தை வைத்துக் கொண்டு நடத்தக் கூடிய ஆட்சி இருக்கிறதா? தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு சரிவர பராமரிக்கப்பட்டு வருகிற சூழ்நிலை இருப்பதால்தான், இன்றையதினம் தமிழகம் என்பது ஒரு அமைதி பூங்காவாக தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிற சூழ்நிலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு அல்லும் பகலும் பாடுபட்டு வருகிற ஒப்புயர்வற்ற நம்முடைய புரட்சித் தலைவி அவர்களை இந்த நேரத்தில் பாராட்டுவது (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கு மட்டும் அல்ல உங்களுக்கும் சேர்த்துத்தான் அந்த கடமை இருக்கிறது என்பதை நான் கோடிட்டாக வேண்டும். இன்றைய நிலையில் இப்படிப்பட்ட சட்டம் ஒழுங்கை நிலை நாட்டிய பெருமை நம்முடைய புரட்சித் தலைவி அவர்களையே சாரும். ஏதோ ஒரு மூலையில் எங்கோ ஒரு இடத்தில் கன்னியாகுமரிக்கு பக்கத்திலே இருக்கிற குளித்துறையில் ஒரு காட்டுப் பகுதியிலே நடக்கிற ஒரு கற்பழிப்பிற்கும் எங்கோ ஒரு இடத்தில் காவல் துறையில் நடைபெறுகிற ஒரு சம்பவத்திற்கும் சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று சொன்னால் அதற்கு முன்னாலே இருந்த ஆட்சிகளில் எல்லாம் சட்டம் ஒழுங்கு சரியில்லாமல் இருந்தது என்று தானே பொருள். எனவே இங்கே இருக்கிற மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்வது சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லுகிற போது குறிப்பாக எந்த இடத்திலே சமுதாய கலவரங்கள், எங்கே தொடர்ந்து பிரச்சினைகள், சமுதாயத்திலே குழப்பம் விளைவிக்கிற நிலைமைகள் எங்கேயாவது தமிழ் நாட்டிலே இந்த $1\frac{1}{2}$ ஆண்டு காலத்திலே புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே இருந்ததா என்பதை நீங்கள் விளக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்ல இப்படிப்பட்ட ஒப்புயர்வற்ற நல்ல ஆட்சியைத் தந்து கொண்டிருக்கிற நம்முடைய புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டுவது நம்

[திரு. ச. காந்திராஜன்] [1993 பிப்ரவரி 8

அனைவருடைய கடமை என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லி, அந்த அளவிற்கு பராமரிக்கப்பட்டு வருகிற இந்த சட்டம் ஒழுங்கைப் பற்றி தெளிவாக கவர்னர் உரையிலே சொல்லியிருக்கிற அந்த கோட்பாடுகளையெல்லாம் நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். வரவேற்கிறேன்.

அதேபோல காவல் துறையைப் பொறுத்த அளவிலே சட்டம் ஒழுங்கை பராமரிக்கிற சூழ்நிலை எழுகிறபோது இந்த காவல் துறையை பராமரிக்கின்ற முக்கியத்துவம் தான் முத லானது. கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே நம் முடைய புரட்சித் தலைவி அவர்கள் தெளிவாக சொல்லியிருக் கிறார்கள். நம்முடைய காவல் துறையை நவீனப்படுத்த வேண்டும். அப்படி காவல் துறையை நவீனப்படுத்துவதற் காக நவீன கருவிகளையும் வாங்க வேண்டும். அதன் மூலம் தான் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை நிலை நாட்ட முடியும் என்று சொல்லி அதற்காக 80.45 கோடியை மத்திய அரசாங் கத்திடம் கடந்த ஆண்டே கேட்டிருந்தார்கள். மத்திய அர சாங்கமும் 10 கோடி ரூபாயை முன்னோடியாக கொடுத்தது. அதற்கு நாங்கள் நன்றிக் கடன்பட்டவர்களாக இருக் கிறோம். இருந்தாலும் கூட 2வது தவணையாக 2வது கட்டமாக நாம் செய்ய வேண்டியது, பல்வேறு எக்கியூப்மெண்ட், நவீனகருவிகள் ஒயர்லெஸ் கருவிகள் போன்ற வைற்ற நாம் வாங்க வேண்டியதுதான். அதற்காக இன்னும் காவல் துறை சிறப்பு மிக்க வழிகளிலே சீர்படுத்துவதற்கு செயல்படுத்துவதற்கும் இன்னும் 30 கோடி ரூபாயை விரை விலே தர வேண்டும். அதற்காக மத்திய உள் துறை அமைச்சகத் திடத்திலே வலியுறுத்துவோம் என்று கவர்னர் உரையிலே சொல்லியிருப்பதை உண்மையிலே நாம் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். அதோடு இன்றைய தினம் மிகக் குறுகிய காலத்திற்குள்ளாக 9,500 காவலர்கள் தேர்வு செய்கின்ற பணியை விரைந்து எந்தப் பிரச்சினையும் இல்லாமல் முடிக் கின்ற ஒரு சூழ்நிலையைக் கூட இன்றைய தினம் புரட்சித் தலைவி அவர்கள் மிகவும் சிறப்பான முறையிலே செய்திருக் கிறார்கள். அவர்களை நாங்கள் இந்த நேரத்திலே ஆளும் கட்சியின் சார்பாக பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

முற்பகல் 11–50

சட்டம் ஒழுங்கிற்கு அடுத்தப்படியாக இங்கே நாங்கள் நீதித்துறையைப் பற்றியும் சொல்லியாக வேண்டும். ஒரு நாட்டிலே சட்டம் ஒழுங்கு மட்டும் பராமரிக்கப்பட்டால் மட்டும் போதாது. நீதித்துறையும் அங்கே நன்கு செயல்பட வேண்டும். அப்பொழுதுதான் ஜனநாயக உரிமைகள் மக் களுக்குச் செய்யப்படுகின்றன என்ற கருத்தின் அடிப்படை



1993 பிப்ரவரி 8] (திரு. ச. காந்திராஜன்)

யிலே இன்றைய தினம் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு சீரிய திட்டங்களை இந்த நீதித் துறைக்கு செய்திருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் இது வரை நீதித்துறையைப் பொறுத்த அளவிலே நாம் பட்ஜெட்டிலே மானியக் கோரிக்கையாக வேண்டுமானால் வைத்திருக்க லாம். ஆனால் புரட்சித் தலைவியைப் பொறுத்த அளவிலே நம்முடைய ஒப்புயர்வற்ற புரட்சித் தலைவி அவர்கள் இன்றையதினம் ஆளுநர் உரையிலே அந்த நீதித்துறையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், தமிழகத் தினுடைய வரலாற்றிலேயே நீதித்துறையைப் பற்றி ஆளுநர் உரையிலே சொல்லியிருப்பது இதுதான் முதல் முறை என்று நான் திட்டவட்டமாக கருதுகிறேன். அப்படிப்பட்ட முக்கி யத்துவம் கொடுத்திருக்கிறார்கள். மேலும் பன்னெடுங்கால மாக எந்த முதலமைச்சராலும் அவர்கள் கோரிக்கைகள் கவனிக்கப்படாத ஒரு சூழ்நிலையைப் பார்த்து இருக்கிறோம். கடந்த காலத்திலே ஆசிரியர்களுக்கு எப்படி லீவ் சலுகைகள் கொடுக்கப்பட்டனவோ, அதே போல அவர்களுடைய பணி வரன்முறைகள் எல்லாம் கேட்கப்பட்டனவோ, அந்தப் பிரச் சினைகள் எல்லாம் கடந்த மாதத்திலே ஒரே உத்தரவாகப் போட்டு நீதித்துறைக்கு பல்வேறு சலுகைகள் அளித்திருப்பவர்கள் புரட்சித் தலைவி அவர்கள்.

அதுமட்டுமல்ல. இன்றையதினம் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தளவிலே நமது திட்டம் குழுவினுடைய மதிப்பீட்டி லேயே, திட்டக் குழுவினுடைய ஒதுக்கீட்டிலேயே நீதித் துறைக்கும் பணம் ஒதுக்கப்பட வேண்டும் என்று சொல்லி ஒரு கோரிக்கையை, நமது முதலமைச்சர் அவர்கள் வைத் தார்கள். அந்த கோரிக்கை இன்றைய தினம் மத்திய திட்டக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இது தமிழ்நாட்டிற்கு மட்டு மல்ல, இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாகத் திகழ்கின்ற ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். இப்படி வரலாற்று சிறப்புமிக்க முன்னுதாரணமாக விளங்குகின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய கருத்துக்களை இங்கே நம்முடைய கவர்னர் உரையிலே சொல்லியிருப்பது குறித்து உண்மையிலேயே நாமெல்லாம் பெருமைப்படுகிறோம்.

அதற்கடுத்தபடியாக இங்கே நான் மதுவிலக்கைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மதுவிலக்கு கொள்கையைப் பொறுத்தளவில் நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசாங்கத்தினுடைய கொள்கை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய அரசாங்கம் எந்த கொள்கையைக் கொண் டிருந்ததோ, அதற்கு முன்னாலே பேரறிஞர் அண்ணா அவர்கள் என்ன கொள்கையைக் கொண்டிருந்தார்களோ அதே வழி யில் புரட்சித் தலைவியினுடைய அரசும் தன்னுடைய மது விலக்கு கொள்கையை அமல்படுத்தும். அதே நேரத்தில்

மத்திய அரசாங்கம் மதுவிலக்கிற்கு முழு நஷ்ட ஈட்டுத் தொகையைக் கொடுப்பதற்குத் தயாராக இருந்தால் மதுவிலக்கினை முழுமையாக நாங்கள் அமல்படுத்துவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அதோடு, இங்கே இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்டு இங்கே இருக்கின்ற ஒரு மோசமான நிதி நிலைமையைத் தன்னுடைய கருத்திலே கொண்டு, எந்த நிதிநிலை எவ்வளவு மோசமாக இருந்தாலும் பரவாயில்லை, இந்த நாட்டு மக்களுக்கு நல்லன செய்ய வேண்டும், குறிப்பாக பெண்கள் பயனடைய வேண்டும் என்று சொல்லித்தான் அன்றைக்கு மலிவு விலை மதுவினை ஒழித்தார்கள். ஒழித்தது மட்டுமல்ல. இன்றையதினம் மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்கிற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய குரலுக்கு—மக்களுடைய கோரிக்கைக் குரலையும் ஏற்று கடந்த ஓராண்டுக் காலமாகச் சொல்லி வந்த கோரிக்கைக்கு செவிசாய்த்து உடனடியாக இந்த ஆண்டே அந்த பார்களை 'ஒழிப்போம்' என்று இங்கே கவர்னர் உரையிலே சொல்லியிருப்பதை நாங்கள் மட்டுமல்ல, இந்த மன்றத்தினர் மட்டுமல்ல, இந்த நாட்டு மக்கள் மட்டுமல்ல, குறிப்பாக பெண்குலமே இன்றையதினம் வரவேற்கிறது என்று நான் சொல்லியாக வேண்டும். கடந்த காலத்திலே நம்முடைய எதிர்க்கட்சி நண்பர்கள், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், சில காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் எல்லாம் எப்படி பேசினார்கள் என்பதையும் நான் கூறுவது கடமை. மேலும், தமிழகத்தினைப் பொறுத்த வரையிலே இன்றையதினம் பார்களை மட்டும் மூடினால் போதாது, இங்கேயிருக்கின்ற மதுக்கடைகளையும் மூட வேண்டும் என்று பொறுப்புள்ள ஒரு மத்திய அமைச்சர் சொல்கிறார். நான் அவரைக் கேட்கிறேன். தயவு செய்து சிந்திக்க வேண்டும். இங்கே தமிழ்நாட்டிலே மதுக் கடைகள் ஒழிக்கப்பட வேண்டும், பார் மட்டும் ஒழித்தால் போதாது என்று சொல்கின்றவர்கள் பக்கத்திலே இருக்கின்ற ஆந்திராவிலே . (குறுக்கீடு). . அங்கே மதுக்கடைகளை மட்டுமல்ல பார்மட்டுமல்ல சாராயக்கடையும் (குறுக்கீடு) சாராயக்கடை கள்ளுக்கடை, எல்லாம் இருக்கின்ற போது . . (குறுக்கீடு). .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். அதிலே என்ன இருக்கிறது? மத்திய அமைச்சர் ஒருவர் இவ்வாறு சொல்லியிருக்கிறார் என்று சொல்கிறார். அவர் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லையே. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். யாராவது ஒருவர் பேசுங்கள்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய தேர்தலிலே சொன்ன ஒரு பிரின்ஸிபிளை சொல்கிறோம். It is a State subject. It is in your Election Manifesto



ஒரு அரசுக்கு வேண்டுமென்றால் வைத்துக்கொள்ளலாம் ;
வைக்காமல் இருந்து கொள்ளலாம். இதற்கும் மத்திய அரசுக்
கும் சம்பந்தம் இல்லை. மாநில அரசு சாராயக் கடைகளைத்
திறக்கலாம் ; திறக்காமலும் இருக்கலாம். அது உங்களுடைய
கருத்து. மத்திய அமைச்சர் என்ன சொன்னார் என்று சொன்
னால், தேர்தலிலே சொன்னீர்கள். You have stated in your Election
Manifesto. அதைத்தான் அவர் சொன்னாரே தவிர, அதற்காக
மத்திய அரசு பணம் கொடுக்க முடியாது. It is State's view.
நம்முடைய அரசுக்கு வேண்டுமென்றால் வைக்கலாம் ; வைக்கா
மலும் இருக்கலாம். அதை நாங்கள் குறை சொல்லவில்லை,
மத்திய அமைச்சர் என்ன சொன்னார் என்று சொன்னால் எலக்
ஷன் மேனிபெஸ்ட்டோவில் சாராயக் கடைகளை மூடுவோம் என்று
சொன்னோம். ஆனால், மூடவில்லை. அதைத்தான் சொன்னார்
களே தவிர, குறையாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு).

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. எ. செங்கோட்டையன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மது விலக்குக் கொள்கையைப்
பொறுத்தவரையில் படிப்படியாக நாங்கள் நிறைவேற்றித் தரு
கிறோம் என்று நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற
தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி
அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கூறி இப்போது சாராயக்
கடைகளையும், கள்ளுக்கடைகளையும் அகற்றியிருக்கிறார்கள்
என்பது உங்களுக்குத் தெரியும். வேறு மாநிலங்களை ஒப்பிட்
டுப்பார்க்கும்போது இப்போதே இந்த அரசுக்கு பல்வேறு பளுக்
கள் இருக்கின்றன. நிதி நிலை அறிக்கையைப் படிக்கிறபோதே
இந்த அரசுக்கு எவ்வளவு பளுக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்
பதும் பற்றாக்குறை இருக்கிறது என்பதும் உங்களுக்கு நன்றாகத்
தெரியும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்
றைக்கு உரையாற்றுகின்ற நேரத்தில் அதை குறிப்பிட்டுக் காட்டி
யிருக்கிறார்கள். இதற்கு மத்திய அரசு தேவையான உதவி
களைச் செய்யுமானால் முழுமையான மது விலக்கை, தமிழகத்தில்
கொண்டுவந்து அறவே அகற்றுவதற்கு நான் தயாராக இருக்
கிறேன் என்று அன்றைக்கு குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு
நீங்கள் வாதாடிப்பெற்றுத் தருவீர்களானால் அதற்கும் இந்த
அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில்
நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காந்திராஜன் தொடர்ந்து பேசுங்கள்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் அவர்கள் இது ஸ்டேட்டினுடைய வியூவ், மாநிலத்திடைய கருத்து என்று சொல்லுகிறார்கள். எனவே, மத்திய அமைச்சராக இருக்கின்றவர் இந்த மாநிலத்தினுடைய கருத்தில் எப்படி அவர் ஆலோசனையாக சொல்கிறார் என்பதை நான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு). இல்லை, இல்லை, அவர் என்ன சொல்லுகிறார் (குறுக்கீடு). நான் சொல்கிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர், மத்திய அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நான் பதில் சொல்லுகிறேன் என்று சொல்லுகிறார். (குறுக்கீடு). திரு. காந்திராஜன் பேசுங்கள்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மது விலக்குப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே தெளிவாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சொல்லிவிட்டார்கள். பலமுறை சொல்லியிருக்கிறார்கள். தேர்தல் அறிக்கையில் என்ன சொன்னார்கள்? படிப்படியாக மது விலக்கை அமல்படுத்துவேன் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் மறுபடியும் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டேனியல் ராஜ் அவர்கள் கடந்த சட்டமன்றத் தொடரில் பேசுகிறபோதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக பதில் கூறியுள்ளார்கள். அப்போது அவர்கள் சொன்னார்கள், எங்களுடைய மது விலக்குக் கொள்கையை நிச்சயமாக படிப்படியாக அமல் செய்வோம், ஆனால், அதே நேரத்தில் அதற்குரிய நஷ்டயீட்டை முழுமையாக மத்திய அரசு தரவேண்டுமென்றும் அந்தச் சூழ்நிலையில் கண்டிப்பாக நாங்கள் மதுவிலக்கை முற்றிலும் அமல்படுத்துவோம் என்றும், இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையில் எந்தப் பகுதியிலேயும் மத்திய அரசு அதற்குண்டான முழுத் தொகையைக் கொடுத்தால்தான் நாங்கள் பரிபூர்ணமான மது விலக்கைக் கொண்டு வருவோம் என்று குறிப்பிடப்படவில்லை. (குறுக்கீடு).

திரு. ச. காந்திராஜன் : கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரைப் பொறுத்த வரையில் நான் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு





முதலமைச்சர் அவர்கள் அளித்த பதிலுரையைத்தான் நான் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். நீங்கள் வேண்டுமானால் பழைய ப்ரசீடிங்ஸ்ஸைப் பார்த்தால் தெரியும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மது விலக்குக் கொள்கை என்பது மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் பொதுவான ஒரு கருத்து, மாநில அரசு மட்டும் தான் அதை மேற்கொள்ளவேண்டும்; மத்திய அரசுக்கு இதன் மீது பொறுப்பு இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்ல விரும்புகிறார்களா? அந்தப் பொறுப்பு, சுமைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்ல விரும்புகிறார்களா என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் வராது. திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆண்டுக் காலம் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சி பீடத்தில் இருந்தபோது தமிழகமும், குஜராத்தும் மட்டும்தான் இந்த பரிபூர்ணமான மது விலக்கை ஆதரித்தன. மற்ற மாநிலங்கள் அந்த நேரத்திலேயே மது விலக்குக் கொள்கையைத் தளர்த்தின. ஆகவே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் எங்களுடைய கொள்கை. தமிழகத்தில் பரிபூர்ணமான மது விலக்கு வேண்டும் என்பதுதான் எங்களுடைய தீவிரமான கொள்கை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மது விலக்குக் கொள்கை என்பது தமிழ்நாட்டுக்கு மட்டும் சொந்தம் அல்ல. இன்னும் சொல்லப் போனால் இந்திய துணைக் கண்டத்திற்கு மட்டும் சொந்தம் அல்ல. உலகம் முழுமைக்கும். ரஷ்யாவில் கூட இப்போது மது விலக்கு கொண்டு வரவேண்டுமென்ற முயற்சியை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், இது மாநிலத்திற்குரியது, மத்திய அரசுக்கு இல்லை என்று சொல்கிறார்கள். அரசியல் சட்டத்திலேயே மத்திய அரசுக்கு உண்டு என்பதையும் சொல்லியிருக்கிறேன் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், ஒன்றைச் சொல்லுவேன், பல ஆண்டுகளுக்கு

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1993 பிப்ரவரி 8

முனபு 1981-இல் இதே சட்டப் பேரவையில் இங்கே இருக்கிற ஒரு அமைச்சர் அப்போதே ஒன்றைப் பேசியிருக்கிறார்கள். அதை நான் படித்துக் காண்பிக்கிறேன் 1981 ஏப்ரல் மாதம் 10-ஆம் தேதி ஒரு அமைச்சர் இங்கே ஒன்றைப் பேசியிருக்கிறார்கள். அதைப் படித்துக் காண்பிக்கிறேன் உங்களுக்கு. 1956-ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்திய பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இங்கே அமைச்சர் பேசியது, 1981-இல், ஏப்ரல் மாதம் 10-ஆம் தேதி அவர் பேசிய பேச்சு 1956-ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்திய பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானமாக கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது அந்தத் தீர்மானத்தைப் படிக்கிறேன்.

நண்பகல் 12–00

"The House is of the opinion that the Prohibition should be regulated as an integral part of the Second Five Year Plan and recommend that the Planning Commission formulates the necessary programme to bring out nation-wise prohibition speedily and effectively." (குறுக்கீடு) அது முக்கியமல்ல. அப்புறம் சொல்கிறேன் அதுமட்டுமல்ல. இது எப்பொழுது என்றால் 1956-ஆம் ஆண்டு அப்பொழுது இந்தியத் துணைக் கண்டத்திலேயிருந்த மாநிலங்களின் நிலை என்ன? 1956-இல் இந்திய மாநிலஙகளுடைய நிலை என்ன? நமமுடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவா அவர்கள் சொன்னார்கள். அப்படியெல்லாம் இல்லை என்று. குஜராத் மட்டுந்தான் என்று சொன்னார்கள். அப்படியல்ல. 1956-இல் எந்தெந்த மாநிலங்களில் மதுவிலக்கு என்று சொல்கிறேன். நான் இப்போது சொல்லவில்லை. 1981-லே இங்கே ஒரு அமைச்சர் பேசியது. 1956-ஆம் ஆண்டு அப்போது இந்தியத் துணைக் கண்டத்திலேயே இருந்த மாநிலங்களின் நிலை என்ன? ஆந்திராவிலே இருக்கிற 20 மாவட்டங்களிலே 11 மாவட்டஙகளிலே மதுவிலக்கு நடத்தப்பட்டு வருகிறது. மைசூரிலுள்ள 26 மாவட்டங்களில் 16 மாவட்டங்களில் மதுவிலக்கு உண்டு. மகாராட்டிராவில் இருக்கிற 26 மாவட்டங்களில் மதுவிலக்கு உண்டு உ.பி.யிலே இருக்கிற 51 மாவட்டங்களில் 11 மாவட்டங்களில் மதுவிலக்கு உண்டு. அஸ்ஸாமில் இருக்கிற 11 மாவட்டங்களில் 3 மாவட்டங்களில் மதுவிலக்கு உண்டு. கேரளாவில் இருக்கிற கண்ணனூர், கோழிக்கோடு, பாலக்காடு மாவட்டங்களில் மதுவிலக்கு உண்டு. ஒரிஸ்ஸாவில் 5 மாவட்டங்களில் மதுவிலக்கு இருக்கிறது. இன்றைக்கு என்ன நிலைமை என்றால் எலலா மாவட்டங்களிலும் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டது எப்பொழுது? 1956-இல் இருந்தது. (குறுக்கீடு). நான் பேசிக்கொண்டு இருக்கிறேன்.



1993 பிப்ரவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் முடிக்கட்டும். தயவு செய்து உட்காருங்கள். அவர் முடித்தவுடன் பேசுங்கள். குறுக்கீடு மாதிரி வைத்துக் கொள்ளலாம். விரிவான விளக்கம் வேண்டாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: 1956-இல் அந்த நிலைமை இருந்தது எல்லா மாநிலங்களிலும், 1981–இல் எதுவும் நடக்கவில்லை என்று நான் சொல்லி, அதே நேரத்தில் 1956-இல் மத்தியப பேரரசில் இப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். ஆனால, தீர்மானம் கொண்டு வந்து 26 ஆண்டுக்காலமாக எதுவும் நடக்கவில்லை என்று 1981-லே நான் இங்கே சொல்லியிருக்கிறேன். ஆனால், இன்றைக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைக்கு அமைச்சர் அவர்தான்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ஆனால், இன்றைக்கு, 1993 என்றால் இந்தத் தீர்மானத்தை மத்திய பேரரசு கொண்டு வந்து, இது Integral Part of the Plane இந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்காக, Speedily and effectively மிக வேகமாகவும், கடுமையாகவும் செய்யவேண்டுமென்று 1956-ஆம் ஆண்டு தீர்மானத்தைக் கொண்டு வந்து இன்றைய தினத்தோடு 37 ஆண்டு, 3 மாதமாகியும் மத்திய பேரரசு இதைக் கவனிக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் கால அறிக்கையிலே, மத்திய அரசினுடைய மானியத்தைப் பெற்று, மத்திய அரசினுடைய இந்தத் தீர்மானத்தை வலியுறுத்தி, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முழு மதுவிலக்கை அமல் படுத்துவோம் என்று தேர்தல் காலத்திலே சொல்லவில்லை. ஆகவே, சம்பந்தமில்லாமல் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சி போடுவதுபோல இருக்கிறது.

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குப் பிரச்சினை பற்றிப்
பலதடவைப் பேசிப் பேசி, எல்லோரும் புரிந்து கொண்டும்,
தெரிந்து கொண்டும், மீண்டும் மீண்டும் பேசி அதே அளவுக்கு
வந்து கொண்டிருக்கிறோம். மதுவிலக்கு வேண்டுமென்ற
கொள்கை எல்லோருக்கும்தான் உண்டு. எல்லா மக்களுக்கும்
உண்டு. எல்லாக் கட்சிகளுக்கும் உண்டு. அந்த எண்ணத்தி
னுடைய அடிப்படையிலேதான், அரசியலமைப்புச் சட்டத்தை
வகுத்தவர்கள் கூட, 4—ஆவது பிரிவின் கீழ்,

The State shall regard the raising the of level of nutrition and the standard of living of its people and the improvement of public health as among its primary duties and in particular the State shall endeavour to bring about prohibition of the consumption except for medicinal purposes of intoxicating drinks and of drugs which are injurious to health

தெளிவாக, மத்திய அரசினுடைய அரசியலமைப்புச் சட்
டத்திலே ஒரு கொள்கையாக, நோக்கமாகச் சொல்லி, எல்லோரும்
ஏற்றுக் கொண்டும், எல்லோரும் கைத்தட்டி ஆரவாரித்து ஏக
மனதாக ஏற்றுக்கொண்டும் வந்ததுதான். ஆனால், நிலைமை
என்னவென்று பார்த்தோமேயானால், இந்த மதுவிலக்குக்
கொள்கையைக் கொண்டு வரவேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே
ஆரம்பத்திலே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்
எடுத்துத் தெரிவித்தது மாதிரி, எல்லா மாநிலங்களிலேயும் மது
விலக்குக் கொண்டு வரப்பட்டது உண்மை. ஆனால், அது நடை
முறைப்படுத்த முடியாதபோது கஷ்டங்களாலும், அதை நடை
முறைக்கு வெற்றிகரமாகக் கொண்டு வரமுடியாத காரணத்தி
னாலும், அதனால் நிதி இழப்பு ஏற்படுகிறது என்கிற காரணத்தி
னாலும், வேறு பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வழி
ஏற்படாத காரணத்தினாலும், மதுவிலக்கை கொண்டுவந்த
பல மாநிலங்கள், அதை விட்டுவிட வேண்டிய அவசியத்திற்கு
ஆளாயின. ஆனால், தமிழகமும், குஜராத்தும் மட்டும் ஓரள
வுக்கு கடைசி வரையிலேயும் நிறைவேற்றியே தீருவது, எந்த
அளவுக்கு அதனால் இழப்பு ஏற்பட்டாலும் அதனை ஏற்பது
என்ற அளவுக்குத்தான் வந்திருக்கிறோம். அந்த வகையிலே வரு
கிறபோது, இந்திய அரசுக்கும் இந்தக் கொள்கை இருக்கிறது.
எல்லாக் கட்சிகளுக்கும் இந்தக் கொள்கை இருந்தாலும்கூட,
இதை எப்பாடுபட்டேனும், நிறைவேற்றுவதற்கு மும்முரமான
நம்பிக்கையில் தமிழகமும், குஜராத்தும் தொடர்ந்து இருந்து
கொண்டிருக்கின்றன; அந்த நம்பிக்கையின் அடிப்படையில்
மதுவிலக்கு—பூரண மதுவிலக்கு கொண்டு வரவேண்டும் என்
பதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழ
கத்தினுடைய கொள்கை. காங்கிரசினுடைய கொள்கையும் அது
தான். அப்படி கொள்கை இருந்தாலும்கூட, பல மாநிலங்களில்
முடியவில்லை. ஏனென்றால் நடைமுறைப்படுத்தவும் முடிய



வில்லை வெற்றிகரமாக ஆக்கவும் முடியவில்லை. நிதி இழப்
பும் ஏற்படுகிறது. சரிகட்டவும் முடியவில்லை. இல்லாததி
னால் முடியவில்லையே தவிர. மதுவிலக்கு வேண்டாம் என்ற
எண்ணம் இல்லை. ஆக, மத்திய அரசாங்கத்தினுடைய
கொள்கையே அதுவாக இருக்கும்போது அவர்களாலேயே முடிய
வில்லை. அதை இங்கே கொண்டு வந்திருக்கிறோம் என்றால்
கொண்டு வந்திருக்கிற அளவுக்கு பாராட்ட வேண்டும். மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு பேசுகிறபோது
படிப்படியாக மதுவிலக்கை நடைமுறைப்படுத்துவோம் என்று
எடுத்துச் சொன்னார்கள். இப்போது, கள்ளுக் கடைகள்,
சாராயக் கடைகள் ஆகியவற்றை ஒழித்து விட்டோம்; அந்நிய
நாட்டு மதுக்கடைகள் இருந்து கொண்டிருக்கின்றன; அதையும்
கூட ஒழிக்கத் தயார் என்கிறபோது, மத்திய அரசும், அதனுடைய
கொள்கையாக இருக்கிற காரணத்தினாலும், அரசியலமைப்புச்
சட்டத்தினுடைய நோக்கமாக இருக்கிற காரணத்தினாலும்,
மத்திய அரசு உதவி செய்யுமேயானால், முழுவதையும்கூட
கொண்டு வருவதற்கு முடியும் என்ற கருத்தையும் எடுத்துச்
சொன்னார்கள். அது தேர்தல் அறிக்கையிலே இருக்கிறது
என்று சொல்லவில்லை. தேர்தல் அறிக்கையிலே பூரண மது
விலக்குதான் இந்த அரசினுடைய கொள்கை; அதை நடை
முறைப்படுத்துவோம் என்று சொல்லியிருக்கிறோம். அது நடை
முறைக்கு வருகிறபோது, படிப்படியாக நிறைவேற்றுவோம்
என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் படிப்படியாக நிறை
வேற்றுகிற கட்டத்திலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.
போதுமான அளவுக்கு நிதி வசதி, வேறுபல வகைகளில் ஏற்படு
கிற திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்கு வழிவகைகள்
ஏற்படுகிற சூழ்நிலை ஏற்படுகிறபோது, மீதி இருக்கிற அந்நிய
நாட்டு மது வகைகளையும் ஒழிக்க வேண்டும் என்பதுதான்
கொள்கை என்றாலும்கூட, அது படிப்படியாக என்று வருகிற
போது, நிதியாதாரத்தைப் பொறுத்து இருக்கிறது. அந்த
நிலை வருகிறபோது வரும். இந்தப் பிரச்சினையை மேலும்
மேலும் வளர்த்துக் கொண்டு போவதிலே அர்த்தம் இல்லை
பலதடவைச் சொல்லி, தெளிவுபடுத்தியாகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த்
துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையிலே சொன்
னதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
அரசு இன்றைக்கு விட்டுவிடவில்லை. தேர்தல் அறிக்கையிலே
சொன்னதைப் படிப்படியாகச் செய்து வருகிறோம் என்றுதான்
சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால், நாடாளுமன்றத்திலே
கொண்டுவந்த தீர்மானம், காலாவதி ஆகிவிட்டது என்று யாரும்

சொல்ல முடியாது. 1956 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திலே கொண்டு வந்த தீர்மானத்தை நாம் சொல்லுகிறபோது, அந்தத் தீர்மானம் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவதுபோல என்று சொல்லிவிட்டார்கள். ஆனால், அப்படி அல்ல அது. 1956 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திலே தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதை நிறைவேற்ற வேண்டும்; நிதி கமிஷன் இதைச் செய்ய வேண்டும் என்று கொண்டு வந்ததை இன்னமும் அவர்கள் கைவிடவில்லை. அந்தத் தீர்மானம் இன்றைக்கும் இருக்கிறது. மத்திய அரசு இதைச் செய்வதற்கு கடமைப்பட்டிருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் தேர்தல் அறிக்கையிலே போட்டதைப் பற்றியே சொல்லிச் சொல்லி, அவர்கள் குறிப்பிட்டுக் கேட்டார்கள். மத்திய அமைச்சர்கூட அதைக் குறிப்பிட்டுத் தான் கேட்டதாகச் சொன்னார்கள். தேர்தல் அறிக்கையைப் பொறுத்தவரையில் ஒரு பத்தாயிரம் பக்கத்திற்குப் போட முடியாது. குறிப்பிட்டுத்தான் சொல்ல முடியும். கோடிட்டுத் தான் ஒவ்வொரு கொள்கையையும் காட்ட முடியும். எனவே நாங்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறோம். அவ்வாறு வருகிற போது, இப்போது தொழிற் துறையிலேகூட, முதல் மாநில மாகக் கொண்டு வருவோம் என்று சொல்கிறபோது, மாநில அரசு மட்டுமே அதைச் செய்துவிட முடியாது; மத்திய அரசாங்கமும் செய்ய வேண்டும். இங்கே வருவதைத் தடுத்துக் கொண்டிருந்தால் முதல் மாநிலமாக வர முடியாது. எனவே, இதெல்லாம் அதில் உள்ளடக்கம். அப்படிச் சொல்கிறபோது தாங்கள் மதுவிலக்கைக் கொண்டு வருகிறோம் என்று சொன்னால் மாநில அரசுக்கு மத்திய அரசு என்னென்ன உதவிகளைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். நீங்கள்கூடச் சொன்னீர்கள், தமிழகத்திலே 20 ஆண்டுக் காலமாக காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது மதுவிலக்கு இருந்தது என்று. அது ஒரு தனி மனிதனுடைய கொள்கையா அல்லது காங்கிரஸினுடைய மொத்தக் கொள்கையா? காங்கிரஸினுடைய மொத்தக் கொள்கையாக இருந்தால் மற்ற மாநிலங்களிலே என்ன என்று நாங்கள் கேட்க வேண்டியிருக்கிறது.

பிற்பகல் 12-10

<u>திரு. பி. வி. இராஜேந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....



<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் பேசும்போது பேசலாம். திரு. காந்திராஜன்.

<u>திரு. ச. காந்திராஜன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுடைய கருத்துக் களோடு இங்கே என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக் கொண்டு, இன்றைய தினம் ஒப்புயர்வற்ற நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இந்த சமுதாயத்தினுடைய நன்மைக்காக, அவர்கள் கோரிக்கையை ஏற்று 'பார்கள்' ஒழிக்கப்படும் என்று ஆளுநர் உரையிலே சொல்லி இருக்கின்ற அந்தக் கருத்துக்களை மட்டும் நாங்கள் ஆளும் கட்சியின் சார்பாக அதனை ஒரு பெரிய சாதனை என்கின்ற அளவிலே வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்தபடியாக ரிசர்வேஷன் பாலிஸியைப் பொறுத்த அளவிலே அது முக்கியப் பிரச்சினையாக இன்றைய தினம் எழுந்து கொண்டிருக்கிறது. அதனையும்கூட ஆளுநர் உரையிலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள், நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள். எனவே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் உச்சநீதிமன்றமானது சமீபத்திலே எடுத்துள்ள முடிவு களை, பிறப்பித்துள்ள உத்தரவுகளை மறு ஆய்வு செய்யும்படி கேட்டுக்கொள்ளத் தமிழக அரசு தீர்மானித்துள்ளது என்று சொல்கிறபோது புரட்சித் தலைவி அவர்கள் எந்த அளவுக்கு எதிர்காலத்திலே வரக்கூடிய பிரச்சினையை முன்கூட்டியே உணர்ந்து, இந்தச் சமுதாயத்தில் இன்று அமைதியாக இருக்கின்ற தமிழகம், தொடர்ந்து அமைதியோடு இருக்க வேண்டும். பிரச்சினைகள் ஏற்படக்கூடாது என்று எண்ணி முன்கூட்டியே முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகள் எடுத்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். இதனைச் சொல்கிறபோது மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த அளவிலே இன்று கல்வி நிலையங்களாக இருந்தாலும் சரி, வேலை வாய்ப்பாக இருந்தாலும் சரி, சமீபகாலம் வரை ஷெட்யூல்டு காஸ்ட் என்கிற அளவிலே 18 சதவீதம் இட ஒதுக்கீட்டை மட்டும் வைத்திருந்தார்கள். அதற்குப் பின்பு மாண்புமிகு வி. பி. சிங் அவர்கள் பிரதமராக வந்தபோது அவர்கள் மண்டல் கமிஷன் பரிந்துரையின் அடிப்படையில் 27 சதவீதம் பின்தங்கிய மக்களுக்காக ஒதுக்கீடு செய்தார்கள். எல்லாவற்றையும் சேர்த்து ஏறத்தாழ 45 சதவீதம் மத்திய அரசால் ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்கு அடுத்து மறைந்த முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தியின் கொள்கையாக Economically Weakar Sections என்று சொல்லி பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களுக்காக 10 சதவீதம் தரவேண்டும் என்கிற கொள்கையாக அவர்கள் சொன்னதற்குப் பிறகு அதற்குப் பின்னாலே இன்றைய தினம் பிரதமராக வந்துள்ள திரு. நரசிம்மராவ் அவர்கள் அந்தக் கொள்கையை

நோட்டிபிகேஷன் மூலமாக வெளியிடுகிறபோது அதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்திலே வழக்குத் தொடுக்கப்பட்டது. உச்சநீதிமன்றத்திலே தொடுக்கப்பட்ட வழக்கானது 9 பேர் கொண்ட ஃபுல் பெஞ்சில் வந்து அதன்மீது தீர்ப்பும் சொல்லப் பட்டுள்ளது. 'Reservation should not exceed at any cost more than fifty per cent' என்று சொல்லி தெளிவாக முடிவுகளை மாண்புமிகு நீதியரசர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட தீர்ப்புகளைச் சொல்லியிருக்கின்ற சூழ்நிலையின் காரணமாக ஏற்கனவே தமிழகத்தைப் பொறுத்த அளவிலே ஷெட்யூல்டு காஸ்டுக்கு என்று சொல்லி நாம் 18 சதவீதம் இட ஒதுக்கீடு செய்திருக்கிறோம். மலைவாழ் மக்களுக்கு ஒரு சதவீதமும், அதேபோல் முன்பு பின்தங்கிய வகுப்பினருக்கு 50 சதவீதம் என்று இருந்ததை மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே 30 சதவீதம் பின் தங்கிய வகுப்பினருக்கும், மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்கு 20 சதவீதம் என்று சொல்லி—மொத்தம் 69 சதவீதம் இன்றைய தினம் நம்முடைய ரிசர்வேஷன் பாலிசியாக தொடர்ந்து இருந்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் உச்சநீதிமன்றம் கொடுத்திருக்கின்ற தீர்ப்பானது நமது தமிழகத்தை மிகவும் பாதிக்கக்கூடிய சூழ்நிலையை, சமுதாயத்திற்குள்ளேயே ஒரு பெரும் பிரச்சினையைத் தோற்றுவிக்கக்கூடிய சூழ்நிலையை இன்றைய தினம் தமிழகத்தில் ஏற்படுத்தியுள்ளது. நம்முடைய அரசு இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர் காலத்திலே இங்கே ஒரு ரத்தப் பிரளயமே ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும். எனவேதான் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய மதிநுட்பத்தால் எதனையும் முன்கூட்டியே உணர்ந்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கிற சூழ்நிலை காரணமாக முன்கூட்டியே ரெவ்யூ பெட்டிஷனை (மறு ஆய்வு மனு) நாம் உச்சநீதிமன்றத்தின் ஃபுல் பெஞ்ச் முன்பாக போடுவோம் என்று சொல்லி அதற்கு சிறப்பு முக்கியத்துவம் கொடுத்து கவர்னர் உரையிலும் சொல்லியிருப்பதை ஆளும் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம்.

அதுமட்டுமல்ல, பல்வேறு செயல்பாடுகளை எல்லாம் இந்த சமுதாயத்தின் அடித்தள மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்க ளுக்காக, ஏழை எளிய மக்களுக்காக, பின்தங்கிய மக்களுக்காக செயல்படுத்திக்கொண்டு வந்திருக்கின்ற புரட்சித்தலைவி அவர்கள் இன்னும் பல்வேறு உலக சாதனைகளைப் படைத்து வருகிறார் கள் என்பதை கடந்த சில பல நிகழ்வுகளை வைத்து இந்த மாமன்றத்திலே சொல்லியாக வேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ஒப்பற்ற நம்முடைய மறைந்த புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவிடத்தை இன்றைய தினம் மெரினா கடற்கரையிலே கட்டி அழகு பார்க் கின்ற ஒரு சூழ்நிலையைப் படைத்திருக்கிறார்கள். நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கே வந்து புரட்சித் தலைவர்



அவர்களுடைய நினைவிடத்தை வணங்கிச் செல்கின்ற காட்சியை நாம் பார்க்கிறோம். வங்கக்கடல் பெரிதா அல்லது அதற்குப் பக்கத்திலே இருக்கிற புரட்சித் தலைவர் நினைவிடத்திலே இருக்கிற மக்கள் கூட்டம் பெரிதா என்கின்ற அளவிலே, புரட்சித் தலைவி அவர்கள் அதனை நிர்மாணம் செய்திருக்கிறார்கள். உலக நாடுகளிலே உள்ள நினைவிடங்களையெல்லாம் விட மிகச் சிறப்பானது என்று சொல்லக் கூடிய அளவிலே அது அமைந் திருக்கின்றது என்கிற பெருமையை நாங்கள் நெஞ்சுயர்த்தி, சொல்லிக் கொள்ள முடியும். குறுகிய காலமான ஓராண்டுக்குள் ஏறத்தாழ, 1.55 கோடியில் அப்படிப்பட்ட நினைவிடத்தை திறந்து வைத்திருக்கின்ற அந்த மாபெரும் சாதனை நிகழ்ச்சியை நடத்திக் காட்டியவர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12.15

அத்தனையும் மிஞ்சுகின்ற வகையில் இன்றையதினம் சர்வ தேச விளையாட்டு அரங்கம்— சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் மெட்ரோபாலிட்டன் சிட்டி என்று சொல்கிறோம். இந்த நகரத்தில் கிரிக்கெட் ஸ்டேடியத்தைத் தவிர வேறு ஸ்டேடியம் இதுவரை கிடையாது. அரசாங்கத்தினுடைய சார் பில் இப்படியொரு விளையாட்டு அரங்கம் இல்லாத காரணத் தினாலே பல்வேறு சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் எல் லாம் இங்கே நம்முடைய சென்னையிலே நடத்த முடியாத சூழ்நிலை இருந்தது. எனவே, இதையெல்லாம் கருத்திலே கொண்டுதான், கால்பந்து போட்டியை—அந்த சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் இங்கே நடத்தப்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, இன்று மிகப் பெரிய தொகையை அதற்கு என்று செலவழித்து இன்றையதினம் உலகப் பெரிய சாதனை யாக, குறுகிய காலமான 7 மாதத்திற்குள் கட்டிய சாதனையை நம்முடைய புரட்சித் தலைவி அவர்களைத் தவிர, எந்த மாநிலத்தைச் சார்ந்தவர்களும், எந்த முதல் அமைச்சரும் செய்திருக்கவும் முடியாது, இனியும் செய்ய முடியாது என்று திட்டவட்டமான அந்த சூழ்நிலையை நான் சொல்லியாக வேண்டும். எனவே, இப்படிப்பட்ட இமாலய சாதனைகளை நாங்கள் இங்கே கோடிட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறபோது, உண்மையிலேயே கட்சிமாச்சரியங்களை மறந்து அவருக்கு வாழ்த்தி ஆதரவு தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் திட்டச் செலவினங்களைப் பொறுத்த வரையில், ஏழை எளிய மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டமாக இருந்தாலும் சரி, அல்லது ஏழை எளிய மக்களுக்குப் போய் சேருகின்ற பல்வேறு நலத் திட்டங்களாக இருந்தாலும் சரி, திட்டங்களில் போடப்படுகின்ற செலவுகளை மிஞ்சக்

[திரு. ச. காந்திராஜன்] [1993 பிப்ரவரி 8

கூடிய வகையில், குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், 1991-92 ஆம் ஆண்டிலே ஏறத்தாழ 1,605 கோடி ரூபாய் திட்டச் செலவு என்று நாம் நிர்ணயித்திருந்தோம். இருந்தாலும் கூட அதை மிஞ்சக்கூடிய வகையிலே 50 கோடி ரூபாய் செலவு செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கின்றோம். ஏழை எளிய மக்களுடைய கோரிக்கைகளை இன்றையதினம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிற, ஏழைகளினுடைய இதய தெய்வமாக விளங்கிக் கொண்டிருப்பவர் நம்முடைய புரட்சித் தலைவி என்பதை அவர்கள் நிரூபித்து காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் அவர்களுடைய கடந்த ஆண்டு செயல்பாடுகளை, நடவடிக்கைகளை, இந்த கவர்னர் உரையில் சொல்லியிருப்பதை நாங்கள் உண்மையிலேயே வரவேற்கின்றோம்.

இதற்கும் மேலாக அதாவது 1992 ஆம் ஆண்டின் கடைசி மாதங்களில் தென் மாவட்டங்களில் புயல் வெள்ளம் ஏற்பட்டது. அதனுடைய சீற்றத்தின் காரணமாக பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பயிர்கள் எல்லாம் நாசமாயின, ஆயிரக் கணக்கான மக்கள் வீடு இழந்து தவித்துக் கொண்டிருந்த மோசமான நிலைமையை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். இருந்தாலும் கூட உடனடியாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நேரடியாக அந்த இடத்திற்கே சென்று அங்கே 3 நாட்கள் முகாமிட்டு, அவர்களுக்கு வேண்டிய வெள்ள நிவாரண உதவிகளையெல்லாம் நேரிடையாக செய்தார்கள் என்று சொல்லுகின்றபோது உண்மையிலேயே இந்த விவசாயிகள் மத்தியிலே, தன்னுடைய நாட்டு குடிமக்கள் மத்தியிலே எவ்வளவு தூரம் சகஜமாக கலந்து கொண்டு, அவர்களுடைய துயர்களிலும் பங்கு கொள்கின்ற ஒரு உணர்வை கொண்டிருக்கிறார்கள் என்பதை எல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த மக்களுக்கு ஏற்பட்ட துயர்களை எல்லாம் களைகின்ற வகையில் உறுதுணையாக நின்று, உரங்களாக இருந்தாலும் சரி, இன்னும் பல்வேறு வகையான கடன்களாக இருந்தாலும் சரி, உடனடியாக அவர்களுக்கு எல்லாம் அந்த உதவிகளை செய்து, இன்றையதினம் ஏழை மக்களுடைய, விவசாயப் பெருங்குடி மக்களுடைய நெஞ்சங்களில் நிறைந்து இருக்கின்றவர், புரட்சித் தலைவி அவர்கள் என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்டியிருக்கின்ற ஒரு சூழ்நிலையை பார்க்கின்றோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் மத்திய அரசாங்கமும் இயற்கைச் சீற்றத்தை பொறுத்தவரை மனித நேயத்தோடு உதவ வேண்டுமென்ற கோரிக்கையை இந்த ஆளுநர் உரையில் சொல்லியிருக்கின்றார்கள்.

ஆனால் அதே நேரத்தில் மற்றொன்றையும் அவர்கள் ஆளுநர் உரையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திடம் நாம் உதவி கேட்டபோது, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இங்கே வந்தபோது 50 கோடி ரூபாய் தருகிறோம் என்று சொன்னார்கள். சொன்னாலும் கூட மத்திய



1993 பிப்ரவரி 8] [திரு. ச. காந்திராஜன்]

அரசாங்கத்திலேயிருந்து மாநிலத்திற்கு வரவேண்டியப் பங்காக, வரக்கூடிய வரித் தொகையிலேயிருந்து அது சரி செய்யப்படும் என்று சொல்லியிருப்பது உண்மையிலேயே வருத்தம் அடையக் கூடிய ஒன்றாகும்.

அதுமட்டுமல்லாமல் விலைவாசியைப் பற்றி நான் ஒன்று சொல்லியாக வேண்டும். இன்றையதினம் பல்வேறு இடங்களில் அது சட்டமன்றமாக இருந்தாலும் சரி, அல்லது வெளியிடங்களாக இருந்தாலும் சரி அல்லது பொறுப்புள்ள மத்திய அமைச்சராக இருந்தாலும் சரி, பல்வேறு கோணங்களிலே நமது அரசைக் குற்றம் சாட்டி பேசி வருகிறார்கள். அரிசி விலையைப் பொறுத்த வரையில் ஒரு குறிப்பிட்ட கருத்தை மட்டும் நான் சொல்லியாக வேண்டும். இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான், மேட்டூர் அணை மூன்று முறை நிரம்பிய காட்சியை நாம் பார்க்கிறோம். 13 ஆண்டுகளுக்குப் பிறகு பவானி அணை நிரம்பி வழிந்த காட்சியைப் பார்க்கின்றோம். நான் இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நான் சார்ந்திருக்கின்ற வேடசந்தூர் தொகுதியினுடைய குடகனார் அணை கட்டிய உடனே, கட்டித் திறப்பதற்கு முன்பே உடைந்துவிட்டது. இந்த அணையானது மீண்டும் 15 ஆண்டுகளுக்குப் பிறகு நிரம்பிய காட்சியைப் பார்க்கிறோம். இப்படி இயற்கை அன்னை நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுக்கு வரப்பிரசாதமாக கொடுத்திருக்கின்ற சூழ்நிலை இருந்தும், இங்கே விவாயிகளுடைய உற்பத்திகள் மிக அதிக அளவிலே இருந்தும் கூட இன்றையதினம் நாம் அரிசி விலையைக் குறைக்க முடியவில்லை.

அரிசி விலையைக் குறைக்கின்றோம் என்று சொல்கிறபோது அதற்கு மாநில அரசைக் காரணமாகச் சொல்ல முடியாது. மத்திய அரசினுடைய கையிலேதான் அரிசி விலையை நிர்ணயிக்கின்ற உரிமைகள் இருக்கின்றன. 'எஸன்ஷியல் கமோடிட்ஸ் ஆக்ட்' என்ற 1955 ஆம் ஆண்டுச் சட்டம் மத்திய அரசுக்கு அதிகாரங்களைக் கொடுத்து இருக்கிறது. அந்த வகையில் அரிசி விலையைப் பொறுத்தவரையில் கடந்த சில தினங்களுக்கு முன்பாக மத்திய அரசு மீண்டும், தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களையோ, அல்லது இந்த ஆட்சியையோ கலந்துகொள்ளாமல் அரிசி விலையை உயர்த்தி இருக்கிறார்கள் என்று சொன்னால் அது அவர்கள் இந்தப் தமிழக மக்களுக்கு இழைக்கின்ற தீங்கு என்பதைத்தான் நான் சொல்லியாகவேண்டும்.

[திரு.ச. காந்திராஜன்] [1993 பிப்ரவரி 8

**பிற்பகல் 12–20**

இன்று சட்டமன்றத்தில் நான் சொல்கிற இந்தப் பிரச்சினைகள் பற்றிச் சில குறிப்புகளைச் சொல்வது எனது கடமையாகும். இங்கே நம்முடைய மைய அரசு நெல் கொள்முதல் விலையைப் பொறுத்தவரையிலும் 1992—93 ஆம் ஆண்டுக்கு கொடுத்த கொள்முதல் விலை சாதாரண ரக அரிசிக்கு 270 ரூபாய். ஆனால் அதே நேரத்தில் நாம் அதற்கும் மேலாக அந்த விவசாயிகளுடைய நன்மையைக் கருதி அவர்களுக்கு இன்செண்டிவ் என்ற பெயரில் 35 ரூபாய் சேர்த்துக் கொடுக்கிறோம். எனவே மத்திய அரசு 270 கொடுத்தாலும் கூட நாம் 305 ரூபாய் கொள் முதல் விலை கொடுக்கிறோம். இப்படிப்பட்ட வகையில் கூட நமக்கு இழப்பு ஏற்படுகிறது. இருந்தாலும் கூட அவற்றை எல்லாம் மிஞ்சுகிற வகையில் இதுவரையில் பொதுமக்கள் நலன் பாதிக்கப்படக்கூடாது. ஏழை எளிய மக்களின் நலன் பாதிக்கப்படக்கூடாது, அவர்கள் வாங்குகிற அரிசியின் விலையை நாம் உயர்த்தக் கூடாது என்று சொல்லி பல்வேறு நேரங்களில் மத்திய அரசு அரிசி விலையை உயர்த்தியபோது கூட, ஏன் கடந்த ஆண்டு உயர்த்திய போது கூட நம்முடைய ஒப்புயர்வற்ற புரட்சித் தலைவி இந்த மாமன்றத்தில் ஒன்றை அறிவித்தார்கள். மத்திய அரசு விலையைக் கூட்டியிருந்தாலும் கூட நாங்கள் அதே விலையைத் தொடர்ந்து தருகின்றோம் என்று சொல்லி சாதாரண ரகம் 2 ரூபாய்க்கும், சன்னரகம், மிகச் சன்ன ரகம் 3.00 ரூபாய்க்கும் தொடர்ந்து வழங்கி வந்தார். அப்படிப்பட்ட வகையில் இந்த அரசு கடந்த மாதம் வரை ஏறத்தாழ 360 கோடி ரூபாயை மானியமாகக் கொடுக்கிற சூழ்நிலை இருந்து வந்தது. அதற்குப் பின்னால் சமீபத்தில் மத்திய அரசு விலையை மீண்டும் உயர்த்திய காரணதால், நாம் ஏதாவது ஒரு வகையில் சரிக்கட்டி, ஏதாவது ஒரு வருமானத்தின் மூலம் சரிக்கட்டி, ஏழை எளிய மக்களுக்கு மீண்டும் அதே விலையில் வழங்கலாம் என்று சொன்னாலும் கூட எந்த வகையிலும் அதற்கான வருவாய் இல்லை. எந்த வகையிலும் அதைச் சரிக்கட்ட முடியாது என்கிற இக்கட்டான சூழ்நிலையில் மன வேதனையோடு புரட்சித் தலைவி அவர்கள் 2 ரூபாய் 75 காசு என்று சொல்லி இருக்கிறார்கள்.

இருந்தாலும் கூட பலபேர்கள் இன்றயைதினம் அரிசி விலையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கெல்லாம் மெத்தபணிவோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொறுப்புள்ள தலைவர்கள் கூட சில ப்பர் கேட்கிறார்கள். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். காலத்தில் கூட மத்திய அரசு அரிசி விலையை உயர்த்தியது,



1993 பிப்ரவரி 8] [திரு. ச. காந்திராஜன்]

ஆனால் புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் உயர்த்
தியது இல்லை என்று சொன்னார்கள். நான் தயவுசெய்து
சிந்திக்க வேண்டுகிறேன். 1980—81 ஆம் பொது வினி
யோகத்தில் அதாவது பி.டி.எஸ். சிஸ்டத்தில் கொடுக்கப்பட்ட
அரிசியுனுடைய அளவு 1.35 இலட்சம் டன். அதற்கு
மானியமாக புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். அவர்கள்
கொடுத்த தொகை ஒரு கோடியே 85 இலட்சம்தான்.
எனவே தயவு செய்து ஒப்பிட்டுபார்க்க வேண்டுகிறேன்.
நாம் தற்போது கொடுக்கிற தொகை என்ன? தற்போது
பி.டி.எஸ். சிஸ்டம் மூலமாக வழங்கப்படுகிற அரிசியுனுடைய
அளவு என்ன என்பதைச் சிந்திக்க வேண்டுகிறேன்,
1992—93 ஆம் ஆண்டுக்கு 18 இலட்சம் டன் நாம் பொது
வினியோகத்திற்காகக் கொடுத்திருக்கிறோம். மானியமாக 360
கோடி ரூபாய் நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு
கோடியே 81 லட்சம் ரூபாய் எங்கே இருக்கிறது? 360
கோடி ரூபாய் எங்கே இருக்கிறது? இந்த வித்தியாசத்தைச்
சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

அதுமட்டுமல்ல. இதைப் பற்றி பொறுப்புள்ள மத்திய
அமைச்சர் ஒருவரும் சொல்கிறார். அரிசி விலை சம்பந்தமாக
பக்கத்தில் இருக்கிற ஆந்திராவின் விலையை நீங்கள் காட்ட
வில்லையே என்று சொல்கிறார்கள். நான் சொல்கிறேன்.
கடந்த டிசம்பர் மாதத்தில் ஆந்திராவில் அரிசிக்குக்
கொடுக்கப்பட்ட வினியோக விலை என்ன என்பதை அவர்
சிந்தித்துப்பார்க்கவேண்டும். என்று ஆந்திராவைப் பொறுத்த
வரையில் அது அரிசி அதிகம் விளையக்கூடிய மாநிலம்.
தமிழகத்தை விட மிக அதிகமான அரிசி உற்பத்தி செய்
கின்ற மாநிலம் அது. இருந்தாலும் கூட கடந்த டிசம்பர்
மாதம் வரை அவர்கள் கொடுத்து வந்த விலை என்ன?
சாதாரண ரகத்தை அவர்கள் 3 ரூபாய் 50 காசு கொடுத்தார்
கள். சன்ன ரகத்திற்கு 3 ரூபாய் 50 காசு ; மிகச் சன்ன
ரகத்திற்கும் 3 ரூபாய் 50 காசு. இதை யெல்லாம் அவர்கள்
யாருக்குக் கொடுக்கிறார்கள் என்று சொன்னால் 500
ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ள கார்டு
தாரர்களுக்குத்தான். அவர்களுக்குத்தான் அரிசி கொடுக்கப்
படுகிறது. ஆனால் நம்முடைய ஆட்சியில் அப்படி அல்ல.
தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சி தலைவி
அவர்களுடைய ஆட்சியில் ஏறத்தாழ 18 இலட்சம் டன்-ஐ
அவர்கள் இன்கம்டாக்ஸ் கட்டுகிறவர்களாக இருந்தாலும்
சரி, கார்டு வைத்திருந்தால் அவர்களுக்கும் கொடுக்கிற
சூழ்நிலையை தமிழகத்தில் நாம் கொண்டு வந்திருக்கிறோம்.
எனவே ஆந்திராவில் இருக்கிற நிலைமையை ஒப்பிட்டுப் பார்க்கிற
போது 500 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்கள்
கார்டு வைத்திருந்தால் கொடுப்பது போல் நாமும்
அரிசி கொடுக்கலாம் என்று சொன்னால் நிச்சயமாக

தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் அரிசி வழங்க முடியும். அந்த நல்ல நடவடிக்கையை நாமும் செய்ய முடியும். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையின் காரணமாக அரிசியினுடைய விலை உயர்வினை ஏற்றுவது என்பது தவிர்க்க முடியாத சூழ்நிலையாக இருக்கிறது என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே தெள்ளத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12.25

மேதகு ஆளுநர் உரையில் தரப்பட்டுள்ள நமது தொழிற் கொள்கையைப் பொறுத்த அளவிலே, நான் ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த கவர்னர் உரையிலே மிகத் தெளிவாக புரட்சித் தலைவியினுடைய அரசின் தொழில் கொள்கைப் பற்றி மிகச் சிறப்பாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. அதனுடைய எதிர்கால கொள்கையில் ஏறத்தாழ 2 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் ஆரோமேடிக் தொழிற்சாலையை இன்றைய தினம் துவக்குவதற்கான செயல் டுகளை அறிவித்திருக்கிறார்கள். அதன் மூலமாக அது கிட்டத்தட்ட முழுமையடைகிறபோது துணைத் தொழில்கள் எல்லாம் செய்கின்றபோது, ஏறத்தாழ 70 ஆயிரம் மக்களுக்கு வேலை கிடைக்கும் என்கிற ஒரு நல்ல செய்தியை இந்த கவர்னர் அவர்களுடைய உரையின் வாயிலாக நாம் அறிய முடிகிறது. எனவே இப்படிப்பட்ட வேலையில்லாத் திண்டாட்டமிக்க தமிழகத்திலே, இத்தகைய பெரிய தொழிற்சாலைகளை கொண்டுவருவது நயக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அறிவித்திருக்கின்ற ஒரு சூழ்நிலையை நான் வரவேற்கிறேன். இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். மாண்புமிகு பிரதமர் ஜான் மேஜர் அவர்கள், பிரிட்டிஷ் பிரதமர் அவர்கள் சில தினங்களுக்கு முன்பாக டெல்லிக்கு வந்திருந்தார்கள். அப்படி வந்தபோது, அவர் அங்கே குடியரசு தின விழாவினுடைய சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார் அது மட்டுமல்ல ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாய்க்கு, அங்கே முதலீடு என்று சொல்லி, இந்தியாவில் தங்கள் நாட்டின் முதலீடாக, வர்த்தகத்திலே கையெழுத்திட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையை இங்கிலாந்திலே இருக்கின்ற பத்திரிகைகள் எல்லாம் பாராட்டுகின்றன. காரணம் இன்றைய தினம் இங்கிலாந்திலே இருக்கின்ற பொருளாதார நிலைமை, மிகவும் வீழ்ச்சியான சூழ்நிலையில் இருந்துக் கொண்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் இப்படிப்பட்ட ஒரு ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு என்பதை பாராட்டுகின்ற பல்வேறு பத்திரிகைகள் இருக்கின்றன. ஆனால் நான் ஒன்று சொல்லிக்கொள்கிறேன். ** இங்கே இருக்கின்ற நம்முடைய மரியாதைக்குரிய தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி



அவர்களுடைய இப்படிப்பட்ட சீரிய திட்டங்களுக்கு உங்களுடைய ஆதரவைத் தாருங்கள். அவர் இப்படிப்பட்ட திட்டங்களை செய்கின்றபோது நீங்கள் எல்லாம் அந்த பத்திரிகைகளின் வாயிலாக அவர்களுடைய செயல்பாட்டைப் பாராட்ட வேண்டும். ** ஏதோ சாதாரணமாக, **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. பத்திரிகையாளர்களை விளித்துப் பேசக்கூடாது என்று ஒரு விதி இருக்கிறது.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் : ** என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ச. காந்திராஜன் : ** என்று சொல்லவில்லை. **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **என்ற வார்த்தையே அவைக்குறிப்பிலே இருக்கக்கூடாது.

திரு. ச. காந்திராஜன் : அல்ல, அல்ல. அந்த மாதிரி அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்கே இருந்தாலும் அந்த வார்த்தை இங்கே வேண்டாம்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாதிரி ஏதோ அவர்கள் நடத்துகின்ற ஒரு சாதாரண தெருக் கூத்துக்களுக்கு கொடுக்கின்ற ஒரு முக்கியத்துவத்தை கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இப்படிப்பட்ட திட்டங்களைச் சொல்கின்றபோது கொடுக்கவில்லையே என்கின்ற மனவேதனை என்னைப் போன்ற ஆளுங் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பலமுறை வந்ததுண்டு. எனவே எதிர்காலத்திலே இப்படிப்பட்ட நல்ல திட்டங்களைக் கொண்டு வருகிறபோது, நீங்கள் ஆதரவு தரவேண்டும் என்ற வகையிலே நான் இந்த கவர்னர் உரையை வரவேற்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

இந்த திட்டங்களைப் பற்றிச் சொல்கின்றபோது, இந்த தொழில்களைப்பற்றி கூறுகின்ற போது, தொழில்களுக்கு முக்கியமானது மின்சாரம். மின்சாரத்தைப் பொறுத்த அளவிலே இன்றைய தினம் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஏறத்தாழ 3 ஆயிரம் கோடியிலே பல்வேறு மின் திட்டங்களைப்பற்றி சொல்கிறார்கள். எனவே, அந்த வகையிலே தனியார் முதலீடாகவும், பொதுத்துறை நிறுவனமாகவும் பல்வேறு உற்பத்தி நிறுவனங்களை சொல்கின்றபோது, இது முழுமை அடைகிறபோது உண்மையிலேயே எதிர்காலத்திலே தமிழகம் ஒளிமயம், ஒளிமயம் என்று சொல்கின்ற வார்த்தை ஜாலங்களாக அல்லாமல், உண்மையிலே இந்த திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றபோது தமிழகம் உண்மையாகவே ஒளிமயமான எதிர்காலத்தை எட்டும் என்பதில் ஐயமில்லை என்கின்ற அளவில் வரவேற்பினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் பெண்களுடைய பாதுகாப்பைப் பொறுத்த அளவிலே தமிழக அரசு, நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் புதிய திட்டமாக, புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை, தொடங்கியிருக்கிறார்கள். உண்மையிலேயே கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கின்ற இந்தக் கருத்துக்கள் பெண்களை பொருத்த அளவில், எதிர்காலத்திலே ஒரு மறுமலர்ச்சி மிக்க சமுதாயமாக, வாழ்க்கையிலே ஒதுக்கப்பட்ட பெண்கள், தாழ்த்தப்பட்ட பெண்கள், ஏழையெளிய பெண்கள், இவர்களுக்கெல்லாம் வாழ்க்கையில் ஒளி விளக்கு ஏற்றுகின்ற திட்டமாக இந்த திட்டம் அமையும் என்பதிலே சந்தேகம் இல்லை. அதனை வரவேற்கிறோம். அதேபோல, அரசு தொட்டில் என்கின்ற அந்த திட்டத்தையும் கொண்டு வந்திருக்கின்றார்கள். அந்த சிறப்புமிக்க நிகழ்ச்சியை கவர்னர் உரையிலே சொல்லியிருப்பதையும் ஆளுங்கட்சியினுடைய சார்பாக வரவேற்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக கடைசியாக இந்த உபரி நிலமாக உள்ள, உபரி நிலம், பினாமி நிலம் ஒழிப்பு சட்டங்களை ஏற்கனவே புரட்சித் தலைவருடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி அது அங்கேயிருந்து மறுபடியும் திரும்பி வந்துவிட்டது. இருந்தாலும்கூட 1991 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் மறுபடியும் அந்த உபரி நில உரிமை மாற்றங்களை செல்லாததாக்க கோரும் சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். ஏற்கனவே இங்கே சட்டமுன் வடிவை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறோம்

மத்தியிலே இருக்கிற அமைச்சர்கள் சிலர் கேட்கிறார்கள். மாநிலத்தின் பல்வேறு திட்டங்கள் கிடப்பில் கிடந்தால் எங்களிடத்திலே சொல்லுங்கள் என்று கேட்கிறார்கள். எனவே இன்று



மத்தியில் நிலுவையாக உள்ள இப்படிப்பட்ட பல்வேறு சட்டங்களுக்கு எல்லாம் மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெற்றுத் தாருங்கள் என்று நான் அவர்களைப் பார்த்து கேட்டுக் கொள்கிறேன். இப்படி சிறப்புமிக்க, இன்னும் சொல்லப் போனால் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதுபோல, சுகாதாரத் துறையிலே சொல்லியிருப்பதுபோல, சுகாதாரத் துறையைப் பொறுத்த அளவிலே, கிராமப்புற மக்களுக்காக ஏற்கனவே நேரடியாக கிராமங்களுக்குச் சென்று அங்கு மக்கள் நல்வாழ்வுத் திட்டம் என்று சொல்லி, கிராமப்புறத்துக்கே டாக்டர்கள் செல்கின்ற அளவுக்கு சிறப்புமிக்க திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி கடந்த காலத்திலே 41 லட்சம் பேர் பயன் அடைகிற அளவுக்கு ஒரு பெரிய சாதனையைச் செய்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12-30

அதோடு இலவச வேட்டி, இலவச சேலை வழங்குகின்ற திட்டங்களுக்கு எல்லாம் கடந்த ஆண்டைப் போல இந்த ஆண்டும் தொடர்ந்து 45 கோடி ரூபாய், பொங்கல் நாளில் [illegible] பகுப்பினருக்கு எல்லாம் பெருநாளில் [illegible] செய்திருக்கிறார்கள். இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் மீனவர்களுக்கு என்று சொல்லும்போது இறால் வளர்ப்புத் திட்டங்களும், அதுபோல கிராமப் புறங்களில் இருக்கின்ற ஏழை விவசாயிகளுக்காக பால்மாடுகளை வைத்து வளர்க்கின்ற பால் பெருக்குத் திட்டங்களையும், இப்படி பல்வேறு திட்டங்களை நம்முடைய ஆளுநர் உரையிலே தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே, இப்படி ஒவ்வொன்றையும் சொல்லும்போது ஒவ்வொன்றும் தனித்தனி சிறப்புமிக்க அம்சமாக இருந்தாலும் பேரவைத் தலைவரின் ஆணையை ஏற்று. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நெடு நேரம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். குறுகிய காலம் என்று சொல்லி வருத்தப்பட வேண்டியதில்லை.

திரு. ச. காந்திராஜன்: எனக்கு அனுமதிக்கப்பட்ட நேரத்தில் இந்த மாண்புமிகு எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் என்னுடைய நேரத்தை எடுத்துக் கொண்டார்கள். எனவே நான் கேட்கிறேன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இன்னும் சிறிது நேரம் கொடுக்கவேண்டும். ஏனென்றால் நான் கவர்னர் உரையிலே சொல்லவேண்டிய கருத்துக்களை முழுமையாகச் சொல்லியாக வேண்டும்.

[திரு. ச. காந்திராஜன்] [1993 பிப்ரவரி 8

எனவே, கவர்னர் உரையை படித்துள்ள மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், உறுப்பினர்களும் நமது முதல் வரின் மகத்தான சீரிய திட்டங்களையும், அயோத்தியா பிரச்சினை யிலிருந்து அரிசி பிரச்சினை வரை பல்வேறு திட்டங்க ளோடு நம் புரட்சித் தலைவி அவர்கள் சொல்லுகின்ற சீரிய கருத்துக்களின் காரணமாக இந்த தமிழகத்தில் ஒரு புதிய சமுதாயத்தை சகாப்தத்தை படைக்கின்ற அளவுக்கு புதிய திட்டங்களை அவர்கள் கவர்னர் உரையிலே சொல்லி யிருக்கின்ற காரணத்தால் உரையின் அனைத்து கருத்துக்களை யும், கடந்தகால அரசின் நடவடிக்கைகளையும், ஏற்றுக் கொண்டு தமிழக மக்களும், இந்த மாமன்றமும் இணைந்து அவர்களுடைய கரத்தினையும், நல்லாட்சியையும் வலுப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே என்னுடைய வேண்டுகோளை விடுத்து சுருங்கக் கூறின் இந்த கவர்னர் உரையில் கூறப்பட் டுள்ள கருத்துக்கள் தங்கக்குடத்திலே நிரப்பி வைக்கப்பட் டுள்ள சுவைமிக்க பாதாம்பால், வண்ணமலர்கள் அடங்கிய பூந்தோட்டம் என்று கூறி இந்தத் தீர்மானத்தை நான் முன் மொழிகின்றேன்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, பாய்ண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. காந்திராஜன் பேசுகிறபோது கிட்டு அவர்கள் தமிழக எல்லையில் பிடிபடவில்லை என்று சொன்னார்கள். விடுதலைப் புலிகளும் அப்படித் தான் சொல்கிறார்கள். ஆனால் மத்திய அரசாங்கமும், இந்திய கடற்படையும் அவர்கள் இந்திய எல்லையில் பிடிபட்டதாகத்தான் சொல்கிறார்கள். அந்த சமயம் முதல்வர் அவர்கள் அவையிலே இல்லை. இப்போது வந்திருக்கிறார்கள். எனவே அதற்கான நல்ல விளக்கத்தை அளிப்பார்களா என்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சர் அவர்கள் பதில் உரையின்போது எல்லாமே அளிப்பார்கள். (குறுக்கீடு) அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னார்கள். இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. (குறுக்கீடு) பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அவர் கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னதால், இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல என்று சொன்னேன். திருநாவுக்கரசு இதிலே உங்களுக்கு சம்பந்தம் இல்லை, உட்காருங்கள். இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. திரு. குமரி அனந்தன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஆளும் கட்சியின் சார்பிலே முன்மொழிந்து இங்கு பேசுவதற்கு முதல் நபராக என் கருத்துக்களைச் சொல்வதற்கு என்னை



1993 பிப்ரவரி 8] [திரு. குமரி அனந்தன்]

அனுமதித்து இருக்கின்ற உங்களுக்கும், என்னை இந்தப் பணியைச் செய்ய அனுமதித்து இருக்கின்ற என் கட்சி உறுப்பினர் களுக்கும், தலைவர்களுக்கும் முதலிலே நன்றி தெரிவிக்கிறேன். ஏறத்தாழ காந்திராஜன் அவர்கள் $1\frac{1}{4}$ கால் மணி நேரம் இங்கே தன்னுடைய உரையை ஆற்றியிருக்கிறார்கள்.

இந்த சட்டமன்றப் பேரவையிலே ஆளுநர் அவர்கள் வைத்த உரையிலே இருக்கிற நல்ல கருத்துக்கள் எங்கள் கண்களிலே படுகிறபோது எல்லாம் எங்கள் தோழமை கட்சி ஆளுகிறபோது இவ்வளவு சிறப்புகள் இருக்கின்றனவே என்று நாங்கள் பூரித் துப் போகிறோம். தோழமைக் கட்சிக்கு வருகின்ற பெருமை எல்லாம் எங்களுக்கும் வருவதாகவே நாங்கள் கருதுகிற கார ணத்தினாலே, ஆளுநர் உரையிலே அவர்கள் சொல்கிறபோது ஆரோமாட்டிக் தொழிற்சாலை 2 ஆயிரம் கோடி ரூபாயிலே வருகிறது. பல்வேறு காலக் கட்டங்களிலே அது சொல்லப் பட்டதாயினும் தொடர்ந்து முயற்சியினை மேற்கொண்டு நமது தமிழக அரசு அதனைப் பெற்றிருப்பதும், அதற்கு முதல்வர் அவர்கள் மிகப் பெரிய முயற்சி எடுத்திருப்பதும் எல் லாம் இங்கே அவர்களால் சொல்லப்பட்டது மட்டுமல்ல. ஆளுநர் உரையிலேயேயும் சொல்லப்பட்டிருக்கிறது. 70 ஆயிரம் பேர் வேலை பெறுகிறார்கள். இவ்வளவு பேர்கள் வேலை பெறுகின்ற ஒரு வாய்ப்பு வரும் என்று சொன்னால் அது மகிழ்ச்சிக்குரியது தான்.

பிற்பகல் 12-35

அதைப்போல பல்வேறு காலங்களிலே சிக்கலா பின்னிக் கிடந்த பின்னி தொழிற்சாலையினுடைய பிரச்சினை யைக்கூட நம்முடைய அரசு தீர்த்து பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணி செய்துக்கொண்டிருப்பது மகிழ்ச்சி யான செய்திதான். எனவே பாராட்டுகிற செய்திகள் அவராலும் சொல்லப்பட்டது. ஆளுநர் அவர்களாலும் சொல்லப் பட்டது, ஆளுநர் அவர்கள் உரையிலிருந்து எங்களாலும் எடுத்துச் சொல்லப்படும். ஆனால் ஒரு நல்ல நண்பன் ஒரு நல்ல தோழன் என்று சொன்னால் இந்த ஆட்சிக்கு மேலும் மேலும் பெருமை வர வேண்டுமே, மற்றவர்கள் ஒன்றைச் சுட்டிக்காட்டுவதற்குள் நாமே அதைச் சுட்டிக் காட்டி விட்டால் அரசாங்கத்தால் அது செய்யப்படுமே, அப்படி என்றால் நம்முடைய மகிழ்ச்சி இன்னும் பூரணம் பெறுமே என்ற எண்ணம் எங்களைப் போன்றவர்களுக்கு வருவது உண்டு. சான்றாகச் சொல்வதாக இருந்தால் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு கோடி ரூபாய் சிறப்புத் தன்னிறைவுத்திட்டம் என்ற பெயரிலே நாம் தருகிறோம் ஒரு கோடி ரூபாய் என்று சொல்கிறபோது, அந்தப் பகுதியில் இருக்கிற எல்லா மக்களும் பயன்பெறுவார்கள் என்ற எண்ணம்

நமக்கு வருகிறது. ஆனால் இதிலே ஒரு சிறு சிரமம் என்னவென்று சொன்னால், ஏற்கெனவே பஞ்சாயத்து யூனியனிலே குடிநீர் வாரியத்தால் ஒரு செல்வு செய்யப்படும், அது குடிநீர் வாரியத்தின் கணக்கில் எழுதப்படும். மின் வாரியத்தால் ஒரு செலவு செய்யப்படும், அது மின் வாரியக் கணக்கில் எழுதப்படும். கிராமச் சாலைகள் கோட்டங்களில் இருக்கிற பணிகள் நடைபெறுகிறபோது அவைகள் அந்தத் துறைக் கணக்கில் எழுதப்படும். நாம் இப்போது எல்லாவற்றையும் ஒரே கணக்கிலே எழுதுகின்ற காரணத்தாலேதான் ஒரு கோடி ரூபாய் வந்ததா, இல்லையென்றால் ஏற்கெனவே கொடுப்பதைவிட கணிசமான அளவுக்கு நாம் அதிகமாகத்தான் கொடுத்திருக்கிறோமா, அந்த அளவுக்கு பணிகள் நடைபெற்றிருக்கிறதா என்று கண்காணிக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. ஒரு சின்ன உதாரணத்தைச் சொல்ல இருக்கிற கிராமங்களிலே தூவப்படுகிறது என்று சொன்னால் முளைத்து வந்திருப்பது எவ்வளவு, செழித்து வந்திருப்பது எவ்வளவு என்று நாம் பார்க்க வேண்டும். அப்படிப் பார்ப்பதற்கு சில நேரங்களிலே முடியாமல் போவதற்கு என்ன காரணம் என்றால், பாராளுமன்றத்திலே அது நிறைவேற்றப்பட்டு ஏப்ரல், மே மாதங்களில் அது மாநிலங்களுக்கு வந்துவிட்டாலும்கூட, உடனடியாக நம்முடைய அதிகாரிகளால் அது சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். ஏனென்றால் அதில் பெரும்பகுதி பணம், இந்த வேலையைச் செய்யுங்கள் என்று கொடுப்பது--அது மே மாதத்தில் வந்திருந்தாலும் கூட, ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்கள் எப்படியோ தள்ளிப்போய் அக்டோபர் மாதத்தில், மழைக் காலத்தில் போகிறது. அப்படிப் போகிறபோது கட்டிட வேலைகளாக இருந்தாலும் சரி, மற்ற பணிகளாக இருந்தாலும் சரி, அதனை விரைந்து முடிக்க வேண்டுமென்று வேகமாகச் செயல்படுகிறபோது பல நேரங்களில் அது நிறைவான வேலையாக அமைவதில்லை. நிறைவான வேலையாக அமையாமல் அடுத்த ஆண்டு வந்துவிட்டது என்றால், போன ஆண்டு இவ்வளவுதானே செலவழித்திருக்கிறீர்கள், இப்போது ஏன் பழைய அளவே கொடுக்க வேண்டும், உங்களால் செலவழிக்க முடிந்த அளவுக்கு கொடுத்தால் போதுமே என்ற எண்ணம் மத்திய விரசுக்குக்கூட வந்துவிடக் கூடும். நான் இதனை ஒட்டுமொத்தமாக அரசாங்கத்தினுடைய ஒரு நிலைப்பாடாக சொல்லவில்லை. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திலே அந்தந்த ஆண்டு நாம் முடிக்க வேண்டியது அந்தந்த ஆண்டு சரியாக அந்தந்த காரியங்களுக்கே--கூட எந்த காரியங்களுக்கு அது செலவழிக்கப்பட வேண்டுமோ அந்தக் காரியங்களுக்கு—செலவழிக்கப்பட்டிருக்குமானால் மிக்க செழிப்பு நமக்கு வருவதற்கு வாய்ப்பு உண்டு. அதை கண்காணிக்க வேண்டும். கண்காணித்து அது சரியாகப் போகிறதா என்று பார்க்க வேண்டும். ஏனென்றால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இல்லை.



தேர்ந்தெடுக்கப்பட்வர்கள். இல்லை தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள இல்லாத காரணத்தாலே என்ன சொல்லுகிறார்கள்? நான்தான் என்று யார் சொன்னாலும் அவர்களுடைய கை ஓங்கிவிடுகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இல்லாத காரணத்தால் இந்தப் பணிகள் செம்மையாக நடைபெறவில்லையோ என்ற ஐயப்பாடு எல்லோருக்கும் இருக்கிறது. நான் வரப்பிரசாதம் என்று சொன்னேன். பிரசாதம்கூட சூடாகக் கொடுத்தால் நல்லது என்கிற காரணத்தால், காலதாமதம் ஆகக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். ஏனென்றால் 1992 ஆம் ஆண்டு மூன்றாம் மாதம், 3 ஆம் தேதி நடைபெற்றிருக்க வேண்டிய பஞ்சாயத்துத் தேர்தல்கள் இன்னும் நடக்கவில்லை.

மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். மாநிலங்களுக்கு 'அதிக அதிகாரம் வேண்டும். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கூட ஒரு தடவை சொன்னார்கள், எல்லோரும் கூடியிருந்து, என்னென்ன அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்லுங்கள் என்று அவர்களே கேட்டார்கள். அதைப்போல மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கிறபோது, இருக்கிற அதிகாரத்தை நாம் சரியாக முதலிலே பயன்படுத்துகிறோமா என்று பார்க்க வேண்டும். ஜனநாயகம் என்பது படிப்படியாக மக்களுக்கு உரிமைகளைக் கொடுப்பது தான். 21 வயது வந்தவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை என்பது இந்தியாவினுடைய இளைய தலைவராக, இனிய தலைவராக இருந்த, நமக்கெல்லாம் வேண்டியவராக இருந்த, மரியாதைக்குரிய ராஜீவ் காந்தி அவர்கள் 18 வயது வந்தவர்களுக்கு அதைக் கொடுக்கிறபோது ஜனநாயகத்தின் எல்லை இன்று விரிவுபடுகிறது. அந்த ஜனநாயகத்தினுடைய கரங்கள் அனைவரையும் அணைத்துத் தொடுகிறது. அப்படிப்பட்ட ஜனநாயகத்தை விரிவுபடுத்திக் கொண்டே போகிறது. அதேபோல காங்கிரஸ் கட்சி ஆட்சி இருந்த காலத்தில் அந்த நாளிலே பஞ்சாயத்து தேர்தல் எந்தத் தேதியில் நடைபெற வேண்டுமோ அந்த நாளில் நடைபெற்றுவிடும். கூட்டுறவுச் சங்கத் தேர்தலா, அது நடைபெற்றுவிடும். எனவே இந்த வேரிலேயே ஜனநாயகம் செழித்து தழைத்து வளருவதற்குரிய சூழ்நிலையை ஒவ்வொரு தடவையும் காங்கிரஸ் ஆட்சி தன்னுடைய நிர்வாகத் திறமை என்ற நீரை ஊற்றி வளர்த்துக் கொண்டு வந்தது.

ஆனால் இப்போது இருக்கிற அரசாங்கம் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தத் தவறியது என்று நான் முதலிலேயே சொல்லவில்லை. கூட்டுறவுச் சங்கத் தேர்தலை முதலிலே நடத்தத் தவறியது என்று நான் சொல்ல வரவில்லை,

ஆனால் காங்கிரஸ் ஆட்சிக்குப் பிறகு அவைகள் ஒழுங்காக நடைபெறவில்லை என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள். அப்படி நடைபெறாத காரணத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்கள் இல்லாத காரணத்தாலே யாரோ ஒருவர் தவறிழைத்தாலும் கூட அந்தத் தவற்றை நாம் தொடர்ந்து கொண்டு செல்லக்கூடாது என்பதற்காக சொல்கிறேன். பல இடங்களில் பணி நடைபெறாமல் இருப்பதற்கு இது ஒரு காரணம். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இல்லாத காரணம். இப்போது நாம் அதைப் பார்க்கலாம், போகிற இடங்களில் எல்லாம் நாம் பார்க்கிறோம்.

பிற்பகல் 12-40

கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு பாதயாத்திரையாக நாங்கள் வருகிற வழியில் சிலவற்றைப் பார்த்தோம். அவைகளில் சிலவற்றை இங்கே கோடிட்டுக் காட்டிக் கொண்டு போவேன். ஏனென்றால் நடந்துவந்தபோது நான் குறிப்பு எடுத்ததை சிலவற்றையாவது சொன்னால் அது அமைச்சர் பெருமக்களுக்கும், குறிப்பாக முதலமைச்சர் அவர்களுக்கும் நேரடியாகப் போய்ச்சேரும் என்ற காரணத்திற்காக.

அப்படி பல இடங்களில் வருகிறபோது வாய்க்கால் எது, அதனுடைய வரம்பு எல்லை—கரை எது என்று தெரியாத அளவுக்கு வேலிக்காத்தான் போன்ற செடிகள் எல்லாம் மண்டிக் கிடக்கின்றன. அப்படி மண்டிகிடக்கின்ற நேரத்திலே சில இடங்களில் சமதளம் எது, குளம் எது என்று தெரியவில்லை குளம் எது என்று தெரியாத காரணத்தால், சிறிது மழை பெய்தாலும், குளத்தின் தரையைத் தொட்டு விடுகின்ற அந்தத் தண்ணீர் குடம் இருக்கிற வீட்டைப் போய் தொடுகிறது பிறகு வெள்ள நிவாரணம் என்று நாம் போக வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இவைகளுக்கெல்லாம் காரணம் ஒரு காலத்திலே ரெவின்யூ டிபார்ட்மெண்ட்டிலே இருந்த குடிமராமத்து என்பதை பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் 1963-லே பஞ்சாயத்து ஒன்றியங்களுக்குக் கொண்டுவந்தார்கள் அது டிபார்மெண்ட்டிலேயே போய் நின்று விடக்கூடாது என்பதற்காக பரவலாக்கப்பட வேண்டும் என்பதற்காக, குடிமராமத்து என்று சொல்லி, கிராமப்புற குடிமக்களையும் சேர்த்துக்கொண்டு செய்ய வேண்டுமென்பதற்காக அந்த குடிமராமத்துப் பணி அப்படி செய்யப்பட்டது. அப்படியிருக்கிற நேரத்தில், ஒரு பணி நடைபெறவில்லையென்றால் ஏன் இந்த ஆண்டு நடைபெறவில்லை என்று அவர்கள் கேட்பதற்குரிய வாய்ப்பும் இருந்தது. அந்த குடிமராமத்து போன்றவைகளை நாமே கொண்டு வரலாம். அதற்கு மத்திய அரசாங்கம் ஒன்றும் குறுக்கிடப்போவதில்லை. நம்மைப் பொறுத்தவரையிலும், நாமே அதை முடிவு செய்யலாம் என்பதற்காகச் சொல்லுகிறேன்.



பல இடங்களிலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்கள் இல்லாத காரணத்தால் என்ன செய்கிறார்கள்? நான் வருகின்ற வழியிலே ஒவ்வொரு இடத்திலேயும் பார்த்தேன். சில தோழர்கள் சாலை ஓரத்திலே இருக்கின்ற மண்ணை வெட்டி சாலைக்குப் பக்கத்திலே போட்டுக்கொண்டு இருந்தார்கள். அதாவது இந்தப் பக்கத்திலே வெட்டி, அந்தப் பக்கத்திலே போடுவது ஏன் என்று கேட்டேன். தார்ச்சாலைக்கும் இந்த மண் தரைக்கும் இடைவெளி இருக்கிறது. இடையிலே இருக்கிற மண்ணெல்லாம் மழையிலே கரைந்துபோய், விடுகிற காரணத்தால் சைக்கிளிலே போகிறவர்கள், வண்டியிலே போகிறவர்கள் எல்லாம் துன்புறுகிற காரணத்தால், அந்த இடைவெளியில்லாமல் நாங்கள் இட்டு நிரப்புகிறோம் என்று சொன்னார்கள் இங்கே இருப்பதை வெட்டி, இங்கேயே போடுவது என்று சொன்னால், ஒரு மழைக்கு இது தாங்காதே என்று சொன்னபோது, அப்படி இல்லை ஐயா நாங்கள் இன்னொரு இடத்திலே மண்ணை வாங்குவதாக ஒரு கணக்கு, அதை லாரியிலே ஏற்றியதாக ஒரு கணக்கு, அதை இங்கே கொட்டியதாக ஒரு கணக்கு, அப்படிக் கொட்டியதை இங்கே எடுத்து நிரப்புவதாக ஒரு கணக்கு என்றார்கள் (குறுக்கீடு)........ நான் நடந்ததைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு, எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள், குளங்களை சீர்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். (குறுக்கீடு) 1967-ம் ஆண்டிலிருந்து 1992 ஆம் ஆண்டு வரை எவ்வளவு வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்பதையும், சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னாலே 1967 வரை எத்தனை குளங்கள் தூர் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அவர்கள் தெரிவித்தால் நன்றாக இருக்கும் அதற்காகத்தான் யாரும் செய்யாத ஒரு திட்டமாக.... (குறுக்கீடு).... ஒவ்வொன்றுக்கும் நான் பதில் சொல்லியாக வேண்டும் இரண்டே இரண்டு விளக்கங்களைச் சொல்லியாக வேண்டும்.

குளங்களைச் சீரமைக்கவில்லை, தண்ணீரைச் சேமித்து வைக்க முடியவில்லை, வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறது என்பது ஒன்று. மற்றொன்று, சாலைப் பராமரிப்புப் பணி என்பது. இரண்டு குற்றச்சாட்டுக்களாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பதில் சொல்ல வேண்டியது இந்த அரசினுடைய கடமை இதற்காகத்தான் ஒரு பெரிய திட்டத்தை, ஏறத்தாழ ரூ. 804 கோடி திட்டத்தை இந்த அரசு செய்துள்ளது என்ற அளவுக்கு, கடந்த அக்டோபர் மாதம் புரட்சித் தலைவி அவர்கள் கையொப்பமிட்டு, மைய அரசுக்கு அனுப்பப்பட்டு, டிசம்பர் நவம்பர் மாதத்தில் அது

மாதத்திலே மைய அரசு உலக வங்கிக்கு அனுப்பி, ஜனவரி, மாதத்திலே உலக வங்கியின் ஒப்புதலைப்பெற்று, அந்தக் குழுவினர் இந்தியா முழுவதும் சுற்றிப் பார்த்து, எந்த மாநிலத்திற்குக் கொடுக்கலாம் என்று அந்தக் குழுவினர் சுற்றிப்பார்க்கிறபோது குஜராத்தும், தமிழகமும்தான் முன்னணியில் இருக்கிறது என்று அவர்கள் கண்டறிந்தார்கள். அதிலும் குஜராத்தைவிட தமிழ் நாட்டில்தான் சிறப்பாக பணிகள் நடைபெறுகின்றன என்று உலக வங்கி சொன்னதற்குப் பின்னாலே (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இந்தக் குளங்களை water consolidation project என்ற பாசன ஆதாரங்களை மேம்படுத்தும் திட்டத்தை—புரட்சித் தலைவி அவர்களுடைய எண்ணக் கிடக்கையிலே அந்தத் திட்டம் உதித்ததன் காரணமாகத்தான் ஐந்தே மாதத்திற்குள் 804 கோடி ரூபாயை புரட்சித்தலைவி அவர்கள் உலக வங்கியிடமிருந்து பெற்றிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகுஉறுப்பினர்கள் தெரிந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தத் திட்டம் செயலாக்கப்படுத்தப்பட்ட பின்—ஏனென்றால் அவருக்கும் தெரியும்—அனைத்துக் குளங்களையும் சீரமைக்க வேண்டும் என்றால் ஏறக்குறைய 40,000 குளங்கள்—ஒன்றல்ல, இரண்டல்ல—40,000 குளங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அதற்காக எத்தனை கோடி ரூபாய் பணம் வேண்டும் என்பதையும் அறிவார்கள் அதற்கு இந்த நிதி நெருக்கடியான நேரத்தில் அரசிடம் பணம் இருக்கிறதா என்பதையும் அவர்கள் அறிவார்கள். ஆகவே, அதற்காகத்தான் இந்தத் திட்டம் சாலைகளைப் பராமரிக்கிறபொழுது வெள்ள நிவாரண பணிகளை மேற்கொள்கின்றபொழுது, இங்கேயிருந்து மண்ணை வெட்டுவதற்காக சாலைப் பராமரிப்பிலே பணம் கொடுக்கப்படுவதில்லை. பக்கத்திலே இருக்கின்ற (side f n s) தார்ச்சாலைகளைப் போடுகின்றபொழுது புதிய முறையை உருவாக்கியவர்கள் புரட்சித் தலைவி. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தார் டின்னைக் கையிலே சுற்றிய காலம் உண்டு என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது.

இப்பொழுது (Plant) வைத்துச் செய்கிறோம் புதிய திட்டத்தை (குறுக்கீடு) ஆமாம், திட்டத்தை உங்களுக்கு நாங்கள் சொல்லியாக வேண்டும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தார் போட்ட சாலைகளுக்கு (குறுக்கீடு) இப்பொழுது சொல்லியாக வேண்டாமா? (கூச்சல்—குழப்பம்).

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே கருத்துக்களைச் சொல்லும்போழுது உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.





மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : குற்றச்சாட்டுக்களைச் சொல்கிறபொழுது கடந்த காலத்திலே நடந்த முறைகளையும், இப்பொழுது இருக்கின்ற முறைகளையும் நாங்கள் சொல்லியாக வேண்டும். கடந்த காலத்திலே என்ன முறை இருந்தது ? இந்த ஆட்சிப் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே எப்படி மாற்றியமைத்திருக்கிறோம் என்பதைச் சொல்ல வேண்டாமா ? குற்றச்சாட்டு என்பது ஒருவழிப் பாதை அல்ல; ஏற்கனவே இருந்த நிலைமைகளைத் தெளிவுபடுத்த வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கம்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய குற்றச்சாட்டுக்களுக்கு விளக்கம் சொல்கிற உரிமை அமைச்சருக்கு உண்டு.

Thiru S.R. Balasubramonian: He can rise on a point of order or on a point of clarification. But, he cannot go on speaking like this. (Interruption) He is charging the previous Governments. That is wrong.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்கு அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள். அப்படி பிரிவியஸ் கவர்ன்மென்ட்ஸ் எனறு சொல்லியிருந்தார் என்றால் பேசியிருக்க மாட்டார்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுது இந்த அரசு எடுத்திருக்கின்ற நவீன முறைகளை நான் சொல்லிகொண்டிருக்கிறேன். ஒரு காலத்திலே தார் டின்னைக் கையிலே வைத்து சுற்றிக்கொண்டு போடுகின்ற முறை வேறு. அது காங்கிரஸ் காலத்திலும் இருந்தது ; அதற்குப் பின்னாலும இருந்தது. ஆனால் நாம் வந்ததற்குப் பின்னாலே இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையை எடுத்துக்கொண்டால் (Plant) வைத்துத்தான் செய்ய வேண்டும். அதை உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். சாலைகளிலே மண் வெட்டப்படுகின்றபொழுது எங்கேயிருந்தோ மண் வெட்டிப் போடுவதாகக் கணக்கு எழுத முடியாது. அப்படிக் கணக்கு எழுதுவதற்கு எந்த அரசும் ஒத்துக்கொள்ளாது அப்படி ஏதாவது எந்த அலுவலகத்திலாவது அந்த மாதிரி புகார்கள் வருமேயானால் சைடிலே மண் வெட்டிப் போடுவதற்கு எனறு ஒரு ரேட் வைத்திருக்கிறோம். ஒவ்வொரு செண்டி மீட்டருக்கும் இவ்வளவு ரூபாய் என்று வைத்துக்கொண்டிருக்கிறோம் வெளியூரிலேயிருந்து-லேண்டிலே யிருந்து ஒரு மண்ணைக் கொண்டு வந்து ஃபில்அப் செய்வதற்கு ஒரு ரேட்

வைத்திருக்கிறோம் அதற்கு (Lead) என்று சொல்கிறோம். அந்த லீட் கூட இருக்குமானால் இரண்டு கிலோ மீட்டரிலேயிருந்து கொண்டு வருவதற்கு ஒரு ரேட் வைத்திருக்கிறோம்; சைடிலே வெட்டிப் போடுவதற்கு ரேட் வைத்திருக்கிறோம் சாலைகள் அரித்து விடக் கூடாது என்பதற்காக மழைக் காலங்களிலே (Sidebunds) போடுகிறோம் இதையும் அதையும் கலந்து பேசி அரசின் மீது குற்றச்சாட்டைச் சுமத்தக்கூடாது. இந்த ரேட்டை மீறி அங்கே கொடுத்திருப்பதாக, எந்த அதிகாரியாவது நிரூபிக்கப்படுவார்களேயானால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் தெளிவுபடுத்துவார்களேயானால், அவர்கள் மீது இந்த அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆகவே, இரண்டு முறைகள் இருக்கின்றன. எங்கே மண் வெட்ட முடியவில்லையோ அங்கேயிருந்து கொண்டு வருவதற்கு என்று ஒரு முறை இருக்கிறது; அதற்கு ஒரு ரேட் இருக்கிறது; அதற்கு ஒரு லீட் வைத்திருக்கிறோம். ஆனால் சைடிலே வெட்டுவதற்காக ஒரு ரேட் வைத்திருக்கிறோம். இரண்டையும் குழப்பி ஏதோ இந்த ரேட்டைப் போட்டு அதை எடுக்கிறார்கள் என்று சொன்னால், அப்படிப் பார்க்கும் பொழுது நிர்வாகத்திலே இருக்கின்ற பிரச்சினையைத் தெளிவாகச் சொல்ல வேண்டும்; ஒன்றையொன்று ஒன்றுபடுத்திக் கொண்டு குற்றச்சாட்டுக்களைச் சொல்லக்கூடாது ஆகவே அது மாதிரி அவருக்குப் புகார் வந்திருக்குமேயானால், எந்த டிவிஷனிலேயாவது இருந்து வந்திருக்கும் என்று சொல்வார்களேயானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்; அதற்கு இந்த அரசு ஒருபோதும் தயக்கம் காட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்.

திரு. குமரி அனந்தன : ஆக, குற்றச்சாட்டுக்கும், சுட்டிக் காட்டுவதலுக்கும் வேறுபாடு மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியும்; தெரியாதது அல்ல. எனவே, நான் சுட்டிக்காட்டுவது என்பது வேறு: குற்றச்சாட்டு என்பது வேறு. மீண்டும் சொல்கிறேன். அவர்கள் சொன்னார்கள் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே கையிலே சுற்றுவது என்று. பல காலத்திற்கு முன்பு நான் உயர்நிலைப் பள்ளியிலே படிக்கிறபொழுது கையிலே சுற்றி ஓட்டுகின்ற கரி வண்டி பஸ்ஸிலேதான் நான்கூட ஏறிப்போனேன். காலம் வர வர மாற்றங்கள் ஏற்படும். அதைப்பற்றி நீங்கள் ஆராய வேண்டாம். அதனாலே நான் இவைகளையெல்லாம் விளாவாகச் சொல்ல வேண்டாம்.



இரண்டாவது, நீங்கள் லீட் மீது என்று சொல்கிறீர்களே, (Side bunds) என்று சொல்கிறீர்களே இவைகளைப் பற்றியும் நான் சொல்வது என்ன என்று சொன்னால், சாலை ஓரத்திலே மண் வெட்டிப் போடுவது என்று இருக்கலாம்; அதற்கு ஒரு ரேட் இருக்கலாம். ஆனால் தூரத்திலேயிருந்து கொண்டு வருவதற்கு ஒரு ரேட் இருக்கலாம்; நான சொல்வது என்னவென்றால், தூரத்திலேயிருந்து கொண்டு வருவதற்குரிய ரேட்டை, சாலை ஓரத்துலேயிருந்து வெட்டிப்போட வாங்கி விடுகிறார்கள் என்பது தான். (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள்.

திரு. டி. எம். ரங்கராஜன் : பாய்ன்ட் ஆஃப் ஆர்டர்....

பிற்பகல் 12.50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைத்தான் தெளிவுடுத்த வேண்டுமென்று கேட்கிறேன். அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் நீண்ட நாட்களாக அவையிலே பணியாற்றியவர்கள். அனுபவமிக்கவர் ; திறமைசாலி. இதை மற்றவர்கள் பேசி இருந்தால் கூட தெரியாமல் ஏதோ பொதுவாக சொல்கிறார் என்று நினைத்துக்கொள்ளலாம். மாண்புமிகு குமரி அனந்தன் பேசுகிறார் என்கிறபோது எங்களுக்கு சொல்ல வேண்டிய சந்தேகம் ஏற்படுகின்றது. அவர்களுக்கு எல்லா விபரமும் தெரியும். ஏதோ, வருகின்றபோது கிராமங்களிலே சொல்வார்கள்., இவர் அந்த மண்ணை அங்கேயிருந்து கொண்டுவந்து போட்டுவிட்டார் என்று உங்களிடத்திலே கோரிக்கையாகக் கொடுத்து இருக்கலாம். நீங்கள் பாத யாத்திரையாக வருகிறீர்கள் என்று கருதி கொடுத்து இருக்கலாம். கிராமங்களிலே போட்டி இருக்கிறது. ஒருவருக்கு ஒருவர் கிடைக்காதவன், வேலை கிடைத்த ஒரு வேலை போடுகிறான். இவன் அந்தவனோடு போட்டி போட்டுவிட்டான். ஆனால்,, மண்ணை கொண்டுவந்து பார்த்துக் கொள்ள வேண்டியது அந்த தவறு நிகழாமல் சுட்டிக்காட்ட வேண்டிய இந்த அரசினுடைய கடமை என்று பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. ஆகவே, நான் உங்களிடம் கேட்க விரும்புவது, எந்தப் பகுதியிலே இருந்து உங்களுக்கு அந்தப் புகார் வந்தது ? அந்த இந்த அரசினிடத்திலே

தெரிவியுங்கள் உடனடியாக அதன் கணக்குகளை சரிபார்த்து நானே நேரடியாக இன்ஸ்பெக்ஷன் செய்து அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு தயாராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. குமரி அனந்தன் : இதெல்லாம் நல்ல கருத்துக்கள். கருத்துக்களைச் சொல்வதிலே எப்போதுமே எத்தனை பேர் சொன்னாலும், அதை தனித் தனியாகச் சொன்னால் என்ன என்று பார்த்துக்கொள்ளலாம். மொத்தமாகச் சொன்னதால் அது கேட்கவில்லை. அவ்வளவுதான். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் சொல்லட்டும். இப்போது நான் சொன்னதற்குக் காரணம், என்ன வென்றால், நான் முதலிலேயே மிகுந்த முன்னெச்சரிக்கையோடு, நண்பர்களைப் பற்றி அல்லது தோழமைக் கட்சியைப்பற்றி பேசுகின்ற காரணத்தினாலே மிகுந்த முன்னெச்சரிக்கையோடு தான் இங்கே சொல்கிறேன். (குறுக்கீடு) ஆகையினால் இரண்டு பேரும் தோழமை யோடு தான் பேசுகிறோம். இல்லை என்று சொல்லவில்லை. நான் என்ன சொல்கிறேன். என்றால், நான் பார்த்தது என்று சொன்னதற்குக் காரணம், நான் பார்த்தது மட்டுமல்ல நான் அவர்களிடம் பேசினேன். அவர்களிடம் நான் பேசுகின்றபோது சொன்னேன். 'அப்பா, நீங்கள் இப்படி இந்த மண்ணை எடுத்து போடுகிறீர்களே ? ஒரு மழையிலே அது நிற்காதே ' என்று சொன்னேன். அப்படி நிற்காது என்று சொன்ன உடனே, அங்கே கொஞ்ச நேரம் உரையாடலே நடந்தது. ஏனென்றால், உங்களுக்குச் சொன்னால் தவறாக நினைத்துவிடக் கூடாது.

கம்பன் சோழ மன்னனோடு சண்டை போட்டுக்கொண்டு வெளியே போனதற்கு பின்னாலே கொஞ்சம் சாப்பாட்டுக்குக் கூட கஷ்டப்பட்டான். அப்போது ஒரு பெண்மணி, சுவர் எழுப்பிக் கட்டுகிறவர்கள் யாராக இருந்தாலும், இந்தப் புலவருக்கொல்லாம் நெல் கொடுப்பேன் என்று சொன்னாள். ஒவ்வொரு புலவனையும் கட்டச் சொல்கிற நேரத்திலே அந்த மண் பின்னால் மோசடி இருந்த காரணத்தினாலே இவனுக்கு நெல் அளந்து கொடுக்கிறபோது சுவர் விழுந்து விடும்; நெல் கொடுக்கமாட்டாள். கம்பன் இதை அறிந்து கொண்டு போனான். போனதற்குப் பிறகு அவன் சுவர், எழுப்பினான். சுவர் எழுப்புகிறபோது அவன் சொன்னான். ' நெல்லை கொடு ' என்றான். அது கீழே விழும் என்ற நிலையிலிருந்தபோது அந்தக் கவி தனது ஆற்றலினாலே சொன்னான். அந்த அம்மா நெல்லை கொடுக்க போகிற போது சொன்னான். 'நெல் கொண்டுபோமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே ' என்று பாடிவிட்டான். இதை நான் ஒரு நகைச்சுவையோடு பேசிக் கொண்டிருந்தபோது, அவர்கள்



சொன்னார்கள். 'ஆமாம், சார், இங்கேயும் அப்படித்தான் ; பில் கொண்டுபோகுமளவும் நில்லாய் ; நெடுஞ்சாலையே, என்று (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். அவர்களிடம் பேசியதை நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்).

திரு. டி. எம். ரங்கராஜன் : பாய்ன்ட் ஆஃப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உவமானம், உவமேயங்களை வெளியிலே சொல்லி இருக்கலாம். வெளியிலே சொல்வதற்கும், சட்ட மன்றத்திலே சொல்வதற்கும் என்ன வித்தியாசம் என்பதை அவர்கள் அறிவார்கள். ஆனால், அதை அவர்கள் எப்படிச் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. அவருக்கே நன்றாகத் தெரியும். யார் காலத்திலே சாலைகள் எல்லாம் ஒழுங்காக போடப்படுகிறது என்பதை பல்வேறு காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்களே இங்கே பாராட்டி இருக்கிறார்கள். ஏதோ சொல்ல வேண்டுமென்று நினைத்து சொல்கிறார்கள். அந்தப் பற்றி கவலை இல்லை. ஆனால், அந்தப் பிரச்சினை எங்கே நடந்தது, எந்த இடத்திலே மண் வெட்டிப் போட்டு அதற்கு பணம் கொடுத்து இருக்கிறார்கள் ? அல்லது வேறு ஏதாவது அதிகமாக பணம் கொடுத்து இருக்கிறார்களா என்று குறிப்பிட்டுக் குற்றம் சாட்டினால் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்து இருக்கிறேன். அதையே திருப்பி, உவமான உவமேயங்களோடு பேசினால் எங்களுக்கும் பேசுவதற்கு எல்லோருக்கும் வாய்ப்பு இருக்கிறது. அவர் முதியவராக இருந்தாலும், அவருக்கு இருக்கின்ற அனுபவத்திலே எங்களுக்கு 25 சதவீதமாவது இருக்கும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். எதிர்க்கட்சி என்ற முறையிலே அந்தக் கருத்தைச் சொல்ல வேண்டியது அவருடைய கடமை என்பதால் அதிலே எங்களுக்கு எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த பாத யாத்திரை வந்து வெகு காலமாகிவிட்டது. (குறுக்கீடு) ரொம்ப நீண்ட காலம் ஆகிவிட்டது என்று சொன்னேன். இந்த பாத யாத்திரை வந்தபோது அவருக்குக் கிடைத்த தகவல்—அவர் பேசிய முறையிலே சொன்னதைப் பார்த்தால், அவருக்கு நெருக்கமானவர் போல் இருக்கிறது; அவருக்கு பழக்கமானவர் போல் இருக்கிறது; அப்படி பேசி இருக்கிறார்கள். எனவே, அப்படிச் சொல்கிறபோது, அந்தக் கருத்துக்களை உடனே தோழமைக் கட்சி என்ற முறையிலே நீங்கள் எங்களோடு நெருக்கமாக இருக்கின்றவர்கள் என்ற முறையிலே, எங்களுடைய அமைச்சரிடம் சொல்லி இருந்தால் அந்தப் பிரச்சினை அன்றைக்கே தீர்க்கப்பட்டு இருக்கும். இதற்காக சட்டமன்றம் வர வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது எங்களுக்குக் கொஞ்சம் மன வேதனையாக இருக்கிறது. இப்போது கோடிக் கணக்கான செலவில் பல இடங்களில் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எல்லா இடங்களிலும் அமைச்சர்களோ, மற்றவர்களோ, அரசாங்கத்தின் சார்பாக அவர்கள் எல்லாம் நேரே போய் பார்ப்பதில்லை. சில தவறுகள்-மத்திய அரசாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி, காங்கிரசு ஆட்சிக் காலத்திலும் சரி, ஆங்காங்கே நடந்துகூட விடலாம். ஆனால், அப்படி நடக்கிறபோது உங்களைப் போன்றவர்கள், அரசின்மீது மிகுந்த அக்கறை கொண்டவர்கள், அரசின் மீது மிகுந்த பற்றோடு தோழமையோடு சொல்லக்கூடியவர்கள் உடனே நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சர் அவர்களிடம் சொல்லி இருந்தால் வசதியாக இருந்து இருக்குமே, இவ்வளவு நாள் காலம் தாழ்த்திவிட்டு, இதற்காகக் காத்திருந்து, இங்கே வந்து சொல்லி இருக்கிறீர்களே என்பதுதான் எங்களுக்கு ஒரு பக்கம் வேதனையாக இருக்கிறது.

பிற்பகல் 12.55

மாண்புமிகு <u>பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் சொல்கிறபோது தோழமை உணர்வோடு சுட்டிக்காட்டுகிறேன், தோழமை உணர்வோடு சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் வெளியில் பாத யாத்திரை வருகிறபோது இதையெல்லாம் கண்டதாகச் சொன்னார்கள். அவர்கள் பாத யாத்திரை வந்திருந்தபோது தோழமை உணர்வைச் சொல்லவில்லை. இந்த ஆட்சியை அகற்றுவோம், காங்கிரஸ் ஆட்சியை மீண்டும் தமிழகத்தில் உருவாக்குவோம் என்று





தான் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே இங்கே வந்து பேசுபவர், தோழமை உணர்வு என்று சொல்பவர், இங்கே தோழமை கட்சிக்காகப் பேசுகிறாரா, வெளியில் அவர் பாத யாத்திரை வந்திருந்தபோது ஆட்சியை அகற்றுவோம், ஆட்சியை அமைப்போம் என்று சொன்னவர் இங்கே எதிர் கட்சியாகப் பேசுகிறாரா என்பதை விளக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. <u>குமரி அனந்தன்</u>: சரி. காங்கிரஸ் ஆட்சி அமைப்போம் என்று சொன்னது உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் ஆட்சி அமைப்பதற்குத் தான் ஒவ்வொரு காங்கிரஸ் காரனும் பாடுபடுவான் என்பதும் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் எந்த இடத்திலும், இருந்து கொண்டிருக்கிற இந்த ஆட்சியை அகற்றி விட்டு என்று நான் சொல்லவில்லை. மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டலாம். காங்கிரஸ் ஆட்சியை அமைக்க வேண்டுமென்று சொன்னேன. இனி விஷயத்துக்கு வந்துவிடுவோம். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு <u>பேரவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னியாகுமரியிலிருந்து தன் பாதயாத்திரை பயணத்தைத் தொடங்குகிறபோது அங்கே பேசிய காங்கிரஸ் நண்பர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம், இவர் சென்னை சென்றவுடனே காமராஜர் ஆட்சி தமிழகத்தில் மலர்ந்துவிடும் என்று பேசவில்லையா என்பதை மட்டும் உங்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. <u>குமரி அனந்தன்</u>: இவர் கன்னியாகுமரியிலிருந்து புறப்பட்டு சென்னைக்கு வருகிறபோது காங்கிரஸ் ஆட்சி, காமராஜர் ஆட்சி அமைப்பதற்குரிய வாய்ப்புகளை எல்லாம் அதிகப்படுத்திக் கொண்டு வருவார் என்று சொன்னது உண்மை. (குறுக்கீடுகள்) ஆகவே, எப்படி உங்களை வழி நடத்துகிற தலைவர்களுக்கு நீங்கள் நன்றிக்கடன் செலுத்த வேண்டுமோ, அதைப்போல என்னை வழிநடத்தி, என்னை ஆளாக்கிய தலைவருக்கு நான் நன்றிக்கடன் செலுத்துவதோடு, எங்களுடைய எண்ணத்தை வெளியே சொல்வதற்கு ஒரு சின்ன கேள்வி—ஏனென்றால் அமைச்சர் பெருமக்கள் இரண்டு மூன்று பேர்கள் சொல்கிறபோது நான் அவர்களுக்கு பதிலாக அளிக்க வேண்டும். ஒப்பந்தக்காரர்கள் சங்கம் என்று ஒன்று (குறுக்கீடுகள்) சரி, நிறைய செய்திகள் இருக்கிறது.

(திரு. குமரி அனந்தன்) [1993 பிப்ரவரி 8

சொல்லவேண்டும் இல்லையா, தோழமை உணர்வோடு நான் சொல்கிறேன். எதற்கு சொல்கிறேன் என்றால், அதாவது எனக்கு வேண்டியவர்களாக இருக்கலாம். நெருக்கமானவர்களாக இருக்கலாம் என்றெல்லாம் சொன்னார்கள் அல்லவா சாலை ஓரத்தில் வேலை செய்து கொண்டிருப்பவர்கள் அத்தனை பேரும் எனக்கு நெருக்கம்தான். நெருக்கம் இல்லையென்றால் நான் நெருக்கம் ஏற்படுத்திக்கொள்வதற்குதான் இந்த பாத யாத்திரையைச் செய்தேன். ஆகையால் சொல்கிறேன். அங்கே நான் யாரோடு நின்று, எந்த இடத்தில் பேசினேன் என்று புகைப்படத்தை அப்படியே நான் அமைச்சர் பெருமகனாருக்குத் தருகிறேன். ஒன்று. எந்த இடம் என்பதை அதிலிருந்து கண்டுவிடலாம். (குறுக்கீடு) ஆமாம். அதற்கு தான் போகிறேன். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் நீங்கள் என்மீது வருத்தப்பட மாட்டீர்கள். ஒப்பந்தக்காரர்கள் சங்கம் என்று ஒன்று இருக்கிறது. ஒப்பந்தக்காரர்கள் சங்கத்திலே ஒரு தீர்மானம் போட்டார்கள். அந்த சங்கத்திலே என்ன சொன்னார்கள் என்று சொன்னால், ஒப்பந்தக்காரர்களுக்கு ஷெட்யூல் கொடுக்காமல், அந்த ஒப்பந்தக்காரர்கள் சங்கத்தை சாராதவர்கள். ஒப்பந்தக்காரர்களாக இதுவரையில் ரெஜிஸ்டர் பண்ணாதவர்களுக்கும் இப்போது அழைப்பு கொடுக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லி இருக்கிறார்களே பத்திரிகையில். நான் ஒரு சின்ன செய்தியை எடுத்துச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை விதிகளின்படி யார் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறாரோ அவர்தான் வேலை செய்ய முடியும். சிலர் வேலை எடுக்கிறார்கள். மற்ற ஒப்பந்தக்காரர்களிடத்தில் வேலை எடுத்துக் கொண்டு சில பேர் வெளியில் வேலை செய்வார்கள். ஆனால் ஒப்பந்தங்கள் கொடுக்கிறபோது எங்களைப் பொறுத்தவரையில் யார் வேலை செய்கிறார்கள் என்பதை நாங்கள் பார்ப்பது கிடையாது. யார் பொதுப்பணித் துறையில் ஒப்பந்தக்காரராக இருக்கிறாரோ அவர்கள் கேட்கிறபோது. அவர்களுக்கு மட்டும்தான் ஷெட்யூல் வாங்கப்படுகிறது. இது காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். பல பேர் சொல்லியிருக்கிறார்கள். ஒப்பந்தங்களைப் பதிய வேண்டுமென்று என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் இன்னும் என்னிடம் ஒன்று கூட கொடுத்ததில்லை. நான் அதை ஒப்புக் கொள்கிறேன். மற்ற காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள்



1993 பிப்ரவரி 8]

எல்லாம் ஒப்பந்தத்தைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றாகத் தெரியும். (குறுக்கீடுகள்) சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) கான்ட்ராக்டைச் சொல்லவில்லை. (குறுக்கீடு). கான்ட்ராக்டைச் சொல்லவில்லை. நான் கான்ட்ராக்டைச் சொல்லவில்லை. ஒப்பந்த விதிமுறை (குறுக்கீடு).

பிற்பகல் 1—00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரெஜிஸ்ட்ரேசன் ஆப் கான்ட்ராக்ட் பற்றித்தான் அவர்கள் சொல்கிறார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : ஒப்பந்த விதிமுறைகளைப் பொறுத்தமட்டிலே நான் ஒன்றைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒப்பந்த விதிமுறைகளை பொறுத்தமட்டிலே, பொதுப் பணித்துறையைப் பொறுத்தமட்டிலே, யார் ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்திருக்கிறார்களோ, அவர்கள் பெயரிலேதான் இதுவரையில் செட்யூல் வழங்கப்பட்டு இருக்கிறது. ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்யாதவர்களுக்கு செட்யூல் வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் சொன்னது, கான்ட்ராக்ட்டர்களாக ரிஜிஸ்டர் பண்ணுவதைப் பற்றித்தான் கேட்டார்கள் என்றுதான் சொல்கிறாரே தவிர, கான்ட்ராக்டைச் சொல்லவில்லை. ஒப்பந்தம் என்று சொல்லவில்லை ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்துகொள்ள என்பதுதான்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்து கொள்வதற்காக பல பேர்கள் சொல்கிறார்கள். அவர்களை நாங்கள் பதிவு செய்து கொள்கிறோம். அப்படிப் பதிவு செய்கிற நபர்களுக்குத்தான் ஒப்பந்தங்கள் கொடுக்கிறோமே தவிர, பதிவு செய்யாத நபர்களுக்குக் கொடுப்பதில்லை. காங்கிரஸ்காரர்களிலே பலரும் சொல்லியிருக்கிறார்கள், தி.மு.க. காலத்திலே பல பேர்களை, ஒப்பந்தக்காரர்களாக, இங்கே இருக்கின்றவர்களிலே, நம்முடைய அண்ணா தி.மு.க. காரர்களை, காங்கிரஸ்காரர்களை பதிவு செய்தது கிடையாது. அவர்களை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். தி.மு.க ஆட்சிக காலத்திலே, நம்மிடையே தகுதி உள்ளவர்களை, சால்வன்சி வைத்திருப்பவர்களை, பல பேர்களை அவர்கள் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்ய மறுத்

திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள், காங்கிரஸ் கட்சியிலே இருந்தும் வந்து சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களும் வந்து சொல்லியிருக்கிறார்கள். பொது மக்களிடம் இருந்தும் வருகின்றன. அப்படி வருகின்றபோது, அவர்களை ஒப்பந்தக்காரர்களாக பொதுப்பணித்துறையிலே. நாங்கள் பதிவு செய்கிறோம், பதிவு செய்ததற்குப் பின்னாலே தான், அவர்களுக்கு செட்யூல் கொடுக்கிறோமே தவிர, பதிவு செய்யாதவர்களுக்குக் கொடுப்பது கிடையாது. ஆகவே, எல்லாத் தரப்பிலேயிருந்தும், அந்த ரெப்ரசன்டேசன் வந்திருக்கிறது. அதைச் செய்திருக்கிறோம் என்று சொல்கிறோம் கான்ட்ராக்டை நான் சொல்ல வில்லை. கான்ட்ராக்டை யாருக்கும் கொடுப்பதாக நான் சொல்லவில்லை. பதிவு செய்வதைப் பற்றித்தான் நான் சொல்லியிருக்கிறேன். அதைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. குமரி அனந்தன். (குறுக்கீடு) அமைச்சர்தான் சொல்லிவிட்டாரே. ஒப்பந்தத்தைப் பற்றியே அமைச்சர் சொல்லவில்லை. ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதைப் பற்றி மட்டுமே தான் அமைச்சர் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) சட்டமன்ற உறுப்பினர்கள் ரெப்ரசென்டேசன் செய்தார்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நீங்கள் ஏன் பெர்சனலாக எடுத்துக்கொள்கிறீர்கள் ? (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வதற்கு முன்பே , அவர்கள் அப்படிச் சொல்லவில்லை என்று சொன்னீர்கள். அவர்கள் சொன்னதை அவரே ஏற்றுக்கொண்டு, அவர்களே விளக்கம் கொடுக்கிறார்கள். எனவே, இந்தப் பேரவையிலே இருக்கிற உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்துவிட்டார்களே. அதிலே உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : ஒப்பந்தம் என்பது வேறு. ஒப்பந்தத்தைப் பதிவு செய்வது என்பது வேறு.

திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : விளக்கம் கொடுப்பதற்கு முன்பே, பாயிண்ட் ஆப் ஆர்டர் கொடுக்கவில்லை என்றால் எப்படி ? பொதுவாக, பொத்தாம் பொதுவிலே பேசக் கூடாது. பேசும்போது ,யார் பேசினாலும் குறிப்பிட்டுச்



சொல்ல வேண்டும். காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட, ஒப்பந்தக்காரர்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லும்போது, பொருள் வேறு விதமாக போய்விடுகிறது. எனவே, அதை அகற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்ய என்பதுதான் (குறுக்கீடு.)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : காங்கிரசைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கூட, ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். I was mentionnig about the registration of contractors, not about tender ..

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அவர்கள் சொல்வதற்கு முன்பே அவர்கள் அப்படிச் சொல்லவில்லை என்று சொன்னீர்களே, அது முறையல்ல. இரண்டாவது விளக்கம் அமைச்சர் கொடுத்த சரியான விளக்கம். சரியான விளக்கம். முன்பே நான் அப்படிப் பேசினேனே அதற்குப் பொருள் இது தான் என்று சொன்னார்கள். அது சரியான விளக்கம். ஆனால், நீங்கள் சொல்வது அவர் அப்படிப் பேசவேயில்லை. எனவே, அது வேண்டாம் என்று சொல்வது சரியல்ல. பேச அனுமதிக்க வேண்டும். இல்லாவிட்டால், நான் பதிவேட்டைப் பார்த்து விட்டு, அகற்றுகிறேன் என்று சொல்ல வேண்டும். அப்படிப் பேசவில்லை என்று சொல்வது முறையல்ல. ஒன்று நீங்கள் அனுமதிக்க வேண்டும், அனுமதிக்கவில்லை என்று சொன்னால், I will go through the proceedings of the House. பதிவேட்டை நான் பார்க்கிறேன், அதிலே அப்படி இருந்தால், அதை அகற்றிவிடுகிறேன் என்று நீங்கள் சொல்ல வேண்டுமே தவிர, பார்க்கமாட்டேன், பார்க்கமாட்டேன், அப்படிப் பேசவில்லை என்று சொல்வது முறையல்ல.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தங்களை பதிவு செய்ய வேண்டும் என்பது ஒரு பொது கோரிக்கை. நிராகரிக்கப்படுகின்ற கோரிக்கைகளை சட்டமன்றத்திலே எப்படி சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கிறார்களோ, அதைப் போல, உங்களிடத்திலே வந்து சொல்கிறபோது, நான் தி.மு.க. காலத்திலே பாதிக்கப்பட்டேன், எனக்குத் தகுதி இருக்கிறது, என்னைப் பதிவு செய்ய மறுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்போது, நீங்கள் வந்து என்னிடத்திலே சொல்கிறீர்கள். அமைச்சர் என்ற முறையிலே, சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையிலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் அண்ணா தி.மு.க.—வைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள்....

சொல்கிறார்கள். வெளியிலே இருக்கின்ற பொது மக்களிலே
முக்கியமானவர்கள் சொல்கிறார்கள். அவர்களுக்குத் தகுதி
யிருக்கிறதா என்பதைப் பரிசீலனை செய்து, அவர்களைப் பதி
யச் சொல்கிறோம். ஆகவே, அதிலே தவறு கிடையாது.
அதிலே யாரும் குற்றச்சாட்டாகச் சொல்ல முடியாது. யாருக்
காவது, ஒப்பந்தக்காரர்களாக அல்லாதவர்களுக்கு முறை
கேடாக செட்யூல் வழங்கப்பட்டு இருந்து, அதிலே வேலை
நடைபெற்று இருக்குமானால், அதைக் குற்றச்சாட்டாக ஏற்றுக்
கொள்ளலாம். ஆகவே, இதைக் குற்றச்சாட்டு என்று சொல்ல
முடியாது. யார் சொல்லியிருந்தாலும், அதில் தவறு இல்லை.
It is a representation from the public, from those who are
affected. It is not a charge. அதைத்தான் நான் தெளிவுபடுத்த
விரும்புகிறேன். (குறுக்கீடு)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் கேட்டுக்
கொண்டுதான் இருந்தேன். இதிலே எந்தவிதமான குற்றச்
சாட்டும் இருப்பது போல இல்லை. திரு. குமரி அனந்தன்
அவர்கள். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மீண்டும் நான் சொல்
கிறேன். முதலிலே அமைச்சர் சொன்ன தொனி புரியக் கூடிய
அளவிலே இல்லை. இரண்டாதவாக கொடுத்த விளக்கத்தை
நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் கொஞ்
சம் நேரத்தையும் கவனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டும்
(குறுக்கீடு). ரெக்கார்டைப் பார்த்துச் சொல்கிறேன். இரண்டு
உறுப்பினர்களே, இன்னும் பேச முடியாமல் இருக்கிறது.

பிற்பகல் 1—05

திரு. குமரி அனந்தன் : அதனாலே நான் ஒப்பந்தக்காரர்
கள் சங்கம் போட்ட தீர்மானத்தைப் பற்றித்தான் சொன்
னேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இதிலே ஒப்பந்தம்
அத்தோடு முடிகிறது.

அடுத்து, ஆளுநர் அவர்களுடைய உரையிலே உவர் நீர்,
இறால் பண்ணையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மிக
நல்ல திட்டம். கடற்கரையில் இருக்கின்ற மக்களுக்கு மட்டு
மல்லாது, அதன் பக்கத்திலே இருக்கின்ற மக்களுக்குக் கூட
அது நல்ல தொழில் வாய்ப்பைக் கொடுக்கக் கூடிய ஒரு நல்ல
திட்டம்தான். லட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு என்று





சொல்லியிருக்கிறார்கள். ஆக ஒரு பக்கத்திலே இப்படியெல்லாம்
நாம் செல்வத்தைச் சேர்த்துக் கொடுக்க முடியுமா ஏழை எளிய
மக்களுக்கு என்று திட்டம் போடுகின்ற போது, அந்த ஏழை,
எளிய மக்களுக்குச் சிறிது சிறிதாக ஊறுகின்ற, சுரக்கின்ற
அந்தச் செல்வத்தைக் கூட நாம் எண்ணிக் கொடுக்
கின்ற அந்தத் தொழில்களிலே எல்லாம் வருகின்ற வருவாயிலே
கூட பல்வேறு இடங்களிலே தேவையில்லாத பல காரியங்கள்
எடுத்துக்கொண்டு போய் விடுகின்றன. உதாரணத்திற்குச்
சொல்லப்போனால், இப்போது லாட்டரி என்று ஒன்று வந்
திருக்கிறது. அந்த லாட்டரிச் சீட்டு என்பது ரொம்ப நாளாக
இருந்து கொண்டிருக்கிறது. அதை நான் பார்த்தேன். அதைப்
பற்றிக் கொஞ்சம் ஆலோசித்துப் பார்க்க வேண்டுமென்று
சொல்கிறபோது, சில குறிப்புகளை வைத்திருக்கிறேன். 85
நம்பர் லாட்டரி என்ற ஒன்று வந்திருக்கிறது. குலுக்கல் கூட
கிடையாதாம். என்னமோ நடக்கிறதாம். இந்தப் பக்கத்திலே
நம்பரைப் பார்த்தால் இது அந்தப் பக்கத்திலே இருக்கின்ற
நம்பரைப் பார்த்தால் அது என்று சொல்கிறார்கள். அப்படி
85 இருக்கின்றது தமிழ்நாட்டில். தமிழ்நாட்டிலே இங்கேயே
நடத்தவில்லை அரசாங்கம் நடத்தவில்லை. அஸ்ஸாம்,
மேகாலயா, மணிப்பூர் என்று என்னென்ன பேரிலேயோ வரு
கிறது. ஒரு சீட்டு ரூ. 200. ரூ. 200 என்று வைத்து, ஒரு
நாளைக்கு 85 நிறுவனங்கள் அதை நடத்துகின்றன என்று வரு
கின்றது. ஏராளமான பணம் இதிலே போகிறது. ஒவ்வொரு
வரும் ஒரு கோடியே மூன்று லட்சம் என்றெல்லாம் சொல்
கிறார்கள். கடந்த பல ஆண்டுகளாக, பல மாதங்களாக, பல
திங்களாக, யாருக்கும் லட்சமும் விழவில்லை,
கோடியும் விழவில்லை. ஆனால் நம்முடைய ஆட்கள் எல்லாம்
என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், கடன் கொடுத்த
வனிடம், லாட்டரி அடிக்கட்டும் தருகிறேன் என்று சொல்கிறான்.
லாட்டரி அடிக்கட்டும், விழுந்தால் தருகிறேன் என்று சொல்
கிறான். இவன் என்னவென்றால், அடி விழுந்தால்தான் தரு
வான் போலிருக்கிறது என்று நினைக்கிறான். ஆக இந்த அள
விற்கு நம்முடைய டணங்கள் எல்லாம் வீணாக ஒரு பக்கத்திலே
போய்க்கொண்டிருக்கிறது. நிறைய பணம் போய்க்கொண்
டிருக்கிறது. அதைப்போல இதைப் பற்றிப் பேசுகின்ற வாய்ப்பு
எனக்கு வந்த உடனேயே விசாரித்துப் பார்த்தபோது, வீடி
யோ கேம் என்ற ஒன்று இருக்கிறது. சென்னை மாநகரத்திலே
மட்டுமல்ல, எங்கெங்கே ஆட்கள் அதிகமாக நடமாடுகின்
றார்களோ, அங்கேயெல்லாம் வீடியோ கேம்ஸ் வந்துவிட்டது.
வீடியோ கேம்ஸ் என்று சொன்னால், மவுண்ட் ரோடில் சட்ட
மன்ற உறுப்பினர்களுடைய விடுதிக்கு அருகிலும் என்னுடைய
வீட்டிற்குப் பக்கத்திலே சென்றேன். கொஞ்சம் வெளியே
போய்விட்டு வந்தேன். 7, 8 இருக்கின்றன. வீடியோ
கேம்ஸ். இப்படி ஏராளமான பணத்தைக் கொண்டு போய்
இளைஞர்கள் அதிலே கொட்டுகிறார்கள். தயவு செய்து இதை

யெல்லாம் சுட்டிக்காட்டுகிறேனே தவிர, நீங்கள் வீடியோ கேம் வைத்திருக்கிறீர்கள் என்றா சொல்கிறேன். இல்லை. நமக்குத் தெரியாமலேயே இவைகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. இதைப் பார்த்த உடனேயே சொல்வதில், சட்ட மன்றத்திலே வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே இதைச் சொல்கிறேன். வீடியோ கேம்ஸ் நிறைய வந்திருக்கின்றது. இந்த நாட்டிலே இருக்கின்ற செல்வங்களை எல்லாம் வீட்டிலிருந்து இளைஞர்கள் எடுத்துக்கொண்டு போய் விடுகிறார்கள். போதைப் பொருட்கள் எந்த அளவிற்கு நமது இளைஞர்களைக் கெடுக்கின்றனவோ, அதைப் போல இந்த லாட்டரி கெடுக்கின்றது. இந்த வீடியோ கேம்ஸ் இவர்களைக் கெடுக்கின்றது என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். மவுண்ட் ரோடிலே மட்டும் பல இருக்கின்றன. இவைகள் எல்லாம் போலீசாருடைய எல்லையிலே நடக்கின்றன என்று சொன்னால், போலீசுக்குத் தெரியாமல் நடக்கின்றது என்று நாம் ஒரு சமாதானத்தைச் சொல்வது என்பது நியாயமாக இருக்காது என்பதை நான் உங்சளுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

லாட்டரிச் சீட்டு பொறுத்தவரை, மத்தியப் பிரதேசத்திலே ஒழித்தே விட்டார்கள். நமது செல்வம்தான் இப்போது எல்லா இடங்களுக்கும் தேவையில்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. நமது மக்களுக்கும் எந்தப் பலனும் இல்லை. நான் விரிவாகப் பேச விரும்பவில்லை அதைப் பற்றி. இந்த ஒரு வகையிலே நமது பணம் போகிறது. இன்னொரு வகையிலே சொல்கிற போது மாண்புமிகு உறுப்பினர் காந்திராஜன் இங்கே சொல்லுகிறபோது சொன்னார்கள். அண்ணா வழியிலே— 'வழியிலே' என்று அவர்கள் சொன்னார்கள். இப்போது மதுக் கடைகளைப் பொறுத்தவரையில், தயவு செய்து இப்போது அண்ணா வழியிலே நீங்கள் முயலக்கூடும். ஆனால் நாம் அண்ணா வழியிலே போகவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். அவர் சொன்னார். மதுக் கடைகளின் மூலம் வருகின்ற வருமானத்தை நான் விரும்பவில்லை. பணம் குறைவாக இருந்தாலும், அதற்கு என்ன காரணம் என்று சொன்னார்கள்? என்னுடைய காதுகளிலே கேட்கின்றது. என்ன கேட்கிறது ' Weaping women waiting children என்று அவர் சொன்னார். அழுது புலம்புகின்ற அந்தப் பெண்கள், கதறித் துடிக்கின்ற அந்தக் குழந்தைகள், இவர்களுடைய கண்ணீர் என்னுடைய கண்களிலே படுகின்ற காரணத்தாலே அந்தக் காசு வேண்டாம் என்று சொன்னார். அந்த வகையிலே இப்போது பாருங்கள். நம்மைப் பொறுத்தவரையில் அதைத்தான் சொல்கிறோம், தேர்தல் அறிக்கையிலே சொன்னது பற்றி இங்கே சொன்னார்கள். மத்திய அரசாங்கத்தைப் பற்றிச் சொன்னார்கள் அவைகளைப் பற்றி எல்லாம் விரிவாகப் பேச விரும்பவில்லை.





ஆனாலும் நாங்கள் சொன்னதைச் சொல்கிறேன். ஒவ்வொரு தோழமைக் கட்சிக் கூட்டத்திலும் சொன்னேன். பார், கருணாநிதி இப்போது மலிவு விலை சாராயத்தைக் கொண்டு வந்து விட்டார். அதை எதிர்த்து நாங்கள் போராடிய கட்சி அத்தோடு நாங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சேர்ந்திருக்கிறோம் என்று சொன்னோம். அருமைக்குரிய சகோதரி மாண்புமிகு ரமணி நல்லதம்பி அவர்களும் நானும் கலைஞர் கருணாநிதி அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற அந்தச் சாராயக் கடைகளை எதிர்த்து, சாலையிலே கைது செய்யப்பட்டு, சிறைச் சாலையிலே போடப்பட்டோம். எனவே எங்களுடைய ஆர்வம் இதிலே என்ன இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேனே தவிர, ஒரு வாதத்திற்காகச் சொல்லிக் கொண்டே போகவேண்டும் என்பதில்லை. 1956-ஐப் பற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அமைச்சரோடு வாதத்திற்குப் போகவில்லை. ஆனால் சேலத்திலே சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி அவர்கள் நகரசபைத் தலைவராக இருந்த நேரத்திலே இந்தியா எங்கும் சாராயம் இருந்தது. இந்தியா எங்கும் மது ஓடிக்கொண்டிருந்தது. சேலம் நகர சபை என்று சொல்லுகின்ற இடத்திலே மட்டும் நான் சாராயத்தை வரவிட மாட்டேன், மதுக் கடைகளை வர விட மாட்டேன் என்று சொன்னார்.

பிற்பகல் 1-10

அதைப்போலவே காங்கிரசுக்கு எப்போதெல்லாம் தமிழகத்திலே அதிகாரம் இருந்ததோ அப்போதெல்லாம் மது ஒழிக்கப்பட்டது என்பதை நான் உங்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். அதைத்தான் நான் இங்கே சொல்ல விரும்பு கிறேன். (குறுக்கீடு) சரித்திரத்தை சொல்லக் கூடாதா? அதனால்தான் இந்தச் செய்தியைச் சொல்கிறேன். இப்போது நான் நீங்கள் பார் ஒழித்ததை பாராட்டுகிறேன். (குறுக்கீடு) பாராட்டக் கூடாதா? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசி முடிக்கட்டும், நீங்கள் பேசும்போது பதில் சொல்லிக் கொள்ளலாம். திரு. குமரி அனந்தன்.

திரு. குமரி அனந்தன் : பார் ஒழித்ததை நான் பாராட்டு கிறேன். வரவேற்கிறேன். ஆனால் இதைப்படிப்போர், அதைக் கேட்போர் எல்லோரும் இந்தப் பாரை ஒழித்ததோடு மட்டு மல்லாமல் முழுவதுமாக இந்த மதுக் கடைகளை நமது முதல்வர் அவர்கள் ஒழிப்பார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது. நானும் அந்த எண்ணத்தோடு தான் இருக்கிறேன். அதை ஒழிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய

எண்ணத்தை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால் பல்வேறு இடங்களிலே இந்தக் கடைகளை வைத்திருப்பவர்கள், பிராந்திகடைகளை வைத்திருப்பவர்கள் செய்கிற கொடுமைகள் இருக்கிறதே அதைச் சொல்ல வேண்டும். நான் அதற்கும் படம் வைத்திருக்கிறேன். சபாநாயகர் அவர்கள் விரும்பினால் அவரிடம் நான் கொடுக்க விரும்புகிறேன்.

மது கடைகளை வைத்திருப்பவர்களில் ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொன்றிலே கிக் வருமாம். நமக்குத் தெரியாது. சிலருக்கு கள்ளச் சாராயம் குடித்தால்தான் கிக் வருமாம். அதனால் என்ன செய்கிறார்கள் என்றால் கள்ளச் சாராயத்தை காய்ச்சி அதிலே வண்ணப் பொடிகளைப் போட்டு அவர்கள் எண்ணப்படி விற்று விடுகிறார்கள். ஏராளமான பணம் அவர்களுக்கு கிடைக்கிறது. அதை இந்த அரசாங்கம் கண்டு பிடிக்கிறது. பல நேரங்களில் அப்படி கண்டு பிடிக்கிற காரணத்தாலேதான் நமக்கு அது வெளியிலே செய்தியாக வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்திலேயிருந்து சில செய்திகள் வருகின்றன. என்னிடத்திலே கடிதம் இருக்கிறது. நான் கையிலே வைத்திருக்கிறேன். பிறகு தந்து விடுகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்திலே என்ன செய்கிறார்கள் என்றால், ஒரு மதுக்கடை உரிமையாளா, அங்கே இருக்கிற மது விலக்கு போலீசார் ஆகிய அவர்கள இருவரும் சேர்ந்து என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், நீ பதநீரை இறக்கிக் கொடு என்று கேட்கிறார்கள். நான் கள் இறக்க மாட்டேன் என்று சொன்னால் நீ பதநீரை இறக்கிக் கொடு, நான் கள்ளாக்கிக் கொள்கிறேன் என்று சொல்லுகிறார்கள், ஆக மதுக் கடைகளை வைத்திருப்பவர்களே சொல்கிறார்கள் நாங்கள் கள்ளாக்கிக் கொள்கிறோம் என்று. பதநீரில் சுண்ணாம்பு தடவி விற்றால் அது பதநீர், பதநீராகத்தான் அப்படியே இருக்கும், அது கள்ளாகாது. ஆனால் எப்படி பாலிலே உறைமோரை ஊற்றினால் அது தயிராகிவிடுகிறதோ, அதைப்போலவே பதநீரிலே கள்ளை கொஞ்சம் ஊற்றி கொஞ்ச நேரம் வைத்துக் கொண்டு இருந்தால் அது கள்ளாகிவிடுமாம். எனவே நீ கள் இறக்கு என்று முதலில் சொல்லுகிறார்கள். அவன் இறக்க மாட்டேன் என்று சொன்னால் பதநீராவது இறக்கு என்று சொல்லுகிறார்கள். பதநீரையும் இறக்க மாட்டேன் என்று சொன்னால், அவன் போதைப் பொருளை வைத்திருந்தான் என்று சொல்லி கேஸ் போடுகிறார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம் கோரவள்ளி என்ற கிராமத்திலேயும் சாவுக்காடு என்ற கிராமத்திலேயும் 1–ஆம் தேதி மட்டும் 50 பேர் பிடிக்கப்பட்டு 500 ரூபாய் அபராதம்



செலுத்தப்பட்டிருக்கிறது. ரசீது என்னிடத்திலே இருக்கிறது. சில இடங்களில் 600 ரூபாய் அபராதம் செலுத்தி 500 ரூ.-க்கு ரசீது கொடுக்கிறார்கள். இரண்டையும் நான் வைத்திருக்கிறேன். எதற்கு சொல்கிறேன் என்று சொன்னால் இந்தக் கடைக்காரர்களே கூட இந்த அரசாங்கத்திற்கு கெட்ட பெயரை உண்டாக்குகிறார்கள். சில இடங்களிலே இறக்கவில்லை என்று சொன்னால் நான் பாளையையே வெட்டி விடுகிறேன் என்று சொல்லி வெட்டி போட்டிருக்கிறார்கள். வெட்டி போட்ட பாளையோடு கூடிய படமும் என்னுடைய கையிலே இருக்கிறது. இவைகளையெல்லாம் நான் காட்டி 'டிராமாடைஸ்' பண்ணவிரும்பவில்லை. ஆனால் நான் சொல்ல விரும்புகிறேன். இந்த போலி சாராயம் என்பது இருக்கிறது. இப்போதுகூட பிடித்திருக்கிறார்கள். அது எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் பிடித்ததை நான் பாராட்டுகிறேன். தூத்துக்குடியிலே டூவிபுரம் என்ற ஒரு இடத்திலே இந்தப் போலி மதுவை தயாரித்துக் கொண்டிருந்தார்கள். அதைப் பிடித்த அதிகாரியை என்ன காரணத்திற்காகவோ வேறு இடத்திற்கு டிரான்ஸ்பர் பண்ணினால் கூட, அதைப் பிடித்ததனால்தானோ என்னவோ என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். நான் சொன்னேன் அப்படி இருக்காது. வேறு ஏதோ காரணங்கள் இருக்கக் கூடும். நாம் ஏன் அதனை அப்படி நினைக்க வேண்டும் என்று சொன்னேனே தவிர நான் அதை தூண்டிவிட்டு பேசுவதாக இல்லை. ஆனாலும் கூட மக்களுக்கு அந்த ஐயப்பாடு வருகிற அளவுக்கு நல்ல ஒரு அதிகாரி மாற்றப் பட்டு விட்டார், தூத்துக்குடியிலே என்று சொல்லுகிற அளவுக்கு மனக் கவலை அந்தப் பகுதி மக்களுக்கு இருக்கிறது. (குறுக்கீடு).

திரு. வி.பி.ஆர். ரமேஷ் : **

திரு. குமரி அனந்தன் : **

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அதிகாரி மாற்றப்பட்டதற்கும் இந்த வழக்கு பிடிக்கப்பட்டதற்கும் உள்ள தேதி இடைவெளியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து தெரிவிக்க வேண்டும். வழக்கு பிடிக்கப்பட்டது எந்த தேதி, அதற்கு முன்னரே அந்த அதிகாரி மாற்றப்பட்டு விட்டாரா அல்லது இப்போது மாற்றப்பட்டிருக்கிறாரா என்பதை உறுப்பினர் தெரியப்படுத்த வேண்டும்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் ஒரு அதிகாரி மாற்றப்பட்டபோது என்று சொல்லியபோது தூத்துக்குடி உறுப்பினர் அவர்கள் ஏதோ சொல்லக் குறுக்கிட்டார்கள். அவர் அதை முழுவதுமாக சொல்லியிருந்தால் வேறு. அவர் அனுமதிக்கப்படாத காரணத்தால் ** என்ற ஒரு வார்த்தையோடு முடித்து விட்டார். அவர் அதை முழுவதுமாக சொல்லியிருந்தால் அதற்கு விளக்கம் கிடைத்திருக்கும். ஆனால் இப்போது முழுவதுமாக அவர் அதைச் சொல்ல அனுமதிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் திருப்பி பதில் சொல்லுகிற போது ** என்று சொன்னது சரியாகாது. நல்லநோக்கத்திலே சொல்லப் பட்டதுபோல தோன்றவில்லை. (குறுக்கீடு) அவர் நல்ல நோக்கத்திலே சொல்லியிருக்கலாம். ஆனால் அவைக்குறிப்பிலே நாளைய தினம் படிக்கிறபோது அது நல்ல நோக்கத்தோடு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்ற காரணத்தால் நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைத்தான் இப்போது சொல்ல வந்தேன். அதற்குள் அமைச்சரே சொல்லி விட்டார்கள். பொதுப் பணித்துறை அமைச்சர் குறிப்பிட்டதற்கு பிறகு சொல்ல வந்தேன். மாண்புமிகு உறுப்பினர் பேச எழுந்த போது ** என்று சொன்னார்கள். அது வருகின்றபோது அது கேலியாக சொன்ன தொனியிலேயும் கூட அது பின்னால் பொருள் கொள்ளப்படும். எனவே அவர் குறுக்கிட்டதும், குமரி அனந்தன் சொன்ன இரண்டுமே அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அவர் சொன்னது, நீங்கள் சொன்னது இரண்டையும் நீக்கிவிட்டேன். (குறுக்கீடு) அவர் குறுக்கிட்டதே அங்கே இல்லை என்கின்ற போது அதற்கடுத்து இதுவும் இருக்கக்கூடாது.

பிற்பகல் 1-15

திரு. குமரி அனந்தன் : அந்த அதிகாரியைப் பற்றி நான் வேறு எதுவும் சொல்லவில்லை. வேறு எந்த செய்திக்கும் போகவில்லை. இப்படி இந்த டீவிபுரத்திலே மது தயாரித்தவர்களை அவர் பிடித்தார். அவரை அங்கிருந்து ட்ரான்ஸ்பர் பண்ணிவிட்டதனால் இப்படி ஒரு ஐயப்பாடு வந்தது, அதை நாம் எண்ண வேண்டியதில்லை.....

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணையிணங்க அகற்றப்பட்டது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு ஐயப்பாடு யாருக்குமே வரவேண்டிய அவசியம் இல்லை. அண்மையில்தான் உயர்மட்ட அதிகாரிகள் அனைவரையும் கூட்டி, காவல்துறை அதிகாரிகளுடன் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தி கள்ளச் சாராயம் எங்கே காய்ச்சப்பட்டாலும், யார் அத்தகைய தொழிலில் ஈடுபட்டாலும் அவர்கள் எத்தரப்பினராக இருந்தாலும் அதைப்பற்றி கவலைப்படாமல் மிகக் கடுமையான நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கப்பட வேண்டும் என்ற உத்தரவை இட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படிதான் காவல்துறையினரும் செயல்பட்டு வருகிறார்கள். ஒரு காவல்துறை அதிகாரி மாற்றப்பட்டதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த காவல்துறை அதிகாரி மாற்றப்பட்டதற்கும். இந்த கள்ளச்சாராய விவகாரத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் வேகமாக முடித்துவிடலாம். ஒத்துழைக்க வேண்டும். நெடுநேரம் பேசிவிட்டீர்கள்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். மொத்தத்திலே போலி சாரா
யம் ஒழிய வேண்டும். சிலர் போலி சாராயம் வேண்டுகிறார்கள்.
போலி சாராயம் கூடாது என்பதிலே நாம் எல்லோரும்
கவலையோடு இருக்கின்ற காரணத்தினாலே நான் அந்தப் பிரச்
சினையை மொத்தத்திலே சொல்கிறேன். போலி சாராய வேண்
டுதல் எங்கிருந்தாலும் சரி அதை ஒழிக்க வேண்டுமென்றால்—
போலிசாராய வேண்டுதல்—போலீசார் ஆராய வேண்டுதல் என்
னுடைய வேண்டுகோள். போலீசாராய வேண்டுதலை தடுக்க
வேண்டுமென்று சொன்னால் போலீசார் ஆய்தல் வேண்டும்
என்பதற்காகச் சொல்கிறேன். நிதியமைச்சர் அவர்கள் அதைப்
புரிந்துக்கொண்டு அருமையாகச் சிரிக்கிறார்கள். அவர்கள் பேசு
கின்ற பேச்சையெல்லாம் நாங்கள் கேட்டுக் கொண்டிருப்பது
(குறுக்கீடு) சரி. அது வேண்டாம், பாராட்டுகிற செய்தி என்ன
வென்று சொன்னால் மரியாதைக்குரிய கவர்னர் அவர்களுடைய
உரையிலே—நேரு பெருமகனுடைய பெயர், அதிலே 40 கோடி
ரூபாய் செலவிலே 40,000 பேர் உட்கார்ந்து பார்க்கின்ற அள
வுக்கு 7' மாத காலத்திலே ஒரு அருமையான கட்டிடத்தைக்

[திரு. குமரி அனந்தன்] [1993 பிப்ரவரி 8

கட்டி எங்கள் மாண்புமிகு பிரதமரோடு சேர்ந்து முதலமைச்சர் அவர்கள் அந்தத் திறப்பு விழாவை நடத்தியிருக்கிறார்கள்.— சொல்வதைப் போலே இப்படிப்பட்ட காரியங்கள் போன கவர்னர் உரையிலே சொல்லப்படவில்லை. சொல்லப்படாதது கூட நிறைவேற்றப்படுகிறபோது நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் போன கவர்னர் உரையிலே சொல்லப்பட்டது எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று நாம் பார்க்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

ஒரு சின்ன உதாரணத்தைச் சொல்கிறேன். போன கவர்னர் உரையிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால் 1992-லே நடைபெற்ற அந்த உரையிலே இனிமேல் தமிழ்நாட்டில் பள்ளிக்கூடத்திலே மேல்நிலைப் பள்ளிகளிலே ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனி கழிப்பறைகள் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். டிசம்பர் மாதத்திற்குள்ளே முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

நான் பாத யாத்திரையைச் சொன்னவுடனே உங்களுக்கு கோபம் வந்துவிடக் கூடாது. வருகின்ற நேரத்திலே வந்த மனு. அந்த மனுவிலே என்ன சொல்லியிருக்கிறார்கள். திண்டுக்கல்—அண்ணா மாவட்டம் கொடுத்த மனுவிலே சமுத்துராபட்டி அரசு உயர்நிலைப்பள்ளியிலே—ஆணும் பெண்ணும் படிக்கிறார்கள். அரசு உயர்நிலைப்பள்ளியிலே. அங்கே தனித்தனி கழிப்பறை இருக்கிறதா என்று பார்க்க வேண்டிய தேவையே இல்லை. ஏனென்றால் கழிப்பறையே இல்லை. அதைப்போல ஒரு நடுநிலைப்பள்ளி. என்னுடைய தொகுதியை எடுத்துக்கொள்ளுங்கள். ஓசரத்துக்குடியிருப்பு என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஓசரத்துக்குடியிலே நாம் என்ன செய்திருக்கிறோம். கவர்னர் உரையிலே சொல்லியிருக்கிறோம் நடுநிலைப்பள்ளி ஆரம்பப் பள்ளிகளில் கட்டிக் கொடுக்கிறோம் என்று. அந்த நடுநிலைப் பள்ளி எப்படி இருக்கிறது என்றால் சுவர்கள் எல்லாம் இடிந்து விழுந்த காரணத்தினாலே வெட்டவெளி பொட்டலிலே எட்டாவது வகுப்பு வரை பாடம் நடக்கிறது. நாங்கள் வகுப்பறையே இல்லாத இடத்திலே போய் கழிப்பறையைத் தேட முடியாது. உங்களுக்கு அதிகாரிகள் என்ன புள்ளி விவரம் தருகிறார்கள் என்று எனக்குத் தெரியாது. அதற்காகச் சொல்கிறேன். நீங்கள் அதை பார்க்க வேண்டும். சிதம்பரனார் மாவட்டத்திலே இப்படியெல்லாம் கட்டிக்கொடுத்துவிட்டோம் என்று சொல்லியிருந்தால் அதனை பிடித்துக்கொள்ளுங்கள். அதற்காகத்தான் ஒரு குறிப்பு தான் நான் தருகிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஏனென்றால் ஆயிரம் மக்கள் தொகைக்கு பஸ். (மணியடிக்கப்பெற்றது).



1993 பிப்ரவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டொரு மணித் துளிகளிலே முடியுங்கள்.

திரு. குமரி அனந்தன் : இரண்டொன்று மணித்துளிகள் என்றால் ரொம்ப சங்கடம். வேண்டுமானால் உட்கார்ந்து விடுகிறேன்.

பிற்பகல் 1-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 12.33-க்கு ஆரம்பித்து இருக்கிறீர்கள்.

திரு. குமரி அனந்தன் : நான் பேசியதை எடுத்துக் கொண்டால் 6 நிமிடம் தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை இப்போது நான் உட்கார்ந்த பிறகே 10 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

திரு. குமரி அனந்தன் : 10 நிமிடத்தில் அவர்கள் வேறு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் 1½ மணி நேரம் எடுத்துக் கொண்டார்கள் இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேகமாகப் பேசுங்கள். 15 நிமிடத்தில் முடித்து விட்டால் நன்றாக இருக்கும்.

திரு. குமரி அனந்தன் : அதெல்லாம் கிடையாது, நான் பிறகு ரொம்ப சங்கடமாக இருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேகமாக முடியுங்கள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஊர்களுக்கு எல்லாம் பஸ் போகும் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் ஊரில் சொல்லுகிறேன், ஐயா உதாரணமாக சாத்தான் குளத்தில் திருவரங்கப்பட்டி, வெட்டிகுளம், கிளாக்குளம் நான் மூன்றைத்தான் சொல்கிறேன். இங்கே எல்லாம் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். சுதந்திரத்திற்குப் பிறகு அவர்கள் பஸ்ஸை பார்க்கவேயில்லை. அதற்கு நாங்களும் குறையாக இருக்கலாம், நீங்களும் குறையாக இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் மக்கள் தொகை இருக்கின்ற இடங்கள் அத்தனைக்கும் பேருந்துகள் விட வேண்டும் என்று இந்திய நாட்டினுடைய வரலாற்றில் எந்த முதலமைச்சரும் செய்யாத ஒரு சாதனையை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் செய்து காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடத்தில் பேருந்தை இயக்க முடியாது. அப்படிப்பட்ட இடங்களில் தான் பேருந்துகள் இயக்க முடியவில்லை. சாலைகள் சரியாக இல்லாத இடங்களிலும் பேருந்துகள் இயக்க முடியாது. ஆயிரம் மக்கள் தொகை இருக்கிற சில இடங்களில் இயக்க முடியவில்லையே தவிர நீங்கள் இப்போது ஜாலத்திலே பேசுவது போல் பறக்கின்ற பேருந்துகள் வருமானால் அதை இயக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன் : இந்த ஜாலத்தை நிகழ்த்திக் காட்ட வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை. அதனால் தான் உங்களிடம் சொல்கிறேன். வேறு ஒன்றும் இல்லை. ஜாலத்தை நிகழ்த்துவது எல்லோராலும் முடியும். உங்களாலும் முடியும். நீங்கள் விரும்பினால் முடியும். அதிகாரிகள் வழிக்காட்டுதலை மட்டுமே நம்பாமல் எங்களைப் போன்றவர்களுடைய ஆலோசனையையும் கொஞ்சம் கேட்டால் முடியும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உங்களை வேறு வகையில் நான் சொல்ல விரும்பவில்லை.

அடுத்து குடிநீர்ப் பிரச்சினை. இந்த குடிநீர்ப் பிரச்சினை எப்படி இருக்கிறது என்று சொன்னால் ஸ்ரீபெரும்புதூருக்கு பக்கத்தில் எரையூர், இரண்டே இரண்டு ஊர்களை மட்டும் சொல்கிறேன், வல்லம். இன்றும் குளத்திலும் ஏரியிலும் தான் அவர்கள் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். போய் பாருங்கள். குடிநீரும் கொடுத்து முடித்து விடுவோம் என்று சொன்னோம் நாம்.. அங்கே கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஐதராபாத்துக்கு சென்ற ஆண்டும் கவர்னர் உரைக்கு முன்பாக போனார்கள், இந்தத் தடவையும் போனார்கள். அவர்கள் தண்ணீர் கொண்டு வர வேண்டும் என்பதிலே அக்கறையோடு இருக்கிறார்கள். போன தடவை 1995 ஜூனில் அதை கொண்டு வருவோம் என்று



சொன்னார்கள். அதையே இப்போது உறுதி செய்து விட்டு வந்திருக்கிறார்கள். ஏன் என்றால் தண்ணீர் இங்கே சென்னைக்கு எவ்வளவு அவசியப்படுகிறதோ அதற்கு தகுந்தாற்போல் வேறு மற்ற இடங்களிலும் அவசியப்படுகிறது. என்பதற்காகச் சொல்லுகிறேன். இப்போதும் ஏரி, குளங்களில் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஊர்களை குறித்து வைத்துக் கொண்டு உங்கள் அதிகாரிகளை அனுப்பிப் பாருங்கள். ஏன் என்றால் உங்களிடம் தான் அதிகாரம் இருக்கிறது; அதிகாரிகள் இருக்கிறார்கள். நான் பார்த்ததைத்தான் சொல்ல முடியும்.

அடுத்து, சென்னைக்கு குடிநீருக்காக ஒக்கியம் மதகு என்று சொல்லுகின்ற இடத்திலிருந்து தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கின்றபோதே நான் சொன்னேன். ஆனால் அதை இப்போது உங்களுடைய அமைச்சரவையில் செயல்படுத்தப் போகிறீர்கள் என்பதைக் கண்டு நான் பாராட்டுகிறேன்; மகிழ்கின்றேன்: ஏன் என்றால் பல ஆண்டுகளுக்கு முன்னால் சொன்னது இப்போதாவது நிறைவேறுகிறது என்பதற்கு. திருவான்மியூருக்குப் பக்கத்தில் இருக்கிறது ஒக்கியம் மதகு.

ரொம்ப அதிகமாகப் போகாமல் ஒன்றைப் பற்றி நான் சொல்லியாக வேண்டும். தொழில் வரி என்று சொல்லுவது ஏற்கெனவே நமது சட்டம் ஆகிவிட்டது. ஆனாலும் 17 ஆம் தேதி அவர்கள் கடை அடைப்பும், ஊர்வலமும் நடத்த இருக்கின்ற காரணத்தால் இப்போது நான் சொல்ல ஆசைப்படுகிறேன். தொழில் வரி யாரையும் விட்டு வைக்கப் போவது இல்லை. ஆட்டோ, டாக்சி, வக்கீல், டாக்டர், இன்ஷூரன்ஸ் ஏஜெண்ட், தரகர், பெட்டி கடைக்காரர், பீடிக் கடைக்காரர், பொடிக் கடைக்காரர், படக்கடை, பழக்கடை, பலசரக்கு, பலே சரக்கு, பலே சரக்கு என்றால் மது, பாடலாசிரியர், வசன கர்த்தா, அரசு ஊழியர்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 15 தினங்களுக்கு முன்பாகவே 75 ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்ட வருமானத்தைக் கொண்டிருக்கின்ற எல்லா சிறு கடை வியாபாரிகளுக்கும் வரி தள்ளுபடி செய்து உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[1993 பிப்ரவரி 8

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, அந்தச் செய்தியை அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் அதைப் பத்திரிக்கையில் படித்தேன்; அதை நான் குறிப்பில் வைத்திருக்கிறேன், மனதில் வைத்திருக்கிறேன் ஆனால் ஒரு நிறுவனம் பதிவு செய்யப் படவில்லை என்றால் அதன் விற்பனை 75001 ரூபாயாக இருந்தால் அந்த நிறுவனம் ஒரு நாளைக்கு பதிவு செய்யவில்லை என்றால் 'இப் இட்டீஸ் ஏ பார்ம்' பதிவு செய்யவில்லை என்றால் ஒரு நாளைக்கு 100 ரூபாய் அபராதம் அதுவும் அந்த கடையில் வேலை செய்கிறவர்களாக இருந்தால் அவர்களுடைய பெயர்களைப் பதிவு செய்யவில்லை என்றால் அல்லது ஒரு தனி நபர் சிறு வெற்றிலைப் பாக்கு கடை, பீடிக்கடை வைத்திருந்தால் நாள் தோறும் 20 ரூபாய் அபராதம் இந்த விதிகளைப் பின்பற்றாத ஒவ்வொரு நாளைக்கும் 50 ரூபாய் அபராதம். வரி கட்டாத ஒவ்வொரு நாளைக்கும், அவர்களுக்கு நாட்களுக்கு என்று அபராதம் போடவில்லை என்று சொன்னாலும் மொத்த வரியிலே 50 சதவீதம் அபராதம் அந்த 50 சதவீத அபராதத்திற்கு 24 சதவீத வட்டி. இந்த அபராதத்தை பில் அப் செய்யாத, ரிட்டர்ன் பில் அப் செய்து கொடுக்காத ஒவ்வொரு நாளைக்கும் 25 ரூபாய் அபராதம். ஒரு அதிகாரி உள்ளே போனால் அதிகாரி என்றால் பில் கலெக்டருக்கு மேலே இருக்கின்ற யார் வேண்டுமானாலும் உள்ளே போகலாம் உள்ளே போய் கணக்கை கேட்கலாம். கணக்கைப் பார்க்கலாம், கணக்கை பறிமுதல் செய்யலாம்; ஆனால் கோர்ட்டுக் போக முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமாக இருந்தாலும் நகராட்சியாக இருந்தாலும அந்த ஆணையாளருக்கு தான் அந்த அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதே தவிர வேறு யாருக்கும் அந்த அதிகாரம் வழங்கபடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Thiru KUMARI ANANDAN : Will it not be delegated to other people? Will it not be delegated to other officials? Will the Commissioner himself go there? No....

பிற்பகல் 1-25

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு கடை வியாபாரிகளுக்கு அதிகாரிகள் மூலமாக எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும் அந்த நகரத்திலே இருக்கிற நகர சபையினுடைய கமிஷனருக்கு





எல்லாவிதமான அதிகாரமும் வழங்கப்பட்டிருக்கிறது. அவர் களும் அப்படி தவறு செய்வார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணினால் உள்ளாட்சித் துறையிலே பொறுப் பேற்று இருக்கிற உயர் அதிகாரிகளுக்கும் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரங்கள் வழங்கபபட்டிருக் கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : வரி வசூலுக்குப் போவதும் உள் ளாட்சித் துறை. மேல் முறையீடும் உள்ளாட்சித் துறை என்று சொல்கின்றபோது, அவர்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு நீதி மன்றத்திற்கு போக முடியாதே என்பதுதான்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கள் ஊருக்கு குடிதண்ணீர் வரவில்லை என்று சொல்கிறார் அந்த குடிதண்ணீரைக் கொடுக்க வேண்டுமென்றால் அரசுக்கு நிதி வேண்டியிருக்கிறது. கடந்த 20 ஆண்டுக் காலமாக உள்ளாட்சித் துறையிலே சொத்து வரி விதிப்பதிலே பல்வேறு தடைகள் செய்திருக்கிறார்கள். குடி தண்ணீருக்கு வரி போடுவதிலே தடை செய்திருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு வரியையும் தடை செய்து கொண்டே இருப் போமானால், அடிப்படை பிரச்சினைகளைப் பார்க்கின்ற நேரத் திலே, நல்ல கழிப்பிடங்களை உருவாக்கித் தர வேண்டும், குடித்தண்ணீரைக் கொடுக்கவேண்டும் சாலைகளைப் பராமரிக்க வேண்டும்; தெரு விளக்குகளைப் பராமரிக்க வேண்டும்; அந்த நிதிகளையெல்லாம் எவ்வாறு பெற முடியும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களுக்குச் சொல்லியாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, சென்னை மாநகரத்தைப் பொறுத்த அளவில், இப்போது அவர்கள் பார்த்துக் கொண்டு இருப்பார்கள். எங்கு திரும்பினாலும் தெரு விளக்குகளை பார்க்க முடிகிற நிலைமையை புரட்சித் தலைவியின் ஆட்சியிலே உருவாக்கிக் கொண்டு இருக்கிறோம், (மேசையைத் தட்டும் ஒலி) சாலைகளைப் பராமரித்துக் கொண்டு இருக்கிறோம். இப்படி புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே உள்ளாட்சி நிறுவனங்களைப் பொறுத்த அளவில் பல்வேறு நிலைமைகளிலே மாற்றங்கள் உருவாக்கப் பட்டு ஊராட்சி ஒன்றியமாக இருந்தாலும் நகரமாக இருந் தாலும், மாநகரமாக இருந்தாலும், நிர்வாகத்திலே மாற்றங் கள் உருவாக்கப்பட்டு மக்களுக்கு பல்வேறு வசதிகளைச் செய்து கொண்டிருக்கிற அந்த வேளையிலே, முன்பு பேசுகிறபோது, ஊராட்சி ஒன்றியத்திற்கு மத்திய அரசால் கொடுக்கப்படுகிற நிதிகளையெல்லாம் செலவு செய்கிறோமா இல்லையா என்பதை யெல்லாம் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள் 1991-92 ஆம் ஆண்டில்....

[1998 பிப்ரவரி 8

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினையில் பேசி முடியுங்கள்.

மாண்புமிகு திரு, அழகு திருநாவுக்கரசு : 1991–92 ஆம் ஆண்டில், இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற 6 மாநிலங்களோடு ஒப்பிடும்போது தமிழகம் 100 சதவீத பணங்களைச் செலவு செய்து இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது, நீங்கள் வாங்கக் கூடாது என்று சொல்லவில்லை போன தடவை, தொழில் வரி என்பது குறைந்த பட்சம் ஒரு ஆண்டுக்கு இருந்தது 12. கூடுதல் இருந்தது ஒரு ஆண்டுககு 250 இந்தத் தடவை குறைந்த பட்சம் 400 கூடுதல் 2,500 இன்னும் ஒன்று சொல்லுகிறேன் சம்பளம் வாங்குகிறவர்கள் யாரும் தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாது, சம்பளம் வாங்குகிறவர்களுக்குக் கூட இந்த வரியிலே சலுகை வேண்டுமென்று நான் கேட்கிறேன். ஆனால் ஒன்றைச் சொல்லுகிறேன். வருடத்திற்கு 2 இலட்சம் ரூபாய் சம்பளம் வாங்குகிற ஒருவர் கட்ட வேண்டிய தொழில் வரி 1980 ரூபாய் ஆனால் ஒரு வருடத்திற்கு 2 இலட்சம் வியாபாரம் செய்து விட்டாலே, it is turn over-not Profit or income அவருக்கு வருகிற சம்பளத்தை, 2 இலட்சம் ஒருவர் வாங்குவாரானால் அவர் கட்ட வேண்டிய வரி 1980 ரூபாய் 2 இலட்சத்திற்கு, ஒருவருக்கு டர்ன் ஓவா இருந்து விட்டாலே, விற்பனை நடந்து விட்டாலே அவர் 2,500 ரூபாய் கட்ட வேண்டும். இது லாபக் கணக்கிலே வரவில்லை அங்கே ஒருவர் 2 இலட்சம் ரூபாய் சம்பளம் வாங்குகிறார் என்று சொன்னால், பெல் அடித்த உடனேயே ஓடி வருகிற பியூனுக்கு அரசாங்கம் சம்பளம் கொடுக்கிறது. ஃபோனுக்கு அரசாங்கம் பார்த்துக் கொள்கிறது. லைட்டுக்கு, ஃபோனுக்கு, டிரான்ஸ்போர்ட்டுக்கு, இவை எல்லாவற்றுக்கும் இவரே பண்ண வேண்டும். கடைக்கு லைசன்ஸ், மோட்டாருக்கு லைசன்ஸ் இவ்வளவும் பண்ணியதற்குப் பிறகு அவருக்கு 2 இலட்சம் ரூபாய்க்கு வியாபாரம் நடந்தது என்றால் 2,500 ரூபாய் கொடுக்க வேண்டும் 2 கோடி நடந்தாலும் 2.500 தான் நான் 2 கோடி நடக்கிறவரை விட வேண்டாம் என்கிறேன்' 2 கோடி நடந்தாலும் அவருக்கு 2,500 என்று போட்டிருக்கிறீர்களே அது என்ன நியாயம் ? சில இடங்களில் என்ன செய்கிறார்கள் ?....



1993 பிப்ரவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. எம். ரங்கராஜன்,

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்பொழுதே அப்போஸ் பண்ணவில்லையே ?

He has not raised all these points when the Bill was considered. Now he is raising all these. Now it has been passed by the Assembly. He has not.. ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது பில் வருகிற போது ஒரு உறுப்பினர் அதை எதிர்த்துப் பேசவில்லை என்பது வாய்ப்பு கிடைக்காமல் இருந்து இருக்கலாம் இதற்கும் அதற்கும் சம்பந்தப்படுத்தக்கூடாது மாண்புமிகு உறுப்பினர், தொடர்ந்து பேசுங்கள்

திரு. குமரி அனந்தன் : அப்போது கூட காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள் எது எப்படியிருந்தாலும், இப்போது மறு பரிசீலனை செய்வதில் தப்பு இல்லை. சாதாரணமாக இந்தக் கடைகளைப் பொறுத்த வரையில் சொல்லி விடுகிறேன் ஒரு கடையிலே ஒருவன் இருப்பான். அவனுக்கு 400 ரூபாய் சம்பளம் இருக்கும். அப்படியே உட்கார்ந்து கொண்டு இருப்பான். 10 கடைகளிலே இருக்கிற வேலையாட்கள் ஆளுக்கு ஆயிரம் ரூபாய் போட்டு ......

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, சிறுகடை வியாபாரிகளாக இருந்தாலும், பெரிய கடைகளில் பெரிய முதலீடு செய்யும் வியாபாரிகளாக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பார்த்து நான் கேட்க ஆசைப்படுவதெல்லாம் அவர்கள் ஒழுங்காக கணிக்கை காட்டிவிட்டால் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது ஒழுங்காகக் கணக்கைக் காட்டாத காரணத்தினாலேதான் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டுக் ஒலி)

பிற்பகல் 1-30

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருக்கு மறுத்து உடனே அவருடைய நிலையிலிருந்து நான் பதில் சொல்ல இயலாது இருந்தாலும் நான் உடனுக்குடனே பதில் சொல்லி விடுகிறேன்.

நான் ஏற்கெனவே தொட்டதைச் சொல்கிறேன். ஏழையெளிய தொழிலாளர்கள் சாதாரணமாக தங்களுடைய வாழ்க்கையை மேலேற்றிக் கொள்ள வேண்டும்; முன்னேற்றிக் கொள்ள வேண்டும். உயர்த்திக் கொள்ள வேண்டுமென்பதற்காக ஆளுக்கு 1000 ரூபாய் போட்டுச் சேர்வார்கள். அவர்களெல்லாம் பங்குதாரர்களாக இருப்பார்கள். இதுவரை நடந்தது என்னவென்றால், ஒரு ஃபர்ம்-ஒரு நிறுவனம் என்றால் அந்த நிறுவனத்திற்கு மட்டும் வரி போடப்படும். இப்பொழுது 5 பேர் அதிலே பங்குதாரர்களாக இருந்தால் அந்த நிறுவனத்திற்கும் 2,500; அந்த ஐந்து பங்குதாரர்களும் 2,500, 2,500 2,500 கட்ட வேண்டும். ஆக, விற்பனை எவ்வளவு வருகிறது, அதிலே இலாபம் எவ்வளவு வருகிறது என்று பார்க்காமல் விற்பனைக்கே போடுவதும், பங்குதாரராக சிலயிடங்களிலே என்ன செய்வார்கள் என்று சொன்னால் எல்லோருக்கும் உரிமை வர வேண்டும் என்பதற்காக பெண், பையன் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் என்று எல்லோரையுமே அதிலே பார்ட்னர்ஸ் என்று போட்டு வைத்துவிடுவார்கள். ஏதோ நீங்கள் சொல்வதைப்போலே இன்கம் டாக்ஸை குறையட்டும் என்று கூடத்தான் வைத்துக் சொள்வோமே; ஆனால் அது அதோடு மட்டுமல்ல; (குறுக்கீடு) நானே சொல்கிறேன். அதுமட்டுமல்ல, என்ன செய்வார்கள், அவர் உரிமை, இந்த மனிதன் போனதற்குப் பிறகுகூட அவர் பங்குதாரர், அந்தப் பெண்ணுக்கு அதிலே பங்கு உண்டு; யாரும் தடுக்க முடியாது. ஆண்மகன் அந்தப் பெண்ணினுடைய உரிமையைப் பறித்து விட முடியாது என்பதற்காகச் சிலர் இப்பொழுதே என்ன செய்கிறார்கள், பெண்களையும் பங்குதாரராக ஆக்கி விடுகிறார்கள். அந்தப் பெண்ணும் இப்பொழுது 2,500 கட்ட வேண்டும்; பேரனும் 2,500 கட்ட வேண்டும். Sleeping partners, working partners என்று சொன்னாலும் சரி.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த நிறுவனங்களுக்கு மட்டும் வரி விதிப்பு செய்தால் போதும்; நிறுவனத்திலே உள்ள இயக்குநர்களுக்கெல்லாம் வரி விதிப்பு வேண்டாம் என்று தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மகிழ்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடிக்கலாம். ஒரு மணி நேரம்....



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த அதிகாரிகளுக்குக் கொஞ்சம் குறைவாக இருக்கிறது என்று அவர்கள் வருத்தப்பட்டார்கள். அதைப்பற்றி ஏதாவது அவர்கள் சொல்ல விரும்புகிறார்களா? உயர்த்த வேண்டுமென்று கருதுகிறார்களா? (சிரிப்பு)

திரு. குமரி அனந்தன்: நான் அதனாலேதான் சொன்னேன். சம்பளக்காரர்களுக்கு-உங்களுக்கும் நான் பேச வேண்டுமென்று சொன்னேன். எனக்குத் தெரியும். ஏதாவது பண்ணிவிடுவார்கள் என்று. அதனாலேதான் முதலிலேயே முன்னெச்சரிக்கையாகச் சொன்னேன், நான் சொன்னேன். அவர்களுக்கும் நீங்கள் பாருங்கள். அவர்கள் ஸ்லாப் ஸிஸ்டம் வைத்து பார்க்கலாம், என்ன என்று பார்க்கலாம். இப்பொழுது அவர்கள் இவ்வளவு சொல்லியிருக்கிறார்கள் அல்லவா? பங்குதாரருக்கு வேண்டாமென்று முதல்வரவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்றால், டைரக்டர்களுக்கு வேண்டாமென்று சொல்லியிருக்கிறார்கள் என்றால், அந்த நிறுவனத்திற்கு மட்டும் என்றால் அப்பொழுது அவர்களுடைய கவனம் அதிலே போய் விட்டது என்று எனக்கு மகிழ்ச்சி. அந்த அளவிற்குப் போதும் என்பதுதான் என்னுடைய நோக்கமே சட்டசபைக்கு வருவதே அதுதானே; அந்த நோக்கம்தானே; நன்றாக இருக்க வேண்டுமென்பதுதானே.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவனம் இன்றைக்குப் போகவில்லை; ஏற்கனவே புரட்சித்தலைவி ஆட்சி கேபெனட்டிலே பேசி முடிவு எடுத்து இருக்கிறார்கள். அதை இன்றைக்குத்தான் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள், இன்றைக்கு யாரோ வரும் பொழுது சொல்லியிருக்கிறார்கள் அதனால் நீங்கள் பேசியிருக்கிறீர்கள். இதற்கு முன்னாலேயே புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுத்து விட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)..

திரு. குமரி அனந்தன்: மந்திரிசபைக் கூட்டத்திலே நடப்பது எல்லாம் அங்கே உள்ளே இருக்கிறவர்களுக்குத்தான் தெரியும். எனக்குத் தெரியாது; ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவைக் கூட்டத்திலே விரிவாகப் பேசப்பட்ட பின் பத்திரிக்கைக் குறிப்பு ஒவ்வொரு சப்ஜெக்டிற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அது வெளியிடப்படுகிறது. ஏற்கனவே வெளியிடப்பட்டிருக்கிறது.

திரு. குமரி அனந்தன் : இரண்டுதடவை உண்ணாவிரதம் இருந்தார்கள். கடையடைப்பு செய்வார்கள். 17ஆம் தேதி அவர்கள் எல்லாம் கடையையெல்லாம் அடைத்து விட்டு இங்கே வர வேண்டாமே என்பதற்காக அதைச் சொல்கிறேன். அதனாலே முதல்வரவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்களோ அது அவர்களுடைய-ஏனென்றால், சனிக்கிழமை வரை நான்-வெள்ளிக்கிழமை மதுரையிலே இருந்தேன். சேம்பர் ஆஃப் காமர்ஸ்காரர்கள் வந்து என்னைப் பார்த்தார்கள். அதுவரை அவர்களுக்கு அந்தத் தகவல் இல்லை. எனவேதான் அவர்கள் கொடுத்த மனுக்கள் பூராவும் —ஏதாவது கேட்பீர்கள் என்பதற்காக மனுக்கள் பூராவையும் அள்ளிக்கொண்டு வந்திருக்கிறேன். அது ஒரு பக்கம் இருக்கட்டும். எனவே, அப்படிப்பட்ட செய்திகள் இருக்குமானால் உங்களை நான் பணிவோடு வேண்டுகிறேன். அரசு அலுவலர்களோ, சம்பளத்திற்கு வேலை பார்க்கிறவர்களுடைய பிரதிநிதிகள், நிறுவனத்தைச் சார்ந்தவர்கள். தொழில் நடத்துபவர்கள், கூடிப்பேசவேண்டும் இன்ஸுரன்ஸ் ஏஜென்ட் இவர்களெல்லாம்-இன்ஷுரன்ஸ் ஏஜன்ட் சினிமா பாட்டு எழுதுபவர்கள்—நான் கூட ஒரு சினிமாப் பாட்டு எழுதியிருக்கிறேன். அந்தப் பாட்டு சினிமாவிலே வருகிறதோ இல்லையோ, நானும் வரி கட்ட வேண்டுமோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது. அதனாலே நான் சொல்ல வந்தேன். (குறுக்கீடு) இருங்கள் சார். அதனாலே நான் இப்பொழுது அதை விட்டு விடுகிறேன். 17 ஆம் தேதி விஷயத்தை நீங்கள் பார்த்துக் கொள்வீர்கள் என்று நம்பி அதை உங்களிடம் விட்டு விடுகிறேன். (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடிக்க வேண்டும்.

திரு. குமரி அனந்தன் : இதோ வந்துவிட்டேன். தயவு செய்து கொஞ்சம் நேரம்.

அடுத்து மதுரையில் கைத்தறி நெசவாளர்கள்—அதையும் நான் பாராட்டுகிறேன். மதுரையிலே 10,000 பேர் போராடிக் கொண்டிருந்தார்கள், நான் அங்கே இருக்கிறேன் அப்போது. அந்த நேரத்திலே கைது செய்யப்பட்டார்கள். என்ன ஐயா என்று கேட்டேன். கேட்டபொழுது சொன்னார்கள்; நாங்கள் தனியார் ஒப்பந்தத்தையெல்லாம்—தனியாரிடம் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டால் அந்த ஒப்பந்தத்திலே எவ்வளவு ஊதிய உயர்வு வருகிறதோ அதைக் கைத்தறி இயக்குநர் எங்களுக்குக் கொடுத்து விடுவார். என்றைக்கு ஒப்பந்தம் வந்ததோ, ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட்டிலே கொடுத்து விடுவார்; இந்தத் தட்வை மாட்டேன்" என்கிறார்கள். 12 சதவீதம் தனியார்கள் கூலி உயர்வு கொடுக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கம் 10 என்று போட்டிருக்கிறது. அதுவும் இரண்டு மாதம் கழித்துத் தருவேன் என்று சொல்கிறார்கள். அதனாலேதான் நாங்கள் மறியல்



செய்து கைது செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன் சட்டசபையிலே என்று சொன்னேன். அதற்கிடையிலே ஒரு வேளை நல்லது ஏதாவது நடந்திருக்கலாமே என்று போன் பண்ணிக் கேட்டேன். அப்பொழுது நேற்று கலெக்டர் போய் அந்தப் போராட்டக் குழுக்களையெல்லாம் சந்தித்து, அந்த வித்தியாசம் இல்லாமல் நான் அப்படியே கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்களாம். அதை நான் பாராட்டுகிறேன். அதனாலே ஒவ்வொரு காரியத்தையும் எடுத்துக் கொண்டு வந்து விட்டு அப்படியே இருப்பது இல்லை. தொடர்ந்து அதை நான் பார்க்கிறேன். Interruption it is all over அடுத்து, இந்த புயல், வெள்ளம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள்.

திரு. குமரி அனந்தன் : புயல், வெள்ளம். புயல் வெள்ளமாக இருப்பதாலே மூன்று தடவை எங்கள் பகுதிக்கு வந்தார்கள். முதலமைச்சரவர்கள், தென் பகுதிக்கு வந்தார்கள். வ.உ.சி. கட்டபொம்மன்—திருநெல்வேலி, கன்னியாகுமரி, இந்தப் பகுதியெல்லாம் ரொம்ப அதே மாதிரி மேற்குத் தொடர்ச்சி மலைக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய இடங்களெல்லாம் ரொம்ப பாதிக்கப்பட்டு, சரிதான்—ஆனால் இப்பொழுது கூட நான் உங்களுக்குச் சொல்கிறேன். கம்பம்-குமுளி சாலையில்— It is not motorable now — கம்பத்திலேயிருந்து இப்பொழுது குமிழிக்குச் போக முடியாது. குமிழிதான் கேரள எல்லை; கம்பம் நம் எல்லை. மணிமுத்தாற்றிலேயிருந்து மாஞ்சோலைக்குப் போக முடியாது. நான் இதைப் பார்த்து விட்டு வந்து சொல்கிறேன். இடிந்த வீடுகள் நிறைய கிடக்கின்றன. பாபநாச அணையிலும், கடனா அணையிலும், தேர்தலாறு அணையிலும் ஏகப்பட்ட யானைகள் செத்துக் கிடக்கின்றன. அணைக்கட்டுகளில் யானைகள் கிடக்கின்றன. (குறுக்கீடு).

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு யானைகளே கிடையாது; யானைகளும் சாகவில்லை. மணிமுத்தாறில் ரோடு போடப்பட்டு, அங்கு பஸ் போய்க் கொண்டிருக்கிறது.

திரு. குமரி அனந்தன் : பஸ்ஸிலே போய்க் கொண்டிருந்தால், அது நல்லது ..........(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பகுதியைச் சார்ந்தவரை, நீங்கள் சொல்வது அவ்வாறில்லை என்று மறுக்கும்போது, அதற்கு நான் அனுமதி மறுக்க முடியாது அல்லவா அவர் பகுதி; அதுதான் அவ்வாறு சொல்கிறார்.

பிற்பகல் 1-35

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணிமுத்தாறு பாலமும், தேர்தலாறு பாலமும் புயலால் சேதம் அடைந்தது உண்மை. ஆனால் உடனடியாக மாற்றுப் பாதைகள் அமைக்கப்பட்டு, மணிமுத்தாறுக்கு பஸ் போய்க் கொண்டிருக்கிறது. அதேபோல, தேர்தலாற்றுக்கும் மாற்றுப்பாதை அமைக்கப்பட வேலை நடந்து கொண்டிருக்கிறது. ஒரு தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் கொடுத்து விட்டார் என்பதை வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், யானைகள் அந்தக் காட்டில் கிடையாது. யானைகள் உயிரோடும் கிடையாது; செத்தும் அந்தப் பகுதியில் இதுவரைக்கும் பார்க்கவில்லை. மாண்புமிகு உறுப்பினருக்கு யாரோ சரியான முறையில் தகவல் கொடுக்கவில்லை. அதை வைத்துக் கொண்டு இவ்வாறு பேசுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இந்தப் பிரச்சினையோடு முடியுங்கள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் அந்தத் தகவலைக் கொடுத்திருக்கிறார். நானும் சம உரிமை பெற்ற உறுப்பினர் என்கின்ற வகையிலே நானும் ஒரு தகவலைக் கொடுத்து இருக்கிறேன். இந்த இரண்டு தகவல்களையும் வைத்து, ஏனென்றால் பெரிய பெரிய தடிகள்—பெரிய தடிகள் என்று சொல்கிறபோது, வெட்டிவைத்த மரங்கள்; பல இடங்களில் கூப்பு இப்போது கொடுப்பது கிடையாது. எம்.ஜி.ஆர். கூப்பை ஒழித்து விட்டார். அதற்குப் பிறகும், நீங்கள் தொடர்ந்து கூப்பு கொடுப்பதில்லை பல இடங்களிலே, ஏனென்றால் நீங்கள் கூப்பு கொடுத்தால், காட்டையே அழித்து விடுகிறார்கள் என்ற காரணத்தினால் நீங்கள் கொடுப்பதில்லை.

ஆனால், திருக்குற்றாலத்திலே இருக்கிற கோயில்கள் எல்லாம், பல இடங்களிலே பாதிக்கப்பட்டது, என்னுடைய நண்பர்களுக்குத் தெரியும். அந்த ஆற்று வெள்ளத்திலே பெரிய பெரிய வெட்டி வைத்த தடிகள், நின்று கொண்டிருந்த மரங்கள் கீழே விழுந்தது மட்டுமல்ல; வெட்டி வைத்த தடிகள் குறுக்கே போய் நின்றுதான் பல இடங்களிலே கோயிலை உடைத்தன; பாலத்தை உடைத்தன ; அந்தக் கல்லுக்குள்ளே குறுக்கே போய் நின்றுவிட்ட காரணத்தினால், இந்தத் தடிகள் எல்லாம் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானவை யாரோ எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். (குறுக்கீடு).



மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றன்பின் ஒன்றாக தவறான தகவல்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். யானையே அடித்துச் செல்லாமல், யானைகள் அடித்துச் சென்று அங்கே இருக்கிற ஆற்றிலே மிதந்து கொண்டிருக்கின்றன என்ற தவறான தகவலை இங்கே தருகிறார். அதைவிட, கோடிக் கணக்கான மரங்களை யாரோ எடுத்துச் சென்றார்கள் என்றும் சொன்னார்கள். சில நேரங்களிலே வெள்ளம் அடித்துச் செல்கிறபோது, அந்தப் பகுதியிலே மக்கள் சில மரங்களை எடுத்துச் சென்றிருக்கலாமே தவிர, அங்கிருக்கிற மரங்களை எல்லாம் அப்புறப்படுத்தி, அவற்றை ஏலம் போடுவதற்கு வனத்துறை நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது, குற்றாலம் பகுதியில் பழைய தடிகள், வெட்டிவைத்த தடிகள்தான் சேதங்களை ஏற்படுத்தியதாகச் சொன்னார்கள். இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய தொகுதியுங்கூட. அந்தப் பகுதியிலே இருந்த தடிகள் எல்லாம், அன்றைய வெள்ளத்தில் இழுத்துவரப்பட்ட புதிய மரங்கள், பழைய தடிகள் எதுவும், அப்படிப்பட்ட உடைப்பை ஏற்படுத்தவில்லை. குற்றாலத்தை சேதப்படுத்துகிற அளவுக்கு வெட்டி வைத்த தடிகள் எதுவும் அந்தப் பக்கத்திலே வரவில்லை. மாண்புமிகு தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும் அந்தப் பகுதியிலே தெரியும், நானும் அவர் தொகுதிக்கு, குற்றாலம் பகுதியைச் சுற்றிப் பார்த்திருக்கிறேன். குற்றாலம் பகுதியில் சேதம் அடைந்த போது, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். புரட்சித் தலைவி அவர்கள் அந்தப் பகுதியைப் பார்த்து வருமாறு உத்தரவு பிறப்பித்துத் தந்தார்கள். நானும் அந்தப் பகுதிக்கு உடனே சென்று சுற்றிப் பார்த்தேன். புதிய மரங்கள்தான் அப்படிப்பட்ட சேதத்தை ஏற்படுத்தியதே தவிர, வெட்டி வைத்த தடிகள் அல்ல. இந்தத் தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்திருக்கிறார்கள் என்பதை இங்கே உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என் பெயரை குறிப்பிட்டுச் சொன்னதால், நான் விளக்கம் தரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருவேளை எனக்கு இருக்கிற ஐயம் எல்லாம், அதிகாரிகள் முறையான தகவலை அமைச்சர்களுக்குத் தராததினால், இந்தக் கோளாறுகள் இருப்பதாக நான் நினைக்கிறேன். திடீரென பெரிய வெள்ளம் வந்தக் காரணத்தினால், மரத்தை வெட்டி, அது ஒருவேளை நமது எல்லைக்குள் அந்த மரங்கள் வைக்கப்பட்டிருக்கலாம்; அல்லது கேரள எல்லையில் இருந்த மரங்களாக இருந்திருக்கலாம். திருட்டு மரங்கள் அடித்து வரப்பட்டது என்பது உண்மை. நமது அமைச்சர் அவர்களுக்குச் சொந்தமான தோப்பில் கூட 60, 70 தடிகள் இருந்தன. அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அமைச்சரே பார்த்தார்கள். அந்தத் தடிகள் முறையாகக் கணக்கிடப்படாமல்—சில இடங்களிலே மரக் கடைக்காரர்களுடைய தடிகள் அடித்துக் கொண்டு வெளியே போய்விட்டன. அந்தத் தடிகள் எல்லாம் முறையாகக் கணக்கு எடுக்கப்படவில்லை. அந்தத் தடிகள் சமூக விரோதிகளிடம் போய் மாட்டிக் கொண்டிருக்கின்றன. அந்தச் சமூக விரோதிகளிடம் போவதற்கு அதிகாரிகளும் தயங்குகிறார்கள் என்பதுதான் உண்மை. எனவே, இந்த நேரத்திலே அந்த உண்மையை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைக் கொடுக்கிறார் என்று நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தவறான தகவல்களை வெளியிலே கொடுத்து விடுகிறார்கள் நாமே எல்லாப் பிரச்சினைகளையும் போய்ப் பார்த்துவிட முடியாது. எங்களுக்கும் அதுதான் நிலைமை. உங்களுக்கும் அதுதான் நிலைமை. எங்களுடைய சந்தேகம் எல்லாம் நீங்கள் முதலிலே பேசுகிற போது வாகனங்கள் போவதற்கு வழியில்லாமல், வாகனங்கள் இன்னும் போகமல் இருக்கின்றன என்ற கருத்தைச் சொன்னீர்கள். வாதத்திற்கு அதை ஏற்றுக் கொண்டால், அடுத்து தடிகளை எல்லாம் யாரோ



எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள் என்று சொன்னீர்கள். அந்தத் தடிகளைத் தலையில் தூக்கிக் கொண்டு போகமுடியாது. வாகனங்கள் மூலமாகத் தான் கொண்டு போக முடியும். எனவே வாகனங்கள் போக முடியவில்லை. ஆனால் தடிகள் போயிருக்கின்றன என்று சொன்னால் அவ்வளவு பெரிய திறமைசாலி யார் என்று பார்த்தாக வேண்டும். இதிலே உங்களுக்கு வெளியிலே தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உங்களுடைய ஆதங்கம் அரசாங்கத்திற்கு இதையெல்லாம் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கருதுகிறீர்கள். எனவே, அதிலே எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது; யார் கொடுத்தார்கள் என்று பார்த்து அதிலே நடவடிக்கை எடுத்தால் சரியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு<br>
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்.<br>
அவர்கள் என்னுடைய தோப்பு என்று சொன்னார்கள்.<br>
ஆனால் வெள்ளத்தால் அடிக்கப்பட்ட ஒரு 300 ஏக்கர் பகுதி<br>
கள் எங்களுடைய உறவினர் தோப்பிற்கு மேற்கே உள்ள<br>
அந்தப் பகுதியைத் தாண்டித்தான் வெள்ளம் அடித்துச் சென்<br>
றது. அதில் உள்ள மரங்களையெல்லாம் உடனடியாக வனத்<br>
துறை அதிகாரிகள் மூலமாக பாதுகாக்க ஏற்பாடு செய்யப்<br>
பட்டது. அந்த மரங்கள் எல்லாம் பாதுகாக்கப்பட்டன.<br>
மாண்புமிகு உறுப்பினர், சமூக விரோதிகள் கடத்திச் சென்று<br>
விட் . _ர்கள் என்று சொன்னார்கள். அந்த இடங்களுக்கு<br>
முதல் 2 அல்லது 3 தினங்களுக்கு ஆட்களே போக முடியாது.<br>
அந்த அளவுக்கு வெள்ள நீர் வடியாமல் இருந்தது. ஆனால்<br>
3 தினங்களுக்குப் பின்னால் வெள்ளம் வடிந்தவுடன் வனத்<br>
துறை அதிகாரிகள் அந்த இடங்களுக்குச் சென்று தடிகளைப்<br>
பாதுகாத்தார்கள் என்பதுதான் உண்மை. அதை மாண்புமிகு<br>
உறுப்பினரும் நன்கு அறிவார்கள். அவர்களே, அந்தப் பகு<br>
திக்குச் சென்று பார்த்து இருக்கிறார்கள். அந்த மரங்கள்<br>
பாதுகாக்கப்பட்டன. பாதுகாக்கப்பட்டு, இன்று கூட அந்தப்<br>
பகுதியில் மரங்கள் இதுவரை அதிகாரிகளால் எடுத்து<br>
கொண்டுவரப்படுகின்றன. என்பதை மாண்புமிகு உறுப்பினரே<br>
நேரில் சென்று காணலாம்.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிக்காரர்கள் இரண்டு பேருமே பக்கத்தில், பக்கத்தில் இருக்கிறார்கள். நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாதையே இல்லையென்றால் எப்படிப் போனார்கள் என்று. பாதை வந்து விட்டது என்று ஒரு உறுப்பினர் சொன்னார். ஆக........

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்குக் கொடுக்கப்பட்டது தவறான தகவல். உதாரணமாகத்தான் சொல்லப்பட்டது. ஒன்று தவறான தகவலாக இருக்கலாம். இடம் இருக்கிறது. இல்லை என்று கொடுத்தது உங்களுக்குத் தவறான தகவல் என்று சொன்னேன். ஒரு வேளை 6 மாத காலத்திற்கு முன்னதாகக் கிடைத்த தகவலாக இருக்கலாம். ஆனால் இப்போது வழி இருக்கிறது என்று உறுப்பினரே சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே நீண்ட அனுபவம் மிக்க உறுப்பினர் நான் சொல்லி ஒரு சில மணித் துளிகள கழிவதற்கு முன்பாகவே மறுபடியும் தவறாக அவர் குறிப்பிடுகிறார். இரண்டு மூன்று தினங்களுக்குச் செல்லவில்லையே தவிர, அதற்குப் பின்பு பாதை செப்பனிடப்பட்டு, அங்கே வனத்துறை அதிகாரிகள் சென்றார்கள் என்று தான் இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் எடுத்துச் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியோ அந்தப் பகுதியிலே போக முடிந்தது என்ற தகவல் மகிழ்ச்சியானது. அடுத்து, புயலினால் ஏற்பட்ட துன்பத்தில் பல வீடுகள் இடிந்து கிடக்கின்றன. உடனடியாக அவர்களுக்கு நலம் செய்ய முதல்வர் அவர்களே அங்கு போனார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே சிதம்பரனார் மாவட்டத்திலே, கட்டபொம்மன் மாவட்டத்திலே புயல் வெள்ளச் சேதத்தினால் வீட்டுச் சுவர் இடிந்தவர்களுக்கு ரூ. 250 என்று பல இடங்களிலே கொடுத்திருக்கிறார்கள். வெறும் 250. நான் ஆட்களின் பெயர்களைக் கூடச் சொல்ல முடியும். அதே மாதிரி..............



டாக்டர் மு. அம்மமுத்துப் பிள்ளை : 500 ரூபாய்.

திரு. குமரி அனந்தன் : 500. அதற்குத்தான் சொல்ல வருகிறேன். நான் சொல்ல வந்ததற்குக் காரணமே அதுதான். அவர்கள் சொன்னது 500 ரூபாய். 500 ரூபாய் கொடுப்பதற்கு என்று முதல்வர் உத்தரவிட்ட பிறகும். 250 ரூபாய் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) நான் கையிலே லிஸ்ட் வைத்திருக்கிறேன். கொடுத்து விட்டுப் போகிறேன். அரசூர் பஞ்சாயத்து, ஊர் தட்சன்விளை, இருக்கிற பகுதி அண்ணா நகர் 17–வது வார்டு, வீட்டு எண். 28–ஏ, பெயர் பலவேசம் மாள், புயல்வெள்ளத்தால் வீட்டிற்கு சேதம் ஏற்பட்டதற்கு கொடுக்கப்பட்டது. ரூ. 250 ............. . . . (குறுக்கீடுகள்).

பிற்பகல் 1.45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். அவர் பேசட்டும். பேசி முடிக்கட்டும். பேசி முடியுங்கள்.

திரு. குமரி அனந்தன் : அந்த அம்மாள் பெயர் பலவேசம்மாள். பள்ளம்தட்டு என்ற ஊரிலே அழகு சுந்தரம்— சுவர் இது எல்லாம் போய் இருக்கிறது. சொத்து கொடுக்கவில்லை. அவர்களிடம் சொத்து எதுவும் இல்லை. சேலை வேட்டி கொடுக்கவில்லை. லிங்கப்பாண்டி, அவருக்கு மாத வருமானம் 300. அவருடைய அட்டை எண். 078266. சேலை எதுவும் கொடுக்கவில்லை. செல்லையா முடிதிருத்துபவர், மாத வருமானம் 200. அவருடைய அட்டை எண். 078183. எதுவும் கொடுக்கவில்லை. நான் வேண்டுமென்றே சொல்ல வில்லை. இது என்னுடைய தொகுதியில் இருப்பதால் சொல்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நடேசன் பால்ராஜ்

திரு, வே . நடேசன் பால்ராஜ் **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நடேசன் பால்ராஜ். **இன்னொரு உறுப்பினரை சொந்த முறையில் குற்றம் சாட்டக் கூடாது. இந்தப் பிரச்சினைக்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்). அவர் என்ன சொல்ல வரு

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

கிறார் என்று கேளுங்கள். (குறுக்கீடுகள்) அவர் இந்தப் பிரச்சினையைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன் என்று சொல்கிறார். (குறுக்கீடுகள்) அவர் சொல்லட்டும் என்ன என்று.

திரு. வெ. நடேசன் பால்ராஜ் : ஒவ்வொரு வீட்டிற்கும் சாதாரண சின்ன சுவர் இடிந்ததற்குக் கூட 250 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். ஒரு வீடு இடிந்திருந்தால் 500 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். வேட்டி, சட்டை கொடுத்திருக்கிறார்கள். எந்த அரசும் கொடுக்காத முறையில் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொல்வது சாத்தான்குளம் தொகுதியிலே. . . . . . . . . . . . . (குறுக்கீடுகள்) நான் முதலிலேயே சொல்லிவிட்டேன் ** குற்றச்சாட்டு கூடாது என்று. அந்தக் குற்றச்சாட்டுப் பகுதி நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தால், பஞ்சத்தால் இப்படிப்பட்ட இயற்கை இடர்பாட்டினால் வீடுகள் விழுந்தால் இதற்கு முன்னால் 400 ரூபாய் கொடுத்தார்கள். புரட்சித் தலைவி அவர்கள் வந்த பிறகு அந்த 400—ஐ 500 ஆக்கிவிட்டார்கள் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இது இப்பொழுது போட்ட உத்திரவு அல்ல. முன்பே போட்ட உத்திரவு. முழுவதும் சேதமடைந்த வீடு, பாதி சேதமடைந்த வீடு fully damaged or partly damaged. அப்படி வருகிறபோது, முழுமையாக சேதமடைந்தால் 500 ரூபாய் Partly ஒரு பகுதி, பாதி சேதமடைந்திருந்தால் பாதி கொடுத்திருப்பார்கள். இது எல்லா இடங்களிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் கொடுக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். ஆனால் புயல் வெள்ளம் வந்து எத்தனையோ மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் எத்தனையோ மாதங்கள் ஆகிவிட்டன, இன்னும் கொடுக்கவில்லையென்று அவர்கள் சொல்லக் கூடும். சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் ஏன் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்றால், இந்த மாதிரி அரசு அதிகாரிகள் எங்காவது விட்டிருந்தால் அதை அரசினுடைய கவனத்திற்கு கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான். நான் தெரிந்தவரை சொல்கிறேன். அதற்குத்தான் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் என்னிடத்தில் இதுவரைக்கும் எதுவும் கொண்டுவரப்படவில்லை, எவ்வளவோ சட்டமன்ற



உறுப்பினர்கள் என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். இந்தமாதிரி எங்களுடையத் தொகுதியில் வேட்டி கொடுக்கவில்லை, சேலைரி கொடுக்கவில்லை, பணம் கொடுக்கவில்லை என்று. உடனடியாக அதிகாரிகளிடத்திலே சொல்லியிருக்கிறேன். நீங்கள் இதுவரைக்கும் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் செய்திருப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பெயரை எல்லாம் கவனத்தில் வைத்துக் கொண்டு நான் மேலும் விசாரிக்கிறேன்.

திரு. குமரிஅனந்தன் : District Development council meeting-ல் புள்ளிவிவர வாரியாக சொல்லியிருக்கிறேன். வீடுகள் இடிந்த, இன்னும் ஒரு படி மேலே இங்கே நான் சட்டமன்றத்திலே சொல்ல வேண்டாம் என்று விரும்பியதை சொல்ல வேண்டுமென்று சொன்னால் . . . . . . . . . . . . . . . .(குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது நீங்கள் அங்கே எல்லாம் சொன்னீர்களா, சொல்லவில்லையா என்பதல்ல. சாதாரணமாக விவரங்களை சொல்வதற்கு நேரிடையாக வர முடியவில்லையென்றாலும் கூட, கடிதம் மூலமாக சொல்லியிருக்கலாம். உங்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் முதன் முதலாக மாண்புமிகு உறுப்பினராக இருக்கிறபோது, நான் அமைச்சராக இருந்தபோது, எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறார்கள். உடனடியாக நீங்கள் சொன்னதையெல்லாம் கவனித்து இருக்கிறேன். இப்பொழுது நீங்கள் சொல்லியிருந்தால் நான் கவனித்து இருப்பேன்.

பிற்பகல் 1.50.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வருகிற மனுக்கள் எல்லாம் நான் அரசாங்கத்திற்குஅனுப்பி வைக்கிறேன். நான் கையெழுத்துப் போட்டு அனுப்பி வைக்கிறேன். இரண்டாவதாக டீ.டீ.சி. மீட்டிங்-இலும் சொல்லியிருக்கிறேன். அதற்கு மேலும்— நீங்களே, சொல்கிறீர்கள் சில உறுப்பினர்கள் வந்து எங்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள் என்று, ஆக அதிகாரிகள், கொடுக்கப்படாமல் இருக்கிற— . . . .

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இல்லை, இல்லை சொன்னார்கள், கவனிக்கப்பட்டது, நிறைவேற்றப்பட்டது என்று சொன்னேன்.

திரு. எஸ். ஆர். டாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே. . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர் பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் குறைகள் சொல்கிற நேரத்தில் அதை அதிகாரிகளுடைய கவனத்திற்கு அவ்வப்போது நாம் கொண்டு வருகிறோம். ஆனால் 'அஸ் எ மேட்டர் ஆஃப் பாலிசி' அதாவது கொள்கை அளவில் அரசாங்கம் சில முடிவுகளை எடுத்து அந்த முடிவுகளை நிறைவேற்றுகிற நேரத்தில் ஏற்படுகின்ற சிக்கல்களை, குறைபாடுகளைச் சட்டப் பேரவையில்தான் சுட்டிக்காட்டியாக வேண்டும். குறிப்பாக வேட்டி, சேலைகள் கொடுப்பதைப் பொறுத்தவரையில் பல இடங்களில் சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு கொடுத்த வேட்டி, சேலைகள் கொஞ்சம் தரம் உள்ளவை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்றாலும் கூட இதிலே பல குறைபாடுகள் எங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கின்றன. நாங்கள் அவ்வப்போது அதிகாரிகளை அழைத்து கேட்கிறோம். அவர்கள் சொல்கிற விளக்கம் நிலமற்ற விவசாயத் தொழிலாளிக்கு மட்டும்தான் கிராமத்தில் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அதனால் தான் மற்றவர்களுக்குக் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொன்னது புயல் வெள்ளத்தால் சேதப்பட்ட சில பகுதிகளுக்குப் போய்ச்சேரவில்லை என்று. எனவே நிலமற்ற விவசாயத் தொழிலாளிக்குக் கொடுக்கிற அந்த சேலை வேஷ்டி வேறு. அவர் சொல்வது வேறு.

திரு குமரி அனந்தன் : இரண்டும்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா பிரச்சினைகளையுமே குறுக்கீடுகள் மூலம் (குறுக்கீடு) இருங்கள், நான் சொல்லி விடுகிறேன். எல்லா பிரச்சினைகளையுமே குறுக்கீடுகள் நேரத்திலேயே அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவது (குறுக்கீடு) அவர் பேசிக் கொண்டு வந்தபோது புயல், வெள்ளச் சேதப் பகுதிகளில். . . .

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, 200 ரூபாய், 300 என்று அவர் படித்துக்காட்டியது எதற்கு என்று சொன்னால் அவர்கள் ஏழைத் தொழிலாளர்கள் என்பதற்காகத்தான் படித்துக் காட்டினார்கள். அதற்கு நான் விளக்கம் கொடுத்தால் தவறு என்று சொல்கிறீர்கள். பிறகு எதைத்தான் சொல்வது?



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினையில் 200 ரூபாய் வருமானம் உடைய ஒரு குடும்பத்தினர் (குறுக்கீடு) வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்த 250 ரூபாய் போய்ச் சேரவில்லை என்று ஆரம்பித்து சேலை, வேஷ்டியும் கொடுக்கவில்லை என்றார்கள்.

திரு. குமரி அனந்தன் : முதலில் சொன்னது புயல். தொடர்ந்து சொல்லிக்கொண்டிருப்பது சேலை, வேஷ்டி. அத னால்தான் சொன்னேன். முடி திருத்துகிறவர் செல்லையா அவருடைய கார்டு நம்பர் 078183. அவருக்கு வருகிற வரு மானம் இது 600 ரூபாய்தான். அவருக்கு எதுவும் கொடுக்கவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் சொன்னதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. புயல் வெள்ளத்தால் சேதம் அடைந்தவர்களுக்குக் கொடுக்கவில்லை என்று சொல்கிறார் களா? அல்லது பொங்கலுக்குக் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்களா? விளக்கமாகச் சொன்னால் பதில் சொல்ல முடியும்.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கி வந்த வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தை முதல் பகுதியாகச் சொல்லிவிட்டு பொங்கலுக்குக் கொடுக்க வேண்டிய சேலையை இரண்டாவது பகுதியாகச் சொன்னேன். இவைகளை எல்லாம் நிறுத்தி, நிறுத்தி சொல்வதற்கான அவகாசம் எனக்குத் தரப்படாத காரணத்தாலேயே வேகம், வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறேன். அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினையோடு முடியுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்கள் தமிழர்களுடைய திருநாளாகிய பொங்கல் அன்றுகூட புதிய வேஷ்டி, புதிய சேலை வாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு இருக்கிறார்கள் என்று எண்ணித்தான் இந்த அரசின் நிதி நிலைமை மோசமாக இருந்தால் கூட ஒரு கோடியே 20 இலட்சம் பேருக்கு வேஷ்டி, சேலையைக் கொடுக்க வேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டது உங்களுக்கு தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அதில் பல சங்க டங்கள் இருக்கின்றன. நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் என்கிறபோது கணக்கெடுப்பது மிகஇலகுவாக இருக்கிறது. தவறு

நடக்காது. நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன். இந்த
ஆண்டு நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேஷ்டி சேலை
கொடுப்பதில் நிலமற்ற விவசாயத் தொழிலாளர் என்ற தகுதி
இல்லாமல் யாருக்காவது வசதி படைத்தவர்களுக்குக் கொடுக்
கப்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டினால் உடனடியாக
இந்த அரசு அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்
ஆனால் அதே நேரத்தில நிலமற்ற விவசாயத் தொழிலாளர்
களுக்குத் தான் கொடுக்க வேண்டும் என்றுதான் அரசு
உத்தரவு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன்
இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. குமரி அனந்தன் : ஐயோ அது சரியாக வராது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லையென்றால்'
அடுத்து ஒரு உறுப்பினரைக் கூப்பிடவேண்டி வரும். 12.33
மணிக்கு ஆரம்பித்து 1.55க்கு ஆன பிறகு நீங்கள் வேகமாக
முடியுங்கள் என்று நான் சொன்னால், 'சரிபட்டு வராது.'
என்பீர்களேயானால் நான் என்ன செய்வது ? இத்தோடு
முடித்துக்கொள்கிறார். திரு. வி. பி. சந்திரசேகரன்.
(குறுக்கீடு) இத்தோடு முடித்துக்கொள்கிறேன் என்கிறீர்கள்.
திரு. சந்திரசேகரன் உட்காருங்கள். ஒரு நிமிடத்தில் முடி
யுங்கள்.

திரு. குமரி அனந்தன் : அதாவது நான் எழுதிவைத்திருக்
கின்ற குறிப்புகளை எல்லாம் படித்தால் சரிபட்டு வராது
என்று தான் சொன்னேன். அதனாலே சுருக்கிக் கொள்ளப்போ
கிறேன் என்று சொன்னேன் சபாநாயகர் சொல்வதை
சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள். ஒரு
நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. குமரி அனந்தன் : இல்லை விளக்கம் சொல்ல
வேண்டும் அல்லவா, இருக்கட்டும் சார் அதெல்லாம்
சொல்லிவிடவேண்டும் அல்லவா, அதனாலே இனி அமைச்சர்
அவர்கள் கடந்த சில மாதங்கள் நான் அரசாங்கத்துக்கு
என்ன என்ன கடிதங்கள் எழுதினேன் என்கின்ற கடிதங்களின்
நகல்கள் இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் இப்போது
கொடுத்துவிடுகிறேன். அவைகளில் எவற்றையாவது முடிக்க
வில்லை என்று சொன்னால், அதை முடித்துத் தருமாறு
உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அடுத்து
நிலவரி...



164981



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அரசாங்கம்,
அரசாங்கம் என்று சொல்வதைவிட சம்பந்தப்பட்ட அமைச்சர்
அவர்களிடம் நேரிலேயே கொடுத்துவிடுங்கள். அரசாங்கம்,
அரசாங்கம் என்றால் யார் எல்லோரும் தான் அரசாங்கம்
அரசாங்கம் என்பது யார் ? சம்பந்தபட்ட அமைச்சர்
அவர்களிடம் கொடுத்துவிட்டால் அந்த காரியத்தை செய்வார்
கள். மறுபடியும் கேட்பதற்கு வாய்ப்பு இருக்காது. இதை
யும் குறிப்பாக சொன்னேன். முதல்முறை நீங்கள் வந்து
சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறபோது எத்தனையோ முறை
என்னைப் பார்த்துச் சொல்லியிருக்கிறீர்கள். அதை செய்து
கொடுத்து இருக்கிறேன். அதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன்.
அதுபோலே இப்போதும் கேட்கலாம்.

திரு. குமரி அனந்தன் : இப்போது கடைகளில் 20 கிலோ
அரிசி கொடுத்துக்கொண்டிருந்தது 12 கிலோவாக ஆகிவிட்ட
காரணத்தினாலே மக்களுக்கு (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 20 கிலோ
அரிசி கொடுத்தார்கள் 20 கிலோ அரிசி கொடுத்தார்கள்
என்கிறார்கள் எப்போது கொடுத்தார்கள் என்று அதைப் பற்றி
கொஞ்சம் சொல்லுங்கள்

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சில பேர்களுடைய * உண்மைக்கு
மாறான பிரச்சாரம் மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன்
அவர்களை பாதித்துவிட்டது. என்பதைத்தான் இது காட்டு
கிறது. சென்ற பல ஆண்டுகளாக ஒரு குடும்ப அட்டைக்கு....
(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உண்மைக்குப் புறம்பான
என்று மாற்றிக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : *உண்மைக்கு மாறான
பிரச்சாரம். சென்ற பல ஆண்டுகளாகவே 12 கிலோ அரிசி
தான் அதிகபட்சமாக வழங்கப்பட்டு வந்தது. இடையிலே
புச்சரிசி கையிருப்பு அதிகமாக இருந்த காரணத்தினாலே
கொஞ்ச நாள் 5 கிலோ ஆப்ஷனல் ரைஸ் என்றும் அதற்குப்
பிறகு 8 கிலோவாக அது உயர்த்தப்பட்டு, சென்ற தி.மு.க.
ஆட்சியிலே 3 மாத காலமும், ஜனாதிபதி ஆட்சியிலே 4 மாத
காலமும், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக புரட்சித் தலைவியின் ஆட்சியிலே 9 மாத காலமும்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
மாற்றப்பெற்றது.

[திரு. ஜி. விசுவநாதன்] [1993 பிப்ரவரி 8

இது போடப்பட்டு கையிருப்பு தீர்ந்த பிறகு மறுபடியும் பழையபடி 12 கிலோ கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். இந்த 20 கிலோ கொடுத்ததாக யாரோ தவறாகப் பிரச்சாரம் செய்கிறார்கள். அதற்கு நீங்கள் இரையாகிவிடக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : ஆக 20 கிலோ கொடுத்ததை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனாலே தவறாகப் பிரச்சாரம் செய்யவில்லை. (குறுக்கீடு) 20 கிலோ கொடுத்தார்களா இல்லையா என்பதுதானே. கொடுத்தார்கள் இல்லையா. சரி.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : அந்த 8 கிலோ என்பது பச்சை அரிசி மட்டும் என்பதுதான். உங்களுக்குத் தெரியும். பச்சரிசியைத் தென் மண்டலங்களில் வாங்காத காரணத்தினாலே அதன் கையிருப்பு அதிகமாகியது. அந்த பச்சரிசி மட்டும் தான் கொடுக்கப்பட்டது. தீர்ந்த பிறகு நிறுத்தப்பட்டது.

திரு. குமரி அனந்தன் : நாம் இப்போது ஒரு குடும்பத்திற்கு 12 கிலோ தான் கொடுக்கிறோம். 20 கிலோ என்று சொல்லி இருப்பது சரி. அது ஆப்ஷனல் என்று பெயர் வைத்துச் சொன்னாலும் சரி, எப்படியோ ஒரு காலத்திலே கிடைத்துக் கொண்டு இருந்தது. இன்று இப்போது 12 கிலோவாக குறைந்திருக்கிறது. இது ஒரு குடும்பத்திற்கு 12 கிலோ என்பது ஒரு குடும்பத்திலே எத்தனை பேர் இருந்தாலும் அவ்வளவுதான், அது போதாது. அதுதான் மாக்சிமம். அதனாலேதான் இந்த அட்டைகள் கொடுக்கிற நேரத்தில் அவ்வளவு பெரிய பிரச்சினைகள் வந்ததற்குக் காரணம். அதையும் வேறு வகையிலே செய்திருக்கலாமே என்று நினைக்கிறேன். அந்தந்த கடைகளிலே இவர்கள் அரிசி போன்ற பொருள்களை வாங்கப்போகின்ற நேரத்திலேயே கொடுத்திருக்கலாம். அப்படி கொடுத்திருந்தால், ஒரு தடவை போட்டுவிட்டு, இதுதான் உங்களுக்கு புது கார்டு என்று சொல்லி நாம் கொடுத்து இருந்தோம் என்று சொன்னால் இவ்வளவு பெரிய நீண்ட வரிசைகளின் பல பிரச்சினைகள் எல்லாம் வந்திருக்காது. அப்படி கொடுத்திருக்கலாம்.

இப்போது எத்தனை பேருக்கு கிடைக்கவில்லையோ அவர்கள் மட்டும் புதிதாக மனுபோடச் சொல்லியிருக்கலாமே தவிர ஏற்கனவே இருந்தவர்களை கியூவிலே நிறுத்திவைக்க வேண்டியதில்லை. ஆகவே 12 கிலோதான் ஒரு குடும்பத்திற்கு போடப்படுகிறது. அது 10 பேர்கள் இருந்தாலும் சரி. ஆகவே அது போதாது. (மணியடிக்கப்பெற்றது.)



பிற்பகல் 2.00

[1993 பிப்ரவரி 8

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள். பேரவையின் அலுவல் நேரம் 2.20 வரை நீட்டிக்கப்பட்டிருகிறது.

திரு. குமரி அனந்தன் : 20 கிலோ என்று இருந்ததை நான் சொன்னேன். நீங்கள் விளக்கம் சொன்னீர்கள். 12 கிலோவாக அதை குறைத்துவிட்ட காரணத்தால்தான் மக்களுக்கு பிரச்சினைகள் வந்திருக்கிறது. இந்த அளவுக்குக் குறைத்துக் கொடுக்காமல் கூடுதல் கொடுக்க முடியுமா என்று பார்க்க வேண்டும் என்பதற்காக சொல்கிறேன்.

அடுத்து, நிலவரியைப் பற்றி ஒரு வார்த்தைச் சொல்லி முடிக்கிறேன். லான்ட் செஸ் நாங்கள் முதலில் வருகிறபோதே சொன்னோம். நிலவரியினுடைய அந்த சார்ஜ் வருகிறபோது, சர்சார்ஜ் வருகிறபோது எல்லாம் நாங்கள் சொன்னோம். உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். நான் பெரியாற்றுப் பாசனத்தை மட்டும் சொல்கிறேன். ஒரு ஏக்கர் நிலத்திற்கு 18 ரூபாய் வரி என்று சொன்னால், அதற்கு லோக்கல் செஸ் 8 ரூபாய் 10 காசு இதுவரை வாங்கிக்கொண்டிருந்தோம். இனிமேல் வாங்கப் போவது 18 ரூபாய் இதுவரை 8 ரூபாய் 10 காசு வாங்கிக்கொண்டிருந்த லோக்கல் செஸ் இனிமேல் 18 ரூபாய். லோக்கல் செஸ் சார்ஜ் என்று சொல்லி இதுவரை 45 ரூபாய் வாங்கிக் கொண்டிருந்த இடத்திலே இனிமேல் 135 ரூபாய். (மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கு. 2.20க்கு முடிக்கப் போகிறார். பிறகு நீங்கள் சொல்லலாம். உட்காருங்கள். அவர் முடிக்கட்டும்.

திரு. குமரி அனந்தன் : ஆக, லோக்கல் செஸ் இதுவரை 8 ரூபாய் 10 காசு வாங்கிக் கொண்டிருந்ததை இனிமேல் 18 ரூபாய் வாங்கப் போகிறார்கள். லோக்கல் சர்சார்ஜ் நான் பெரியாற்றுப் பாசனத்தை மட்டும் சொல்கிறேன். 45 ரூபாய் வாங்கிக்கொண்டிருந்ததை இனிமேல் 135 ரூபாய் வாங்கப் போகிறோம். (மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் பிறகு சொல்லலாம், அவர் முடிக்கிற நேரத்தில் இருக்கிறார்.

திரு. குமரி அனந்தன் : அதனாலே இவ்வளவு நாளும் ஒரு ஏக்கருக்கு பெரியாற்றுப் பாசனத்திலே கட்டிக்கொண்டிருந்தது ரூ. 79.20 என்றால் இனிமேல் ரூ. 179.10, அதாவது பல மடங்கு அதிகரித்திருக்கிறது. இதை நீங்கள் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மொத்தத்திலேயே கவர்னருடைய உரையை படித்தேன். கவர்னர் உரையிலே இன்னும் சில செய்திகளைச் சொல்ல வேண்டுமென்று இருந்தாலும் கூட, சபாநாயகர் அவர்கள் சொன்னதை கருத்தில்கொண்டு, அமைச்சர்கள் இடையிடையே பேசியபோதிலும், கவர்னர் அவர்களுடைய உரை மொத்தத்திலே இப்போதுள்ள தமிழ்நாடு கவர்னருடைய உரையாகவே இருந்தது என்று சொல்லி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் நிறைவுபெறுகிறது. பேரவை மீண்டும் நாளை (9 – 2 — 1993) காலை 10 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

60. செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டம், மேல்மருவத்தூர் ஸ்ரீ ஆதிபராசக்தி அறக்கட்டளை, மருத்துவ கல்வி மற்றும் கலாச்சார நிறுவனத்திற்குச் சொந்தமான டி. எண். 21 எக்ஸ் 2538 மற்றும் டி. எண். 21 எக்ஸ் 3366 எண் கொண்ட மோட்டார் வாகனங்களை அன்பளிப்பாகவும் வாடகைக்கு உபயோகப்படுத்தப்படாமலும் தொண்டு நோக்கங்களுக்காக பயன்படுத்தும்வரை, அவ்வாகனத்திற்காக செலுத்தப்பட வேண்டிய வரியை நான்கில் ஒரு பங்காக குறைத்து வரிச் சலுகை அளிப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 24—9—1992 ஆம் நாளிட்ட 1626 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது.]





61 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 25—2—1992 ஆம் நாளிட்ட 45ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றுள்ளது.]

62. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு இந்திய ஆட்சிப் பணி அதிகாரியை தலைவராக நியமனம் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 30—10—1991ஆம் நாளிட்ட 1404ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

63. 1991–92ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை கழகத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை ]1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

64. 1990–91ஆம் ஆண்டு அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம் )

65. 1991–92ஆம் ஆண்டு அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை ]1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619(ஏ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

66. 1991-92ஆம் ஆண்டு தமிழ்நாடு சரிகை லிமிடெட்டின் இருபதாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

67. 1990–91ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் ஆண்டறிக்கை [1972ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

68. 1991–92ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் ஆண்டறிக்கை [1972ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

69. 1991–92ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் முதலாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் பேரவை முள் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

70. 1987–88ஆம் ஆண்டு தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

71. 1988–89ஆம் ஆண்டு தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619(ஏ] பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்).

72. 1990–91ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் தணிக்கை அறிக்கை [1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

7. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் (முதலாவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 100 வரை).

8. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை).





## இணைப்புகள்

......186-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க

*Hon'ble Members of the Legislative Assembly,*

I have great pleasure in addressing you, at this, the first session of the Tamil Nadu Legislative Assembly for the year 1993. I extend my warm greetings to all of you and express the hope that the year 1993 will see Tamil Nadu register progress in all directions. The closing months of the year 1992 had been a testing period for the country. The nation witnessed large scale but avoidable loss of human lives and property. However, Tamil Nadu stood out as a haven of peace and tranquillity registering steady improvement in the standard of living of the poor and the downtrodden. The Government headed by the Chief Minister Dr. J. Jayalalitha had embarked upon many constructive and worthwile programmes and was able to accomplish significant results within a very short time. The Government will strive earnestly to scale even greater heights during the year 1993.

2. Honourable Members are aware of the law and order situation that prevailed in Tamil Nadu and the extent of infiltration by foreign militants and extremists prior to the assumption of office by the Chief Minister Dr. J. Jayalalitha. The bold steps taken by her to restore law and order and to ensure peace and tranquillity have earned all round appreciation. The antinational and subversive activities of foreign militants and extremists have been contained. Sea-border patrolling has been strengthened. A coordinated plan of Co-operation involving the Navy the Coast Guard the State Police and the Custom has been formulated and implemented. Smuggling of petroleum products and other commodities has been stopped. Considerable quantities of petroleum products, engine and gear oil, country bombs gelatine sticks, detonators, gun powder, arms and ammunition have been seized. Suspected persons have been detained under various provisions of law and a number of persons have been charged for criminal acts under relevant enactments. The Chief Minister has continuous monitored and directed the implementation of this plan to stamp out the menace posed by foreign militants. The Union Home Minister and the Union Minister of State for Home Affairs have both stated that they are fully satisfied with the law and order situation in Tamil Nadu, particularly with regard to the steps taken to contain the foreign militants. We can all be secure in the knowledge that this Government will remain ever vigilant against the machinations of extremists and will spare no effort to keep them at bay. On account of such planning and careful monitoring, there can be no doubt that peace and tranquillity are fully assured for the citizens of Tamil Nadu.

3. The events at Ayodhya and the violent aftermath have profoundly disturbed the conscience of our nation. The Constitutional foundation of our policy has embodied in itself certain foundamental features and secularism is one of the most important amongthem. Secularism is a positive concept. True secularism adumbrates policies that will promote peace and harmony among the communities. With vision, the Chief Minister suggested at the meeting of the National Integration Council in New Delhi in November, 1992, that while allowing a Ram Temple to come up at the disputed site at Ayodhya, the Masjid should be left as it stood. The suggestion of the Chief Minister was rooted in the spirit of tolerance which ought to prevail among the communities in our country even for their very survival. It was also the reflection of the culture of tolerance and goodwill that have been prevailing among the various communities in Tamil Nadu for centuries.

4. While violence engulfed many States in he country bringing death and disaster in its wake, the people of Tamil Nadu stood firm in a spirit of brotherliness towards one another and the State emerged as a splendid oasis of peace and harmony. Minor situations that arose were handled swiftly and firmly. There was no occasion to seek the help of the Army or the paramilitary forces. The situation was so well managed that the State Government was, in fact, able to send two companies to the neighbouring State of Karnataka at its request for handling the law and order situation there. We can indeed be proud of the shining example that we have set to the rest of the country in maintaining communal harmony.

5. At the same time, the State Government has also taken effective steps to ensure that communalism does not rear its ugly head here and divide the people. Tamil Nadu perfect record of communal peace and harmony will be maintained. The Government acted swiftly against the banned organisations. 245 persons have been arrested, 34 premises have been declared unlawful and 61 bank accounts have been frozen. While such is the situation in Tamil Nadu, the recurrence of violence particularly against the Tamil speaking people in Bombay has caused us serious concern. More than 4,700 Tamil speaking people have fled Bombay and reached Madras. Many of them have lost their property and personal belongings. Anti-social elements have even appropriated their tenements. The Chief Minister of Tamil Nadu has sent messages to the Chief Minister of Maharashtra and the Union Home Minister, requesting them to take all steps to ensure safety and protection to the Tamil people in Bombay. The State Government will take all steps to ensure that those who have left Bombay are compensated for their losses and return to Bombay to pursue their avocation peacefully.





6. It is a matter of utmost satisfaction that the State Police has fully risen to the occasion and functioned with a new vision, a new direction and a new purpose. A comprehensive proposal at a cost of Rs. 80.45 crores to modernise the State Police has been sent to the Centre for clearance. The Centre has so far released a sum of Rs. 10 crores with which certain immediate schemes of modernisation have been taken up. The Union Home Minister has promised a further sanction of Rs. 30 crores in the current year. We urge the Centre to release these funds early, to enable the State to take up the second phase of modernisation. The recruitment if 9,500 constables by the Uniformed Services Recruitment Board will be completed shortly They will be inducted into the force after the stipulated period of training.

7. The Government recognises that the proper functioning of the judiciary calls for provision of adequate facilities. The Government went into the long standing representations of the judicial officers and redressed a number of their grievances. Ninteen new courts, including courts in the newly formed districts, have been established as per a time bound programme. The High Court annexe building has been completed at a cost of Rs. 4 crores. The constitution of a Bench of the High Court at Madurai is under active consideration in consultation with the Madras High Court. The Chief Minister raised the issue of bringing the outlays for judicial administration under the Plan, in her discussions with the Deputy Chairman of the Union Planning Commission. This has been accepted. A detailed master plan with an outlay of Rs. 123.37 crores for improvements to and upgradation of judicial administration has been forwarded to the Centre for funding under the new scheme.

8. Prohibition as a key issue of State policy is a Constitutional directive. Honourable Members of the House are aware that the Government under the leadership of the Chief Minister Dr. J. Jayalalitha, implemented as its first decision the abolition of cheap liquor shops throughout the State, in keeping with its announced policy of prohibition, although this involved an annual loss of revenue of Rs. 390 crores. The drive against bootlegging and illicit liquor was intensified with the formation of the Prohibition Enforcement Wing. The Chief Minister's drive against erring officials resulted in a noticeable reduction in the incidence of illicit liquor. A massive multi-media propaganda offensive against the evils of liquor has also been launched. We have decided to give a decisive edge to the offensive against illicit liquor by strengthening further the Prohibition Enforcement Wing at a cost of Rs. 7 crores. With one enforcement unit in each Police sub-division, the Enforcement Wing will act effectively against the anti-social elements engaged in the illicit liquor trade. This Government places the highest emphasis on

the welfare of the people, revenue considerations yielding place to consideration of maximum social good. **Members of the House will whole heartedly welcome the deision of the Government to withdraw the licensed for bars attached to foreign spirit shops with effect from the excise year Commencing from June, 1993**

9. Another issue of social policy which is of great concern is the position following the judgement of the Supreme Court on reservation in employment and education for the Backward Classes. Honourable Members may recall the resolution passed by this House on the 30th September 1991, urging the Government of India to provide 50 per cent reservation for other Backward Classes, while implementing the recommendations of the Mandal Commission. If Tamil Nadu has been free of social tensions it has been due to the significant and far reaching steps taken by Bharat Ratna Dr. M. G. R. to introduce 50 per cent reservation for the Backward Classes, with the total reservation now standing at 69 per cent. This has enabled the enlargement of opportunities for the Backward Classes. The process so well begun is bound to take time before its full fruits are realised by the people for whom this special provision has been made in the Constitution. In this context the Supreme Court's direction to reduce the total reservation to 50 percent is clearly not feasible of compliance in Tamil Nadu. Any abrupt reduction will result in social tensions which we can ill afford Further, the separation of the creamy layer as directed by the Supreme Court also bristles with difficulties. Therefore the Government has decided to go in for a review of the Supreme Court's directions on these issues. A permanent Commission to deal with issues relating to the Backward Classes will also be constituted.

10. This Government stands totally committed to the principles and programmes enunciated by Bharat Ratna Dr. M. G. R. Immediately after assuming office, the Government undertook the construction of a fitting memorial in memory of the beloved leader at Marina beach near the Anna Samadhi. In a record time of twelve months, a splendid new memorial at a cost of Rs. 1.55 crores has been completed. This beautiful memorial in memory of Bharat Ratna Dr. M. G. R. has been welcomed by all sections of the people who throng there to pay homage.

11. The new Jawaharlal Nehru Stadium at Madras, completed at a cost of Rs. 40 crores in a record time of 7½ months, was recently inaugurated by the Prime Minister. This resplendent and breath-taking multi-purpose stadium, an engineering marvel, symbolises the resurgent and buoyant spirit of the young people of Tamil Nadu. Twice before, Tamil Nadu had missed the opportunity to conduct the Nehru Gold Cup International Tournament. There were many who doubted



whether such a project could ever take off and be completed in time. The stadium stands today as an outstanding example of the vision and determination of the Chief Minister. A unique structure, one of the best in Asia, it has total roofing and individual fixed seating for its entire capacity of 40,000 people. It has the most modern and state-of-the-art facilities, including a sophisticated lighting system facilitating day and night matches, total telecommunications systems linking globally, top class player's facilities, computerised score boards, an electronic surveillance system and a closed circuit TV System. The successful completion of the stadium project in a record time and the conduct of the Tenth Jawaharlal Nehru Gold Cup Invitation International Football Tournament at the stadium are great achievements that have amply demonstrated that this Government has the capacity to implement even the most stupendous projects in a short time.

12. Members of the House are aware of the serious financial crisis that prevailed when this Government assumed office. There were grave doubts as to whether the approved Annual Plan for 1991-92 namely, Rs. 1,605 crores, could be performed at all. It is a matter of utmost satisfaction that the actual Plan expenditure in 1991-92 was Rs. 1,651 crores, thus well in excess of the target. It may also be recalled that the Chief Minister, when confronted with the suggestion that the Annual Plan outlay for 1992-93 be fixed at Rs. 1,486 crore had insisted that Tamil Nadu would find a way to achieve a plan outlay of Rs. 1,754 crores in 1992-93. The Progress in the current year has been exceptionally good and there is every evidence that even this outlay of Rs. 1,751 crores in 1992-93 will be exceeded. Members of the House may also recall that there were grave doubts about the finalisation of a meaningful Eighth Five Year Plan for the period 1992-1997, given the serious resource constraints. The Chief Minister was able to successfully convince the Union Planning Commission to approve an outlay of Rs. 10,200 crores for the Eighth Five Year Plan thus marking an impressive, indeed tremendous increase of more than 77 per cent over the Seventh Plan outlay. The fact that Tamil Nadu is now well on its way to exceeding the outlay of Rs. 1,751 crores in 1992-93. being the first year of the Eighth Five Year Plan, indicate that Tamil Nadu has now moved into a proper growth trajectory. It is indeed a matter of great satisfaction that a new momentum to the development effort has been imparted. We were doubly reassured of this fact, when in the recent meeting between the Chief Minister and the Deputy Chairman of the Union Planning Commission in November, 1992, the Plan outlay for 1993-94 was settled at Rs. 2,101 crores, representing a healthy 20 per cent increase over the approved plan outlay for 1992-93. There can be no two opinions about the excellent record of this Government in bringing Tamil Nadu back to an accelerated growth path.

13. Tamil Nadu was devastated by a cyclone and resultant floods in November, 1992. 238 persons lost their lives, 5.93 lakhs acres of standing crops were affected and 1.71 lakh huts were damaged. The infrastructure consisting of roads, irrigation sources and public buildings suffered heavy damage. The Chief Minister personally visited the flood affected areas and directed the relief operations. The speed and the efficiency of the relief operations have merited wide acclaim. A memorandum detailing the extent of the damages and seeking support to the extent of Rs. 530 crores was presented to the Centre. The Chief Minister accompanied the Prime Minister on an inspection tour of the flood affected areas. Following detailed discussion, the Prime Minister announced the release of an additional amount of Rs. 50 crores to the State. This was to be in addition to the amount of Rs. 14.63 crores being 50 per cent of the Centre's contribution to the Calamity Relief Fund due in 1993-94. it has been disappointing that the additional amount of Rs. 50 crores promised by the Prime Minister has been given only as an advance release of the State's own share of the Central taxes and is now to be fully adjsuted in March 1993. The Government has already undertaken wide-spread flood relief and restoration works. An amount of Rs. 68.52 crores has been sanctioned for gratuitous relief, relief to farmers, fishermen and others, urgent restoration works to roads, irrigation systems and buildings. The flood relief expenditure has imposed a serious financial burden on the State. It also brings into focus the inadequacy of the Calamity Relief Fund arrangement as recommended by the Ninth Finance Commission. The Prime Minister has also assured the Chief Minister that Tamil Nadu could go in for a cyclone and flood reconstruction project with assistance from the World Bank. Accordingly a project report with a total outlay of Rs. 2,560 crores has been prepared and forwarded to the Government of India. The Government of India has taken this up with the World Bank and we hope that the World Bank will clear this project shortly.

14. Although the recent floods damaged standing crops and recently translated crops, effective and substantial assistance has been given to the farmers to save the crops or to raise newcrops. Adequate quantities of seeds, fertilizers and pesticides have been made available to enable a good crops to be raised. Members of the House are aware that Tamil Nadu recorded the highest ever foodgrain production of 90.70 lakhs metric tonnes in 1991-92. It is a matter of utmost satisfaction that even this all time record is to be broken once again in 1992-93, with the foodgrain production crossing the almost impossible barrier of 100 lakh metric tonnes. This is indeed a splendid achievement of the hard working farmers of Tamil Nadu. Rice production is estimated to go up to an all time high of 76 lakhs metric tonnes The production of cotton will also





reach a peak level in the current year. The Government has been fully supportive of the excellent efforts of the farmers of the State. An innovative package of technical and extension support. speedy and adequate support during natural calamities and a comprehensive dept relief package amounting to Rs. 55 crores extended by the Government have enabled the farmers of Tamil Nadu to achieve Splendid results. It will have to be our endeavour to ensure that these remarkable achievements are sustained even when the monsoon is not favourable It is for this reason that there will be renewed emphasis on the culti-. vation of waste lands, integrated watershed development and other drought proofing measures.

15. The Government has accorded highest priority to activitiese allied to agriculture like animal husbandry and fisheries so that the rural economy can register acclerated growth. Operation Flood III with a total outlay of Rs. 68.19 crores is under implementation, creating new facilities for dairy farmers throughout the State. A virtual milk revolution is to take place in Tamil Nadu The total milk production which was 93.81 lakhs litres per day in 1992, will be stepped upto 115.22 lakh litres per day in 1997. The milk handled by operative milk unions and the Federation will be stepped up by 50 per cent.

16. Brackish water prawn farming has been given a major thrust with the twin approach of encouraging large houses to take up prawn farming and grouping small farmers into industrial estates for prawn culture. With a view to rehabilitating fishermen affected in the Palk Straits, a brackish water prawn industrial estate will be established in Ramanathapuram district at a cost of Rs. 7.50 crores. An Integrated Marine Fisheries Development Project has recently been launched a a cost of Rs. 15.88 crores to benefit 6,050 fishermen in 5 coastal districts

17. The broad thrust of the new economic policy of the country has been to integrate the Indian economy and particularly Indian industry with the global economy and provide it with the much needed stimulus. However, at the national level, there is concern that new investment has not picked up. We have to create congenial conditions for new investment and rapid growth. The Chief Minister has enun ciated the State- specific new industrial policy. This has been widely acclaimed as a comprehensive and complete blue print for purposive action. While mobilizing new investment in the overall national scenario has not been easy, the purpose and sustained efforts of the State Government have yielded good results in Tamil Nadu. The Chief Minister held detailed discussions in December, 1992. to settle, across the table new investment plans involving and outlay of Rs. 8,500 crores. It has thus been possible for the Government to secure total

new investment of Rs. 20,000 crores in various projectin the state This outstanding achievement has been Possible despite the constraints in the national context, thanks to the determined efforts of the Chief Minister and a growing appreciation of the congenial industrial climate, and the presence of good infrastructural facilities in Tamil Nadu. It will be the endeavour of the Government to ground these investment in the shortest possible time.

18. Several new initiatives have already been launched to promote accelerated industrial development in the State. TACID, the new Industrial Infrastructure Development Corporation is busy with the establishment of growth centres in the State. The growth centres programme will impart a new momentum to the development of sound industrial infrastructure It would be appropriate at this juncture to request the Centre to release the promised funds to the State to ensure that these growth centres can be completed in time. An expert committee has been constituted to give shape to the concept of the Indo-Singapore Trade Corridor. A high level official team has been to Singapore recently to crystalize the details of the proposed corridor. A feasibility study is under way and it is the intention to proceed rapidly with thedevelopment of the new trade corridor near Madras. The environment in Tamil Nadu is ideal for a major investment boom in the new corridor.

19. It is our considered view that the Government should ensure adequate investment in infrastructure as the best means of promoting new industrial development. The greatest attention and emphasis has rightly been placed on the Power sector. The Governmenthas a splendid record of achievement in the Power sector. Tamil Nadu to day is totally free of any power cut. The Tuticorin Thermal Plant has been adjudged among the best power generating stations in the country. Thanks to the approval of a higher overall plan outlay for the Eighth Plan, it has been possible to allocate Rs. 3,000 crores for the power sector for the period 1992—1997. In addition considerable new investments in the joint and private sectors are being mobilised. It is proposed to add new capacity of 1,630 megawatts in the Eighth Plan. In addition, an adequate pipeline of new projects to take care of the needs of the Ninth Plan has been built up. The pipeline of new projects in the power sector includes the Jayamkondam lignite mining and power generation project in the joint sector with an outlay of Rs. 7,000 crores and a capacity of 1,500 megawatts, a 1,000 megawatts thermal plant in the private sector at Cuddalore with an outlay Rs. 3,000 crores and two thermal plants each of 250 megawatts capacity in the private sector using surplus lignite from Neyveli at a total cost of Rs. 1,000 crores. These projects thus tied up involve a total capacity of 3,000 megawatts with an investment of Rs. 11,000 crore. The advance planning of new investment for the Ninth Plan period will ensure the long term availability of power in Tamil Nadu. It behaver



to the full credit of the Government and the Chief Minister in particular that such concerted action has been taken in so crucial a sector. The highest emphasis has also been placed on the quality of power with a major investment programme on transmission and distribution facilities having just been launched.

20. Central investment in Tamil Nadu has delined and the Chief. Minister has taken up this issue in various forums on several occasions Thanks to the efforts of the Chief Minister, the Aromatics Project (ARO CHEM) with a total outlay of Rs. 2,000 crores has been approved. Work on establishing this project is now under way. The total investment including downstream plants will ultimatley amount to Rs. 4,000 crores and private direct and indirect employment to 70,000 persons. Several other project where the Centre is totake investment decisionsare pending. In particular I wish to mention the resolve of theChief Ministers of the Souhthern States as expressed in the recent meeting of the Southern Zonal Council in November 1992, to undertake the Southern Gas Project to bring natural gas from Bombay High to all the Southern States. TheChiefMinistermade a forcefuplea for this gas gridandeven suggested co-financing by the Southern States to ensure that this project comes through. The Government of India has recently accorded, in principle approval for the Southern Gas Grid Project and we hope that early action will be taken to realize this project. The Chief Minister has also proposed the idea of a Souhtern Regional Industrial Development Bank with headquarters at Madras, which is fast emerging as an internationa financial centres. With deregulation it is all the more essential that there is some regional balance in the distribution of all India financilainstitutions. This suggestion would need early consideration in the context of the restructuring fo the country's finacial system. The Koodankulam Nuclear Thermal Project needs to be revived. The Government has has expressed its willingness to participate in the equity capital of a company to undertake this project. The Centre would need to take an early decision on the implementation of this project so that it can take off quickly.

21. While broadly endorsing the new economic policiesinitiated by the Government of India, it has always been a matter of concern to the State Government that the burden of structural adjustments should no fall on the poor and the down strodden. Inflation, with particul reference to the rise in prices of food grains and other essentials, has to be controlled as a matter of priority. Since the macro economic variables influencing price behaviour are mainly under the control of the Central Government, this Government urges restraint when it comes comes to policies which may affect the poor. The recent increase in the issue price of rice by the Centre has imposed a new burden on the State Government. While every effort has been made in the past to absorb

tion of a set of rigid practices fails to recognize the varied patterns obtaining in different States. **The Government has held the view that these amendments impinge on and affect the States powers and responsibilitie. This view which was also expressed in Parliament is the consistent stand of the Government. This Government does not subscribe to a three tier structure including an executive tier at the district level as Tamil Nadu has had a good record with a two tier strcture. The mode of election do** each tier prescribed is also quite different from the well develc ped practice in Tamil Nadu. Thus, both as a matter of principle regarding the States powers and in its details, the State Government has consistently stood against the changes proposed. This Government will continue to reiterate that the whole position shoul be reviewed and the state's position in this area sghould be protected.

29. The Prime Minister has written to the Chief Minister about the importonce of land reforms in accelerating rural development. In Tamil Nadu the surplus lands taken over under the exiting land reforms legistation have almost been distributed. It is with the intention of eleminating the leopholes in the earlier legistatinn that fresh legislation was passed by this House. **This legislation which seeks to invalidate certain transfers of surplus land is awaiting the assent of the President since October, 1991.** This Government urges the Centre to accord early approval for tnis legistation which will provide fresh momentum to lane reforms in the State.

30. The poor monsoon in the catchment areas of the lakes near Madras and the consequent poor storage have necessitated the alternate day water supply regimen in the city. A contingency plan at a cost of Rs.24 Crores has been drawn up to ensure effective water supply despite the poor storage. As part of this plan, lorry water supply to provide regular supply even to tail end areas will be organized. The only long term solution is to get Krishha water to Madras. The Chief Minister held discussions with the Chief Minister of Andhra Pradesh at Hyderabad on the 27th of January, 1993. It has bnee decided to expedite the Telugu Ganga Project to ensure water to Madras by June, 1995. Adequate funding to ensure project completion has been agreed upon. The decks have been cleared to approach the World Bank to extend support to the connected Madras City Distribution Project at a cost of Rs.1,100 Crores.

31. The Government has accorded the highest priority to the provision of shelter to all the homeless in the State. More than one lakh families have been benefited under various housing programmes in the current year. House sites are presently made available on Government land, free of cost, to the poor. In addition, acquisition



of land for the provision of free house sites to Scheduled Castes and Scheduled Tribes and to Most Backward Classes is undertaken every year. The Government will take up a massive time-bound programme of provision of house sites in a period of 3 years, so that every poor family is enabled to have a house site.

32. It has been my intention to focus attention of some of the policy issues and to indicate the direction which the Government will pursue for the development of the State. This Government assumed office at a time when the State was confronted by an extremely sensitive and complex problem posed by foreign militants, the breakdown of law and order, an extremely critical financial situation, difficult economic choices caused by the national economic crisis and serious deterioration in general administration. An objective and unbiased view would indicate that this Government has done remarkably well on all fronts. Law and order has been restored, the threat posed by foreign militants pushed back, the critical financial situation has been handled deftly, the development momentum restored and above all the standards of living of the poor and downtrodden have been improved.

33. The Government will continue to strive to ensure that peace and tranquility are maintained in perfect order in Tamil Nadu. Continuous vigilance will be maintained against the activities of foreign militants. They will not be allowed to get even a toe hold in the State. Communalism with all its attendant rancour will not be allowed to disturb the social fabric of the State. The Government will take affirmative action to bring about social justice conferring hope and real benefits to the vast majority. It will be the endeavour of the Government to obtain Tamil Nadu's rightful share in national investments The Government will continue to place the highest emphasis on safeguarding the interests of the poor and downtrodden in the midst of the structural adjustment process which is part of the new economic policy.

34. I have no doubt that the Hon'ble Members of this augus Assembly will fully appreciate the bold and imaginative steps taken by this Government on Several issues. Tamil Nadu has earned all India acclaim for its path breaking efforts in maintaining peace and tranquility and sustained econmic development. It is an impressive and outstanding record which has to be zealously safeguarded. I hope that the deliberations in this House will take Tamil Nadu further on the path of progress and prosperity. It will always be the endeavour of this Government to secure a better standard of living for the poor and underprivileged. I have

no doubt that your discussions in this august House will be constructive and meaningful, keeping always the progress of the State uppermost in your mind.

NANRI, VANAKKAM.

.......ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பை காண்க.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே,

**1993** ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதலாவது கூட்டத் தொடரில் உங்கள் முன் உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவர்க்கும் என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1993 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் காணும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறேன். 1992 ஆம் ஆண்டின் இறுதி நாட்கள் இந்திய நாட்டிற்குப் பெரும் சோதனைக் காலமாக அமைந்தன. அந்நாட்களில் நமது நாட்டில் பெருமளவில் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் சேதங்கள் விளைந்தன ; இவற்றைப் பெரிதும் தவிர்த்திருக்கமுடியும். எனினும், தமிழ்நாடு அமைதியும் நல்லிணக்கமும் நிலவித் தனித்து விளங்கியதோடு ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலையில் சீரான முன்னேற்றத்தைக் கண்டது. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுடைய தலைமையில் அமைந்துள்ள இவ்வரசு ஆக்கபூர்வமான பயனுள்ள பல திட்டங்களைத் தொடங்கியிருந்தது ; மிகக் குறுகிய காலத்தில் குறிப்பிடத் தக்க அரும்பணிகளை ஆற்றியுள்ளது. 1993-ஆம் ஆண்டில் இன்னும் பல அரும்பெரும் சாதனைகளை ஆற்றிட இவ்வரசு ஆர்வத்தோடு பாடுபட இருக்கிறது.

2. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதவியேற்பதற்குமுன்னர் தமிழ்நாட்டில் நிலவிய சட்டம்-ஒழுங்கு நிலைமையையும், வெளிநாட்டுப் போராளிகளும் தீவிரவாதிகளும் இம்மாநிலத்தில் பேரளவிற்கு ஊடுருவியிருந்த நிலைமையையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். சட்டம்-ஒழுங்கு நிலைமையை மீண்டும் நிலை நாட்டவும் அமைதி, ஒற்றுமையைப் பேணிக்காக்கவும் அவர் மேற்கொண்ட துணிவுமிக்க நடவடிக்கைகள் அனைத்துத்தரப்பினரின் பாராட்டுகளையும் பெற்றுள்ளன. வெளிநாட்டுப் போராளிகள், தீவிர வாதிகளின் தேச விரோத, கவிழ்ப்பு நடவடிக்கைகள் ஒடுக்கப் பட்டுவிட்டன. கடல் எல்லை ரோந்து நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. கப்பல் படை, கடலோரப் பாது காப்புப் படை, மாநிலக் காவல்துறை, சுங்கத்துறை ஆகிய வற்றின் ஒருங்கிணைந்த நடவடிக்கைத் திட்டம் வகுக்கப்



பட்டுச் செயல்படுத்தப்பட்டுள்ளது. பெட்ரோலியப் பொருட்
கள், ஏனைய பொருட்களைக் கள்ளத்தனமாகக் கடத்துகின்ற
சட்டவிரோத நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.
பெட்ரோலியப் பொருட்கள், எஞ்சின் ஆயில், கியர் ஆயில்,
நாட்டு வெடிகுண்டுகள், ஜெலட்டின் குச்சிகள், வெடி மருந்துகள்;
படைக் கலன்கள், துப்பாக்கித் தோட்டாக்கள் போன்றவை
பெருமளவுக்கு கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகத்திற்கிடமான
நபர்கள் சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளின்கீழ் தடுப்புக்
காவலில் வைக்கப்பட்டுள்ளனர். குற்ற நடவடிக்கைகளில் ஈடு
பட்ட பலர் மீது தொடர்புடைய சட்டங்களின்கீழ்
வழக்கு தொடரப்பட்டுள்ளது. வெளிநாட்டுப் போராளிகளால்
ஏற்பட்டுள்ள இப்பேராபத்தினை அறவே களையும் பொருட்டு
மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தைச் செயற்படுத்துவதை
முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து கண்காணித்து நெறிப்
படுத்தி வந்துள்ளார்கள். தமிழ்நாட்டில் நிலவும் சட்டம் ஒழுங்கு
நிலைமை குறித்துக் குறிப்பாக வெளிநாட்டுப் போராளிகளை
ஒடுக்குவதில் மேற்கொண்ட நடவடிக்கை குறித்து மத்திய
உள்துறை அமைச்சரும், மத்திய உள்துறை இணை அமைச்சரும்
தங்களின் முழு மனநிறைவைத் தெரிவித்துள்ளனர். தீவிரவாதி
களின் சதித்திட்டங்களுக்கு எதிராக இவ்வரசு எப்போதும் விழிப்
புடன்இருந்து செயல்படும் என்பதையும், அவர்களது நடவடிக்
கைகளை அடக்கி ஒடுக்கத் தேவையான அனைத்து முயற்சி
களையும் ஒன்றுவிடாமல் மேற்கொள்ளும் என்பதையும்
அறிந்து நாம் பாதுகாப்பாக உள்ளோம் என்று நிம்மதி
அடையலாம். இவ்வாறு திட்டமிட்டுக் கவனமுடன் கண்
காணித்து வருவதன் காரணமாகத் தமிழ்நாட்டுக்குடிமக்களிடை
யே அமைதியும் நல்லிணக்கமும் நிலவ முழுமையாக உறுதி
செய்யப்பட்டுள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

3. அயோத்தியில் நடந்த நிகழ்ச்சிகளும் அதனையடுத்து
நடைபெற்ற கலவரங்களும் நமது தேசத்தின் மனச்சாட்சியை
மிகப் பெரிதும் பாதித்தன. நமது அரசியலமைப்பின் அடித்
தளமாக விளங்குகின்ற அரசியலமைப்புச் சட்டத்தில் சில
அடிப்படைக் கூறுகள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் மிக
மிக இன்றியமையாததாக விளங்குவது மதச்சார்பின்மை
யாகும். மதச்சார்பின்மை என்பது நன்னோக்கத்துடன் கூடிய
கோட்பாடாகும். உண்மையான மதச்சார்பின்மை, பல்வேறு
வகுப்பினரிடையே அமைதியையும் ஒற்றுமையையும் உருவாக்கும்
கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அமையும்.
நமது முதலமைச்சர் அவர்கள் 1992 நவம்பரில் புதுடில்லியில்
நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில்
தொலைநோக்குடன் தமது அரிய கருத்தை வெளியிட்டார்.
அதாவது அயோத்தியில் தகராறுக்குட்பட்ட இடத்தில் இராமர்
கோயில் உருவாக அனுமதிக்கலாம் என்றும், அதேசமயம்
அங்குள்ள மசூதியை அப்படியேவிட்டுவிட வேண்டும் என்றும்
அவர் தெரிவித்தார். முதலமைச்சர் அவர்கள் அன்று கூறிய

கருத்து சகிப்புத்தன்மை உணர்வில் ஆழமாக வேரூன்றிய கருத்தாகும். இந்த உணர்வு, நமது நாட்டில் வாழும் பல்வேறு சமூகத்தினரிடையே அவர்கள் நிலைத்து வாழ்வதற்கு நிலவ வேண்டிய ஒன்றாகும். முதல்வர் அவர்கள் கூறிய கருத்து, தமிழ்நாட்டில் பல நூற்றாண்டுகாலமாக பல்வேறு சமுதாயத்தினரிடையே நிலவி வந்துள்ள சகிப்புத்தன்மை, நல்லெண்ணம் இவற்றில் வேரூன்றிய பண்பாட்டினைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

4. நம் நாட்டின் பல மாநிலங்களில் வன்முறைக் கலவரங்கள் எழுந்து தலைவிரித்தாடின ; இதன் விளைவாகப் பல நூற்றுக்கணக்கானோர் மடிந்தனர் ; துயர வெள்ளம் எங்கும் சூழ்ந்தது. ஆனால் அதேசமயம், தமிழ்நாட்டு மக்கள் சகோதர மனப்பான்மையுடன், ஒருவருக்கொருவர் பாச உணர்வோடு உறுதியாக நின்றனர். இம்மாநிலம் கலவரப் பாலைவனத்திடையே அமைதி நல்லிணக்கச் சோலைவனமாகத் தனித்து நின்றது. சிறிய பதட்டச் சூழ்நிலைகள் எழுந்தபோது, அவை விரைவாகவும், உறுதியாகவும் கட்டுப்படுத்தப்பட்டன. இராணுவத்தையோ, துணை இராணுவப்படைகளையோ உதவிக்கு அழைக்க வேண்டிய சந்தர்ப்பம் எதுவும் நேரவில்லை. இங்கு எழுந்த சூழ்நிலை மிகச் சிறப்பாக சமாளிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், அருகிலுள்ள கருநாடக மாநில அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க அங்கு எழுந்த சட்டம்-ஒழுங்குச் சூழ்நிலையைச் சமாளிப்பதற்காக நமது மாநில அரசு நம்முடைய காவல் படையின் இரண்டு கம்பெனிகளை அனுப்ப முடிந்தது. இவ்வாறு, சமுதாய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் பேணிக் காப்பதில் நாம் நாட்டின் பிற பகுதிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியுள்ளோம் என்பது குறித்து உண்மையில் நாம் பெருமை கொள்ளலாம்.

5. அதேசமயம் இம்மாநிலத்தில் வகுப்புவாதம் தலையெடுக்கவோ, மக்களைப் பிளவு படுத்தவோ இடந்தராமலிருப்பதற்காக, நமது அரசு பயனுள்ள பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தமிழ் நாட்டில் சமுதாய அமைதியும், நல்லிணக்கமும் சிறப்பாக நிலவுகின்றன என்ற களங்கமற்ற நற்பெயர் தொடர்ந்து பேணி வரப்படும். அரசு தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்கு எதிராக விரைந்து செயல்பட்டது. 245 பேர் கைது செய்யப்பட்டனர் ; 34 வளாகங்கள் சட்டவிரோதமானவை என்று அறிவிக்கப்பட்டன. 61 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. தமிழ் நாட்டில் நிலைமை இவ்வாறிருக்கையில், பம்பாயில் குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களுக்கெதிராக மீண்டும் மீண்டும் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறை நமக்கு பெரும் கவலையைத் தோற்றுவித்துள்ளது. பம்பாயை விட்டுத் தமிழ் பேசும் மக்கள்



கிட்டத்தட்ட 4,700-க்கும் அதிகமானோர் வெளியேறிச் சென்னைக்கு வந்துள்ளார்கள். இவர்களில் பெரும்பாலோர் தங்களுடைய சொத்துக்களையும், சொந்த உடைமைகளையும் இழந்து விட்டனர். சமூக விரோத சக்திகள் அவர்கள் குடியிருந்த குடியிருப்புகளைக்கூடத் தங்கள் வசப்படுத்திக் கொண்டுள்ளார்கள். பம்பாயில் வாழும் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்குமாறு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகாராஷ்டிரா முதலமைச்சரையும் மத்திய உள்துறை அமைச்சரையும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். பம்பாயை விட்டு வெளியேறி வந்தவர்கள் இழந்துவிட்ட உடைமைகளுக்கு உரிய இழப்பீட்டைப் பெறுவதற்கும் அவர்கள் மீண்டும் அங்கு சென்று தங்கள் தொழிலை அமைதியாக நடத்துவதற்கும் உறுதி செய்ய இம்மாநில அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

6. மாநிலக் காவல் படையினர், இந்தச் சூழ்நிலையைச் சமாளிக்கும் விதத்தில் முழுமையாக ஈடுகொடுத்துப் பணியாற்றினர் என்பதும், மேலும் அவர்கள், புதிய கண்ணோட்டம் கொண்டு மாறுபட்ட புதிய பாதையில் புதிய குறிக்கோளை உளம் கொண்டு செயல்பட்டனர் என்பதும் மிகுந்த மன நிறைவு அளிக்கக் கூடியதாக உள்ளது. மாநிலக் காவல் படையை ரூ. 80.45 கோடி செலவில் நவீனமயமாக்குவதற்கான விரிவான செயற்குறிப்பு ஒன்று மத்திய அரசிடம் அனுமதி பெறுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசு, இதுவரை ரூ. 10 கோடி அனுமதித்துள்ளது. அதைக் கொண்டு காவல் படையை நவீனப்படுத்தும் சில உடனடிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டில் மேலும் 30 கோடி ரூபாய்க்கு அனுமதியளிக்க மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் உறுதியளித்துள்ளார். மாநில அரசு, காவல் படையை நவீனமயமாக்கும் பணியின் இரண்டாம் கட்டப் பணியை மேற்கொள்வதற்காக, இந்த நிதியை விரைவில் வழங்குமாறு நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துவோம். சீருடைப் படையினர் தேர்வு வாரியத்தின் மூலம் 9,500 காவலர்களைத் தேர்வு செய்யும் பணி விரைவில் முடிக்கப்படும். குறித்த காலப் பயிற்சிக்குப் பிறகு அவர்கள் காவற்படையிற் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

7. நீதித்துறை முறையாகச் செயல்படுவதற்குப் போதுமான வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்னும் கருத்தை இவ்வரசு ஒப்புக் கொள்கிறது. நீண்டகாலமாக முடிவுசெய்யப்படாமல் இருந்த நீதித்துறையினரின் முறையீடுகளை அரசு பரிசீலித்து, அவர்களுடைய குறைகளில் பலவற்றை தீர்த்து வைத்துள்ளது. புதிதாக ஏற்படுத்தப்பட்ட மாவட்டங்களில் அமையும் நீதிமன்றங்கள் உட்பட பத்தொன்பது

நீதிமன்றங்கள் குறித்தகாலத் திட்டத்தின்கீழ்ப் புதிதாக
ஏற்படுத்தப்பட்டுள்ளன. ரூ. 4 கோடி செலவில் உயர்நீதி
மன்றத்தின் இணைப்புக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்
டுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தைக் கலந்தாலோசித்து,
மதுரையில் உயர்நீதிமன்றக் கிளை ஒன்றை அமைப்பது
பற்றி தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர்
அவர்கள் மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவரு
டன் நடத்திய விவாதங்களின்போது, நீதி நிருவாகத்திற்
கான நிதியொதுக்கீட்டைத் திட்ட ஒதுக்கீட்டின்கீழ்
கொண்டு வருவது பற்றி விவாதித்தார்கள். இது ஏற்றுக்
கொள்ளப்பட்டுள்ளது. நீதி நிருவாகத்தை மேம்படுத்துவதற்
காகவும் மற்றும் நிலை உயர்த்துவதற்காகவும் ரூ. 123.37
கோடி நிதியொதுக்கீட்டுடன்கூடிய விரிவான பெருந்
திட்டம் ஒன்று புதிய திட்டப் பணிகளின் கீழ் நிதியுதவி
பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்
பட்டுள்ளது.

8. அரசியலமைப்புச் சட்ட நெறி முறைகளின்படி,
மதுவிலக்கு என்பது அரசின் முக்கியமான கொள்கையா
கும். முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின்
தலைமையில் அமைந்துள்ள இவ்வரசு தான் அறிவித்திருந்த
மதுவிலக்குக் கொள்கைகளுக்கிணங்க, பதவி ஏற்றவுடன்
முதன்முதல் முடிவு எடுத்துச் செயற்படுத்திய நட
வடிக்கை மாநிலம் முழுவதிலும் உள்ள மலிவு விலை
மதுக்கடைகளை ஒழித்ததேயாகும். இந்த நடவடிக்கை
ஆண்டுக்கு ரூ. 390 கோடி அளவுக்கு வருவாய் இழப்பு
ஏற்படுத்துவதாக இருந்தபோதிலும், அரசு இதனை
மேற்கொண்டது என்பதை இம்மன்றத்தின் மாண்புமிகு
உறுப்பினர்கள் அனைவரும் நன்கறிவர். மதுவிலக்குச் செய
லாக்கப் பிரிவை அமைத்ததன் மூலம், கள்ளச் சாராய விற்
பனை, கள்ள மது ஆகியவற்றிற்கெதிராக எடுக்கப்பட்டு
வந்த நடவடிக்கை மும்முரப்படுத்தப்பட்டது. முதலமைச்சர்
அவர்கள் தவறிழைக்கும் அதிகாரிகளுக்கு எதிராக எடுத்த
நடவடிக்கையின் காரணமாகக் கள்ளச் சாராய நிகழ்வு
களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்
துள்ளது. மக்கள் தொடர்புச் சாதனங்கள் அனைத்தின்
வாயிலாகவும் மதுவின் தீமைகளை எதிர்த்துப் பெருமள
விலான பிரச்சார இயக்கம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது.
7 கோடி ரூபாய் செலவில் மதுவிலக்குச் செயலாக்கப் பிரி
வை மேலும் வலுப்படுத்துவதன் மூலம், கள்ளச் சாராயத்
தை எதிர்த்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இன்னும்
முனைப்பாக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இதன்படி,
ஒவ்வொரு காவல் துணைக் கோட்டத்திலும் மதுவிலக்குச்
செயலாக்கப் பிரிவின் ஓர் அலகு ஏற்படுத்தப்படும். இவற்றின்
துணை கொண்டு, மதுவிலக்குச் செயலாக்கப் பிரிவு கள்ளச்
சாராயத் தொழிலில் ஈடுபட்டுள்ள சமூக விரோத சக்தி





களுக்கெதிராகப் பயனுள்ளவகையில் செயற்படமுடியும். அரசு
மக்களின் நலனுக்கே மிக உயர்ந்த முக்கியத்துவம் அளிக்
கிறது. இந்த வகையில், ஏற்படும் வருவாய் இழப்பையும்
பொருட்படுத்தாமல், உயர்ந்தபட்ச சமூக நலனையே அரசு
பெரிதெனக் கருதி வருகிறது. அயல்நாட்டுவகை மதுக் கடை
களுடன் இணைந்துள்ள ''மது அருந்துமிடங்களுக்கு'' ( Bars)
வழங்கப்பட்டுள்ள உரிமங்களை 1993 ஜூனில் தொடங்கும்
ஆயத்தீர்வை ஆண்டிலிருந்து ரத்து செய்து விடுவதென்று
அரசு மேற்கொண்டுள்ள முடிவை இம்மாமன்றத்தின் உறுப்
பினர்கள் முழுமனதுடன் வரவேற்பார்கள் என்று நம்பு
கிறேன்.

9. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வேலைவாய்ப்பிலும்,
கல்வியிலும் இடஒதுக்கீடு அளிப்பது குறித்து உச்ச நீதி
மன்றம் தீர்ப்பு அளித்துள்ளதைத் தொடர்ந்து எழுந்துள்ள
நிலைமை நமக்குப் பெருங்கவலை தரக்கூடிய மற்றொரு
சமுதாயக் கொள்கைப் பிரச்சினையாகும். மண்டல் குழுவின்
பரிந்துரைகளை செயல்படுத்தும்போது, ஏனைய பிற்படுத்
தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவீத இடஒதுக்கீடு செய்ய
வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துகின்ற தீர்மானம்
ஒன்றை 1991 செப்டம்பர் 30 ஆம் நாளன்று இந்த அவை
நிறைவேற்றியதை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கு நினைவு
கூர வேண்டுகிறேன். இப்போது தமிழ்நாடு சமூகக் கொந்
தளிப்பிலிருந்து விடுபட்டுக் காணப்படுகின்றது என்றால்,
அதற்கு பாரத் ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்
பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு
வழங்கப்படும் வகையில் பரந்த நோக்கோடு எடுத்த குறிப்
பிடத்தக்க நடவடிக்கையே காரணமாகும். இப்போது
மொத்த இட ஒதுக்கீடு 69 சதவீதமாக உள்ளது. இது பிற்
படுத்தப்பட்ட வகுப்பினருக்கான வாய்ப்புகள் பெருகுவதற்கு
உதவியுள்ளது. இவ்வளவு சிறப்பாகத் தொடங்கப்பட்ட இந்த்
நடவடிக்கையின் பலன், அரசியலமைப்புச் சட்டத்தில்
யாருக்காக இந்தச் சிறப்பு விதித்துறை இயற்றப்பட்டுள்ள
தோ அந்த மக்களுக்கு முழுமையாகச் சென்றடைவதற்குச்
சிறிது காலம் பிடிக்கவே செய்யும். இந்தச் சூழ்நிலையில்,
மொத்த இட ஒதுக்கீட்டை 50 சதவீதமாகக் குறைக்க
வகை செய்யும் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுக்ிணங்க
நடப்பது தமிழ்நாட்டில் நடைமுறையில் சாத்தியப்படாத
ஒன்று என்பது தெளிவு. இட ஒதுக்கீட்டில் திடீரென்று
குறைப்பு செய்தால், அது சமூகக் கொந்தளிப்பை ஏற்
படுத்தும்; அதனை நம்மால் தாங்கிக் கொள்ள முடியாது.
மேலும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டவாறு, இட ஒதுக்
கீடு வழங்குவதில் பின்தங்கிய வகுப்பினரிடையே முன்னேற்
றம் அடைந்தவர்களை நீக்கிவிடுவது ( Separation
of the creamy layer ) என்பது மிகப்புலவான
இடர்ப்பாடுகளை உருவாக்கக் கூடிய ஒன்றாகும்.

ஆகவே, இந்தப் பிரச்சினைகளில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை மறுஆய்வு செய்யும்படி கேட்டுக் கொள்ளவும் அரசு தீர்மானித்துள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை ஆராய நிரந்தரமான குழு ஒன்றும் அமைக்கப்படும்.

10, பாரத்ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உருவாக்கிய கொள்கைகளையும் திட்டங்களையும் நிறைவேற்ற இவ்வரசு முற்றிலும் உறுதி கொண்டுள்ளது. பதவியேற்ற பின்னர் உடனடியாக இவ்வரசு மெரீனா கடற்கரையில் அறிஞர் அண்ணாவின் சமாதிக்கருகில் அன்பிற்குரிய மறைந்த தலைவரின் நினைவாகப் பொருத்தமான நினைவுச்சின்னம் ஒன்றினை அமைக்கும் பணியை மேற்கொண்டது. ரூ: 1.55 கோடி செலவில் ஒரு பெருஞ்சிறப்பு வாய்ந்த புதிய நினைவுச் சின்னம் அமைக்கும் பணி பன்னிரெண்டே மாதத்தில் முடிக்கப் பெற்றது ஒரு சாதனையாகும். பாரத் ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இந்த அழகிய நினைவுச் சி..னம் பொதுமக்களின் அனைத்துப் பிரிவினரின் வரவேற்பையும் பெற்றுள்ளது. பொதுமக்கள் இங்கு பெருந்திரளாக வருகைதந்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

11. அருஞ்சாதனை என்று கூறுமளவிற்கு மிகக் குறுகிய கால அளவான 7½ மாதங்களில் ரூ. 40 கோடி செலவில் சென்னையில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள புதிய ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தினை அண்மையில் பாரத பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள் பொறியியல் துறையில் வியக்கத்தக்க சாதனையான, பிரம்மாண்டமான மலைக்க வைக்கக்கூடிய இந்த விளையாட்டரங்கம் ஆர்வக்கிளர்ச்சியும் உள்ளத்து எழுச்சியும் கொண்ட தமிழகஇளைஞர்தம் உணர்வுகளை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. தமிழ்நாடு இதற்கு முன்னர் இரண்டு முறை நேரு தங்கக்கோப்பை சர்வதேசப் போட்டியை நடத்தும் வாய்ப்பினை இழந்துள்ளது. இத்தகைய பிரம்மாண்டமானதொரு திட்டத்தை தொடங்கி நடத்த முடியுமா, அதுவும் உரிய காலத்தில் முடிக்க இயலுமா என்ற ஐயப்பாடு பலருக்கும் எழுந்தது. இன்று இந்த விளையாட்டரங்கம் முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கிற்கும் உறுதிப்பாட்டிற்கும் ஓர் எடுத்துககாட்டாக விளங்குகிறது. ஒப்பற்றதொரு கட்டுமானச் சிறப்புடைய இந்த விளையாட்டரங்கம் ஆசியாவிலேயே தலைசிறந்ததாக விளங்குகிறது. இந்த விளையாட்டரங்கத்தில் மேற்கூரையமைப்புடன், தனித்தனியே பொருத்திய இருக்கைகளுடன் 40,000 பேர் உட்கார்ந்திருந்து போட்டிகளைக் கண்டுகளிக்கும் வசதி உள்ளது இந்த விளையாட்டரங்கத்தில் இரவும் பகலும் விளையாட்டுப் போட்டிகளை நடத்த இயலக்கூடிய மிக நவீன ஒளிவிளக்கு ஏற்பாடு. உலகம் முழுவதும் தொடர்பு கொள்ளக்



கூடிய அனைத்துவகைத் தொலைத்தொடர்புச் சாதன ஏற்பாடுகள், உயர்வகை விளையாட்டு வீரர்களுக்கான உயர்தர வசதிகள் கணினிமயமாக்கப்பட்ட ஸ்கோர் போர்டு : மின்னணுவியல் கண்காணிப்பு ஏற்பாடு குளோ' ஸ்டு சர்கியூட் டி.வி.'' அமைப்பு ஆகியவை உள்ளிட்ட மிக நவீன, மிக உயர்தர வசதிகள் உள்ளன. பெருமை கொள்ளத்தக்க வகையில் குறுகிய கால அளவிற்குள் விளையாட்டரங்கம் கட்டும் திட்டத்தை வெற்றிகரமாக முடித்ததும், பத்தாவது ஜவகர்லால் நேரு தங்க கோப்பை சர்வதேச அழைப்பு கால்பந்தாட்டப் போட்டியை இந்த விளையாட்டரங்கத்தில் நடத்தியதும் இவ்வரசு செயற்கரிய அரும்பெரும் திட்டங்களையும் நிறைவேற்றி முடிக்கும் திறனைக் கொண்டுள்ளது என்பதனை மிக நன்றாக வெளியுலகுக்கு உணர்த்திய பெருஞ்சாதனைகள் ஆகும்.

12. இந்த அரசு பதவியேற்றபோது நிலவிய கடுமையான நிதி நெருக்கடியை அவையின் உறுப்பினர்கள் நன்கு அறிவர். 1991-92 ஆம் ஆண்டுக்காக ஒப்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்டம் அதாவது ரூ. 1,605 கோடிக்கான திட்டப் பணிகள் முழுமையாக நிறைவேற்றப்படுமா என்பது குறித்துப் பெருத்த ஐயப்பாடுகள் எழுந்தன. உண்மையில் 1991-1992-ஆம் ஆண்டுக்கு ஆகிய திட்டச் செலவு ரூ. 1,651 கோடி. இது திட்ட இலக்கையும் விஞ்சியது என்பது பெரும் மனநிறைவளிக்கக் கூடியதாகும். 1992-93-ஆம் ஆண்டுத்திட்ட ஒதுக்கீடு ரூ. 1,486 கோடி அளவில் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முதலமைச்சரிடம் தெரிவித்தபோது, அவர் 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 1751 கோடி திட்ட ஒதுக்கீட்டை எய்த தமிழ்நாடு ஒரு வழியைக் கண்டுபிடிக்கும் என்று வலியுறுத்தினார் என்பதையும் இங்கு நினைவுகூர வேண்டும். நடப்பாண்டில் திட்டச் செலவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மிக மிகச் சிறப்பாக உள்ளது. இது 1992-93 ஆம் ஆண்டிற்கான ரூ.1751 கோடி திட்ட ஒதுக்கீட்டையும் விஞ்சக்கூடும் என்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. 1992-97ஆம் ஆண்டுக்கான எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பரிசீலனை செய்கையில் அப்போது நிலவிய கடுமையான நிதி நெருக்கடி காரணமாக அதனைப் பயனுள்ள வகையில் முடிவு செய்வது குறித்துப் பெருத்த ஐயப்பாடுகள் எழுந்தன என்டதை அவையின் உறுப்பினர்கள் நினைவுகூரலாம். எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ரூ. 10.200 கோடி ஒதுக்கீட்டிற்கு ஒப்புதலளிக்குமாறு மத்திய திட்டக்குழுவை ஏற்றுக் கொள்ளச் செய்வதில் முதலமைச்சர் அவர்கள் வெற்றியுடைந்துள்ளார்கள். இவ்வாறாக இந்த ஒதுக்கீடு, ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டை விட குறிப்பிடத்தக்க வகையில் மிகப்பெரும் அளவிற்கு அதாவது 77 சதவீதம் அளவிற்கு உயர்ந்துள்ளது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் ஆண்டான 1992-93 ஆம் ஆண்டில் ஒதுக்கிடான ரூ. 1.751 கோடியை விஞ்சுகின்ற நிலையில் தமிழ்நாடு உள்ளது. இது தற்போது தமிழ்நாடு உரிய வளர்ச்சிப் பாதையில் செல்கிறது என்பதைச் சுட்டிக்

காட்டுகிறது. வளர்ச்சி நடவடிக்கைகளுக்குப் புதிய உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளது என்பது உண்மையிலேயே மனநிறைவளிக்கிறது. இந்த உண்மை, முதலமைச்சர் அவர்களுக்கும் மத்திய திட்டக்குழுவின் துணைத் தலைவருக்கும் இடையில் அண்மையில் 1992 நவம்பரில் நடைபெற்ற கூட்டத்தில், 1993–94 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ. 2 101 கோடியாக முடிவு செய்யப்பட்டது என்பதிலிருந்து மீண்டும் மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு 1992–93 ஆம் ஆண்டிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டைவிட 20 சதவீதம் அதிகமாகும். தமிழ்நாட்டை மீண்டும் விரைந்த வளர்ச்சிப் பாதையில் கொண்டுவருவதில் இவ்வரசின் சிறப்பான சாதனை குறித்து எவ்வித மாறுபட்ட கருத்தும் இருக்கமுடியாது.

13. தமிழ்நாட்டில் 1992 நவம்பரில் ஏற்பட்ட புயல் வெள்ளம் மாநிலத்தைப் பெரிதும் சேதப்படுத்தியது 238 பேர் உயிரிழந்தனர். 5.93 இலட்சம் ஏக்கர் நிலத்தில் வளர்ந்து நின்ற பயிர்கள் சேதமடைந்தன. 1.71 இலட்சம் குடிசைகள் சேதமடைந்தன. சாலைகள், பாசன ஆதாரங்கள், பொதுக் கட்டிடங்கள் ஆகியவை உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டது. முதலமைச்சர் அவர்கள் வெள்ளம் பாதித்த பகுதிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டு நிவாரண நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டார். நிவாரணப் பணிகளை விரைவாகவும் திறம்படவும் மேற்கொண்டது அனைவரின் பாராட்டுதலையும் பெற்றது. புயல் வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களின் அளவை விவரிக்கும் குறிப்பும், ரூ. 530 கோடி அளவிற்கு நிதியுதவி கோரும் குறிப்பும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. வெள்ளம் பாதித்த பகுதிகளைப் பார்வையிடுவதற்காகப் பாரதப் பிரதமர் அவர்கள் வந்த போது, முதலமைச்சர் அவர்களும் உடன் சென்றார்கள். விரிவாக விவாதித்த பின்னர் பாரதப் பிரதமர் அவர்கள் இம் மாநிலத்திற்குக் கூடுதலாக ரூ. 50 கோடி வழங்குவதாக அறிவித்தார்கள். இத்தொகை, 1993–94-ஆம் ஆண்டில் மாநிலத்திற்குச் சேர வேண்டிய இடர் நிவாரண நிதியின் மத்திய அரசின் பங்குத் தொகையில் 50 சதவீதமான ரூ.14.63 கோடியுடன் கூடுதலாக வழங்கப்பட்டதாகும். பாரதப் பிரதமர் அவர்கள் அளிப்பதாக உறுதியளித்த ரூ. 50 கோடி, மத்திய வரிகளில் மாநிலத்தின் பங்குக்குரிய முன்பணமாக மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை, 1993 மார்ச்சில் சரிக்கட்டப்படவுள்ளது என்பது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. அரசு ஏற்கனவே பரவலாக வெள்ள நிவாரணப் பணிகளையும், சீரமைப்புப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது இடருதவி. உழவர்கள், மீனவர்கள், ஏனையோர்க்கு நிவாரணம், சாலைகள், பாசன ஏற்பாட்டுத் திட்டங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு அவசர சீரமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்காக ரூ. 68.52 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. வெள்ள நிவாரணச் செலவு, மாநிலத்திற்குக் கடுமையான நிதிச் சுமையை ஏற்படுத்தியுள்ளது.



ஒன்பதாம் நிதிக் குழு பரிந்துரைத்த இடர் நிவாரணநிதி ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை என்பதையும் இது சுட்டிக் காட்டுகிறது. உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று பாரதப் பிரதமர் அவர்கள் முதலமைச்சரிடம் உறுதியளித்துள்ளார்கள். அதற்கிணங்க, மொத்தம் ரூ. 2,560 கோடி மூலதனச் செலவில் திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, இத்திட்டத்தினை உலக வங்கிக்கு அனுப்பியுள்ளது. இத்திட்டத்திற்கு உலகவங்கி விரைவில் அனுமதி அளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

14. அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் வளர்ந்துநின்ற பயிர்களும், அண்மையில் நாற்று நடப்பட்ட பயிர்களும் சேதமடைந்த போதிலும், வளர்ந்த பயிர்களைக் காப்பாற்றுவதற்கும் புதிதாகப் பயிரிடுவதற்கும் பயனுள்ள வகையில், கணிசமான அளவிற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. நல்ல விளைச்சல் தரக்கூடிய பயிர்களைப் பயிரிட இயலும் வகையில், விதைகள், இரசாயன உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் ஆகியவை போதிய அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன. 1991–92 ஆம் ஆண்டில் தமிழ்நாடு இதற்கு முன்னர் எப்போதும் அடைந்திராத அதிக அளவு உற்பத்தியான 90.70 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தியை அடைந்துள்ளது என்பதை அவையின் உறுப்பினர்கள் அறிவர். 1992–93- ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தியானது, எய்துவதற்கு மிகக் கடினமான 100 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவையும் தாண்டிச்செல்ல இருப்பதன் மூலம் முன் எப்போதும் கண்டிராத மேற்சொன்ன சாதனையை அடையக் கூடும் என்பது மனநிறைவளிக்கத்தக்கதாகும். இது உண்மையிலேயே தமிழ்நாட்டின் அயராது உழைக்கும் உழவர்களின் உயர்ந்த சாதனையாகும். அரிசி உற்பத்தி எப்போதும் கண்டிராத உயர் அளவான 76 இலட்சம் மெட்ரிக் டன்னை எய்தும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் பருத்தி உற்பத்திகூட மிக உயர்ந்த அளவை எய்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநில விவசாயிகளின் மிகச் சிறந்த முயற்சிகளுக்கு அரசு முழுமையாக ஆதரவளித்து வந்துள்ளது. தொழில்நுட்ப விரிவாக்க ஆதரவு இயற்கைச் சீற்றங்களின்போது விரைந்து நிவாரணம் வழங்கல், போதுமான ஆதரவு அளித்தல் ஆகியவைகளில் அளிக்கப்பட்ட புதுமையான தொகுப்பு உதவிகள், ரூ. 55 கோடி அளவிற்கு அரசு வழங்கிய விரிவான கடன் நிவாரணத் தொகுப்புதவி ஆகியவை தமிழ்நாட்டு விவசாயிகள் நல்ல பயன்களை அடைய உதவின. இப்பருவமழை அனுகூலமாக இல்லாதுபோனாலும்கூட பருவமழை அனுகூலமாக இல்லாதுபோனாலும்கூட இப்பருவச் சாதனைகளைத் தொடர்ந்து நிலைபெறச் செய்ய உறுதி செய்வது நமது முயற்சியாக இருக்கும். இந்தக் காரணத்திற்காகவே, தரிசு நிலங்களைச் சாகுபடி செய்தல், ஒருங்கிணைந்த நீர்வரத்துப் பகுதி மேம்பாடு, ஏனைய வறட்சிக் காப்புப் பணிகள் ஆகியவை மீண்டும் வலியுறுத்தப்படும்.

[1993 பிப்ரவரி 8

15. ஊரகப் பொருளாதாரம் விரைந்த வளர்ச்சி பெறவேண்டும் என்பதற்காகக் கால்நடை வளர்ப்பு-மீனளம் போன்ற விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளுக்கு அரசு மிகுந்த முன்னுரிமை அளித்துள்ளது. ரூ. 68.19 கோடி மூலதனச் செலவில் பால் பெருக்கத் திட்டம் (மூன்றாம் கட்டம்) செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் மாநிலம் முழுவதும் உள்ள பால்பண்ணை விவசாயிகளுக்குப் புதிய வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில், பால் உற்பத்திப் பெருக்கத்தில் கிட்டத்தட்ட ஒரு புரட்சியே நிகழவுள்ளது. 1992 ஆம் ஆண்டில் நான் ஒன்றுக்கு 93.81 இலட்சம் லிட்டராக இருந்த மொத்தப் பால் உற்பத்தி, 1997-ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 115.22 இலட்சம் லிட்டராக உயர்த்தப்படும். பால் கூட்டுறவு ஒன்றியங்கள், பால் கூட்டுறவு இணையம் ஆகியவற்றில் கையாளப்படும் பாலின் அளவு தற்போதைய அளவைவிட 50 சதவீதம் உயர்த்தப்படவிருக்கிறது.

16. இருவகையான அணுகுமுறைகளின் வாயிலாக உவர் நீர் இறால் பண்ணைக்குப் பெருமளவு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது. முதலாவதாக, பெரிய தொழில் நிறுவனங்கள் இறால் பண்ணை அமைக்க ஊக்கம் அளிக்கப்படுகிறது. இரண்டாவதாக, சிறு விவசாயிகளை ஒருங்கிணைத்து இறால் வளர்ப்புத்தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டுவருகின்றன. பாக்நீர்ச் சந்தியில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்குடன், ரூ. 7.50 கோடி செலவில், இராமநாதபுரம் மாவட்டத்தில் உவர் நீர் இறால் வளர்ப்புத் தொழிற்பேட்டை ஏற்படுத்தப்படும். கடலோர மாவட்டங்கள் ஐந்தில் 6,050 மீனவர்கள் பயனடைவதற்கு ரூ. 15.88 கோடி செலவில் ஒருங்கிணைந்த ஆழ்கடல் மீனள வளர்ச்சித் திட்டம் ஒன்று அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது.

17. இந்தியப் பொருளாதாரத்தை குறிப்பாக, இந்தியத் தொழில் துறையை உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பதும், அதன் வளர்ச்சிக்கு மிகவும் தேவைப்படும் ஊக்கமளிப்பதும் நாட்டின் புதிய பொருளாதாரக் கொள்கையின் பொதுவான நோக்கமாகும். இருப்பினும், தேசிய அளவில் புதிய முதலீடுகள் திரட்டுப்படுவது குறிப்பிடத்தக்க அளவிற்கு வேகம் பிடிக்கவில்லையென்பது கவலை அளிப்பதாக உள்ளது. புதிய முதலீட்டுக்கும், விரைவான வளர்ச்சிக்கும் உகந்த சூழ்நிலைகளை நாம் உருவாக்க வேண்டும். மாநிலத்துக்கே உரிய புதிய தொழில் கொள்கையை முதலமைச்சர் விளக்கியுள்ளார். பயனுள்ள நடவடிக்கைக்கு உரிய விரிவான முழுமையான அடிப்படைத் திட்டமாக இக்கொள்கை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. தேசிய அளவில் புதிய முதலீடு திரட்டுவது எளிதாக இல்லாதபோது, தமிழ்நாட்டில் மாநில அரசு மேற்கொண்ட பயனுள்ள நிலைத்த முயற்சிகள் நல்ல பயன்களைக் கொடுத்துள்ளன. ரூ. 8,500 கோடி மூலதனத்தை உள்ளடக்கிய புதிய



1993 பிப்ரவரி 8]

முதலீட்டுத் திட்டங்களைக் குறித்துக் கலந்து பேசி முடிவுகாண
1992 டிசம்பரில் முதலமைச்சர் விரிவான ஆலோசனைகளை
நடத்தினார். இதனால் மாநிலத்தில் உள்ள பல்வேறு திட்டங்
களில் மொத்தம் ரூ. 20,000 கோடி புதிய முதலீட்டைப் பெறு
வதில் அரசு வெற்றி கண்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின்
உறுதிமிக்க முயற்சிகளாலும், தமிழ்நாட்டில், தொழில் வளர்ச்
சிக்கு உகந்த சூழ்நிலை நிலவுவதைப் படிப்படியாகப் பலரும்
தெரிந்து கொண்டுள்ளபடியாலும், மேலும் சிறப்பான அடிப்
படைக் கட்டமைப்பு வசதிகள் இருப்பதனாலும் தேசியச்
சூழ்[illegible]பாடுகள் இருந்தபோதிலும், அரசு இத்
துறையில் தனிச்சிறப்பான சாதனையை எய்த முடிந்துள்ளது.
மிகக் குறைந்த கால அளவிற்குள், இந்த முதலீடுகள் நிறைவேற்றப்
பெறுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளவிருக்கிறது.

18. இம்மாநிலத்தில் விரைவுபடுத்தப்பட்ட தொழில் வளர்ச்
சியை ஏற்படுத்துவதற்காகப் புதிய முயற்சிகள் பல ஏற்கெனவே
தொடங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு தொழில் அடிப்படைவசதிக்
கட்டமைப்பு மேம்பாட்டுக்கழகம் (TACID) என்கிற புதிய
கழகம், இம்மாநிலத்தில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்து
வதில் முனைப்புடன் செயல்பட்டுவருகிறது. வலுவான தொழில்
களின் அடிப்படை வசதிக் கட்டமைப்பு வளர்ச்சிக்கு இந்த
வளர்ச்சி மையங்கள் திட்டம் புதிய வேகத்தை அளிக்கும். இந்த
வளர்ச்சி மையங்களை உரிய கால அளவுக்குள் நிறுவிமுடிப்
பதற்காக, இம்மாநிலத்திற்கு வழங்குவதாக உறுதியளித்தநிதியை
வழங்குமாறு மத்திய அரசை இத்தருணத்தில் கேட்டுக்கொள்வது
பொருத்தமாக இருக்கும். இந்தோ-சிங்கப்பூர் வர்த்தக ஏற்பாடு
குறித்த கோட்பாட்டிற்கு முழு வடிவம் கொடுக்க வல்லுநர் குழு
ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன உத்தேச ஏற்பாடு
குறித்த விவரங்களைத் தயாரிக்க, உயர் அளவிலான அதிகாரிகள்
குழு ஒன்று அண்மையில் சிங்கப்பூர் சென்றுள்ளது. இது குறித்த
சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று நடந்தேறி வருகிறது; சென்னை
அருகே இப்புதிய வர்த்தக மையத்தை உருவாக்கும் பணிகளை
விரைவுபடுத்துவது இதன் நோக்கமாகும். இப்புதிய அமைப்பின்
கீழ், பெரிய அளவில் முதலீடுகள் செய்வதற்குத் தமிழ் நாட்டின்
சூழ்நிலை ஏதுவாகவுள்ளது.

19. புதிய தொழில் மேம்பாட்டினை ஊக்குவிக்கச் சிறந்த
வழிவகையாக விளங்குகிற அடிப்படை வசதிகளில் போதிய
முதலீடுகளைச் செய்வதற்கு அரசு உறுதி செய்ய வேண்டுமென்பது
நமது தெளிந்த கருத்தாகும். மின்விசைத் துறையில் அதிக நாட்ட
மும் முக்கியத்துவமும் மிகச் சரியான முறையில் அளிக்கப்பட்
டுள்ளது. மின்விசைத் துறையில் அரசு சிறந்த சாதனையை எய்தி
யுள்ளது. தமிழ்நாட்டில் மின்வெட்டு அறவேயில்லை. தூத்துக்
குடி அனல்மின் நிலையம் தேசிய அளவில் தலைசிறந்த மின் உற்

பத்தி நிலையங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மிக அதிகமாக ஒட்டுமொத்த திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதன் விளைவாக 1992—1997 கால அளவில் மின்விசைத் துறைக்கு ரூ. 3,000 கோடி ஒதுக்க முடிந்துள்ளது. இத்துடன், கூட்டுத்துறையிலும், தனியார் துறையிலும் கணிசமான அளவுக்குப் புதிய முதலீடுகள் திரட்டிப்பட்டு வருகின்றன. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின் உற்பத்தித் திறனை 1,630 மெகாவாட் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்துடன், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தேவைகளைக் கருத்தில் கொ7ண்டு போதிய வினவுக்குப் புதிய திட்டங்களுக்கு இசைவு வழங்கப்பட்டுள்ளது. ரூ. 7,000 கோடி நிதி ஒதுக்கீட்டில் 1,500 மெகாவாட் உற்பத்தித் திறனில் கூட்டுத் துறையில் ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரிச் சுரங்க மற்றும் மின் உற்பத்தித் திட்டம், ரூ. 3,000 கோடி நிதி ஒதுக்கீட்டில் கடலூரில் தனியார் துறையில் 1,000 மெகாவாட் அனல் மின் திட்டம், ரூ. 1,000 கோடி செலவில் நெய்வேலியிலிருந்து கிடைக்கக்கூடிய கூபரி பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தித் தனியார் துறையில் ஒவ்வொன்றும் 250 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அனல் மின் திட்டங்கள் ஆகியவை மின்துறையில் இசைவு அளிக்கப்பட்ட புதிய திட்டங்கள் ஆகும். இவ்வாறாக, மொத்தம் நிறுவவிருக்கும் புதிய திட்டங்களில், ரூ. 11,000 கோடி முதலீடு செய்யப்படவுள்ளது. இத்திட்டங்களின் மூலம் மொத்த உற்பத்தித்திறன் 3,000 மெகாவாட் ஆகும். ஒன்பதாவது திட்டக் காலத்திற்கான புதிய முதலீட்டிற்கு முன்கூட்டியே திட்டமிடுவதானது, தமிழ்நாட்டில் நீண்டகால அளவில் மின்விசை கிடைப்பதை உறுதி செய்வதாக உள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த இத்துறைக்கு அத்தகைய ஒருமித்த பயனுள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வகையிலான மொத்தப் பெருமையும் அரசையும், குறிப்பாக முதலமைச்சர் அவர்களையும் சார்ந்ததாகும். மின் அனுப்புகை, மின் பகிர்வு ஆகியவற்றிற்குப் பெரிய அளவில் முதலீடு செய்யும் திட்டத்துடன், மின்விசைத் தரம் குறித்தும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

20. தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு குறைந்துள்ளது. முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு மன்றங்களில் இப்பிரச்சினையை முன்வைத்துள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பலனாக, மொத்தம் ரூ. 2,000 கோடி நிதி ஒதுக்கீட்டில் 'அரோமாட்டிக்ஸ் திட்டம் (AROCHEM) ஒப்புதலளிக்கப் பெற்றுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்தும் பணி தற்போது நடந்தேறி வருகிறது. துணைத் தொழில்கள் உட்பட, மொத்த முதலீடு முடிவில் ரூ. 4,000 கோடியாக இருக்கும்; அதன் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் 70,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மத்திய அரசு முதலீடு குறித்து முடிவு எடுக்க வேண்டிய ஏனைய பல்வேறு திட்டங்கள் நிலுவையில் உள்ளன



குறிப்பாக, 'பம்பாய் ஹை'யிலிருந்து தென் மாநிலங்கள் அனைத்திற்கும் இயற்கை எரி வாயுவைக் கொண்டுவர தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்தை மேற்கொள்ள, 1992 நவம்பரில் நடைபெற்ற தென் மண்டலக் குழுக் கூட்டத்தில் தெளிவுபடுத்திய வாறு தென்மாநிலங்களின் முதலமைச்சர்களுடைய ஒருமித்த கருத்தை இங்குக் குறிப்பிட விழைக்கிறேன். முதலமைச்சர் அவர்கள், இந்தத் தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்தைச் செயலாக்கும்படி அழுத்தமான வேண்டுகோள் விடுத்துள்ளார். இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதற்கு உறுதி யளிக்கும் வகையில், தென் மாநிலங்கள் அனைத்தும் கூட் டாகச் சேர்ந்து நிதியளிக்கலாம் என்றும்கூடத் தெரிவித் துள்ளார். மத்திய அரசு, அண்மையில் தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்திற்குக் கொள்கை அளவில் அனுமதியளித் துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த விரைவில் நட வடிக்கை எடுக்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். பன்னாட்டு நிதித்துறை மையமாக விரைந்து வளர்ந்து வருகின்ற சென்னை மாநகரைத் தலைமையிடமாகக் கொண்டு, தென் மண்டலத் தொழில் வளர்ச்சி வங்கியை ஏற்படுத்தும் கருத்தினை யும் முதலமைச்சர் அவர்கள் முன்வைத்துள்ளார்கள். பொரு ளாதாரத்துறையில் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட நிலையில், அனைத்திந்திய நிதி நிறுவனங்கள் நாடு முழுவதும் பரவலாக அமைந்து மண்டல அளவில் ஓரளவு சமநிலை அமைய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். இந்நாட்டின் நிதியமைப்பு ஏற்பாட்டைச் சீரமைக்கும், வகையில் இந்தக் கருத்தினை விரைவில் பரிசீலிக்க வேண்டியது அவசியமாகும். கூடங்குளம் அணுமின் திட்டத்திற்குப் புத்துயிரளிக்கப்பட வேண்டும். இத்திட்டத்தை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பங்கு மூல தனத்தில் முதலீடு செய்ய மாநில அரசு தன்னுடைய இசைவைத் தெரிவித்துள்ளது. இத்திட்டம் விரைவில் செயல்படத் தொடங்க இயலும் வகையில், மத்திய அரசு இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்து விரைவில் முடிவெடுக்க வேண்டியது அவசியமாகும்.

21. மத்திய அரசு செயற்படுத்தத் தொடங்கியுள்ள புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்குப் பொதுவாக ஆதரவளிக்கின்ற அதேசமயம், அக்கொள்கைகளைச் செயல்படுத்துவதால் ஏற் படுகின்ற பொருளாதாரக் கட்டமைப்பைச் சரிப்படுத்தும் நடவடிக்கைகளால் உண்டாகின்ற சுமை, ஏழை எளிய மக்களின் மீதும் ஒடுக்கப்பட்ட மக்களின் மீதும் விழுந்து விடக்கூடாதே என்கின்ற கவலை மாநில அரசுக்கு எப்போதும் இருந்துவந் துள்ளது. பணவீக்கத்தை, குறிப்பாக, உணவு தானியங்கள் மற்றும் பிற இன்றியமையாப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். விலை களில் ஏற்ற இறக்கத்தை ஏற்படுத்துகின்ற பெரிய பொருளா தார நடவடிக்கைகள் யாவும் பெரும்பாலும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளபடியால், ஏழை எளிய மக்களைப்

பாதிக்கக்கூடிய வகையில் உள்ள கொள்கைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்று, மாநில அரசு வலியுறுத்துகிறது. மத்திய அரசு அண்மையில் அரிசியின் விற்பனை விலையை உயர்த்தியது மாநில அரசின்மீது ஒரு புதிய சுமையை ஏற்றி வைத்துள்ளது. கடந்த காலத்தில், மாநில அரசு வழங்குகின்ற மானியத்தை அதிகரிப்பதன் மூலம் விலை உயர்வு மக்களைப் பாதிக்காதவகையில், அதனை அரசே ஏற்றுக்கொள்வதற்கு முடிந்த அளவு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறிருக்க, இப்போது இந்த அரசை எதிர்நோக்கியுள்ள கடுமையான நிதி இடர்ப்பாடுகளின் காரணமாக, அதுபோன்று இனிமேலும் மானியத்தை உயர்த்தி விலை உயர்வை அரசே ஏற்றுக்கொள்ள வழியில்லை. இந்தக் காரணத்தினால் அரிசி விற்பனை விலையை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்படி இருந்தும் கூட, தமிழ்நாட்டில் பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அரிசியின் விலைதான் நமது நாட்டிலேயே மிகக் குறைவானதாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் 1992 ஆம் ஆண்டில் பொது விநியோக முறையின் கீழ் உள்ள 22,000 நியாய விலைக்கடைகள் மூலம் 14.67 இலட்சம் டன் அரிசி விநியோகிக்கப்பட்டது என்பது நாம் பெருமளவில் பெருமைப் படத்தக்கதாகும். பொது விநியோகமுறை, மாநிலத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் வாழ்கின்ற மக்களைச் சென்றடையும் வண்ணம் திறன்பட்ட வகையில் செயலாற்றும் திறன் அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளது. பணிகளை தொடர்ந்துகண்காணித்து இடையறாமல் எச்சரிக்கையுடன் செயல்பட்டு, விநியோகப் பணிகளில் செய்யப்பட்ட மேம்பாடு காரணமாகப் பொதுவிநியோக முறையின் கீழ் அனைத்து நுகர்வோர்க்கும் பொருள்கள் வழங்குதலுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. குறுவை நெல் அறுவடை அமோகமாக இருந்தது. சம்பா நெல் சாகுபடியும் சிறந்த சாதனையாகக் குறிப்பிடத்தக்க அளவுக்கு உளளது. இவையிரண்டும் கொள்முதல் இலக்குகள் எய்தப் பெறுவதற்கு உறுதிசெய்யும். இதனால் இந்த ஆண்டு முழுவதற்கும் பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அரிசியின் இருப்பில் பற்றாக் குறை எதுவும் ஏற்படாது.

22. மக்களுக்குக் குறிப்பாக ஏழை, எளிய ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சிறப்பான வாழ்க்கைத்தரத்தை ஏற்படுத்தித்தருவதை உறுதி செய்வதற்காகவே இவ்வரசு எந்நாளும் பாடு பட்டு வருகிறது. அறுபது இலட்சம் பெண்களுக்கு இலவசச் சேலையும், அறுபது இலட்சம் ஆண்களுக்கு இலவச வேட்டியும் வழங்கும் திட்டம் இரண்டாவது ஆண்டாகத் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுளளது. ரூ. 45 கோடி செலவு பிடிக்கும் இத்திட்டம் ஏழை, எளிய மக்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். இம்மாநிலத்திலுள்ள நொசவளர்களுக்கும் இத்திட்டத்தினால் வாழ்வு கிடைத்துள்ளது.





23. புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ
நலத்திட்டம், வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. 9,226
மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலம்
'' அனைவர்க்கும் நல்வாழ்வு '' என்னும் கோட்பாடு நனவாகி
யுள்ளது. இந்த முகாம்களினால் 51.64 இலட்சம் பேர் பய
னடைந்துள்ளனர். குடும்பநலப்பணியில் தமிழ்நாட்டின் செயல்
திறன் நாட்டிலேயேதலை சிறந்தது என்று அறிவிக்கப்பட்டுள்ளது
தமிழ்நாட்டில் தடுப்பூசித் திட்டம் மிகமிகப் பயனுள்ளதாக
வுள்ளது எதைத் தனிப்பட்ட முறையில் நடத்தப் பெற்ற
மதிப்பீட்டாய்வின் மூலம் உறுதி செய்யப்ப்ட்டுள்ளது
அரசின் அனைத்து மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும்
மருந்துப் பொருட்கள் தேவையான அளவில் இருப்பதற்கு
உறுதி செய்யும் வகையில், நடப்பு ஆண்டில் மருந்துகளுக்காக
இதுவரை இல்லாத அளவிற்கு இப்போது பெரும் அளவில்,
அதாவது ரூ. 70 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

24. :: புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண்
குழந்தை பாதுகாப்புத் திட்டம்'' (Puratchl Thala vl Dr. Jayalalitha
Girl Child Protect on Schcme) என்றழைக்கப்படும் ஒரு புதிய திட்டம்
தொடங்கப்பட்டுள்ளது. பெண் குழந்தை முதலாவது பிறந்த
தினத்தின்போதும், அக்குழந்தையின் கல்விக்காகவும் அக்குழந்
தைக்கு இருபத்தொரு வயதாகும் போது ரூ. 10,000 மொத்தத்
தொகை வழங்கவும் உரிய வகையில் அக்குழந்தைக்குச் சிறப்புப்
பயன்கள வழங்க இதுவகைசெய்யும். கொடிய பழக்கமான
பெண் சிசுக்கொலைக்கெதிராக சமுதாய விழிப்புணர்ச்சி எழு
வதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவரும்
அதே வேளையில், மரபு விலங்கை உடைத்தெறியத் தாய்மார்
களுக்கு ஊக்கமளிக்கவும், வேண்டாத பெண்குழந்தைக்கு நல்ல
வாழ்க்கை அமைவதற்கான வாய்ப்பை அளிக்கவும் அரசு
'' தொட்டில் திட்டம் ' என்னும் திட்டத்தைக் கொண்டுவந்
துளளது. இக்குழந்தைகளை அரசு தனது பாதுகாப்பில் எடுத்
துக்கொண்டு பேணி வளர்க்கும், உலகவங்கியின் உதவியுடன்,
புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்
வலுப்படுத்தப்பட்டுள்ளது. 6 திங்களிலிருந்து 36 திங்கள்
வரையிலான வயதுத் தொகுதியில் உளள குழந்தைகளும் தாய்
மார்களும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுகிறார்கள. பெண்
களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு மகளிர்
குழுக்களுக்கு நிதி உதவி வழங்கும் 'ஒருங்கிணைந்த பெண்கள்
மேம்பாட்டுத் திட்டம் ' ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்
திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் பெண்கள் உதவி பெறுவார்கள்.
உடல் ஊனமுற்றோருக்கான திட்டங்களுக்குத் தனி முக்கியத்
துவம் கொடுக்க, உடல் ஊனமுற்றோருக்காக ஒரு புதிய துறை
உருவாக்கப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்றோருக்கு உதவி செய்
வதில் மிகச் சிறந்த செயல்பாட்டுக்காக, எந்த மாநிலமும்
பெற்றிராத அளவில், 15 தேசிய விருதுகளை வென்று தமிழ்நாடு
தனிச்சிறப்பு எய்தியிருக்கிறது.

[1993 பிப்ரவரி 8

25. தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலனுக்கு மிகவுயர்ந்த முன்னுரிமை கொடுத்து வருகிறது. அரசால் எடுக்கப்பட்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளால் பின்னி லிமிடெட், ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ ஆகிய நிறுவனங்களை மீண்டும் திறக்க முடிந்தது. துணி ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்திற்கு விரைவான தீர்வு காணப்பட்டது. மத்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள புதிய பொருளாதாரக்கொள்கைகளின் காரணமாக, தொழில்களை நவீனமயமாக்கிப் புதுப்பித்துக் கட்டமைக்கின்ற நடவடிக்கைகளினால் ஏற்படும் உடன்விளைவுகள் அனைத்தையும் மாநில அரசே தனித்து எதிர்கொண்டு சமாளிக்க இயலாது. தொழில்களை நவீனப்படுத்தல், சீரமைத்தல் ஆகியவற்றின் மூலம் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு நியாயமாக உரியவற்றை வழங்க தேசிய புதுப்பிப்பு நிதியை விரைந்து செயற்படச் செய்து மாநிலங்களுக்கு முழு அளவில் ஆதரவளிக்க வேண்டும்.

26. நிதிப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையானது, சுகாதாரம், சத்துணவு, தொடக்கக்கல்வி, பெண்கள் குழந்தைகள் நலத் திட்டங்கள போன்ற இன்றியமையாதசமூகத் துறைகளின் மீதான முதலீட்டைக் குறைப்பதில் போய் முடியக் கூடாது என்னும் கவலை தேசிய அளவில் இருந்து வருகிறது. இந்தத் துறைகளில் மாநில அரசுகள் எப்போதும் முக்கியப் பங்கை வகித்து வந்துள்ளன. மாநிலங்கள் இந்த முக்கியத் துறைகளுக்குச் செய்துவரும் முதலீட்டின் அளவைத் தொடர்ந்து அப்படியே நிலைநிறுத்த இயலாவண்ணம் நிதி இடாபாடுகள் அவற்றை நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றன. சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைத் திட்டம் ஒன்றிற்காக 500 மில்லியன் அமெரிக்க டாலர்கள உதவியளிக்க உலக வங்கி அண்மையில் உறுதியளித்துள்ளது. ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பெரும்பங்கு வகிக்கும் மாநில அரசுகளுக்கு இந்த நிதி ஒதுக்கப்பட வேண்டுமென்பதே நமது கோரிக்கையாகும்.

27. 1993 ஆம் ஆண்டு மார்ச்சுக்குள் முடிவடையவிருக்கும் சிறப்புந் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், அனைத்து ஊரகப் பகுதிகளிலும் அடிப்படைத் தேவைகளுக்கு வகைசெய்ய அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி என்ற வகையில் மொத்தம் ரூ. 387 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பெருந்திட்டத்தின் கீழ் 7,502 கிலோ மீட்டர் தொலைவுள்ள சாலைகளுக்கு மேம்பாட்டுப் பணிகள், 8,972 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், 1.5 இலட்சம் தெரு விளக்குகள் அமைத்தல், 3,231 சிறுபாசன ஏரிகளை மேம்படுத்துதல், 2,198 தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் 2,879 சத்துணவு மையங்கள் கட்டுதல், 1,861 தொலைகாட்சிப் பெட்டிகள வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கௌளப்பட்டுள்ளன.



1993 பிப்ரவரி 8]

28. அண்மையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் நடை
பெற்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில், உள்ளாட்சி மன்
றங்கள் தொடர்பாக அரசியலமைப்புச் சட்டத்தில் முக்கியத்
திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. உள்ளாட்சி மன்றங்களுக்
குப் புத்துயிரளிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும்,
நாட்டின் அடித்தளமாக அமைந்துகிடக்கும் கிராமங்கள் அளவில்
நல்ல ஜனநாயக மரபுகள் வளக்கப்பட வேண்டியதன்
அவசியம் குறித்தும் இரு வேறுபட்ட கருத்துக்கள் இருக்க
முடியாது. இருப்பினும், இது முற்றிலும் மாநிலங்களின்
நிருவாக வரம்பிற்கு உட்பட்டதாகும். இவ்வாறு, செயற்படுத்து
வதற்குக் கடினமான நடைமுறைகள் கொண்ட விதிகளைச்
சட்டத் திருத்தங்கள் வாயிலாக மாநில அரசுகள் மீது சுமத்து
வது என்பது, வெவ்வேறு மாநிலங்களில் நிலவும்
வேறுபட்ட அமைப்பு முறைகளை மத்திய அரசு உணரத்
தவறியது என்றே பொருளாகும். இத்திருத்தங்கள் மாநிலங்
களின் அதிகாரங்கள், பொறுப்புகளின் வரம்பிற்குள் ஊடுருவிப்
பாதிப்பதாக அமைந்துள்ளன என்று இந்த அரசு கருதுகிறது.
அரசின் இக்கருத்து நாடாளுமன்றத்திலும் தெரிவிக்கப்பட்
டுள்ளது. இதுவே இந்த அரசின் பிறழாத நிலையாகும். இரு
நிலை நிருவாக அமைப்பு முறையைக் கொண்டு, தமிழ்நாடு
சிறப்பாக இயங்கி வந்துள்ளது என்பதால், மாவட்ட அளவிலான
நிருவாக அமைப்பு நிலை உட்பட மூன்று நிலை நிருவாக அமைப்
பைக் கொண்டு வருவதை இந்த அரசு ஆதரிக்கவில்லை. ஒவ்
வொரு நிலை அமைப்பிற்கும் இவற்றில் வரையறுக்கப்பட்டுள்ள
தேர்தல் முறைகள்கூட, தமிழ்நாட்டில் நன்கு உருவாகி நிலை
பெற்றுள்ள நடைமுறையிலிருந்து மிகவும் வேறுபட்டனவாக
உள்ளன. இவ்வாறாக, மாநிலங்களின் அதிகாரங்கள் தொடர்
பான அடிப்படைக் கொள்கை என்ற வகையிலும் சரி, அது
தொடர்பான நாடமுறைகள் என்ற வகையிலும் சரி, இம்மாநில
அரசு அரசியல் அமைப்புச் சட்டத்தில் செய்யக் கருதியுள்ள திருத்
தங்களுக்கு எதிராக எடுத்த தனது நிலையை ஒருபோதும்
மாற்றாமல் தொடர்ந்து எதிர்த்து வந்துள்ளது. இந்த நிலை
முழுவதுமாக மறு ஆய்வு செய்யப்படவேண்டும் என்றும் இத்
துறையில் மாநிலங்களின் நிலைமை பாதுகாக்கப்படவேண்டும்
என்றும் இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

29. ஊரக வளர்ச்சியை விரைவு படுத்துவதில் நிலச் சீர்
திருத்தத்தின் முக்கியத்துவம் குறித்து பிரதமர் அவர்கள்
முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள். தமிழ்நாட்டில்
தற்போதுள்ள நிலச் சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் எடுத்துக்
கொள்ளப்பட்ட உபரி நிலங்கள் பெரும்பாலும் முழுவதும்
பகிர்ந்தளிக்கப்பட்டு விட்டன. முந்தைய சட்டத்தில் உள்ள
குறைபாடுகளை நீக்கும் நோக்கத்துடன்தான், இந்த அவை
புதிய சட்டத்தை நிறைவேற்றியது. உபரியாகவுள்ள நிலங்களின்
சில உரிமை மாற்றங்களைச் செல்லாததாக்கக் கோரும் இந்தச்

சட்டம், 1991 அக்டோபர் திங்களிலிருந்து குடியரசுத் தலைவரின் இசைவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. இச்சட்டத்திற்கு விரைவில் ஒப்புதலளிக்குமாறு மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்துகிறது. இச்சட்டம் இம்மாநிலத்தில் நிலச்சீர்திருத்தத்திற்கு ஒரு புதிய உத்வேகத்தை அளிக்கும்.

30. சென்னைககு அருகிலுள்ள ஏரிகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பருவமழை குறைவாகப் பெய்ததன் பயனாக, நீர் சேமிப்பளவு குறைந்ததால், சென்னை மாநகரில் ஒருநாள் விட்டு ஒருநாள் குடிநீர் வழங்கும் முறையைக் கொண்டுவரவேண்டி வந்தது. நீர் சேமிப்பளவு குறைவாக இருந்தபோதிலும், பயனுள்ள வகையில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்ய, ரூ. 24 கோடி செலவில் அவசரத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஓர் அங்கமாக கடைக்கோடியிலுள்ள பகுதிகளுக்குக்கூட, முறையாகக் குடிநீர் கிடைக்க வகை செய்ய லாரிகள் மூலம் குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும். குடிநீர்ப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு, கிருஷ்ணா நீரைச் சென்னைக்குக் கொண்டு வருவதே ஆகும். முதலமைச்சர் அவர்கள் 1993, ஜனவரித் திங்கள் 27 ஆம் நாளன்று ஐதராபாத்தில் ஆந்திரப் பிரதேச முதலமைச்சருடன் இது குறித்து விவாதித்தார். 1995, ஜூன் திங்களுக்குள் சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவருவதை உறுதிசெய்யும் வகையில், தெலுங்கு கங்கைத் திட்டத்தை விரைவுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. திட்டப்பணி முடிவடைவதை உறுதி செய்ய, போதிய அளவு நிதி வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக ரூ. 1,100 கோடி செலவிலான, சென்னை மாநகர் குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு நிதியுதவி வழங்குமாறு உலக வங்கியை அணுகுவதற்குக் குறுக்கே எழுந்த தடைகள் அகற்றப்பட்டு, வழி வகுக்கப்பட்டுள்ளது.

31. இம்மாநிலத்தில் வீடில்லாத அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்திற்கு அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளது. நடப்பாண்டில் பல்வேறு வீட்டுவசதித் திட்டங்களின் கீழ் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ஏழை எளிய மக்களுக்குத் தற்போது அரசு நிலத்திலுள்ள வீட்டு மனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இலவச வீட்டு மனைகளை வழங்குவதற்காக, ஒவ்வோராண்டும் நிலங்களைக் கையகப்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. ஏழை எளிய குடும்பம் ஒவ்வொன்றும் வீட்டு மனையைப் பெற இயலும் வகையில், மூன்றாண்டு கால அளவில் வீட்டு மனைகள் வழங்கும் குறித்தகாலப் பெருந்திட்டம் ஒன்றை அரசு மேற்கொள்ளும்.



32. சில கொள்கைப் பிரச்சினைகளின் மீது உங்கள் நாட்டத்தை ஈர்ப்பதுடன், நமது மாநிலம் வளர்ச்சி பெறுவதற்கு அரசு பின்பற்றவிருக்கும் வழி எது என்பதைக் குறிப்பிடுவதும் என்னுடைய நோக்கமாகும். வெளிநாட்டுன் போராளிகளால் ஏற்படுத்தப்பட்ட மிகச்சிக்கலான பிரச்சினைகள், சட்டம்—ஒழுங்கு சீர்குலைவு, மிகச் சோதனையான நிதிநிலை, தேசிய பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட இக்கட்டான பொருளாதார முடிவுகள், பொது நிருவாகத்தில் காணப்பட்ட மோசமான சீர்கேடு ஆகியவை நமது மாநிலத்தை எதிர்கொண்ட நிலையில், இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. விருப்பு வெறுப்பற்ற நடுநிலை நோக்கோடு பார்க்கின்ற எவருக்கும் இந்த அரசு அனைத்து முனைகளிலும் குறிப்பிடத் தகுந்தவகையில் சிறப்பாகச் செயல்பட்டுள்ளது என்பது தெரியவரும். சட்டம்—ஒழுங்கு மீண்டும் நிலை நாட்டப்பட்டுள்ளது. அயல்நாட்டுப்பேராளிகளால் ஏற்படும் அபாயம் ஒடுக்கப்பட்டுள்ளது; நெருக்கடியான நிதிநிலை திறம்படக் கையாளப்பட்டு, வளர்ச்சிக்கு மீண்டும் வேகம் ஊட்டப்பட்டுள்ளது. அனைத்திற்கும் மேலாக, ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

33. தமிழ்நாட்டில் அமைதியும் ஒற்றுமையும் மிகச் சிறந்த முறையில் பராமரிக்கப்படுவதற்கு உறுதிசெய்ய இவ்வரசு தொடர்ந்து பாடுபடும். வெளிநாட்டுப் போராளிகளின் நடவடிக்கைகள் தொடர்ந்து விழிப்புடன் கண்காணிக்கப்படும். அவர்கள் இம்மாநிலத்தில் கால்பெருவிரலை ஊன்றி நிற்பதற்குக்கூட அனுமதிக்கப்படமாட்டார்கள். வகுப்புவாத நடவடிக்கைகளும் அவற்றோடிணைந்து காணப்படும் பகைமையுணர்வுகளும், இம்மாநிலத்தின் சமூகக் கட்டமைப்பைக் குலைக்க அனுமதிக்கப்படமாட்டாது. சமூக நீதியை நிலை நாட்ட, இவ்வரசு உறுதியான ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொண்டு அதன் மூலம் பெரும்பான்மை மக்களுக்கு நம்பிக்கையூட்டி அவர்களுக்கு மெய்யான அனுகூலங்களையும் வழங்கும். தேசிய முதலீடுகளில் தமிழ்நாட்டிற்கு உரிமையான பங்கினைப் பெற அரசு பெரு முயற்சி மேற்கொள்ளும். புதிய பொருளாதாரக் கொள்கையின் ஓர் அங்கமாகவுள்ள அடிப்படைக் கட்டமைப்பைச் சரிப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு நடுவே, ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைப் பாதுகாப்பதற்குத் தொடர்ந்து இவ்வரசு அதிக முக்கியத்துவம் அளிக்கும்.

34. பல்வேறு பிரச்சினைகள் குறித்து அரசு மேற்கொண்ட உறுதியான தீர்க்கதரிசனமான நடவடிக்கைகளை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் முழுமையாக வரவேற்பார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. அமைதி, ஒற்றுமையை நிலைநாட்டுவதிலும், நிலைத்த பொருளாதார வளர்ச்சியைக் காண்பதிலும், இவ்வரசு மேற்கொண்ட புதிய சீரிய முயற்சிகள்

[1993 பிப்ரவரி 8

தமிழ்நாட்டிற்கு அகில இந்திய அளவில் பெருமதிப்பைப் பெற்றுத் தந்துள்ளன. இது அனைவரும் வியந்து போற்றுவதற்குரிய தன்னிகரற்ற சாதனையாகும். இந்தப் பாராட்டை ஆர்வத்தோடும் எழுச்சியோடும் உழைத்துக் கட்டிக் காத்துக் கொள்ள வேண்டும். இம்மாமன்றத்தில் உறுப்பினர்கள் மேற்கொள்ளும் விவாதங்கள் தமிழகத்தை முன்னேற்றமும் செழிப்பும் மிக்க பாதையில் அழைத்துச் செல்வதாக அமையும் என்று நான் நம்புகிறேன். ஏழை எளியவர்கள் மற்றும் வசதி வாய்ப்பற்றவர்கள் ஆகியோர்க்குச் சிறப்பான வாழ்க்கைத்தரத்தைப் பெற்றுத் தருவதற்கு இவ்வரசு எப்போதும் பாடுபடும். எப்போதும் இம்மாநிலத்தின் முன்னேற்றத்திற்கே முதலிடம் தந்து, இம்மாமன்றத்தில் நீங்கள் மேற்கொள்ளும் விவாதங்களும் கருத்துக்களும், ஆக்கபூர்வமானவையாகவும் பொருள் பொதிந்தவையாகவும் அமையும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

நன்றி, வணக்கம்

164981